# ஆறாம் வகுப்பு:

## வாழ்த்து

## திருவருட்பா

கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்என்
எண்ணில் கலந்தே இருக்கின்றான் - பண்ணில்
கலந்தான்என் பாட்டில் கலந்தான் உயிரில்
கலந்தான் கருணை கலந்து

திருவருட்பாவை எழுதியவர் - இராமலிங்க அடிகளார்
சிறப்பு பெயர் - திருவருட்பிரகாச வள்ளலார்

பிறப்பிடம் - கடலூர் மாவட்டம் மருதூரில் பிறந்தவர்.

பெற்றோர் - இராமையா - சின்னமையார்

வாழ்ந்த காலம்: 05.10.1823 - 30.01.1874

எழுதிய நூல்கள்: ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறைகண்ட வாசகம்.

பசித்துயர் போக்கி மக்களுக்கு உணவளிக்க இராமலிங்க அடிகளார் அமைத்தது - அறச்சாலை

அறிவு நெறி விளங்க வள்ளலார் நிறுவியது - ஞானசபை

சமர சன்மார்க்க நெறிகளை வழங்கியவர் - இராமலிங்க அடிகளார்.

இராமலிங்க அடிகளார் பாடிய பாடலின் தொகுப்பிற்கு பெயர் - திருவருட்பா.

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடிய மனம் கொண்டவர் - இராமலிங்க அடிகளார்

வள்ளலார் பாட்டை "மருட்பா" என்று கூறியவர் - ஆறுமுக நாவலர்.

கடவுளை "கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்", என்றும் "உயிரில் கலந்தான் கருணை கலந்து" என்றும் பாடியவர் - இராமலிங்க அடிகளார்.

நூல்கள்: ஜீவகாரூன்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம்.

வள்ளலாரின் பாடல்கள் அனைத்தும் திருவருட்பா என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.

**சிறப்பு:** சமரச சன்மார்க்க நெறியை வழங்கினார்.

மத நல்லிணக்கத்திற்கு சன்மார்க்க சங்கத்தையும், உணவளிக்க அறச்சாலை, அறவுநெறி விளங்க ஞான சபையையும் நிறுவினார்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய கருணை மனம் இவருடையது.

கருணை நிறைந்த இறைவன் என் கண்ணில், சிந்தனையில், எண்ணத்தில், பாட்டில், பாட்டின் இசையில், என் உயிரில் கலந்து இருக்கிறான்.

## **அறிவுரைப் பகுதி:**

திருக்குறள்: அன்புடைமை

**சொற்பொருள்:**

ஆர்வலர் - அன்புடையவர்

புன்கணீர் - துன்பம் கண்டு பெருகும் கண்ணீர்

என்பு - எலும்பு. இங்கு உடல், பொருள், ஆவியைக் குறிக்கிறது.

வழக்கு - வாழ்க்கை நெறி

நண்பு - நட்பு

மறம் - வீரம், கருணை (வீரம் இரண்டிற்குமே

அன்புதான் அடிப்படை என்பது பொருள்)

அன்பிலது - அன்பில்லாத உயிர்கள்

என்பிலது - எலும்பில்லாதது(புழு)

பூசல் தரும் - வெளிப்பட்டு நிற்கும்

ஆருயிர் - அருமையான உயிர்

ஈனும் - தரும்

ஆர்வம் - விருப்பம் (வெறுப்பை நீக்கி விருப்பத்தை

உண்டாக்கும் என்று பொருள்)

வையகம் - உலகம்

என்ப - என்பார்கள்

புறத்துறுப்பு - உடல் உறுப்புகள்

எவன் செய்யும் - என்ன பயன்?

அகத்துறுப்பு - மனத்தின் உறுப்பு, அன்பு

**பிரித்து எழுதுக:**

அன்பகத்தில்லா = அன்பு + அகத்து + இல்லா -

அன்பு உள்ளத்தில் இல்லாத

வன்பாற்கண் = வன்பால் + கண் - பாலை நிலத்தில்

தளிர்த்தற்று - தளிர்த்து + அற்று - தளிர்த்ததுபோல

வற்றல்மரம் - வாடிய மரம்

இவரின் காலம் கி.மு. 31 என்று கூறுவர்.

இதனை தொடக்கமாக கொண்டே திருவள்ளுவர் ஆண்டு கண்க்கிடப்படுகிறது.

சிறப்பு பெயர்: தெய்வப்புலவர், நாயனார், செந்நாப்போதர்

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

அதிகாரங்கள்: 133

அதிகாரத்திற்கு 10 குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன.

இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

திருக்குறளின் வேறு பெயர்கள்: உலக பொதுமறை, முப்பால், தமிழ்மறை. உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது.

திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடும் முறை: கிறித்து ஆண்டு (கி.பி) + 31 = திருவள்ளுவர் ஆண்டு.

எடுத்துக்காட்டு: 2013 + 31 = 2044. கி.பி.2013ஐத் திருவள்ளுவர் ஆண்டு 2044 என்று கூறுவோம்.

**உரைநடை:**

**தமிழ்த்தாத்தா உ.வே.சா.**

உ.வே.சா ஓலைசுவடி வேண்டி ஒருவரிடம் உரையாடிய நிகழ்ச்சி நடைபெற்ற இடம் ஈரோடு மாவட்டம் கொடுமுடி.

ஊர் - திருவாரூர் மாவட்டம் உத்தமதானபுறம்

இயற்பெயர் - வேங்கடரத்தினம்

ஆசிரியர் - மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

அவரின் ஆசிரியர் வைத்த பெயர் - சாமிநாதன்

உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகனான சாமிநாதன் என்பதன் சுருக்கமே உ.வே.சா

இவரின் தந்தை - வேங்கடசுப்பையா

காலம் - 19.02.1855 முதல் 28.04.1942

1942 இல் உ..வே.சா நூல்நிலையம் சென்னை பெசன்ட் நகரில் துவங்கப்பட்டது.

உ.வே.சா நினைவு இல்லம் உத்தமதானபுரத்தில் உள்ளது.

உ.வே.சா அவர்களின் தமிழ்ப் பணிகள் வெளிநாட்டு அறிஞர்களான ஜி.யு.போப், சூலியல் வின்சோன் ஆகியோர் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

இந்திய அரசு 2006 ஆம் ஆண்டு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

பனை ஓலையைப் பக்குவப்படுத்தி, அதில் எழுத்தாணி கொண்டு எழுவர். அவ்வாறு எழுத்தப்பட்ட ஓலைக்கு ஓலைச்சுவடி என்று பெயர்.

ஓலை கிழியாமல் எழுதுவதற்காக ஓலைச்சுவடி எழுத்துகளில் புள்ளி இருக்காது; ஒற்றைக்கொம்பு, இரட்டைகொம்பு வேறுபாடு இருக்காது.

ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் சில இடங்கள்: 1. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை. 2. அரசு ஆவணக் காப்பகம், சென்னை. 3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 4. சரசுவதி நூலகம், தஞ்சாவூர்.

குறிஞ்சிப்பாட்டு - பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று; இதன் ஆசிரியர் கபிலர்.

தம் வாழ்க்கை வரலாற்றை ஆனந்தவிகடன் இதழில் தொடராக எழுதினார். அஃது என் சரிதம் என்னும் பெயரில் நூலாக வெளிவந்தது.

ஓலைச்சுவடிகளைத் தேடி வந்த பெரியவர் - உ.வே.சா

உ.வே.சா. தம் வாழ்நாள் முழுவதும் ஓய்வில்லாமல் பதிப்பு பணியை மேற்கொண்டார்.

உ.வே.சா. அவர்களை நாம் தமிழ்த்தாத்தா என அன்போடும் உரிமையோடும் அழைக்கின்றோம்.

ஓலைச்சுவடிகளை ஆடிப்பெருக்கு விடியற்காலையில் ஆற்றில் விட்டனர்.

குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள பூக்களின் எண்ணிக்கை - தொண்ணூற்று ஒன்பது

உ.வே.சா பதிப்பித்த நூல்கள்:

எட்டுத்தொகை - 8

பத்துப்பாட்டு - 10

சீவகசிந்தாமணி - 1

சிலப்பதிகாரம் - 1

மணிமேகலை - 1

புராணங்கள் - 12

உலா - 9

கோவை - 6

தூது - 6

வெண்பா நூல்கள் - 13

அந்தாதி - 3

பரணி - 2

மும்மணிக்கோவை - 2

இரட்டைமணிமாலை - 2

பிற பிரபந்தங்கள் - 4

**துணைப்பாடம்:**

**கடைசிவரை நம்பிக்கை**

கடைசிவரை நம்பிக்கை இச்சிறுகதை அரவிந்த் குப்தா எழுதிய டென் லிட்டில் பிங்கர்ஸ் என்ற தொகுப்பில் உள்ளது.

சடகோ சகாகி, 11 வயது ஜப்பான் நாட்டுச் சிறுமி.

ஜப்பானில் ஹிரோமிமாவிக்கு அருகில் பெற்றோருடன் வசித்து வந்தாள்.

அணுகுண்டு வீச்சால் ஏற்பட்ட கதிர்வீசின் காரணமாக சடகோவிற்கு புற்றுநோய் பாதிப்பு * ஏற்பட்டது.

சடகோவின் தோழி சிசுகோ, சடகோவிடம் காகிதத்தால் செய்யப்பட்ட கொக்குகள் ஆயிரம் செய்தால் நோய் குணமாகும் என்றாள். இது நம் நாட்டு நம்பிக்கை என்று கூறினாள்.

ஜப்பானியர் வணங்கும் பறவை - கொக்கு.

காகிதத்தால் உருவங்கள் செய்யும் ஜப்பானியர் ஒரிகாமி என்று கூறுவர்.

1955 அக்டோபர் 25ல் நல்ல சடகோ இறந்தாள்.

மொத்தம் 644 காகித கொக்குகள் உருவாக்கி இருந்தாள்.

சடகோவின் தோழிகள் கூடி மீதமுள்ள 356 காகித கொக்குகள் செய்து எண்ணிக்கையை ஆயிரம் ஆக்கினர். சடகோவின் விருப்பத்தை நிறைவு செய்தனர்.

சடகோவிற்காக அவள் தோழிகள் பொதுமக்களிடம் நிதி திரட்டி நினைவாலயம் கட்டினர். அதனுள் சடகோவிற்கு சிலை எழுப்பினர்.

அதன் பெயர் குழந்தைகள் அமைதி நினைவாலயம்.

நினைவாலயத்தில் எழுதப்பட்ட வாசகம் -  உலகத்தில் அமைதி வேண்டும்! இது எங்கள் கதறல்! இது எங்கள் வேண்டுதல்!

**இலக்கணமும் மொழித்திறனும்**

நாம் பேசும் மொழி மற்றும் எழுதும் மொழியை முறையாகப் புரிந்து கொள்வதற்கு தேவைப்படுவது - இலக்கணம்.

அ - எழுத்து குறிப்பது மனிதனை.

|- என்ற முதுகுக்கோடு குறிப்பது - பழங்காலத்தில் வேட்டை ஆடுவதற்கு மனிதன் முதுகில் சுமந்த அம்புக்கூட்டைக் குறிக்கிறது.

மனிதர்களை போன்று இனமும் நட்பும் கொண்டது - எழுத்துக்கள்.

ங் என்னும் எழுத்துக்கும் பின்னால் வரும் இன எழுத்து க. எ.கா: சிங்கம், தங்கை.

ஞ் என்னும் எழுத்துக்கும் பின்னால் வரும் இன எழுத்து ச. எ.கா: மஞ்சள், அஞ்சாதே

ண்ட, ந்த, ம்ப, ன்ற என்னும் எழுத்துகள் பெரும்பாலும் சேர்ந்தே வரும். எசகா: பண்டம், பந்தல், கம்பன், தென்றல்.

நட்பு எழுத்துக்களை இன எழுத்துகள் என இலக்கணம் கூறுகிறது.

க், ச்,த், ப் ஆகிய மெய்யெழுத்துக்கள் தன் எழுத்துகளுடன் மட்டும் சேரும். எ.கா: பக்கம், அச்சம், மொத்தம், அப்பம்.

தன் எழுத்துடன் சேராது பிற எழுத்துகளுடன் சேரும் மெய்யெழுத்து - ர், ழ். எ.கா: சார்பு, வாழ்க்கை

முயற்சி திருவினை ஆக்கும் எனக் கூறியவர் - திருவள்ளுவர்.

கவலையை மறக்க உரிய வழி - ஏதாவதொரு வேலையில் ஈடுபடுவது.

எண்பத்தேழு வயதுவரை உ.வே.சா. தமிழுக்காக உழைத்தார். முயற்சிக்கு வயது வரம்பு கிடையாது.

முயற்சிக்கு நோய் தடை இல்லை.

## நாலடியார்

**சொற்பொருள்:**

அணியார் = நெருங்கி இருப்பவர்

என்னாம் = என்ன பயன்?

சேய் = தூரம்

செய் = வயல்

அனையர் = போன்றோர்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று - நாலடியார்.

நானூறு பாடல்களைக் கொண்டது - நாலடியார்.

அறக்கருத்துக்களைக் கூறுவது - நாலடியார்.

நாலடி நானூறு என்ற சிறப்பு பெயர் உடையது - நாலடியார்.

சமண முனிவர்கள் பலர் பாடிய தொகுப்பு நூல் - நாலடியார்.

**பதினெண்கீழ்க்கணக்கு - விளக்கம்:**

சங்க நூல்கள் எனப்படுபவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டில் பத்து நூல்களும், எட்டுத்தொகையில் எட்டு நூல்களுமாக மொத்தம் பதினொட்டு நூல்கள். * இவற்றை மேல்கணக்கு நூல்கள் எனக் கூறுவர்.

சங்கநூல்களுக்குப்பின் தோன்றிய நூல்களின் தொகுப்பு - பதினெண்கீழ்க்கணக்கு

பதினெண் என்பது - பதினெட்டு என்று பொருள்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை - அறநூல்களே.

கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் கூறப்படும் நூல் - பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்.

நன்மை செய்வோர் வாய்க்காலைப் போன்றவர்.

## பாரத தேசம்

**சொற்பொருள்:**

வண்மை = கொடை (வன்மை = கொடுமை)

உழுபடை = விவசாய கருவிகள்

தமிழ்மகள் = ஔவையார்.

கோணி - சாக்கு

தலை சாயுதல் - ஓய்ந்து படுத்தல்

ஞாலம் - உலகம்

உவந்து செய்வோம் - விரும்பிச் செய்வோம்

நெறியினின்று - அறநெறியில் நின்று

சாதி இரண்டொழிய வேறில்லை என்றவர் - ஔவையார்.

தமிழ்மகள் எனபடுபவர் - ஔவையார்.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கவிஞர் - பாட்டுக்கொரு புலவன் பாரதியார்.

காலம்: 11.12.1882 - 11.09.1921

<u>பாட்டுக்கொரு புலவன் பாரதி என்றவர் கவிமணி</u>.

**உரைநடை:**

## பறவைகள் பலவிதம்

திருவெல்வேலி மாவட்டம் கூத்தனகுளத்தில் மக்கள் பட்டாசு வெடிப்பதில்லை, ஏனென்றால் அங்கு கூடும் பறவைகள் பயந்து விடாமல் இருக்கவே.

உலகம் முழுவதும் இருந்து பல நாட்டுப் பறவைகள் வந்து தங்கி இருக்கும் இடத்திற்குப் பெயர் - பறவைகள் சரணாலயம்.

அதிக பணி அல்லது அதிக வெயிலின் காரணமாக புறவைகள் ஒரு இடத்தை விட்டு மற்றொரு இடத்திற்கு பறந்து செல்வது - வலசை போதல்

பறவைகள் நமக்கு பருவகால மாற்றத்தை உணர்த்துகின்றன.

ஒரு நாட்டில் பழம் தின்றுவிட்டு, மற்றொரு நாட்டில் எச்சமிடுவதன் காரணமாக அங்கு மரம், செடி, கொடி போன்றவை உருவாக பறவைகள் காரணமாகின்றன.

வயல்வெளிகளில் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், வண்டுகளை தின்று விவசாயிகளுக்கு உதவுகின்றன.

பறவைகள் ஐந்து வகையாக பிரிப்பர்.

தென்னை குடித்து வாழும் பறவைகள்

பழத்தை உண்டு வாழும் பறவைகள்

பூச்சியை தின்று வாழும் பறவைகள்

வேட்டையாடி உண்ணும் பறவைகள்

இறந்த உடல்களை உண்டு வாழும் பறவைகள்.

பூநாரையானது நிலத்திலும் அதிக உப்புத் தன்மையுள்ள நீரிலும் வாழக்கூடியது. கடும் வெப்பத்தையும் எதிர்கொள்ளும் தன்மை கொண்டது.

சமவெளி மரங்களில் வாழும் சில பறவைகள்: மஞ்சள் சிட்டு, செங்காகம், கடலைக்குயில், பனங்காடை, தூக்கணாங்குருவி.

நீர்நிலையில் வாழும் சில பறவைகள்: கொக்கு, தாழைக்கோழி, பவளக் காலி, ஆற்று உள்ளான், முக்குளிப்பான், நாரை, அரிவாள் மூக்கன், கரண்டி வாயன், ஊசிவால் வாத்து.

மலைகளில் வாழும் சில பறவைகள்: இருவாச்சி, செந்தாலைப் பூங்குருவி, மின்சிட்டு, கருஞ்சின்னான், நீலகிரி நெட்டைகாலி, பொன்முதுகு, மரங்கொத்தி, சின்னக்குறுவான், கொண்டாய் உலவரான், இராசாளிப் பருந்து, பூமன் ஆந்தை.

தமிழகத்தில் உள்ள பறவைகள் சரணாலயம் = 13

பருவ காலத்தை மனிதர்களுக்கு உணர்த்துபவை - பறவைகள்

உலகம் முழுவதும் மரம், செடி, கொடிகளை பரப்புவது - பறவைகள்.

நம் நாட்டில் சுமார் 2400 வகைப்பறவைகள் உள்ளன.

பறவைகள் பருவ நிலை மாற்றத்தால் இடம் பெயருவதை - வலசை போதல் என அழைப்பர்.

வெயிலும், மழையும், பனியும் மாறி மாறி வருவதை - பருவநிலை மாற்றம் என அழைப்பர்.

அதிக பனிப்பொழியும் மாதம் - மார்கழி மாதம்.

அதிகம் வெயில் அடிக்கும் காலத்தை - கோடைக்காலம் என அழைப்பர்.

நிலத்திலும், அதிக உப்புத் தன்மையுள்ள நீரிலும்; கடும் வெப்பத்தை எதிர் கொள்ளும் தன்மையுடைய பறவை - பூ தாமரை.

**தமிழ்நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயங்கள்:**

வேடந்தாங்கல்

கரிக்கிளி(காஞ்சிபுரம் மாவட்டம்),

கஞ்சிரால்குளம்

சித்திரஸ்குடி

மேலக் செல்வனூர் (இராமநாதபுரம் மாவட்டம்)

பழவேற்காடு (திருவள்ளுவர் மாவட்டம்)

உதயமார்த்தாண்டபுரம்(திருவாரூர் மாவட்டம்)

வடுவூர் (தஞ்சை மாவட்டம்)

கரைவெட்டி(பெரம்பலூர் மாவட்டம்)

வேட்டங்குடி(சிவகங்கை மாவட்டம்),

வெள்ளோடு (ஈரோடு மாவட்டம்)

கூந்தன்குளம் (திருவெல்வேலி மாவட்டம்)

கோடியக்கரை(நாகப்பட்டினம் மாவட்டம்)

தமிழ்நாட்டில் பட்டாசு வெடிக்காத ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூந்தன் குளம்.

**துணைப்பாடம்:**

**பாம்புகள்**

பாம்புகள் ஊர்வன வகையை சார்ந்தவை.

சில பாம்புகள் குட்டிபோடும், பெரும்பாலானவை குஞ்சி பொரிப்பன.

பாம்பின் உலகில் மனித இனம் தோன்றுவதற்கு பத்து கோடி ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது.

உலகம் முழுவதும் 2750 வகை பாம்புகள் உள்ளன. இந்தியாவில் 244 வகை பாம்புகள் உள்ளன.

52 வகை பாம்புகளில் மட்டுமே நச்சுத்தன்மை வாய்ந்தவை.

பாம்பு பால் குடிக்காது. அவை விழுங்குகிற எலி, தவளைகள் உடம்பில் உள்ள நீர்ச்சத்தே அதற்கு போதும்.

பாம்பானது, தான் பிடிக்கும் இரையை கொள்ளவும், செரிமானத்திற்காகவும் தான் தன்னுடைய பற்களில் நஞ்சு வைத்துள்ளது.

பாம்புகளுக்கு காது கேட்காது. அவை தரையில் ஏற்படும் அடிருகளை உணர்ந்து செயல்படும்.

வயலிலுள்ள எலிகளை பாம்பு அழிப்பதால், பாம்புகளை விவசாயிகளின் நண்பன் என்று அழைக்கப்படும்.

பாம்புக்கு காற்றில் வரும் ஓசைகளை கேட்க இயலாது. தரையில் ஏற்படும் அதிர்வுகளை உணர்ந்து, அதன்மூலம் பாம்பு முன்னெச்சரிக்கையாக இருக்கிறது.

பாம்பு கடித்தவுடன் கடிபட்ட இடத்தை அசையாமல் வைத்து, கட்டுபோட்டு, மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

இந்தியாவில் உள்ள இராஜநாகம் தான் உலகிலேயே மிக நீளமான பாம்பு. 15 அடி நீளமுடையது. கூடுகட்டி வாழும் ஒரே வகை பாம்பு இது. இராஜநாகம் மற்ற பாம்புகளையும் உணவாக்கி கொள்ளும்.

ஒரு பாம்பை கொன்றால், அதன் இணைபாம்பு பழி வாங்கும் என்று சொல்வதுண்டு. இது உண்மையன்று, கொள்ளப்பட்ட ஒருவகை வாசனைத் திரவியம் மற்றப் பாம்புகளையும் அந்த இடம் நோக்கி வரவழைக்கிறது. பழிவாங்க, பாம்புகள் வருவதில்லை.

பாம்பு தன் நாக்கை அடிகடி வெளியே நீட்டும். அவ்வாறு செய்வதால் சுற்றுபுரத்தின் வாசனையை அறிந்து கொள்ளத் தான் அவ்வாறு செய்கிறது.

நல்ல பாம்பின் நஞ்சு கோப்ராக்சின் (Cobrozincobrozin) எனும் வலி நீக்கும் மருந்து தயாரிக்க பயன்படுகிறது.

இந்திய அரசு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972-ன்படி, தோலுக்காகப் பாம்புகள் கொள்ளபடுவதைத் தடுக்க சட்டம் நிறைவேற்றி உள்ளது.

பாம்புகளின் பற்கள் உள்நோக்கி வளைந்திருக்கும். இரையைப் பிடித்தால் தப்பவிடாது. பாம்புகள் இரையை மென்று தின்பதில்லை, அப்படியே விழுங்குகின்றன.

## இலக்கணமும் மொழித்திறனும்

தமிழில் உள்ள முதல் எழுத்துகள் மொத்தம் - முப்பது. அவை:

உயிர் எழுத்துக்கள் - பன்னிரண்டு

மெய் எழுத்துக்கள் - பதினெட்டு

உயிரும் மெய்யும் சேர்ந்து 216 உயிர்மெய் எழுத்துகள்ளை உருவாக்குகின்றன.

அன்றாடப் பேச்சில் பயன்படும் உயிர்மெய் எழுத்துகள் - கி, சி, பி, டி, தி, மி

அ, இ, உ, எ, ஒ - ஆகிய ஐந்தும் குறில் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களோடு சேரும்போது உயிர்மெய்க்குறில் எழுத்துக்கள் உண்டாகின்றன.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - ஆகிய நெடில் எழுத்துக்கள் மெய் எழுத்துக்களோடு சேரும்போது உயிர்மெய்நெடில் எழுத்துக்கள் உண்டாகின்றன.

வண்மை - கொடைத் தன்மை

வன்மை - கொடுமை

மனிதர்கள் யானையை வேட்டையாடக் காரணம் - தந்தம்

ஆறுகள் மாசு அடையக் காரணம் - தொழிற்சாலைக் கழுவு

மழை குறையக் காரணம் - காடுகள் அழிப்பு

உலகம் வெப்பமடையக் காரணம் - வண்டிகளின் புகை

## நான்மணிக்கடிகை

### சொற்பொருள்

மடவாள் - பெண்

தகைசால் - பண்பில் சிறந்த

உணர்வு - நல்லெண்ணம்

புகழ்சால் - புகழைத் தரும்

காதல் புதல்வர் - அன்பு மக்கள்

மனக்கினிய - மனத்துக்கு இனிய

ஓதின் - எதுவென்று சொல்லும்போது

**நூல்குறிப்பு:**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று - நான்மணிக்கடிகை.

கடிகை என்றால் அணுகலன்(நகை)

நான்கு மணிகள் கொண்ட அணிகலன் என்பது இதன் பொருள்.

ஒவ்வொரு பாட்டும் நான்கு அறக்கருத்துக்களை கூறுகின்றன.

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர்: விளம்பிநாகனார்.

விளம்பி என்பது ஊர்பெயர், நாகனார் என்பது புலவரின் இயற்பெயர்.

**உரைநடை:**

**ஆராரோ ஆராரோ**

தாளில் எழுதாமல் பிறர் பாடுவதை கேட்டு பாடுவது நாட்டுப்புற பாடல்

எழுதப்படாத வாய்வழியாக பரவுகிற கதைகள் வாய்மொழி இலக்கியம் என்பர்.

கானாப் பாடல், கடலுக்கு சென்று மீன்பிடிக்கும் மீனவர்கள் பாடும் பாடலும் நாட்டுப்புற பாடலே.

நாட்டுப்புற பாடலை பல வகைகளாக பிரிப்பர்.

தாலாட்டு பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழில் பாடல்கள், சடங்குப் பாடல்கள், கொண்டாடப் பாடல்கள், வழிப்பாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள்.

**துணைப்பாடம்:**

**வீரச்சிறுவன்**

ஜானகிமணாளன் எழுதிய அறிவை வளர்க்கும் அற்புத கதைகள் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட சிறுகதை இது.

பதினான்கு வயதுள்ள சிறுவன் குதிரையை அடக்கினான். அச்சிறுவன் விவேகானந்தர்.

விவேகானந்தரின் இயற்பெயர் - நரேந்திரதத்.

புரட்சி துறவி - வள்ளலார்.

வீரத் துறவி - விவேகானந்தர்

**இலக்கணமும் மொழித்திறனும்**

தமிழ்ச்சொற்கள் நான்கு வகைப்படும். அவை: பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல். இவற்றில் முதன்மையானவை பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும்.

**இசையமுது**

**சொல்பொருள்**

வானப்புனல் – மழைநீர் புனல் - நீர்

வையத்து அமுது - உலகின் அமுதம்

வையம் – உலகம் தழை - செடி

தகரப்பந்தல் - தகரத்தால் அமைக்கப்பட்ட பந்தல்

பொடி - மகரந்தப் பொடி

தழையா வெப்பம் - பெருகும் வெப்பம், குறையா வெப்பம்

தழைத்தல் - கூடுதல், குறைதல்

தழைக்கவும் - குறையவும்.

புரட்சி கவிஞர் என்றும், பாவேந்தர் என்றும் புகழப்படுபவர் - பாரதிதாசன்.

இயற்பெயர் - கனகசுப்புரத்தினம்

பாரதியின் கவிதையின் மீது கொண்ட காதலால் தம்முடைய பெயரை பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்.

காலம்: 29.04.1891 - 21.04.1964(அகவை 72)

பெற்றோர்: கனகசபை முதலியார் - இலக்குமி அம்மாள்

திருமணம்: 1920ல் பழநி அம்மையாரை மணந்தார்.

படைப்புகள்: பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு.

கல்லாத பெண்களின் இழிவைக் கூறும் நூல் - இருண்ட வீடு.

கற்ற பெண்களின் சிறப்பைக் கூறும் நூல் - குடும்ப விளக்கு.

இயற்கையை வர்ணிக்கும் நூல் - அழகின் சிரிப்பு.

பாரதிதாசன் நடத்திய இதழ் - குயில்.

**பழமொழி நானூறு**

**சொல்பொருள்:**

ஆற்றவும் - நிறைவாக

நாற்றிசை - நான்கு + திசை

ஆற்றுணா - ஆறு + உணா

வழிநடை உணவு - இதனை கட்டுச்சோறு என இக்காலத்தில் கூறுவர்.

பழமொழி நானூறு ஆசிரியர் - முன்றுறை அரையனார்.

முன்றுறை என்பது ஊர்ப்பெயர்

அரையன் - அரசனைக் குறிக்கும் சொல்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று - பழமொழி நானூறு.

பழமொழியில் உள்ள பாடல்கள் - 400

ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இடம்பெற்றுள்ளது.

ஆற்றுணா வேண்டுவது இல் என்பது - கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டா என்பது பொருள்.

**பொருள்:**

ஆற்றுணா வேண்டுவது இல் - "கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டாம்"

ஆற்றுணா - வழிநடை உணவு(கட்டுச்சோறு)

குறிப்பு: ஆறு - ஒர் எண்(6), ஆறு - நதி, ஆறு - வழி.

**உரைநடை:**

**மகள் இந்திராவுக்கு நேரு எழுதிய கடிதம்**

நாட்டின் விடுதலைக்குப் பின் இந்தியாவின் முதல் பிரதமர் - ஜவர்கர்லால் நேரு

நேருவின் துணைவியார் பெயர் - கமலா

தாகூர் ஆரம்பித்த விஸ்வபாரதி கல்லூரி மேற்குவங்கத்தில் சாந்தி நிகேதன் என்னுமிடத்தில் உள்ளது.

நேரு தன் மகள் இந்திரா காந்திக்கும் 42 ஆண்டுகள்(1922-1964) கடிதம் எழுதியுள்ளார்.

பாடப்பகுதியில் உள்ள கடிதம் அல்மோரா மாவட்டச் சிறையில் இருக்கும் போது 1935 பிப்ரவரி 22 அன்று எழுதப்பட்டது.

நேருவின் கடிதம் இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உள்ளது.

புத்தகம் வாசிப்பதை கடமையாகவோ, கட்டயப்படுதவோ கூடாது என்கிறார் நேரு.

மேலும் நேரு, பிளோட்டோவின் புத்தகங்கள் சுவையானவை, சிந்தனையை தூண்டுபவை என்றும் கூறுகிறார். சுருக்கமாகவும், வாசிக்க எளிதாகவும் இருக்கும் கிரேக்க நாடகங்கள் நம் ஆர்வத்தை தூண்டும் என்றும் கூறுகிறார். காளிதாசரின் சாகுந்தலம் நாடகம் படிக்க வேண்டிய நூல் என்றும் கூறுகிறார்.

டால்ஸ்டாயின் “போரும் அமைதியும்” என்ற நாவல், உலகில் மிகச் சிறந்த நூல்களில் ஒன்று எனவும், பெர்னார்ட்ஷாவின் நூல்கள் வாசிக்க தகுந்தவை என்றும் கூறுகிறார்.

நேருக்கு மிகவும் பிடிதமானவார் ஆங்கில சிந்தனையாளரும் கல்வியாளருனுமான பெட்ராண்ட் ரஸ்ஸல்.

புத்தக படிப்பு என்பது 1000 முகங்கள் கொண்ட வாழ்கையை புரிந்து கொள்ள பயன்படும் என்கிறார்.

நேரு விரும்பி படித்தது - ஆங்கில நூல்கள்.

போரும் அமைதியும் யாருடைய நாவல் - டால் ஸ்டாய்

அல்மோரா சிறை உள்ள இடம் - உத்திராஞ்சல்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் உள்ள இடம் - இங்கிலாந்து.

இந்திரா காந்தி படித்த பல்கலைக்கழகம் - விஸ்வபாரதி.

தழை என்பதன் பொருள் - செடிகொடி.

**குறிப்பு:**

சேக்ஸ்பியர் - ஆங்கில நாடக ஆசிரியர்.

மில்டன் - ஆங்கில கவிஞர்.

பிளேட்டோ - கிரேக்கச் சிந்தனையாள்ர்.

காளிதாசர் - வடமொழி நாடக ஆசிரியர் (சகுந்தலம் நாடகம்).

டால்ஸ்டாய் - இரஷ்ய நாட்டு எழுத்தாளர் (போரும் அமைதியும் நாவல் - உலகில் மிகச்சிறந்த நாவல்களில் ஒன்று என இதனை நேரு குறிப்பிடுகிறார்.

பெர்னாட்ஷா - ஆங்கில நாடக ஆசிரியர்.

பேட்ரண்ட் ரஸ்ஸல் - சிந்தனையாள்ர், கல்வியாளர்(நேருவுக்கு மிகவும் பிடித்த கல்விச் சிந்தனையாளர்).

கிருபாளினி - விசுவபாரதியில் பணிபுரிந்த பேராசிரியர்.

நேரு மகளுக்கு எழுதிய கடிதத்தில்  அதிகம் கூறியது - நூல்கள் பற்றி.

ஆயிரம் முகங்கள் கொண்டது வாழ்க்கை. அதனைப் புரிந்துகொள்ளவும், முறையாக வாழவும் புத்தகப் படிப்பு இன்றியமையாதது என்றவர் - நேரு

எவ்வளவு துன்பமான நேரத்திலும், புத்தகம் படிக்கும் பழக்கத்தைக் கைவிடக் கூடாது என்று கடிதத்தின் மூலம் வாழ்க்கைப் பண்பை தெரிவித்தவர் - நேரு

**குறிப்பு:** உலகம் - ஞாலம், புவி - பூமி. முகில் - எழில், கொண்டல் - மேகம், மன்னன் - வேந்தன், கொற்றவன் -அரசன்.

**இலக்கணம்:**

ஒளியை உணர்த்தும் சொற்கள் இரண்டு இரண்டாக சேர்த்து வருவது, பிரித்தால் பொருள் தராது.

எ.கா: கண கண, சள சள, தணதண, பட பட, குடுகுடு, வளவள, பளபள. இதனை இரட்டைக்கிளவி என்பர்.

## செய்யுள்: சித்தர் பாடல்

சித்தர்கள் - நானூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் காடு மலைகளில் வாழ்ந்தவர்கள், இவர்கள் உருவ வழிபாடு செய்யாமல் வெட்ட வெளியையே கடவுளாக

வழிப்பட்டவர்கள்.

"வைதோரைக் கூட வையாதே" என்ற சித்தர் பாடலை பாடியவர் - கடுவெளிச் சித்தர்.

உருவ வழிபாடு செய்யாமல் இயற்கையை கடவுளாக வழிபட்டவர் - கடுவெளிச் சித்தர்.

கடுவெளிச் சித்தர் பாடிய பாடல்கள் - 54.

நந்தவனத்தில் ஓர் ஆண்டின் அவன் நாடாறு மாதமாய் என்ப் பாடியவர் - கடுவெளிச் சித்தர்.

பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகினிச் சித்தர் - இவை காரணப்பெயர்கள்.

வேம்பு - கசப்பான சொற்கள். சித்து - அறிவு

வீறாப்பு – இறுமாப்பு கடம் - உடம்பு.

சாற்றும் - புகழ்ச்சியாக்ப் பேசுவவது.

வெய்யவினை - துன்பம் தரும் செயல்

சாற்றும் - புகழ்ச்சியாகப் பேசுவது

பலரில் - பலர் + இல்(வீடுகள்)

## கவிதை: தாகம்

யாருடைய சுதந்திரத்தையும், உரிமையும் அடக்குமுறையால் கட்டுப்படித்திவிட முடியாது என்னும் கருத்தை சொல்கிறது.

கவிஞர் அப்துல் ரகுமானின் "ஆலா பனை" என்னும் நூல் சாகித்ய அகாடமி விருது பெற்றது.

இவரின் பிற படைப்புகள்- சுட்டுவிரல், பால்வீதி, நேயர் விருப்பம், பித்தன்.

புதுக்கவிதை புனைவதில் புகழ் பெற்ற கவிஞர் - கவிக்கோ அப்துல்ரகுமான்.

தாகம் என்ற கவிதை எந்த கவிதை தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது -பால் வீதி

## உரைநடை: இளமையில் பெரியார் கேட்ட வினா

இயற்பெயர்: இராமசாமி.

பெற்றோர்: வேங்கடப்பர், சின்னத்தாயம்மாள்.

பிறந்த ஊர்: ஈரோடு.

தோற்றுவித்தவை: பகுத்தறிவாளர் சங்கம், சுயமரியாதை இயக்கம் அகியன.

போராட்டம்: கேரளாவில் வைக்கம் என்ற ஊரில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதரவாக போராடி வெற்றிபெற்றதால் வைக்கம் வீரர் என அழைக்கப்பட்டார்.

தன்னைத் தானே மதிப்பதும், தன் மரியாதையை தக்க வைத்துக் கொள்வதும் - சுயமரியாதை.

பெரியாரின் காலம்: 17.09.1879 முதல் 24.12.1973

சமூக சீர்திருத்தத்திற்காக ஐக்கிய நாடுகளின் சபையின் யுனெஸ்கோ விருது 1970 ஆம் ஆண்டு பெரியாருக்கு வழங்கப்பட்டது.

மத்திய அரசு 1978 ஆம் ஆண்டு பெரியாருக்கு அஞ்சல்தலை வெளியிட்டது.

பெரியார் - பெண் விடுதலை மற்றும் தீண்டாமை ஒழிப்பிற்காக பாடுபட்டவர்.

பெரியார் மக்களுக்காக சமூகத் தொண்டாற்ற பெரியார் தம் வாழ்நாளில் எத்தனை நாட்களை செலவு செய்தார் - 8600 நாட்கள்.

பெரியார் மக்களுக்காக சமூகத் தொண்டாற்ற எவ்வளவு தூரம் பயணம் செய்தார் - 13,12,000 கி.மீ

பெரியார் தம் வாழ்நாளில் எத்தனை கூட்டங்களில் எவ்வளவு மணி நேரம் உரையாற்றினார் - 10,700 கூட்டங்கள், 21,400 மணி நேரம்.

பெரியார் பெண்களுக்கு நகையோ அழகான உடையோ முக்கியம் இல்லை; அறிவும் சுயமரியாதையும்தான் மிக முக்கியம்.

## செய்யுள்: புறநானூறு:

புறநானூறு = புறம் + நான்கு + நூறு.

தமிழர்களின் வரலாறு பண்பாடு ஆகியவற்றை அறிய உதவும் நூல்.

இந்நூல் புலவர் பலர் இயற்றிய பாடல்களின் தொகுப்பு.

அரிய நெல்லிக்கனியை அதியமானின் பெற்றவர்,  நண்பர் - ஔவையார்.

சங்கப்புலவர்களில் ஒருவர் - ஔவையார்.

நெல்லிக்கனியை அதியமானிடம் பெற்றவர் - ஔவையார்.

சங்ககால பெண் கவிஞர்களில் அதிகப்பாடல் பாடியவர் - இவரும் ஆத்திச்சூடி பாடிய ஔவையாரும் வேறுவேறானவர்.

ஔவை என்பதன் பொருள் - தாய்.

**பாடல் வரிகள்:**

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை; வாழிய நிலனே - ஔவையார்

**பொருள்:**

அவல் - பள்ளம்

மிசை - மேடு, * நல்லை - நன்றாக இருப்பாய்.

**புதுக்கவிதை: திண்ணையை இடித்துத் தெருவாக்கு!**

திண்ணையை இடித்து தெருவாக்கு என்ற பாடலை இயற்றியவர் - கவிஞர் தாராபாரதி. இவர் எழுச்சிமிக்க கவிதைகளை எழுதுவதில் வல்லவர்.

ஆசிரியராக பணியாற்றியவர், தமிழக அரசின் நல்லாசிரியர் விருதுபெற்றவர்.

காலம்: 26.02.1947 - 13.05.2000

பிற நூல்கள்: புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, தாராபாரதி கவிதைகள்.

**பாடல்வரிகள் சில:** "கடலின் நான் ஒரு முத்து"

எத்தனை உயரம் இமயமலை- அதில்

இன்னொரு சிகரம் உனதுதலை"

பூமிப்பந்து என்ன விலை? - உன்

புகழைத் தந்து வாங்கும்விலை!

**உரைநடை:**

**தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கர்**

பிறப்பு: இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் எனும் ஊரில் 1908ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் நாள் பிறந்தார்.

பெற்றோர்: தந்தை- உக்கிரபாண்டித்தேவர். தாய் - இந்திராணி. இஸ்லாமிய பெண்மணி இவருக்கு பாலூட்டி வளர்த்தார்.

இவருடைய ஆசிரியர் - குறைவறவாசித்தான் பிள்ளை.

**கல்வி:**

தொடக்கக்கல்வி - கமுதியில் கிறித்துவ பாதிரியார்களிடம் பெற்றார்.

பசுமலை உயர்நிலைப்பள்ளி(மதுரை) - 10ம் வகுப்பு ராமநாதபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில். * இராமநாதபுரத்தில் பரவிய பிளேக் நோயால் இவரது கல்வி நின்றது.

தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் வல்லவர்.

சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கி சுடுதல், ஜோதிடம், மருத்துவம் ஆகியவற்றை கற்றறிந்தார்.

முத்துராமலிங்கத்தேவர் எத்தனை சிற்றூர்களில் இருந்த தம் சொந்த நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கினார் - 32 சிற்றூர்களில் இருந்த நிலங்கள்.

முத்துராமலிங்கத்தேவர் தன்னுடைய அரசியல் குருவாக கருதியவர் - வங்கத்து சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். இவரின் விருப்பத்திற்கேற்ப நேதாஜி 06.09.1939-ல் மதுரை வந்தார்.

நிலக்கிழார் ஒழிப்பிலும் ஆலய நுழைவுப் போராட்டத்திலும் முன்னின்றார்.

சமபந்தி முறையை ஆதரித்தார்.

தேசியம் காத்த செம்மல் என இவரை திரு.வி.க பாராட்டியுள்ளார்.

தேர்தலில் போட்டியிட்டு ஐந்துமுறை வெற்றி பெற்றார்.(1937,1946,1952,1957,1962)

தெய்வீகம் தேசியம் இரண்டையும் இருகண்களாக போற்றியவர்.

சிறப்பு பெயர்கள்: வேதாந்த பாஸ்கர், பிரணவகேசரி, சன்மார்க்க கண்ட மாருதம், இந்து புத்த சம்ய மேதை.

1995ல் மத்திய அரசு இவருக்கு அஞ்சல்தலை வெளியிட்டது.

தமிழக அரசு சென்னையில் இவருக்கு சிலையும், அச்சிலை இருக்கும் சாலைக்கு இவருடைய பெயரையும் சூட்டியுள்ளது.

முத்துராமலிங்கரின் விருப்பத்திற்கு இணங்க 06.09.1939 இல் மதுரைக்கு நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் வருகை தந்தார்.

முத்துராமலிங்க தேவர் தன்னுடைய சொத்துக்களை 17 பாகங்களாக பிரித்தார்.

17 பாக சொத்துக்களில் 16 பாகங்களை 16 பேர்களுக்கு இனாம் சாசனமாக எழுதி வைத்தார்.

உப்பக்கம் என்றால் முதுகப்பக்கம் என்று பொருள்.

உம்பர் என்றால் மேலே என்று பொருள்.

உதுக்கண் - சற்றுத் தொலைவில் பார்.

கன்னியாகுமாரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்ட ஆண்டு- 2001 சனவரி-1.

**இவரின் கூற்றுகள்:**

சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை ஆண்டவன் மனித குலத்தைத்தான் படைத்தானே தவிர சாதியையும் நிறத்தையும்

அல்ல சாதியும் நிறமும் அரசியலுக்கும் இல்லை, ஆன்மீகத்ததிற்கும் இல்லை.

வீரமில்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகும்.

பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு. வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு.

மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் என குறிப்பிட்டுள்ளார்.

மறைவு - 1936ஆம் ஆண்டு அக்டோபர் 30(பிறந்தநாள்)

## இலக்கணம்:

சுட்டெழுத்துக்கள்- மனிதனையோ பொருளையோ சுட்டிகாட்ட உதவும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள். அவை: அ, இ பழங்காலத்தில் உ (தற்போது பயன்படுத்துவது

இல்லை) எ.கா: அப்பெண், இப்பையன், இவ்வீடு, அந்தப்பக்கம், இந்தவீடு, அ, இ சுட்டெழுத்துக்கள் தனியே நின்று சுட்டும் போது ஆண் பெண் அனைவரையும் பொதுவாக சுட்டுகின்றன.

அகச்சுட்டு - அவன், இவன்

புறச்சுட்டு - அப்பையன்

சுட்டுத்திரிபு - அந்தப்பக்கம்.

தகவலை வினா ஆக்கும் எழுத்து - ஆ

எ.கா: அவன் செய்தான் - அவனா செய்தான்?

வினா எழுப்ப உதவும் வேறு சில எழுத்துக்கள் - எ-விடை என்ன? ஏ-ஏன் வந்தாய்? யா- யார் அங்கே ? யோ- நீயோ செய்தாய்?

சொல்லுக்கு அழுத்தம் தரும் உயிரெழுத்து - ஏ எ.கா: அவனோ செயதான், சீதையே சிறந்தவள்.

தற்போது ஏ க்கு பதில் தான் பயன்படுத்தும் வழக்கம் உள்ளது. அவன் தான் சிறந்தவன்.

**பொருள்:**

ஈரம்- அன்பு,

அனைஇ - கலந்து

படிறு - வஞ்சம் * அகன் - உள்ளம்,

அமர் - விருப்பம்

செம்பொருள் - சிறந்த பொருள்

துவ்வாமை - வறுமை

அல்லவை - பாவம்* நன்றி - நன்மை

சிறுமை - துன்பம்

ஈன்றல் - தருதல், * வனகொல் - கடுஞ்சொல்

கவர்தல் - நுகர்தல்.

உதுக்காண் - சற்றுத் தொலைவில் பார்

உப்பக்கம் - முதுகுப்பக்கம்

உம்பர் - மேலே

**திருக்குறள்:**

**சொல்பொருள்:**

இனிதீன்றல் - இனிது + ஈன்றல்

ஈன்றல் - தருதல், உண்டாக்குதல்

வன்சொல் - கடுஞ்சொல்

எவன்கொலோ - ஏனோ?

சிறுமை - துன்பம்

மறுமை - மறுபிறவி

இம்மை - இப்பிறவி

நாடி - விரும்பி

அல்லவை - பாவம்

தலைப்பிரியாச் சொல் - நீங்காத சொற்கள்

அணி - அழகுக்காக அணியும் நகைகள்

துவ்வாமை - வறுமை

இன்புறூஉம் - இன்பம் தரும்

அகத்தான் ஆம் - உள்ளம் கலந்து

முகன் - முகம்

இன்சொலன் - இனிய சொற்களைப் பேசுபவன்

ஈரம் - அன்பு

அளைஇ - கலந்து

செம்பொருள் - மெய்ப்பொருள்

கவர்தல் - நுகர்தல்

## செய்யும் தொழிலே தெய்வம்

செய்யும் தொழிலே தெய்வம் என்ற பாடலை எழுதியவர் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

பிறந்த ஊர் - பட்டுக்கோட்டை அருகே செங்கப்படுத்தான்காடு.

காலம்: 13.04.1930 - 08.10.1959

மக்கள் கவிஞர் என அழைக்கப்பட்டவர் - பட்டுகோட்டை கல்யாணசுந்தரம்.

தனது பாடல்களில் உழக்கும் மக்களின் துயரங்களையும் பொதுவுடைமைச் சிந்தனைகளை கூறியுள்ளார்.

### சில பாடல் வரிகள்:

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்

திறமைதான் நமது செல்வம்

"பயிரை வளர்த்தால் பலனாகும் - அது

உயிரைக் காக்கும் உணவாகும்"

"காயும் ஒரு நாள் கனியாகும் -நம்

கனவும் ஒரு நாள் நனவாகும்"

## உரைநடை: கல்லிலே கலைவண்ணம்

காவிரி பாயும் சோழவள நாடு, அது கலைகளின் விளைநிலம், வியக்கவைக்கும் கட்டடக்கலையும் சிற்பக்கலையும் கொழிக்கும் ஊர் - கும்பகோணம்.

கும்பகோணத்திற்கு தென்புறம் பாயும் அரிசிலாற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஊர் - தாராசுரம்

இங்குள்ள ஐராவதிஸ்வரர் கோயில் 800 ஆண்டுகளுக்கு முன் இரண்டாம் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது.

நூறு கோவில்களுக்குச் சென்று கண்ட சிற்பங்களின் பேரழகைப் பார்த்து மகிழ்ந்த அனுபவத்தை தரும் ஒரே கோவில் - ஐராவதீசுவரர் கோவில்

முப்புரம் எரித்தவன் (திரிபுராந்தகன்) கதை ஒரு சிற்பம்.

யானையை வதம் செய்து, அதன் தோலைத் தன் மீது உடுதிகொள்ளும் ஈசனின் யானை உரிபோர்த்தவர்(கஜம்ஹாரமூர்த்தி) கதை ஒரு சிற்பம்.

அடிமுடி தேடவைக்கும் அண்ணாமலையார்(லிங்கோத்பவர்) கதை மற்றொரு சிற்பம்.

கோவிலின் நுழைவாயிலில் அமைந்த 7 கருங்கற் படிகள் சரிகமபதநி எனும் 7 நாதப்படிகளாக வடிக்கப்பட்டுள்ளன.

தாராசுரம் கோவிலின் கூம்பிய விமானத் தோற்றமும், அதற்குக் கீழே இருபுறமும் யானைகளும் குதிரைகளும் பூட்டிய இரதம்போல் அமைந்த மண்டபமும் வான்வெளி இரகசியத்தை காட்டுவதாக வானவியல் அறிஞர் கார்ல் சாகன் கூறுகிறார்.

தஞ்சை அரண்மனைக்கு சொந்தமான இக்கோவில் தற்போது மத்தியத் தொல்பொருள் துறையினர் பாதுகாத்து வருகின்றன. இதை மரபு அடையாளச்சினமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது. இக்கோவிலை கலைகளின் சரணாலயம் என்றே கூறலாம்.

## துணைப்பாடம்: சாதனைப் பெண்மணி மேரி கியூரி

கியூரி அண்மையார் 1876 ஆம் ஆண்டு போலந்து நாட்டில் வறுமையான குடும்பத்தில் ஐந்தாவது குழந்தையாக பிறந்தார்.

தனது மூத்த சகோதரியின் விருப்பமான மருத்துவ கல்வி பயில்வதை நிறைவேற்றுவதற்காக குழந்தைகளுக்குச் சிறப்புப் பாடம் சொல்லிக் கொடுத்ததும், செவிலிபோல் * பணிவிடைகள் செய்தும் பொருளீட்டி உதவினார்.

மேரிக்கு போலந்தில் அறிவியல் கல்வி மறுக்கப்பட்டதால், பிரான்ஸ் நாட்டிற்கு சென்று அறிவியல் கல்வி பயின்றார்.

அறிவியல் மேதை பியுரிகியூரியை, மேரி திருமணம் செய்து கொண்டார். அவருடன் சேர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

மணவாழ்க்கையில் மனநிறைவுடன் ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்தார்.

இடைவிடாத ஆராய்ச்சியின் பயனாக, கணவன், மனைவி இருவரும் முதலில் பொலோனியும் என்னும் பொருளை கண்டுபிடித்தனர்.

அதன் பிறகு இரண்டு ஆண்டுகள் இடைவிடாது ஆராய்ச்சி செய்து ரேடியம் என்னும் பொருளை கண்டுப்பிடித்தனர். இவ்விரண்டு அறிய கண்டுபிடிப்புகளுக்காக மேரி கியூரிக்கும் அவர் கணவருக்கும் 1903ம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இவரின் கண்டுபிடிப்பைப் தனியார் நிறுவனம் ஒன்று 50 இலட்சம் டாலர்களுக்கு விலைக்கு வாங்க முன் வந்த போதும் தனது அறிவியல் கண்டுபிடிப்பை அறிவியல் உலகிற்கே கொடையாக கொடுத்தார்.

மேலும் அவருக்கு இரண்டாவது முறையாக 1911 ஆண் ஆண்டு ரேடியத்தின் அணு எடையை கண்டுபிடித்ததற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது.

மேரி கியூரி 1934 இல் இயற்கை எய்தினார்.

கியூரியின் இறப்பிற்குப்பின் அவர் மகள் ஐரினும், மருமகன் சாலிட் கியூரியும் தொடர்ந்து அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் செயற்கை கதிர்வீச்சுப் பற்றிய வேதியியல் ஆராய்ச்சிக்காக 1935 ஆண் ஆண்டு நோபல் பரிசினை பெற்றனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று முறை நோபல் பரிசு பெற்ற இச்சாதனை இன்றுவரை முறியடிக்கப்படவில்லை.

நோபல் பரிசு வரலாற்றில் பரிசு பெற்ற முதற்பெண்மணி மேரி கியூரி.

**தனிப்பாடல்**

**சொற்பொருள்:**

இரட்சித்தானா? - காபாற்றினானா?

அல்லைத்தான் - அதுவும் அல்லாமல்

பதுமத்தான் - தாமரையில் உள்ள பிரமன்

குமரகண்ட வலிப்பு - ஒருவகை வலிப்பு நோய்

குரைகடல் - ஒலிக்கும் கடல்

**நூல் குறிப்பு:**

புலவர்கள், அவ்வப்போது பாடிய பாடல்களை தனிப்பாடல் திரட்டு என்னும் நூலக தொகுத்துள்ளனர்.

பெரும்பாலான பாடல்கள் இருநூறு முதல் முந்நூறு ஆண்டுகளுக்குள் பாடப்பட்டவை.

இராமச்சந்திரக் கவிராயர் துன்பத்தையும், நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர்.

## அந்த காலம் இந்த காலம்

**ஆசிரியர் குறிப்பு:**

உடுமலை நாராயண கவி தமிழ்த் திரைப்பாடல் ஆசிரியரும், நாடக எழுத்தாளரும் ஆவார்.

சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பியவர்.

பகுத்தறிவு கவிராயர் என தமிழ் மக்களால் அழைக்கப்பட்டவர்.

**காலம்:** 25.09.1899 - 23.05.1981

## தயக்கம் இன்றித் தமிழிலேயே பேசுவோம்

| | |
|---|---|
| டிவி – தொலைக்காட்சி | ரேடியோ - வானொலி |
| டிபன் – சிற்றுண்டி | டீ - தேநீர் |
| டெலிபோன் – தொலைபேசி | கரண்ட் - மின்சாரம் |
| ஃபேன் – மின்விசிறி | சேர் - நாற்காலி |
| லைட் – விளக்கு | டம்ளர் - குவளை |
| சைக்கிள் – மிதிவண்டி | பிலாட்பாரம் - நடைப்பாதை |
| ஆபிஸ் – அலுவலகம் | சினிமா - திரைப்படம் |
| டைப்ரைட்டர் – தட்டச்சுப்பொறி | ரோடு - சாலை |
| பிளைட் – விமானம் | பேங்க் - வங்கி |
| தியேட்டர் - திரை அரங்கு | ஆல்பத்திரி - மருத்துவமனை |
| கம்ப்யூட்டர் – கணினி | காலேஜ் - கல்லூரி |
| யுனிவர்சிட்டி – பல்கலைக்கழகம் | டெலஸ்கோப் - தொலைநோக்கி |
| தெர்மோமீட்டர் – வெப்பமானி | இன்டர்நெட் - இணையம் |
| இஸ்கூல் – பள்ளி | சயின்ஸ் - அறிவியல் |
| மைக்ரோஸ்கோப் – நுண்ணோக்கி | நம்பர் - எண் |

## நாடும் நகரமும்

**நாடு:** நாடு என்ற சொல் ஆதியில் மக்கள் வாழும் நிலத்தை குறிப்பதற்கு வழங்கப்பட்டது.

மூவேந்தர்களின் ஆட்சிக்குட்பட்ட தமிழ்நாட்டின் பகுதிகள் அவரவர் பெயராலேயே சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்று அழைக்கப்பட்டன.

நாளடைவில் நாடுகளின் உட்பிவுகளும் "நாடு" என்று அழைக்கப்பட்டன. கொங்கு நாடு, தொண்டை நாடு முதலியன இதற்குச் சான்றாகும்.

முன்னாளில் முரப்புநாடு என்பது பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த நாடுகளுள் ஒன்று.

இப்பொழுது அப்பெயர் பொருணை யாற்றின் கரையிலுள்ள ஒரு சிற்றூரின் பெயராக நிலவுகின்றது. அதற்கு எதிரே ஆற்றின் மறுகரையில்லுள்ள மற்றொரு சிற்றூர் வல்லநாடு என்னும் பெயருடையது.

சோழநாட்டில் மாயவரத்திற்கு அடுத்துள்ள ஓரூர் கொரநாடு என்று அளிக்கப்படுகிறது.

கூர்ரைநாடு என்பது கொரநாடு என்று மருவிற்று.

பட்டுகோட்டை வட்டத்தில் கானாடும், மதுரங்க வட்டத்தில் தென்னாடும் உள்ளன.

**நகரம்:** சிறந்த ஊர்கள், நகரம் என்னும் பெயாரால் வழங்கும். ஆழ்வார்களின் சிறந்த நம்மாழ்வார் பிறந்த இடம் குருகூர் என்னும் பலம்பெரை துறந்து, ஆழ்வார்த் திருநகரியாகத் திகழ்கிறது.

பாண்டியநாட்டிலுள்ள விருதுப்பட்டி, வர்த்தகத்தால் மேம்பட்டு இன்று விருதுநகராகா விளங்குகிறது.

இக்காலத்தில் தோன்றும் புத்தூர்களும் நகரம் என்னும் பெயரையே பெரிதும் நாடுவனவாகத் தெரிகின்றன.

**சென்னை:** திருமயிலைக்கு அருகேயுள்ள திருவல்லிக்கேணி, முதல் ஆழ்வார்களால் பாடப்பெற்றது. அவ்வூரின் பெயர் அல்லிக்கேணி என்பதாகும். அல்லிக்கேணி என்பது அல்லிக்குளம்.

அங்கே பெருமாள் கோவில் கொண்டமையால் திரு என்னும் அடைமொழி சேர்ந்து திருவல்லிக்கேணி ஆயிற்று.

**புரம்:** புரம் என்னும் சொல் சிறந்த ஊர்களை குறிப்பதாகும். ஆதியில் காஞ்சி என்று பெற்ற ஊர் பின்னர் "புரம்" என்பது சேர்ந்து காஞ்சிபுரம் ஆயிற்று. பல்லவபுரம்(பல்லாவரம்), சோழபுரம், தருமபுரம் போன்றவை மேலும் சில எடுத்துக்காட்டுகளாகும்.

**பட்டிணம்:** கடற்கரையில் உருவாகும் நகரங்கள் "பட்டிணம்" எனப் பெயர் பெரும். காவிரிப்பூம்பட்டிணம், நாகபட்டிணம், காயல்பட்டிணம், குலசேகரபட்டிணம், சதுரங்கபட்டிணம் ஆகியவை "பட்டிணம்" எனப் பெயர் பெற்ற ஊர்களாகும்.

**பாக்கம்:** கடற்கரைச் சிற்றூர்கள் "பாக்கம்" எனப் பெயர் பெரும். கோடம்பாக்கம், மீனம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேப்பாக்கம் இப்படிப் பாக்கம் எனப் பெயர் பெற்ற ஊர்களைக் குறிப்பிடலாம்.

**புலம்:** கடற்கரைச் சிற்றூர்கள் பாக்கம் எனப் பெயர் பெரும். கோடம்பாக்கம், மீனம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேப்பாக்கம் இப்படிப் பாக்கம் எனப் பெயர் பெற்ற ஊர்களைக் குறிப்பிடலாம்.

**புலம்:** புலம் என்னும் சொல் நிலத்தைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக மாம்புலம், தமராபுலம், குரவைபுலம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**கும்பம்:** நெய்தல் நிலத்தில் அமைந்த வாழ்விடங்கள் குப்பம் என்னும் பெயரால் அழைக்கப்படும். காட்டுக்குப்பம், நொச்சிக்குப்பம் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

**ஆசிரியர்:** சொல்லின் செல்வர் எனப்படும் ரா.பி.சேதுபிள்ளை அவர்களின் "ஊரும் பேரும்" என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

## குற்றாலக் குறவஞ்சி

**சொற்பொருள்:**

வானரங்கள் - ஆண் குரங்குகள்

மந்தி - பெண் குரங்குகள்

வான்கவிகள் - தேவர்கள்

காயசித்தி - இறப்பை நீக்கும் மூலிகை

வேணி - சடை

மின்னார் - பெண்கள்

மருங்கு - இடை

**நூல் குறிப்பு:**

இந்நூலின் முழுப்பெயர் திருக்குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர், திருகூட ராசப்பக் கவிராயர்.

குறவஞ்சி என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது இந்நூல்.

## மரமும் பழைய குடையும்

**சொற்பொருள்:**

கோட்டு மரம் - கிளைகளை உடைய மரம்

பீற்றல் குடை - பிய்ந்த குடை

**ஆசிரியர் குறிப்பு:**

அழகின் சொக்கநாதப் புலவர் திருநெல்வேலி மாவட்டத்தில் தச்சநல்லூரில் பிறந்தவர்.

இவரின் காலம் கி.பி.19 ஆம் நூற்றாண்டு.

**நூல் குறிப்பு:**

ஒரு சொல்லோ தொடரோ இருபொருள் தருமாறு பாடுவது "சிலேடை" எனப்படும்.

இதனை "இரட்டுறமொழிதல்" (இரண்டு + உற + மொழிதல்) என்றும் கூறுவர். இரண்டு பொருள்படப் பாடுவது.

## இலக்கணமும் மொழித்திறனும் நாட்டுப்புறத் தமிழ் அறிவோம்

கோழியக் கேட்டா ஆனம் காச்சுவாங்க…?

ஆனம் என்பதன் பொருள் - குழம்பு

அளக்குற நாழிக்கு அகவிலை தெரியுமா?

நாழி என்பதன் பொருள் - தானியங்களை அளக்கும் படி

அகவிலை என்பதன் பொருள் - தானிய விலை

திறந்த வீட்டுக்குத் திறவுகோல் எதுக்கு?

திறவுகோல் என்பதன் பொருள் - சாவி

ஒற்று எனப்படுவது - மெய்யெழுத்து

**ஒற்றெழுத்தைச் சேர்த்து எழுதுக:**

பாடலை + சொன்னேன் = பாடலைச் சொன்னேன்

கடவுளை + கண்டேன் = கடவுளைக் கண்டேன்

பழத்தை + தின்றேன் = பழத்தைத் தின்றேன்

கண்ணனுக்கு + கொடுத்தேன் = கண்ணனுக்குக் கொடுத்தேன்

மதுரைக்கு + செல்வோம் - மதுரைக்குச் செல்வோம்

## ஏழாம் வகுப்பு:

### செய்யுள் - வாழ்த்து

பண்ணினை இயற்கை வைத்த எனப் தொடங்கும் வாழ்த்துப் பாடலை இயற்றியவர் - திரு.வி.கல்யாணசுந்தரனார்.

**சொற்பொருள்:**

பண் - இசை

வண்மை - கொடைத்தன்மை

போற்றி - வாழத்துகிறேன்

இருக்கை - ஆசனம்

திரு.வி.க என்பதன் விரிவாக்கம் - திருவாரூர் விருத்தாசலனார் மகனார் கலியாணசுந்தரனார்.

திரு.வி.க வின் பெற்றோர் - விருத்தாசலனார் - சின்னம்மையார்

திரு.வி.கலியாணசுந்தரனார் பிறந்த ஊர் - காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள துள்ளம்.

துள்ளம் தற்பொழுது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

தண்டலம் (இவ்வூர் சென்னையை அடுத்துள்ள போரூருக்கு மேற்கே உள்ளது)

**திரு.வி.க வின் சிறப்பு:**

இவர் தொழிலாளர் நலனுக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட்டார். மேடைத் தமிழுக்கு இலக்கணம் வகுத்தார். இவரின் தமிழ்நடையைப் போற்றித் "தமிழ்த் தென்றல்" என சிறப்பிக்கப்படுகிறார்.

திரு.வி.கலியாணசுந்தரனார் படைப்புகள் யாவை?

மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

பெண்ணின் பெருமை

தமிழ்த்தென்றல்

உரிமை வேட்கை,

முருகன் அல்லது அழகு முதலியன.

திரு.வி.க அவர்கள் வாழ்ந்த காலம் என்ன?

26.08.1883 - 17.09.1953

திரு.வி.க இயற்றிய வாழ்த்துப் பாடல் எந்நூலில் இடம் பெற்றுள்ளது?

பொதுமை வேட்டல்

பொதுமை வேட்டல் என்னும் நூல் எந்தத் தலைப்பில் இடம் பெற்றுள்ளது?

போற்றி

பொதுமை வேட்டல் எதனைக் கடந்து உலகத்தை ஒரு குடும்பமாகக் கருதுகிறது?

நாடு, மதம், இனம், மொழி, நிறம்

தெய்வ நிச்சயம் முதலாகப் போற்றி ஈறாக எத்தனை தலைப்புகளில் உள்ளது?

நாற்பத்து நான்கு தலைப்புகளில், நானூற்று முப்பது பாக்களால் ஆனது இந்நூல்.

நூல் பயன்: இந்நூலைக் கற்பார்க்கு நாடு, மதம், மொழி, இன வேற்றுமைகள் விலகும்; சமுதாய ஒற்றுமை வளரும், மனித நேயம் மலரும், உலகம் தழுவிய ஒருமைப்பாட்டுணர்வு உண்டாகும்.

பொதுமை வேட்டல் எத்தனை பாக்களால் ஆனது?

நானூற்று முப்பது

சென்னையில் உள்ள எந்தப் பள்ளியில் தமிழாசிரியராக திரு.வி.க அவர்கள் பணியாற்றினார்?

இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில்

இறைவன் உயிரில் வைத்தது எதனை?

இறைவன் கொடைத்தன்மையை உயிரில் வைத்தார்.

இறைவனின் இருக்கை யாது?

இறைவனின் இருக்கை உண்மை.

## திருக்குறள்

**சொற்பொருள்:**

புரை - குற்றம்

பயக்கும் - தரும்

சுடும் - வருத்தும்

அன்ன - அவை போல்வன

எய்யாமை - வருந்தாமல்

அகம் - உள்ளம்

அமையும் - உண்டாகும்.

**ஆசிரியர் குறிப்பு:**

திருவள்ளுவர் சுருங்க சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர்.

சிறப்பு பெயர்கள்: நாயனார், முதற்பாவலர், நான்முகனார், மாதானுபாங்கி, செந்நாப்போதார், பெருநாவலர்

**நூல் குறிப்பு:**

மனிதன் மனிதனாக வாழ, மனிதன் மனிதனுக்குக் கூறிய அறவுரை தான் திருக்குறள்.

இந்நூல் அறத்துப்பால், பொருட்ப்பால், இன்பத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.

ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துக் குறட்பாக்கள் என ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்கள் உள்ளன.

இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இது 107 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவரின் பெற்றோர் யார்?

தாயின் பெயர் - ஆதி

தந்தையின் பெயர் - பகவன்

திருவள்ளுவர் எந்த ஊரில் பிறந்தார்?

மயிலாப்பூர் (மதுரை என்றும் கூறுவர்)

திருவள்ளுவர் யாரால் வளர்க்கப்பட்டார்?

வள்ளுவன் ஒருவனால் வளர்க்கப்பட்டார்.

வள்ளுவன் என்றால் பொருள் யாது?

அரசருக்கு அந்தரங்க ஆலோசனை கூறும் ஓர் உயர்ந்த அலுவலர்

திருவள்ளுவரின் மனைவியின் பெயர் என்ன?

வாசுகி

வாசுகி யாருடைய மகள்?

மார்க்கசகாயர் என்னும் வேளாளரின் மகள்

திருவள்ளுவர் செய்த தொழில் என்ன?

நெசவுத் தொழில்

திருவள்ளுவரின் வேறு பெயர்கள் என்ன?

நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகன், மாதானுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர், பொய்யில் புலவர் என்பன.

திருவள்ளுவர் காலம் எது?

கி.மு. 31

திரு என்னும் அடைமொழியைப் பெற்றுத் திருக்குறள் என வழங்கப் பெறுகிறது.

திருக்குறள் எத்தனை பிரிவுகளைக் கொண்டது? அவை யாவை?

மூன்று பிரிவுகளைக் கொண்டது.

அறத்துப்பால்

பொருட்பால்

இன்பத்துப்பால்

இந்நூல் திருக்குறள் என்று எதனால் பெயர் பெற்றது?

திரு+குறள். மேன்மையான குறள் வெண்பாக்களால் இயற்றப்பட்டதால் இப்பெயர் பெற்றது.

திருக்குறள் 133 அதிகாரங்களை உடையது.

திருக்குறள் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் எத்தனை பாடல்களை கொண்டது?

பத்து

திருக்குறள் நூலின் பயன் யாது?

திருக்குறள் கற்பதனால் மனித வாழ்க்கை செம்மையுறும். பண்புகள் வளரும், உலகெல்லாம் ஒன்றெனும் உயர்குணம் தோன்றும், மனிதர்களிடையே வேறுபாடுகள் மறையும், எல்லா உயிரிடத்தும் அன்பு தழைக்கும்.

உடலை நீர் தூய்மை செய்யும்: வாய்மை உள்ளத் தூய்மையை வெளிப்படுத்தும்.

வாய்மை என்றால் என்ன?

மற்றவர்களுக்குத் தீங்கு தராத சொற்களைப் பேசுதல்.

திருக்குறள் எத்தனை குறட்பாக்களால் ஆனது?

ஆயிரத்து முந்நூற்று முப்பது

திருக்குறள் ஏன் உலகப் பொதுமறை என்று வழங்கப் பெறுகிறது?

உலகம் ஏற்கும் கருத்துக்களைக் கொண்டுள்ளதால் இவ்வாறு வழங்கப் பெறுகிறது.

**பிரித்து எழுதுக:** யாதெனின் - யாது + எனின்

பொய்யாதொழுகின் - பொய்யாது + ஒழுகின்

**சொற்றொடரில் சொற்களை அமைத்தல்:**

இயற்கை - குற்றாலத்தில் உள்ள இயற்கைக் காட்சிகள் உள்ளத்தைக் கவர்கின்றன.

பெண்மை - பாரதியார் பெண்மையைப் போற்றிப் பாடியுள்ளார்.

வாய்மை - வாய்மையே வெல்லும் என்ற தொடர் தமிழக அரசின் சின்னத்தில் உள்ளது.

உள்ளம் - குழந்தையின் உள்ளண் கள்ளம் புகா இடமாகும்.

*உரைநடை:*

*செம்மொழித் தமிழ்*

**உலக மொழிகள்:**

உலகத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. அவற்றுள் பல பேச்சு மொழிகளே.

"எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தென்மொழியாகிய தமிழ் ஒன்றே" என்று வள்ளலார் அருள்கிறார்.

**செம்மொழிகள்:**

திருந்திய செவ்வியல்புகள் பொருந்திய மொழிகள் செம்மொழிகள் எனப்படும்.

கிரேக்கம், இலத்தின், சமஸ்கிருதம், சீனம், எபிரேயம், அரபு, ஈப்ரு ஆகியவற்றை செம்மொழிகள் எனப் பட்டியலிடுகிறார் மொழியியல் அறிஞர் ச.அகத்தியலிங்கம்.

**திருக்குறள் பற்றி டாக்டர் கிரௌல்:**

டாக்டர் கிரௌல், "தமிழ்மொழி அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளித்தட்டு, திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள், தமிழ் என்னை ஈர்த்தது, குறளோ என்னை இழுத்தது" என்று மொழிந்து இன்புற்றார்.

**தமிழின் தொன்மை:**

உலகில் பழமையான நிலபகுதியான "குமரிக்கண்டத்தில்" தமிழ் தோன்றியதாக "தண்டியலங்கார" மேற்கோள் செய்யுள் கூறுகிறது.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி

ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்

மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது

தன்னே ரிலாத தமிழ்"

**தமிழின் மேன்மை:**

தமிழ் மெல்லோசே மொழி, அதனாலேயே உலக முதன் மொழியாய்த் தோன்றியும் வழக்கொழியாமல் இன்றும் இளமை மாறாமல் கன்னித்தமிழாய் இருந்து வருகிறது.

**தமிழ் மொழியின் தாய்மை:**

பெற்றோரை குறிக்கும் "அம்மை, அப்பன்" என்னும் குமரிநாட்டுத் (நாஞ்சில் நாடு) தமிழ்ச்சொற்கள், வடமொழி உட்பட உலகப் பெருமொழிகள் பலவற்றிலும் வடிவு திரிந்து வழங்கி வருகின்றன.

**தமிழ் மொழியின் தூய்மை:**

"தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயக்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும்" என்று கூறினார் கால்டுவெல்.

**தமிழ் மொழியின் செம்மை:**

மொழிக்கு இலக்கான வரம்பும் சொற்களின் திருந்திய வடிவும் அவசியம். இவற்றை தமிழில் உள்ளது போல, வேறு எம்மொழியிலும் காண இயலாது. அதனாலேயே தமிழ், "செந்தமிழ்" எனப்பட்டது.

**தமிழ் மொழியின் மும்மை:**

முதற்சங்கத்திலிருந்தே இசையும் நாடகமும் இயற்றமிழோடு இணைந்து முத்தமிழென வழங்கி வரலாயிற்று. முதலிரு சங்கத்திலும் வழங்கிய இலக்கண நூல்கள் முத்தமிழ் பற்றியனவாகவே இருந்தன.

**தமிழ் மொழியின் இயற்கை வளர்ச்சி:**

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

என்பது தொல்காப்பிய நூற்பா.

தமிழில் இடுகுறி பெயர்கள் குறைவு.

ஒருமை, பன்மை என்னும் இருவகை எண் மட்டுமே தமிழில் உண்டு.

வடமொழியில் ஒருமை, இருமை, பன்மையென மூவகை எண் உள்ளன.

தமிழில் உயிர்களுக்கு மட்டுமே பால்வேறுபாடு உண்டு, பொருள்களுக்குப் பால்வேறுபாடு இல்லை.

**தமிழ்மொழியின் இலக்கண நிறைவு:**

எல்லா மொழிகளும் "எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறும். ஆனால் தமிழ் அவற்றுடன் சேர்த்து வாழ்வியலுக்கான பொருள் இலக்கணத்தையும்" கூறிகிறது. * அதனையும் " அகம், புறம்" என இருவகையாகப் பகுத்துள்ளது.

**தமிழ் மொழியின் செய்யுள் சிறப்பு:**

பண்டைத் தமிழ் இலக்கியங்களும் செய்யுள் வடிவிலேயே இருந்தன.

"கலிப்பா" முதலான் செய்யுள் வகைகள் வேறு எம்மொழியிலும் இல்லை.

**தமிழ் மொழியின் அணிச் சிறப்பு:**

புலவர்கள் செய்யுளுக்குச் சிறப்புச் சேர்க்க "உவமை, உருவகம்" முதலிய நூற்றுக்கணக்கான அணிகளைப் பயன்படுத்திப் பாடல்களை இயற்றியுள்ளார்கள்.

**தமிழ் மொழியின் நூல் சிறப்பு:**

ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் இயற்கைச் சீற்றங்களால் அழிந்துபோயின. கிடைத்தவற்றுள் சங்ககால நூல்கள் தமிழர்தம் மொழியையும் பண்பாட்டையும் விளக்குவனவாகத் திகழ்கின்றன.

விழுமிய வியத்தகு பண்பாடுகளையும் நூல்களையும் கொண்டது தமிழ்மொழி.

உலகின் மிகப்பழமையான நிலப்பகுதி - குமரிக்கண்டம்.

இன்று பேச்சு வழக்கில் இல்லாத மொழிகள் - கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம்.

தமிழைச் செம்மொழி என நிலைநாட்டுவதற்கு உரிய சான்றுகளாக எவை திகழ்கின்றன?

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் அகப்பொருள் ஆகிய செவ்வியல் இலக்கியங்கள் ஆகும்.

பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்றான திருக்குறளுக்கு இணையான வேறு நூல் உலகில் இல்லை.

உலகின் மிகப்பழமையான நிலப்பகுதி - குமரிக்கண்டம்

தொல்காப்பிய நூற்பா என்பது - எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே.

**துணைப்பாடம்:**

**ஊரும் பேரும் (மலை, கரடு, பாறை, குன்று, குருச்சி, கிரி)**

**குறுஞ்சி நில ஊர்கள்:**

மலையின் அருகே உள்ள ஊர்களுக்கு நாகமலை, ஆனைமலை, சிறுமலை, திருவண்ணாமலை, விராலிமலை, வள்ளிமலை எனப் பெயர்கள் உள்ளன.

ஓங்கியுயர்ந்த நிலபகுதி - மலை

மலையின் உயரத்தில் குறைந்தது - குன்று

குன்றின் உயரத்தில் குறைந்தது - கரடு, பாறை

குன்றை அடுத்துள்ள ஊர்கள் குன்றூர், குன்றத்தூர், குன்றக்குடி என வழங்கப்பெற்றன.

மலையைக் குறிக்கும் வடசொல், "கிரி" என்பதாகும். சிவகிரி, கிருஷ்ணகிரி, நீலகிரி, கோத்தகிரி என்பன மலையையொட்டி எழுந்த ஊர்பெயர்கள்.

குருச்சி, ஆழ்வார்க்குருச்சி, கல்லிடைக்குருச்சி, கள்ளக்குருச்சி என்ற பெயர்கள் எல்லாம் குறிஞ்சி நிலா ஊர்களே, குறிஞ்சி என்னும் சொல்லே மருவிக் குருச்சி ஆயிற்று.

**முல்லை நில ஊர்கள்: (காடு, புரம், பட்டி, பாடி)**

அத்தி(ஆர்) மரங்கள் சூழ்ந்த ஊர் "ஆர்க்காடு" எனவும், ஆல மரங்கள் நிறைந்த ஊர் "ஆலங்காடு" எனவும், களாச்செடிகள் நிறைந்த ஊர் "களாக்காடு" எனவும் பெயரிட்டனர்.

காட்டின் நடுவில் வாழ்ந்த மக்கள், அங்குத் திரியும் விலங்குகளால் தமக்கும், தம் கால்நடைகளுக்கும் ஊறு நேராவண்ணம் வேலி கட்டிப் பாதுகாத்தனர். அவ்வூர்கள் "பட்டி, பாடி" என அழைக்கப்பட்டன. (காளிப்பட்டி, கோவில்பட்டி, சிறுகூடல்பட்டி)

**மருத நில ஊர்கள்: (ஊர், குடி, சோலை, பட்டி, குளம், ஏரி, ஊரணி)**

நிலவளம், நீர்வளமும் பயிர்வளமும் செறிந்த மருதநிலக் குடியிருப்பும் "ஊர்" என வழங்கப்பட்டது.

ஆறுகள் பாய்ந்த இடங்களில் ஆற்றூர் என வழங்கப்பட்ட பெயர்கள் காலபோக்கில் "ஆத்தூர்" என மருவியது.

மரங்கள் சூழ்ந்த பகுதிகளில் மரங்களின் பெயரோடு ஊர் பெயரை சேர்த்து வழங்கினர். (கடம்பூர், கடம்பத்தூர், புளியங்குடி, புளியஞ்சோலை, புளியம்பட்டி).

குளம், ஏரி, ஊருணி ஆகியற்றுடன் ஊர் பெயர்களில் இணைத்து வழங்கினர். (புளியங்குளம், வேப்பேரி, பேராவூரணி)

**நெய்தல் நில ஊர்கள்: (பட்டினம், பாக்கம், கரை, குப்பம்)**

கடற்கரை பேரூர்கள் "பட்டினம்" எனவும், சிற்றூர்கள் "பாக்கம்" எனவும் பெயர் பெற்றிருந்தன.

பரதவர் வாழ்ந்த ஊர்கள் "கீழக்கரை, கோடியக்கரை, நீலாங்கரை" எனப் பெயர் ரெற்றிருந்தன.

மீனவர்கள் வாழும் இடங்கள் "குப்பம்" என்று அழைக்கப்படுகிறது.

**திசையும் ஊர்கள்: (ஊர், பழஞ்சி)**

நாற்றிசைப் பெயர்களும் ஊர்களுடன் குறிக்கப்பெற்றன. ஊருக்கு கிழக்கே இருந்த பகுதியை "கீழூர்" எனவும், மேற்கே இருந்த பகுதியை "மேலூர்" எனவும் பெயரிட்டனர்.

**நாயக்க மன்னர்கள்:**

நாயக்க மன்னர்கள் தமிழகத்தை 72 பாளையங்களாக பிரித்து ஆட்சி செய்தனர்.

அவர்கள் ஊர்ப்பெயருடன் பாளையத்தை சேர்த்து வழங்கினர். (ஆரப்பாளையம், மதிகோன்பாளையம், குமாரப்பாளையம், மேட்டுப்பாளையம்)

**ஊர் பெயர்கள் மாறுதல்:**

கல்வெட்டுகளில் காணப்படும் "மதிரை" மருதையாகி இன்று "மதுரை"யாக மாறியுள்ளது.

கோவன்புத்தூர் என்னும் பெயர் "கோயமுத்தூர்" ஆகி, இன்று "கோவை" ஆக மருவியுள்ளது.

## இலக்கணம்: சார்பெழுத்துகளின் வகைகள்

நம் தமிழ்மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் தனித்து இயங்கி முதன்மைபெற்று விளங்குவதால் அவற்றை முதலெழுத்துகள் என்கிறோம்.

முதலெழுத்துகளைச் சார்ந்துவரும் எழுத்துக்களைச் சார்பெழுத்துக்கள் என்கிறோம்.

சார்பெழுத்துக்கள் பத்து வகைப்படும். அவை: உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம்.

## புறநானூறு

நெல்லும் உயிரன்றே; நீரும்உயி ரன்றே;

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;

அதனால் யான்உயிர் என்பது அறிகை

வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே;

மோசிகீரனார்

**சொற்பொருள்:**

அறிகை - அறிதல் வேண்டும்

தானை – படை கடனே - கடமை

**ஆசிரியர் குறிப்பு:**

மோசிகீரனார், தென்பாண்டி நாட்டிலுள்ள "மோசி" என்னும் ஊரில் வாழ்ந்தவர்.

"கீரன்" என்னும் குடிப்பெயரை உடையவர்.

உடல் சோர்வினால் அரசுக்குரிய முரசுக் கட்டிலில் உறங்கியபோது, "சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை" என்ற அரசனால் கவரிவீசப் பெற்ற பெருமைக்குரியவர்.

இவர் பாடிய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றுள் உள்ளன.

**நூல்குறிப்பு:**

புறம் + நான்கு + நூறு = புறநானூறு.

இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

இது புறம் பற்றிய நானூறு பாடல்களின் தொகுப்பு.

புறம் என்பது மறம் செய்தலும் அறம் செய்தலும் ஆகும்.

நூல் பயன்: புறநானூற்றைக் கற்பதனால், தமிழர்தம் பழங்காலப் புறவாழ்க்கையையும் பண்பாட்டையும் அறிந்து பெருமிதம் கொள்ளலாம்.

அரசனைக் குறிக்கும் வேறு பெயர்கள்: கோ, மன்னன், வேந்தன்.

## முதுமொழிக்காஞ்சி

**சொற்பொருள்:**

ஆர்கலி - நிறைந்த ஓசையுடைய கடல்

காதல் - அன்பு, விருப்பம்

மேதை - அறிவு நுட்பம்

வண்மை - ஈகை, கொடை

பிணி - நோய்

மெய் - உடம்பு

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர்: மதுரை கூடலூர் கிழார்

பிறந்த ஊர்: கூடலூர்

சிறப்பு: இவர் தம் பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்கள் மேற்கோள்களாக கையாண்டுள்ளார்கள்.

காலம்: சங்க காலத்திற்குப்பின் வாழ்ந்தவர்.

**நூல் குறிப்பு:**

முதுமொழிக்காஞ்சி என்பது காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று.

இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இந்நூலை "அறவுரைக்கோவை" எனவும் கூறுவர்.

இந்நூலில் பத்து அதிகாரங்களும், அதிகாரத்திற்கு பத்துச் செய்யுள் வீதம் நூறு பாடல்களுள் உள்ளன.

**உரைநடை: மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்**

**உ.வே.சா:**

யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன் என்று எழுந்தவர் உ.வே.சா. அவரே அனைவராலும் "தமிழ்த்தாத்தா" என்று அழைக்கப்படுபவர்.

உ.வே.சா.வின் ஆசிரியரே "மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்".

**இளமையும் கல்வியும்:**

மீனாட்சிசுந்தரனார் 1815 ஆண் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் நாள் திருச்சி மாவட்டம் "எண்ணெய்க்கிராமத்தில்" பிறந்தார்.

பெற்றோர்: சிதம்பரம் - அன்னத்தாச்சியார்.

தமது தந்தையிடமே கல்வி கற்றார்.

**கல்வியே வாழ்க்கை:**

மீனாட்சிசுந்தரனார் திருமணம் செய்துகொண்டு குடும்பத்துடன் "திரிசிரபுரத்தில்" (திருச்சி) வாழ்ந்தார்.

அவரை "திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரனார்" என்றே அழைப்பர்.

அவரிடம் "கல்வி கற்க வேண்டும்" என்ற வேட்கை தணியாததாக இருந்தது.

"கல்வியே வாழ்க்கை" என்று இருந்தவர்.

**தமிழ் கற்பித்தல்:**

மீனாட்சிசுந்தரனார் சாதி, சமயம் பாராது அனைவருக்கும் கல்வி கற்பித்தார்.

குலாம்காதர் நாவலர், சவரிராயலு, தியாகராசர், சாமிநாதர் ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத்தவர்கள்.

இவர் சில காலம் திருவாவடுதுறையில் ஆதின வித்துவானாக பணியாற்றினார்.

திருவாவடுதுறையில் வாழ்ந்த காலத்தில் தான் உ.வே.சாமிநாதருக்கு ஆசிரியராக இருந்தார்.

**தமிழ்தொண்டு:**

இவர் 80க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

கோவில்களை பற்றிய "தலபுராணங்கள்" பல இயற்றியுள்ளார்.

**பண்பு நலன்கள்:**

மீனாட்சிசுந்தரனார் அருங்குணமும் நிறைந்த புலமையும் தளராத நாவன்மையும் படைத்தவர்.

நகைச்சுவை உணர்வு மிக்கவர்.

ஒருமுறை அவரது நண்பர் ஆறுமுகம் என்பவர், தம்முடைய குடும்பத் தொடர்பாக கும்பகோணத்தில் ஒருவருக்குப் பத்திரம் ஒன்று எழுதிக்கொடுத்தார்.

அதில், சாட்சிக் கையொப்பமிட்ட  வந்த ஒருவருடைய இருப்பிடம் கும்பகோணத்தில் உள்ள சுண்ணாம்புக்காரன் தெரு என்பது. அதனை " நீற்றுக்காரத் தெரு" எனவும் வழங்குவர். இந்த இரண்டில் எதனைப் பெயருக்கு முன்னால் சேர்க்கலாம் என்று அவர் கேட்டபோது, மீனாட்சிசுந்தரனார் "இரண்டும் வேண்டாம், மூன்றாவது தெரு" என்று போட்டுவிடும் என்று சொன்னார். அதிலுள்ள நகைச்சுவை உணர்வை அனைவரும் அறிந்து மகிழ்ந்தனர். மூன்றாவது என்பது சுண்ணாம்பைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். (வெற்றிலை + பாக்கு + சுண்ணாம்பு)

**நோய்க்கு மருந்து இலக்கியம்:**

தனக்கு உடல்நிலை சரியில்லாத போது சற்று ஓய்வெடுத்தல் நல்லதென்று மற்றவர் கூற, நோய்க்கு மருந்து இலக்கியம்" என்று கூறினார்.

மறைவு: 01.02.1876 அன்று உலகவாழ்வை நீத்தார்.

## கோவூர்கிழார்

**இளமைகாலம்:**

**பிறந்த ஊர்:** உறையூருக்கு அருகிலுள்ள "கோவூர்"

**மரபு:** வேளாளர் மரபு.

**பாடியவை:** நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, திருவள்ளுவமாலை ஆகியவற்றில் இவரின் 18 * பாடல்கள் உள்ளன.

**அவைக்களத் தலைவர்:** நலங்கிள்ளி என்ற மன்னன் கோவூர்கிழாரின் புலமையை அறிந்து அவரை "அவைக்களப் தலைவர்" ஆகினான்.

**போரைத் தவிரித்த புலவர்:**

சோழர் மரபில் தோன்றிய நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நெடுங்காலம் பகைமை இருந்து வந்தது.

நலங்கிள்ளி உறையூருக்கு அருகில் உள்ள ஆவூர்க்கோட்டையை முற்றுகையிட்டான்.

கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம் "நீ வீரனாக இருந்தால் போரிடு; அல்லது கோட்டையை ஒப்படைத்துவிடு; இரண்டில் எதையும் செய்யாமல் கோட்டை மதிலுக்குள் ஒடுங்கியிருப்பது நாணும் தன்மையுடையது" என்றார்.

கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம், "நெடுங்கிள்ளியே! உன்னோடு போர் புரிய, கோட்டைக்கு வெளியே முற்றுகையிட்டிருப்பவன் பனம்பூ மாலையணிந்தசேரனும் அல்லன்; வேப்பம்பூ மாலையணிந்த பாண்டியனும் அல்லன்; சோழருக்குரிய அத்திமாலை அணிந்தவனே. உம் இருவருள் எவர் தோற்பினும் தோற்பது சோழர் குடியே" என்றார்.

ஆதலால் "போரை ஒழிமின்" என்றார்.

**மலையமான் பிள்ளைகளை காத்தல்:**

*குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் புகார் நகரை தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்தான். இவன் சிறந்த கவிஞன்.

*கிள்ளிவளவனுக்கும், கடையேழு வள்ளல்களுள் ஒருவனான மலையமான் திருமுடிக்காரிக்கும் பெரும் பகை இருந்தது. கிள்ளிவளவன் காரியின் இரு பிள்ளைகளையும் கவர்ந்து வந்து யானை காலில் இடறிக் கொள்ள முடிவு செய்தான்.

*கோவூர்கிழார் கிள்ளிவலவனிடம் சோழ முன்னோர்கள் பெருமை எடுத்துக்கூறி காரியின் இரு பிள்ளைகளையும் மீட்டார்.

**சிறை மீட்ட செம்மல்:**

*நலங்கிள்ளியை பாடி பரிசு பெற்ற இளந்தரையனார், நெடுங்கிள்ளியிடம் சென்று பாடினார்.இளந்தரையனாரை நலங்கிள்ளியின் ஒட்டட்ரன் என்று கருதிய நெடுங்கிள்ளி அவரை *சிறையிலிட்டான்.*கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம் புலவர்களின் இயல்புகளை எடுத்துக்கூறி அவரை மீட்டார்.

**திரிகடுகம்**

**இல்லர்க்கொன் றீயும் உடைமையும், இவ்வுலகில்**

**நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் – எவ்வுயிர்க்கும்**

**துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்**

**நன்றறியும் மாந்தர்க் குள.**

**நல்லாதனார்**

**சொற்பொருள்:**

*பால்ப்பற்றி - ஒருபக்கச் சார்பு *சாயினும் - அழியினும்

*தூஉயம் - தூய்மை உடையோர்

*ஈயும் – அளிக்கும் *நெறி - வழி

*மாந்தர் – மக்கள் *வனப்பு - அழகு

*தூறு – புதர்                                    *வித்து - விதை

**ஆசிரியர் குறிப்பு:**

*திருகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார்.

*நூறு வெண்பாக்களை கொண்டது.

*"சுக்கு, மிளகு, திப்பிலி" ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய மருந்துக்கு "திரிகடுகம்" எனப் பெயர்.

*அதுப்போல், திருகடுகம் என்னும் இந்நூல், மூன்று கருத்துக்களை உள்ளடக்கி மனிதனின் மனமயக்கத்தை நீக்குகிறது.

## கணித மேதை இராமனுஜம்

***பிறப்பு**: 22.12.1887

***ஊர்:** ஈரோடு

***பெற்றோர்:** சீனுவாசன் - கோமளம்

*இவர் பிறந்து மூன்று ஆண்டுகள் வரை பேசும் திறன் இல்லாமல் இருந்தார்.

*தனது தாயாரின் தந்தை ஊரான காஞ்சிபுரத்தில் திண்ணை பள்ளியில் படித்தார்.

**கும்பகோணம்:**

*இராமனுஜனின் தாத்தாவின் பணிநிமித்தம் "கும்பகோணம்" வந்தால், பின்பு அவரின் கல்வி கும்பகோணத்தில் தொடர்ந்தது.

*பூஜ்யத்திற்கு மதிப்புண்டு:*

*ஒருமுறை வகுப்பில் அவரின் ஆசிரியர் "பூஜ்யத்திற்கு மதிப்பில்லை" என கூற, அதற்கு இராமானுஜன்  பூஜ்யத்திற்கு மதிப்புண்டு என்று விளக்கி எடுத்துரைத்தார்.

*இராமானுஜர் தமது சிறுவயது முதலே கணிதப்பாடத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

**கார்:**
*1880இல் இலண்டன் நகரில் "கார்" என்பவர் பதினைந்தாவது வயதிலேயே கணிதத்தில் சிறந்து விளங்கியதுப்போல, இவரும் சிறு வயதிலேயே கணிதத்தில் சிறந்து விளங்கினார்.
**எழுத்தர் பணி:**
*தந்தை சீனுவாசனின் முயற்சியால் இவருக்கு சென்னை துறைமுகத்தில் "எழுத்தர்" சிறந்து விளங்கினார்.
**பெர்னௌலிஸ் எண்கள்:**
* தான் கண்டுபிடித்த தேற்றங்களையும், எடுகோள்களையும் கேள்விகளாகத் தொகுத்து இந்தியக் கணிதக் கழகப் பத்திரிகைக்குச் சென்னை துறைமுகத்தின் தலைமை பொறியாளர் ஃபிரான்சிஸ் ஸ்ப்ரிங் என்பார் மூலம் அனுப்பினார். "பெர்னௌலிஸ் எண்கள்" எனும் தலைப்பில் வெளியான அவரது கட்டுரை, மிகந்த வரவேற்பை பெற்றது.
*தனது கண்டுப்பிடிப்புகளை இந்தியக் கணிதக் கழகப் பத்திரிகைக்கு இராமானுஜம் யார் மூலம் அனுப்பினார்?  - ஃபிரான்சிஸ் ஸ்பிரிங்

*பெர்னௌலிஸ் எனும் தலைப்பில் வெளியான இராமானுஜத்தின் கட்டுரை கணித வல்லுநர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

*இராமானுஜம் சென்னை பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார்.

இராமானுஜம் தனது கண்டுபிடிப்புகள் ஆராய்ச்சிகள் ஆகியவற்றை விவரமாக எழுதி இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹார்டி என்பவருக்கு கடிதமாக அனுப்பினார்.

*இலண்டன் கேம்பிரிட்ஸ் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரியின் பெயர் - திரினிட்டி கல்லூரி.

கணிதத் திறமையால் விஞ்ஞான உலகினைப் பிரமிக்கச் செய்து வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பெற்ற பிறவிக் கணித மேதை என்று கூறியவர் - இந்திரா காந்தி.

ஐகோபி எந்த நாட்டில் வாழ்ந்தார் - ஜெர்மனியில்

ஐகோபி எந்த நூற்றாண்டின் கணிதமேதை - 19 ஆம் நூற்றாண்டு.

ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமானுஜன் குறைந்தபட்சம் ஒரு ஐகோபி என்று கூறியவர் - லிட்டில் வுட்டு

ஆய்வர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் - சுவிட்சர்லாந்தைச்

ஆய்வர் 18 ஆம் நூற்றாண்டின் இணையற்ற கணிதமேதை ஆவார்.

திரினிட்டி கல்லூரியின் பேராசிரியர் ஈ.எச். நெவில் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குச் சொற்பொழிவாற்ற வந்தார்.

இராமானுஜம் எந்த ஆண்டு 1914 ஆம் ஆண்டு மார்ச் 17 ஆம் நாள் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார்.

திரினிட்டி கல்லூரியில் 18.04.1914 ஆம் ஆண்டு ஆராய்ச்சி மாணவராக சேர்ந்தார்.

கிங்ஸ் கல்லூரியின் கணிதப் பேராசிரியர் - ஆர்தர் பெர்சி.

இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டு அவருக்கு பெருமை சேர்ந்தவர் - ஹார்டி

ஹார்டி ரோசரஸ் இராமானுஜன் கண்டுபிடிப்புகள் என்னும் தலைப்பில் இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டார்.

இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் உறுப்பினராக இராமானுஜம் 1918 ஆண் ஆண்டு சேர்க்கப்பட்டார்.

இங்கிலாந்து பல்கலைக்கழகம் இராமானுஜத்திற்கு எஃப்.ஆர்.எஸ் பட்டம் வழங்கியது.

எஃப்.ஆர்.எஸ் பட்டம் பெற்ற இராமானுஜத்தை திரினிட்டி கல்லூரி பாராட்டிச் சிறப்பித்தது.

ஹார்டியின் பரிந்துரையின் பேரில் சென்னைப் பல்கலைக் கழகமும் 250 பவுண்டுத் தொகையை ஐந்து ஆண்டுக்கும் கொடுக்க முன்வந்தது.

இராமானுஜம் 50 பவுண்டைத் தம் பெற்றோருக்கும் 200 பவுண்டை ஏழை எளிய மாணவர்களுக்கும் வழங்கி வருமாறு கடிதம் எழுதினார்.

இராமானுஜத்தைப் பார்க்க வந்த ஹார்டி 1729 என்ற எண் கொண்ட வாடகை மகிழுந்தில் வந்தேன் எனக் கூறினார்.

இராமானுஜம் இந்தியாவிற்கு திரும்பி வந்த ஆண்டு - 1919 ஆம் ஆண்டு மார்ச் 27ம் தேதி.

இராமானுஜம் மறைந்த ஆண்டு 1920 ஆம் ஆண்டு ஏப்ரல் 26ம் தேதி.

இராமானுஜம் சாதாரண மனிதரல்லர் அவர் இறைவன் தந்த பரிசு என்று கூறியவர் - பேராசிரியர் ஈ.டி. பெல்

இராமானுஜன் முதல்தரமான கணித மேதை என்று கூறியவர் - பேராசிரியர் சூலியன் கக்சுலி

இராமானுஜத்தின் குறிப்பேடுகளில் 3000 முதல் 4000 தோற்றங்கள் இருந்தன.

1957 ஆம் ஆண்டு டாடா அடிப்படை ஆராய்ச்சி நிலையம் இராமானுஜத்தின் தேற்றங்களை ஒளிப்படம் எடுத்து நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

1962 டிசம்பர் 22 ஆம் தேதி இராமானுஜத்தின் 75வது பிறந்த நாள் ஆகும்.

இராமானுஜத்தின் 75வது பிறந்த நாளை முன்னிட்டு நடுவணரசு பதினைந்து காசு அஞ்சல்தலை இருத்தைந்து இலட்சம் வெளியிட்டது.

பேராசிரியர் இராமானுஜம் அனைத்துலக நினைவுக்குழு 1971 ஆம் ஆண்டு சென்னையில் அமைக்கப்பட்டது.

சென்னையில் 03.10.1972 ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் மு.கருணாநிதி அவர்களால் இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை துறைமுகம் சார்பில் புதிதாக வாங்கிய குடிநீர்க்கப்பலுக்கு, சீனுவாச இராமானுஜம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

ரிச்சர்ட்டும் ஆஸ்கேயும் இணைந்து 1984 ஆம் ஆண்டு இராமானுஜத்தின் மார்பளவு வெண்கலச் சிலையை இந்தியாவிற்குக் கொண்டு வந்து வழங்கினர்.

கணிதக் குறிப்புகள் அடங்கிய எத்தனை குறிப்பேடுகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் இராமானுஜம் விட்டுச் சென்றுள்ளார்.

இராமானுஜன் எண்: 1729 என்பதை இராமானுஜன் எண் என்பர்

**தனிப்பாடல்:**

**இரட்டுறமொழிதல்**

**ஓடும் சுழிசுத்தம் உண்டாகும் துன்னலரைச்**
**சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் - நாடறியத்**
**தேடு புகழான் திருமலைரா யன்வரையில்**
**ஆடுபரி காவிரியா மே.**

**காளமேகப் புலவர்**

**சொற்பொருள்:**

சுழி - உடல்மீது உள்ள சுழி, நீர்ச்சுழி

துன்னலர் - பகைவர், அழகிய மலர்

பரிவாய் - அன்பாய்

சாடும் - தாக்கும், இழுக்கும்

ஆடுபரி - ஆடுகின்ற குதிரை

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர்: காளமேகப்புலவர்

பிறப்பு: கும்பகோணத்துக்கு அருகில் உள்ள நந்திகிராமம் எனவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள எண்ணாயிரம் எனவும் கூறுவர்.

இயற்பெயர்: வரதன்

பணி: திருவரங்கக் கோவில் மடைப்பள்ளியில் பணிபுரிந்தார்.

வைணவ சமயத்தில் இருந்து சைவசமயத்திற்கு மாறினார்.

பெயர் காரணம்: கார்மேகம் போல் கவிதை பொழியும் ஆற்றல் பெற்றதால், இவர் காளமேகப்புலவர் என அழைக்கப் பெற்றார்.

இவர் இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர்.

**கல்விக்கு எல்லை இல்லை**

**கற்றதுகைம் மண்ணளவு கல்லா(து) உலகளவென்(று)**

**உற்ற கலைமடந்தை ஓதுகிறாள் - மெத்த**

**வெறும்பந் தயம்கூற வேண்டா; புலவீர்**

**எறும்புந்தன் கையால்எண் சாண்.**

**-ஔவையார்**

**சொற்பொருள்:**

கைம்மண்ணளவு - ஒரு சாண் எனவும் பொருள் கொளவர்.

மெத்த - மிகுதியாக

பந்தயம் - போட்டி

புலவீர் - புலவர்களே

கலைமடந்தை - கலைமகள்

**ஆசிரியர் குறிப்பு:**

இங்குக் குறிக்கப்படும் ஔவையார், சங்க கால ஔவையாஇராமானுஜம் ஒரு ஜாகோபிருக்கு மிகவும் பிற்பட்டவர்.

கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர் முதலிய புலவர்கள் இவர் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறுவர்.

புலவர் பலர், பல்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு.

தனிப்பாடல்களைக் கற்பதனால், தமிழ்மொழியின் பெருமையையும் புலவர்களின் புலமையையும் சொல்லின்பம் பொருளின்பம் கற்பனைஇன்பம் முதலியவற்றையும் பெறலாம்.

**இலக்கணம்: நால்வகைச் சொற்கள்**

பலவகைப்பட்ட பண்புகளைக்கொண்டு பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களைவிட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன உரிச்சொற்கள்.

இலக்கணவகைச்சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.

பெயரைக் குறித்து வந்தால் பெயர்ச் சொற்கள் என்று பெயர்.

ஒரு பொருளின் செயலைக் (இயக்கத்தைக்) குறிப்பதால் இச்சொல் வினைச்சொல்.

தம்பி + உம் இதில் உள்ள "உம்" என்பது இணைப்புச் சொல்லாக வருகிறது. இதனை இடைச்சொல் என்பர்.

இடைச்சொல் பெயர்ச் சொற்கள், வினைச் சொற்களைச் சார்ந்து வரும்.

பலவகைப்பட்ட பண்புகளைக் கொண்டு பெயர்ச் சொற்கள், வினைச் சொற்களை விட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன உரிச்சொற்கள் ஆகும்.

சொற்களிலுள்ள ஈற்றெழுத்தானது கெட்டுப் பாடா, கேளா, ஆடா, செய்யா, சொல்லா என்று வருவதனை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பர்.

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் மிகும் வல்லினம்

எ.கா:

பாடா + குயில் = பாடாக்குயில்

கேளா + செவி + கேளாச்செவி

பாடாத, கேளாத, ஆடாத, செய்யாத சொல்லாத என்பன எதிர்மறைப் பொருளில் வருவதால் எதிர்மறைப் பெயரெச்சங்கள் ஆகும்.

**வல்லினம் மிகா இடங்கள்:**

வினைச் சொற்கள் பெயரைக் கொண்டு முற்றுப் பெறும். இச்சொற்களைப் பெயரெச்சம் என்பர்.

எ.கா:

வந்த + குழந்தை = வந்த குழந்தை

உடைந்த + பலகை = உடைந்த பலகை

செய்த + தச்சன் = செய்த தச்சன்

பாடிய + கவிதை = பாடிய கவிதை

காத்த + சிறுமி = காத்த சிறுமி

வெடித்த + பஞ்சு = வெடித்த பஞ்சு

பெயரெச்சச் சொற்கள் முன் வல்லொற்று மிகாது.

**வல்லினம் மிகும் இடங்கள்:**

எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களில் பின் மட்டும் வல்லின வருக்கச் சொற்கள் வந்தால் வல்லொற்று மிகும்.

எ.கா:

எட்டு + கால் எட்டுக்கால்

பத்து + பேர் = பத்துப்பேர்

பத்து + சட்டை = பத்துச்சட்டை

பத்து + தோப்பு = பத்துத்தோப்பு

எட்டு + கூடை = எட்டுக்கூடை

எட்டு + தேர் = எட்டுத்தேர்

**செய்யுள்: திரிகடுகம்** - நல்லாதனார்

**தூயவர் செயல்கள்**

**உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்**

**பால்பற்றிச் சொல்லா விடுதலும் - தோல்வற்றிச்**

**சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்**

**தூஉயம் என்பார் தொழில்**

**சொற்பொருள்:**

உண்பொழுது - உண்ணும்பொழுது

பெறினும் - பெற்றாலும்

பால்பற்றி - ஒருபக்கச் சார்பு (நடுநிலைமையில் இருந்து மாறுதல்)

தோல்வற்றி - தோல்சுருங்கி

சாயினும் - அழியினும்

சான்றாண்மை - அறிவு ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல்

குன்றாமை - குறையாது இருத்தல்

தூஉயம் - தூய்மை உடையோர்

ஈயும் - அளிக்கும்

நில்லாமை - நிலையாமை

நெறி – வழி

தூய்மை - தூய தன்மை

மாந்தர் – மக்கள் நிறை ஒழுக்கம் - மேலான ஒழுக்கம்

தேற்றாதான் - கடைப்பிடிக்காதவன்

வனப்பு – அழகு தூறு – புதர் வித்து - விதை

**ஆசிரியர் குறிப்பு:**

திரிகடுகத்தின் ஆசிரியர் - நல்லாதனார்

ஊர்: திருவெல்வேலி மாவட்டம் திருத்து என்னும் ஊரை சேர்ந்தவர்.

இவரைச் "செறுஅடுதோள் நல்லாதன்" எனப் பாயிரம் குறிப்பிடுவதால், இவர் போர்வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

செறுஅடுதோள் நல்லாதன்" என பாயிரம் குறிப்பிடுவது யார்? - நல்லாகனார்.

**நூல் குறிப்பு:**

திரிகடுகம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

நூறு வெண்பாக்களைக் கொண்டது.

"சுக்கு, மிளகு, திப்பிலி" ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய மருந்துக்கு "திரிகடுகம்" எனப் பெயர்.

அதுபோன்று திரிகடுகம் என்னும் இந்நூல், மூன்று கருத்துக்களை உள்ளடக்கி மனிதனின் மனமயக்கத்தை நீக்குகிறது.

**உரைநடை:**

**காந்தியடிகள் கடிதம்**

1917 ஆம் ஆண்டு புரோச் நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் நிகழ்த்திய தலைமை உரை, மாணவர்களுக்கு ஏற்ற வானம் கடித வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

பயிற்றுமொழி குறித்து சிந்திக்காமல் கல்வி கற்பது, அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை எழுப்புவதை போன்றது என்கிறார்.

கவி இரவிந்த்ரநாத் தாகூரின் இர்பான இலக்கிய நடையின் உயர்விற்குக் காரணம் ஆங்கிலத்தில் அவருக்கு உள்ள அறிவு மட்டுமன்று, தம்முடைய தாய்மொழியில் அவருக்கு இருந்த பற்றும் தான்.

முன்சிராம் பேசும் போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்பதற்கு காரணம் அவர்தம் தாய்மொழி அறிவே.

மதன்மோகன் மாளவியாவின் ஆங்கில பேச்சு வெள்ளியைப்போல் ஒளிவிட்டாலும், அவரின் தாய்மொழிப் பேச்சு தங்கதிப் போன்று ஒளி வீசுகின்றது.

தாய்மொழியின் மூலம் நமக்குத் கல்வி அளிக்கப்பட்டிருந்தால் நம்மிடையே பல போஸ்களும், இராய்களும் தோன்றியிருப்பார்கள்.

பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருக்க வேண்டும். குழந்தைக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும் பள்ளியில் ஏற்படும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும்.

தாய்மொழியைக் கற்பித்தல் மொழியாக வைத்துக்கொண்டால், ஆங்கிலத்தில் அறிவைப் பெறுவது பாதிக்கப்படுமா, இல்லையை என்பதை பற்றி சிந்தனை செய்ய வேண்டியது இல்லை என்கிறார்.

தாய்மொழியில் அறிவை பெறுவதே சிறந்தது என்கிறார்.

ஒருமொழியின் தன்மை மக்களின் தன்மையைப் பொருத்தே அமையும்.

1917 ஆம் ஆண்டு புரோச் நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் நிகழ்த்திய தலைமை உரை, மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் கடித வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

காந்தியடிகள் குஜராத் மாநிலத்தின் ஆற்றிய உரையைக் குழந்தைகளுக்குக் கூறினார்.

வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின்மீது சீற்றம் கொண்டானாம்.

**துணைப்பாடம்:**

**உரியது**

முனிவர் அதிகமாக வெறுப்பவர் - பொய் சொல்வாரை

முனிவர் பொய் சொல்வார் மனையில் உணவு உண்ண மாட்டார்.

பெரியவரின் அன்பு, அடக்கம், பணிவு நற்குணங்களைக் கண்டு முனிவர் முகம் மலர்ந்தது.

மக்கள் முனிவரிடம் அந்தப் பெரியவருக்கு நான்கு மக்கள் உண்டு.

பெரியவரின் நான்கு மகன்களின் பெயர்கள் - நடராஜா, வேல்சாமி, சிவசாமி, கந்தசாமி.

கந்தசாமி ஒடிவந்து தந்தையையும் முனிவரையும் தொழுது சாமிக்கு என்ன கொண்டு வரட்டும் எனக் கேட்டனான்? - பால், பழம்

தருமம் செய்த பணம் எனக்கு உரியது.

என் கருத்தை ஏற்று நடக்கின்றவனே எனக்கு உரிய மகன்.

இறைத்தொண்டு

தொன்மை மிக்க உலக மொழிகள் எனத் தொடங்கும் பாடலை எழுதியவர் - தேவநேயப் பாவாணர்.

**இடுகுறிப் பெயரும் காரணப் பெயரும்**

ஒரு பொருளுக்குக் குறியீடாக இட்ட பெயரே - இடுகுறிப்பெயர் ஆகும்.

காரணம் கருதி இடப்பட்ட பெயர்கள் காரணப் பெயர்கள் எனப்படும்.

எ.கா: பறவை, வளையல், செங்கல்

தமிழில் காரணப் பெயர்களே மிகுதியாக உள்ளன.

பிறமொழிகளில் இடுகுறிப்பெயர்களே மிகுதியாக உள்ளன.

அனைத்துக்கும் பொதுவாக வரும் இடுகுறிப்பெயர்களை இடுகுறிப்பெயர்களை இடுகுறிப் பொதுப்பெயர் எனக் கூறுவர்.

மலை, காடு, மாடு இவையெல்லாம் இடுகுறிப் பெயர்கள் ஆகும்.

தென்னை என்னும் சொல் ஒரு காரணமும் இன்றி இடுகுறிப் பெயராய் நின்று, ஒரு பொருளுக்கே (தென்னை மரம்) சிறப்பாய் வருவதால் இடுகுறிச் சிறப்புப் பெயராயிற்று.

காகம், குயில், புறா, கிளி ஆகிய அனைத்தையும் பறவை என்னும் பொதுச்சொல்லால் அழைக்கிறோம். அதனால், இதனைக் காரணப் பொதுப் பெயர் என்கிறோம்.

வளையல்போலவே சிலபொருள் வளைந்து வட்டமாக இருக்கும். இருப்பினும் அவையெல்லாம் வளையல் என அழைக்கப்படுவது இல்லை. இருப்பினும் இச்சொல் கையில் அணியும் வளையலை மட்டுமே குறிப்பதால் காரணச் சிறப்புப் பெயர் ஆயிற்று.

சித்திரை மாதத்தில் பிறந்ததால் சித்திரையான் என அழைக்கப்பட்டான்.

ஒரு சொற்றொடரிலுள்ள எழுவாய் அதன் பயனிலையோடு திணை, பால், எண் இடங்களில் பொருத்தமாக அமைய வேண்டும்.

மாரியல்லது காரியம் இல்லை என்பன போன்ற முதுமொழிகளும் சிறப்புகளை நமக்கு உணர்த்துகின்றன.

சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் மாமழை போற்றதும் மாமழை போற்றதும் என மழையைப் போற்றி வணங்கித் தம் காப்பியத்தை தொடங்கினார்.

**செய்யுள்:**

**திருவாரூர் நான்மணிமாலை**

**என்பணிந்த தென்கமலை ஈசனார் பூங்கோவில்**
**முன்பணிந்த தெய்வ முனிவோர்கள் - அன்புஎன்னாம்**
**புண்சுமந்தோம் நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்**
**மண்சுமந்தார் என்றுருகு வார்.**

**குமரகுருபரர்.**

**சொற்பொருள்**

என்பணிந்த - எலும்பை மாலையாக அணிந்த

தென்கமலை - தெற்கில் உள்ள திருவாரூர்

பூங்கோவில் - திருவாரூர் கோவிலின் பெயர்

புண்ணியனார் - இறைவன்

**ஆசிரியர் குறிப்பு:**

ஆசிரியர் - குமரகுருபரர்

பெற்றோர் - சண்முகசிகாமணிக் கவிராயர் - சிவகாமசுந்தரி அம்மையார்

ஊர் - திருவைகுண்டம்

**இயற்றிய நூல்கள்:**

நீதிநெறிவிளக்கம், முத்துகுமாரசுவாமி பிள்ளைத்தமிழ், கந்தர்கலி வெண் பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம்.

காலம் - கி.பி.18ம் நூற்றாண்டு.

**நூல் குறிப்பு:**

திருவாரூர் + நான்கு + மணிமாலை = திருவாரூர் நான்மணிமாலை.

இது திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசர் மீது பாடப்பெற்ற நான்மணிமாலை எனப் பொருள்படும். நான்மணிமாலை என்பது தமிழில் வழங்கும் 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்னும் நால்வகையான மணிகளால் ஆனா மாலையைப் போன்று நால்வகையான பாடல்களால் (வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா) ஆனா நாற்பது செய்யுள்களை கொண்டது.

திருவாரூர் தியாகராசப் பெருமானைப் பற்றிய பெருமைகளை திருவாரூர் நான்மணிலை என்ற நூலின் மூலம் அறிந்து இன்புறலாம்.

என்பணிந்த தென்கமலை இவ்வடியில் தென்கமலை உணர்த்தும் பொருள் தெற்கில் உள்ள திருவாரூர்.

மண்சுமந்தார் எனக் குறிப்பிடப்படுபவர் - திருவைகுண்டம்.

வந்தி என்னும் பெயருடைய கிழவிக்காக மண் சுமந்து பாண்டியனிடம் இறைவன்(சிவபெருமான்) அடிப்பட்டார்.

**பிரித்து எழுதுதல்:**

பூங்கோவில் - பூ + கோவில்

புடைத்தென்னார் - புடைத்து + என்னார்

என்றுருகுவார் - என்று + உருகுவார்

என்பணிந்த - என்பு + அணிந்த

**சொற்களைச் சொற்றொடரில் அமைத்தல்:**

பணிவு: பெரியோரிடம் நாம் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

கோவில்: தஞ்சைப் பெரிய கோவில் இராசராசனால் கட்டப்பட்டது.

அன்பு: பரிசு பெற்ற மகனைத் தாய் அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

குயவன் களிமண் கொண்ட மட்பாண்டம் செய்தான்.

**மெய்பொருள் கல்வி**

**கற்பிப்போர் கண்கொடுப் போரே! - அந்தக்**

**கண்க்காயர் உரையினில் இருசெவி சேரே!**

**நற்பெயர் எடுத்திட வேண்டும்! - நாளும்**

**நன்றாகப் படித்தும்நீ முன்னேற வேண்டும்!**

**வாணிதாசன்**

**சொற்பொருள்**

பதுமை – உருவம் மெய்பொருள் - நிலையான பொருள்

கணக்காயர் - ஆசிரியர்.

**ஆசிரியர் குறிப்பு:** இயற்பெயர் - எத்திராசலு (எ) அரங்கசாமி

பெயர் - வாணிதாசன்

பிறந்த இடம் - புதுவையை அடுத்த வில்லியனூர்

பெற்றோர் - அரங்க திருக்காமு - துளசியம்மாள்

**சிறப்பு:** "கவிஞரேறு, பாவலர்மணி" என்னும் பட்டங்கள் பெற்றுள்ளார்.

தழிழகத்தின் "வேர்ட்ஸ் வொர்த்" என இவரைத் தமிழுலகம் புகழ்கிறது.

உருசியா, ஆங்கிலம் முதலிய மொழிகளில் இவர் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

காலம்: 22.07.1915 - 07.08.1974

**நூல் குறிப்பு:**

கவிஞர் வாணிதாசன் தமிழ் உலகிற்குப் புனைந்து அளித்துள்ள "குழந்தை இலக்கியம்" என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது "மெய்ப்போருள் கல்வி".

**உரைநடை:**

**தூங்கா நகர்**

உலகமே உறங்கிக்கொண்டிருக்கும் வேளையிலும் விழித்திருக்கும் தூங்கா நகர் - மதுரை

தென்னிந்தியாவின் ஏதென்ஸ் - மதுரை

மதுரை - இனிமை

**மதுரை நகரின் சிறப்புப் பெயர்கள்:**
* தூங்கா நகர், திருவிழா நகர், கோவில் நகர், பழம்பெரும் தமிழரின் நாகரீகத தொட்டில், தென்னிந்தியாவின் ஏதென்ஸ், கூடல் நகர், ஆலவாய்
**மதுரை - பெயரக்காரணம்:**
* "மதுரை" என்னும் சொல்லுக்கு "இனிமை" என்பது பொருள். தமிழும் மதுரையும்

இனிமையின் இயல்பால் அமைந்தவை. மதுரை பற்றிய புலவர்கள் கூறும் போதெலாம் தமிழோடு சேர்த்தே கூறினார்.
**புறநானூறு:** தமிழ்கெழு கூடல் எனப் புறநானூறு போற்றியது.

**சிறுபாணாற்றுப்படை:** "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை"சிறுபாணாற்றுப்படை (நல்லூர் நத்தத்தனார்)

**சிலப்பதிகாரம்:**

"ஓங்குசீர் மதுரை"                    மதுரை மூதூர் மாநகர்"

தென்தமிழ் நன்னாட்டுத் தீதுநீர் மதுரை"

"மாண்புடை மரபின் மதுரை"

"வானவர் உறையும் மதுரை"

"பதியெழுவறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்"

**தமிழகத்தின் சிறப்பு:**

சேரநாடு - வேழமுடைத்து

சோழநாடு - சோறுடைத்து

பாண்டியநாடு - முத்துடைத்து

தொண்டைநாடு - சான்றோர் உடைத்து

**நான்மாடக்கூடல்:**
* மதுரைக்கு கூடல் எனவும், ஆலவாய் எனவும் வேறு பெயர்கள் உள்ளன. நான்மாடக்கூடல் என்னும் பெயரே கூடல் என மருவி உள்ளது.

"திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்" ஆகிய நான்கு திருக்கோவில்கள் சேர்ந்தமையால், நான்மாடக்கூடல்" என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர்.

கன்னிக்கோவில், கரியமால் கோவில், காளிகோவில், ஆலவாய்க் கோவில் ஆகிய நான்கு திருக்கோவில்களும் மதுரைக்குக் காவலாக அமைந்தமையால், "நான்மாடக்கூடல்" என்னும் பெயர் வந்தது என்றும் கூறுவர்.

**பரஞ்சோதியார் கூற்று:**
* வருணன், மதுரையை அழிக்க ஏழு மேகங்களை அனுப்பினான். அதைப் பற்றி இறைவனிடம் * பாண்டியன் முறையிட, இறைவன் நான்கு மேகங்களை மதுரையைக் காக்க அனுப்பினார். அந்நான்கும் நான்கு மாடங்களாக கூடி மதுரையைக் காத்தமையால் "நான்மாடக்கூடல்" என்னும் பெயர் ஏற்பட்டதாக பரஞ்சோதியார் கூறியுள்ளார்.
**அறிஞர்கள் கூற்று:**
* எந்நாட்டவரும் எவ்வூரினரும் வந்து கூடும் வளமான நகர் என்பதால், கூடல் எனப் பெயர் பெற்றதாக கூறுவர்.
சங்கம் வைத்துச் செந்தமிழை வளர்க்க, புலவர் எல்லோரும் கூடியதால், கூடல் என்னும் பெயர் ஏற்பட்டதாக அறிஞர் கூறுவர்.

**ஆலவாய் - திருவிளையாடற புராணம் கூற்று:**
* மதுரையை விரிவுபடுத்த எண்ணி, இறைவனிடம் அதன் எல்லையை வரையறுத்துத் தருமாறு வேண்டினான் பாண்டியன். இறைவன், தன்

கையணியாகிய பாம்பிடம் எல்லையை வரையறுக்க ஆணையிட்டார். பாம்பு வாழை நீட்டி வலமாகத் தன் உடலை வளைத்தது. அவ்வாலைத் தனது வாயில் சேர்த்து மதுரையின் எல்லையை வகுத்துக் காட்டியது. அன்று முதல் மதுரைக்கு ஆலவாய் என்னும் பெயர் அமைந்ததாகத் "திருவிளையாடற்புராணம்" கூறுகிறது. ஆலவாய் என்பது ஆலத்தை (விடத்தை) உடைய பாம்பினைக் குறிக்கும்.

**வேறு காரணம்:**

* மதுரையில் எழுந்தருளிய ஈசன், ஆலமர நிழலில் விற்றிருந்ததால் "ஆலவாய் என்னும் பெயர் ஏற்பட்டதாக கூறுவர்.

**மருதை மதிரை:**

* மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால் "ம்ஸ்ருதை" என வழங்கிய இடம், காலப்போக்கில் மதுரை என்றாகியதாம். கல்வெட்டில் "மதிரை" என்ற பெயர் காணப்படுகிறது.

**மதுரை நகரமைப்பு:**

* மதுரை நகரின் நடுவில் அண்ணல் கோவிலும் அதனைச் சுற்றி முறையாக ஒழுங்குற அமைந்த தெருக்களும் காண்பதற்குத் தாமரைப் பொகுட்டையும் அடுக்கடுக்கான இதழ்களையும் போன்று காட்சியளித்தன. இது அன்றைய தமிழர் நகரமைப்புக் கலையின் நுணுக்கத்தை உலகிற்குப் பறைசாற்றும் அடையாளமாகத் திகழ்கின்றன.

**மதுரை வீதிகளின் பெயர்கள்:**

* அறுவை வீதி - ஆடைகள் விற்கும் கடைப்பகுதி.
* கூலவீதி - தானியக்கடை
* பொன்வீதி - பொற்கடைகள்
* மன்னவர் வீதி - மன்னர் வாழும் பகுதி
* மறையவர் வீதி - அந்தணர் வீதி

**மதுரையின் மாண்பு:**

* சிவபெருமான் சுந்தரபாண்டியனாகவும் செவ்வேள் உக்கிரகுமாரப்பாண்டியனாகவும் உமையம்மை மலையத்துவசனக்கு மகளாகத் தோன்றித் தடாதகைப் பிராட்டியாகவும் மதுரையை ஆண்டனர்.
அரிமர்த்தன பாண்யிடனுக்கு அமைச்சராக மாணிக்கவாசகர் திகழ்ந்தார்.

திருஞானசம்பந்தர் கூன்பாண்டியன் காலத்தில் மதுரையில் மங்கையர்க்கரசி, குலச் சிறையார் உதவியுடன் சைவத்தைக் காத்தார்.

**திருமலை நாயக்கரின் திருப்பணிகள்:**

* திருமலை நாயக்கர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார்.
கோடை விடுதியான தமுக்கமும், குளிர்பூந்தடாகமாகிய பெரிய தெப்பக் குளமும், கலை நயத்தில் தாஜ்மகாலை" ஒத்த "திருமலை நாயக்கர் மகாலையும் அமைத்து மதுரையை அழகுபடுத்தினார்.

மதுரையை "விழ மல்கு நகராக" மாற்றினார்.

**நிகழ்வுகள்:**

பரஞ்சோதியாரின் திருவிளையாடற்புராணம் தருமிக்கு இறைவன் தண்டமிழ்ப் பாடல் தந்தமை பற்றிக் கூறுகிறது.

மதுரையைச் சூற்றியுள்ள மலைகளில் வாழ்ந்த சமண முனிவர்களால் "நாலடியார்" இயற்றப் பெற்றது.

குமரகுருபரருக்கு மீனாட்சியம்மையே சிருமியாக வந்து முத்துமணி மாலையைப் பரிசளித்தார்.

**நான்காம் தமிழ்ச்சங்கம்:**

வள்ளல் பாண்டித்துரை தேவர், மதுரையின் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தனர்.

கோவலன் பொட்டல்: சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் கொலைக்களப்பட்ட இடம் "கோவலன் பொட்டல்" என்னும் பெயருடன் இன்றும் அப்பகுதி மக்களிடம் வழங்கப்படுகிறது.

**செல்லத்தம்மன் கோவில்:**

கையில் சிலம்புடன் உட்கார்ந்திருக்கும் உருவச்சிலை அமைந்த கோவில், செல்லத்தம்மன் கோவிலாக இன்றும் மக்களால் வழிபடப்படுகிறது.

**பொதுவான குறிப்பு:**

மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் பழமையானது கிழக்குக் கோபுரம்; உயரமானது தெற்குக் கோபுரம். இது 1600.9 அடி உயரமும் 1511 கதை உருவங்களும்.

மரம் பயன்படுத்தாமல் கட்டப்பட்டது நாயக்கர் மகால். இதன் ஒவ்வொரு தூணும் 82 அடி உயரமும் 19 அடி சுற்றளவும் கொண்டது.

கையிற் சிலம்புடன் உட்கார்ந்திருக்கும் உருவச்சிலை அமைந்த கோவில் செல்லத்தம்மன் கோவிலாக இன்றும் மக்களால் வழிபடப்படுகிறது.

நல்லந்துவனார், மருதனிள நாகனார், இளந்திருமாறன், சாத்தலைச் சாத்தனார், பெருங்கொல்லனார், கண்ணகனார், கதங்கண்ணாகனார், சேந்தம்பூதனார் முதலியோர் அன்றைய மதுரையில் வாழ்ந்தோராவர்.

**துணைப்பாடம்:**

**அறிவு நுட்பம்**

ஆடல், பாடல், வட்டம், அழகு ஆகியனவும் பெயர்ச்சொற்கள் ஆகும்.

நொடி, விநாடி, மணி, பொழுது, கிழமை, வாரம், திங்கள், ஆண்டு என எல்லாமே காலப் பெயர்கள் ஆகும்.

சினை என்பது ஒன்றின் உறுப்பைக் குறிப்பது ஆகும்.

வீடு, தெரு, பள்ளி கோவில்,மக்கள் வாழிடம், தோட்டம் என இடங்களைக் குறிப்பனவெல்லாம் இடப் பெயர்கள் ஆகும்.

பெயர்ச்சொற்களை இலக்கண நூலார் எத்தனை வகைப்படுத்துவர்?

**அவை:**

| | |
|---|---|
| பொருட் பெயர் | இடப் பெயர் |
| காலப் பெயர் | சினைப் பெயர் |
| குணப் பெயர் | தொழிற் பெயர் |

**பொருளைக் குறிக்கும் பெயர் - பொருட் பெயர்**

பொருட் பெயர் இரு வகைப்படும். அவை:

1. உயிருள்ள பொருள் 2. உயிரற்ற பொருள்

நாற்காலி, அடுப்பு, தட்டு, எண்ணெய், மண், நீர், காற்று முதலியன உயிரற்ற பொருள்கள்.

குமரன், மலர்க்கொடி, தென்னை, செம்பருத்தி, வெள்ளாடு, ஓணான் முதலியன உயிருள்ள பொருள்கள்.

பூங்கொடி பூ பறிக்கிறாள் இத்தொடரிலுள்ள பூ என்பது சினைப்பெயர்.

சதுரம் இது ஒரு குணப்பெயர்

கட்டுரை எழுதும் போது பத்திபத்தியாக எழுத வேண்டும்.

உலகம், சூரியனைச் சுற்றுவதால் இரவுபகல் தோன்றுகிறது.

நேருவின் அறிவாற்றலைக் கற்றோரும், மற்றோரும் புகழ்நதனர்.

**கற்பித்தல் தொழில் பெயர்கள் எனப்படும்.**

**பெயர் வகை - பெயர்**

பொருட் பெயர் - கண்ணன், நாற்காலி

இடப் பெயர் - வேலூர், நாமக்கல்

காலப் பெயர் - தைத்திங்கள், நண்பகல்

சினைப்பெயர் - முகம், கை

குணப் பெயர் - வட்டம், அழகு

தொழிற் பெயர் - ஆடல், பாடல்

குணப் பெயரைப் பண்புப் பெயர் எனவும் கூறுவர்.

கவியரசு கண்ணதாசன் சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927 ஆம் ஆண்டு பிறந்தார்.

கண்ணதாசனின் இயற்பெயர் - முத்தையா

கண்ணதாசனின் புனைப்பெயர்கள் - காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமகப்பிரியா எனப் பல புனைப்பெயர்கள் உண்டு.

ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார் கண்ணதாசன்.

கண்ணதாசன் மறைந்த ஆண்டு - 1981.

க், ங், ச், ஞ்-- ஆகிய பதினெட்டு மெய்யெழுத்துகளும் உயிர் எழுத்தையோ, உயிர்மெய்யெழுத்தையோ தொடர்ந்து மெய்யெழுத்து வரிசையாக வரும்.

ஜெர்மன் நாட்டின் கொடுங்கோலராகக் கருதப்பட்டவர் - ஹிட்லர்.

ஹிட்லருக்கு எதிராகத் திறமையாக வாதாடி, எழுத்து மூலம் ஹிட்லரை மன்னிப்புக் கேட்கச் செய்தவர் - செண்பகராமன்.

**செய்யுள்: ஏர்முனை**

**நெத்தி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக - அது**
**நெல்மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துக்கொத்தாக**
**பக்குவமாய் அறுத்துஅதைக் கட்டுக்கட்டாக - அடிச்சுப்**
**பதருநீக்கிக் குவிச்சு வைப்போம் முட்டுமுட்டாக!**
**வளர்ந்துவிட்ட பருவப்பெண் போல்உனக்கு வெட்கமா?- தலை**
**வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின்பக்கமா - இது**
**வளர்த்துவிட்ட தாய்க்குத் தரும்ஆசை முத்தமா? - என்**
**மனைக்கு வரக்காத் திருக்கும் நீஎன் சொத்தம்மா**

**அ. மருதகாசி**

**பொருள்:**

மாரி – மழை

சேமம் - நலம்

தேசம் – நாடு

முட்டு - குவியல்

நெத்தி - நெற்றி

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர்: மருதகாசி

ஊர்: திருச்சி மாவட்டத்திலுள்ள மேலக்குடிகாடு

பெற்றோர்: அய்யம்பெருமாள் - மிளகாயி அம்மாள்

சிறப்பு: திரைக்கவித் திலகம்

காலம்: 13.02.1920 - 29.11.1989

**நூல் குறிப்பு:**

"திரைக்கவித் திலகம் அ. மருதகாசி பாடல்கள்" என்னும் தலைப்பில், திரைக்கதைகளுக்கு எழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

அதில் உழவும் தொழிலும், தாலாட்டு, சமூகம், தத்துவம், நகைச்சுவை என்னும் தலைப்புகளில் பாடல்கள் வகைப்படுத்தப் பட்டுள்ளது.

சமூகம் என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ள பாடல், பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உழவர்கள் செல்வமாகக் கருதுவது - நெல்மணிகளை

**பிரித்து எழுதுக:**

நேரிங்கே - நேர் + இங்கே

சேமமுற - சேமம் + உற

தேசமெல்லாம் - தேசம் + எல்லாம்

பருவப்பெண் - பருவம் + பெண்

**அம்மானை**

**வீரன்நெடு வெள்வேல் வியன்செந்தில் எம்பெருமான்**
**பாரில்உயி ரெல்லாம் படைத்தனன்காண் அம்மானை,**
**பாரில்உயி ரெல்லாம் படைத்தனனே யாமாகில்**
**ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை,**
**அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை.**

**சுவாமிநாத தேசிகர்**

**ஆசிரியர் குறிப்பு:**

திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூலை இயற்றியவர் ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் ஆவார்.

ஈசான தேசிகர் என்பது அவரது சிறப்புப் பெயர்.

பெற்றோர்: தாண்டவமூர்த்தி

கல்வி: மயிலேறும் பெருமாள் என்பவரிடம் கல்வி கற்றார்.

திருவாவடுதுறை ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகமூர்த்திக்குத் தொண்டராய் இருந்தார்.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.

**நூல்குறிப்பு:** திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல், தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.

கலம்பகம் = கலம் + பகம் எனப் பிரியும்.

கலம் - பன்னிரண்டு

பகம் - ஆறு எனப் பதினெண் உறுப்புகளைக் கொண்டது.

பல்வகையான பா வகைகளும் கலந்திருத்தலால் இந்நூல் கலம்பகம் எனவும் பெயர் பெற்றது.

பதினெண் உறுப்புகளில் ஒன்றாகிய அம்மானை என்னும் பகுதி, ஈண்டுப் பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.

**பொங்கல் வழிபாடு**

**நீயன்றி மண்ணுண்டோ, விண்ணுண்டோ,**
**ஒளியுண்டோ, நிலவுமுண்டோ,**
**நீருண்டோ, என்னிடம் வாழத்துப் பொருளுமுண்டோ?**
**கதிரவா கனிந்து வருவாய்! கரும்பு**
**மனமும் இனிபாம் உயிரும்**
**நின்னடி படைத்தது விட்டோம்**
**கதிரவா! ஏற்று மகிழ்வாய்**
**உயர்ந்தவா, உயிரின் முதலே!**

**-ந. பிச்சமூர்த்தி**

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| திரு – செல்வம் | கனகம் - பொன் |
| கோ – அரசன் | நிவேதனம் - படையல்அமுது |
| புரவி – குதிரை | கடுகி - விரைந்து |

**ஆசிரியர் குறிப்பு:**

இயற்பெயர்: ந. வேங்கட மகாலிங்கம்

புனைபெயர்: ந. பிச்சமூர்த்தி

ஊர்: தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம்

தொழில்: 1924 - 1938 வரை வழக்கறிஞர், 1938 - 1954 வரை கோவில் நிர்வாக அலுவலர்.

எழுத்துப்பணி: கதைகள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், ஓரங்க நாடகங்கள்.

காலம்: 15.08.1900 - 04.12.1976

**நூல் குறிப்பு:**

ந. பிச்சமூர்த்தியின் கவிதை நூல்கள் இருபதாம் நூற்றாண்டின் தற்கால இலக்கியத் துறைக்குப் புதிய சிறப்புகளைச் சேர்த்திருக்கின்றன.

பாரதிக்குப் பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவை இவரது படைப்புகள்.

ந. பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் 83 கவிதைகள் உள்ளன.

**பிரித்து எழுதுக:**

நெற்கதிர் - நெல் + கதிர்

நிலவுமுண்டோ - நிலவும் + உண்டோ

மண்ணுண்டோ - மண் + உண்டோ

நின்னடி - நின் + அடி

ஒளியுண்யோ - ஒளி + உண்டோ

**உரைநடை:**

## நெசவு

**துணி நெய்ய பயன்படும் கருவிகள்:**

அச்சுமரம், படைமரம், விழுதுகம்பு, குத்துக்கம்பி, ஓடம், ஊதுகுழல், பாவு

**த ிரு.வி.க. வின் கூற்று:**

பூவிலே சிறந்த பூ பருத்திப்பூ என்கிறார் திரு.வி.க.

**துணியை பளபளப்பாக்க:**

நெய்த துணிகளை தேய்த்து பளபளப்பாக்கத் "தேய்ப்புக் கல்லைப்" பயன்படுத்துவர்.

கலிங்கம்: பாவுநூல் மற்றும் ஊடைநூல் இணைத்து கலிங்கம் என்னும் ஆடை உருவாகிறது.

**பிரபலமான ஆடைகள்:**

காஞ்சி - பட்டாடைகள்

திருப்பூர் - பின்னலாடைகள்

மதுரை - சுங்குடி புடவைகள்

உறையூர் - கண்டாங்கி சேலைகள்

சென்னிமலை - பாய் விரிப்புகள்

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது

நகர்ப்புறங்களில் இயந்திர நெசவு நடைபெறுகிறது.

பட்டாடைகள் தயாரிக்கப் பயன்படுவது - பட்டுப்புழு

மங்கை தன் பிறந்த நாள் பரிசாகத் தந்தையிடம் கேட்ட ஆடை - கைத்தறி ஆடை

உலகிலேயே கைத்தறி நெசவின் முன்னோடி - தமிழ்நாடு

செய்யும் தொழிலில் சீர் தூக்கின் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்னும் வழக்காறும் உண்டு.

ஆடையில்லா மனிதன் அரை மனிதன்

குளிரில் வாடிய மயிலுக்குப் போர்வை போர்த்தியது - வள்ளல் பேகன்

**துணைப்பாடம்:** **தமிழ் நாடக முன்னோடிகள்**

**நாடகம்:**

கண்ணுக்கும் காதுக்கும் மனத்துக்கும் இன்பம் பயக்கும் கலை நாடகக்கலை.

உணர்ச்சியை தூண்டி, உள்ளத்தில் புதைத்து கிடக்கும் அன்பையும் அறிவையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் சிறந்த கலை நாடகம்.

சயத்தம், முறுவல், மதிவாணன் நாடகத்தமிழ், செயிற்றியம் முதலிய நாடக இலக்கான நூல்களின் பெயர்கள் மட்டுமே இப்போது கிடைக்கின்றன.

இடைக்காலச் சோழப் பேரரசர்கள் ஆதரவில் ஆலயங்களில் நாடகங்கள் நடத்தப் பெற்றுள்ளன என அறிகிறோம்.

**பரிதிமாற் கலைஞர் (1870 - 1903)**

தமிழ் நாடக பேராசிரியர்

உயர்தனிச் செம்மொழித் தகுதி தமிழுக்கே உண்டு என அக்காலத்திலேயே முழங்கியவர்.

சூரிய நாராயண சாஸ்திரி என்னும் தம் பெயரைத் தூய தமிழில் பரிதிமாற் கலைஞர் என மாற்றி அமைத்துக் கொண்டார்.

இவர், தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டே நாடகத் தொண்டாற்றினார்.

மேலைநாட்டு நாடக ஆசிரியர்களான ஷேக்ஸ்பியர், எப்சன், மோலியர் ஆகியோரைப் போன்று தமிழகத்தில் நாடகாசிரியர்கள் தோன்ற வேண்டும் எனப் பெரிதும் விழைந்தவர்.

ரூபாவதி, கலாவதி, மான்விஜயம் என்பது இவரின் நாடகங்கள்.

**ரூபாவதி, கலாவதி, மானவ]யம், நாடகவியல்**

இவர் வடமொழி, மேனாட்டு மரபுகளைத் தமிழ் நாடக மரபோடு ிணைத்து "நாடகவியல்" என்னும் நூலைப் படைத்தார்.

இவரது "மானவிஜயம்" நாடகம், "களவழி நாற்பது" என்னும் இலக்கியத்தை அடிப்படையாக கொண்டு இயற்றப்பட்டது. சேரமான் கணைக்கால் இரும்போரையுடன் புலவர் பொய்கையாரும் இறந்துபடுகின்றன்றார்; இவ்விருவர் இறப்பிற்கும் தானே காரணம் என்று எண்ணிய சோழன் செங்கணான்.

"மானப் பெருமையை மனக்கொண்டு அந்தோ

ஈனப் பாரில் இருத்தல் வேட்டிலை

உண்ணும் போழ்தினில் உன்னைத் கொன்றவன்

செங்கணான் எனும்இச் சிறுமதி யுடையான்"

என்று புலம்பித் தன்னை மாய்த்துக்கொள்ளும் காட்சி, செந்தமிழ் நடைபயில, அவலச்சுவையை வெளிப்படுத்தும் இடமாகும்.

**சந்க்கரதாசு சுவாமிகள் (1867 - 1920)**

நாடகத்தமிழ் உலகின் இமயமலை, தமிழ்த் நாடக தலைமை ஆசிரியர்

நாடகம் மக்களை மகிழ்விக்க வேண்டும் என்பதே சுவாமிகளின் முதல் நோக்கமாகும்.

எனவே, பாமர மக்களுக்குத் தெரிந்த பழங்கதைகளை நாடகமாக்கினார்.

நாடகத்தைச் சமுதாய சீர்திருத்தக் கருவியாகவும் கையிலெடுத்த சுவாமிகள், தம் நாடகங்கள் வாயிலாகப் பக்தி, ஒழுக்கம் ஆகியனவற்றை வலியுறுத்தி, மக்களுக்கு நல்லறிவு புகுட்டினார்.

சிறுவர்களைக் கொண்டு நாடகக் குழுக்களைத் தோற்றுவித்தார்.

**நாடகங்கள்:**

வள்ளி திருமணம், கோவலன் சரித்திரம், சதி சுலோச்சானா, இலவகுசா, பக்தப் பிரகலாதா, நல்லதங்காள், சதி அனுசுயா, வீர அபிமன்யு

இவர் நாற்பது நாடகங்களை இயற்றியுள்ளார்.

**புத்தநெறி சுப்பிரமணியம் பாராட்டு:**

"துடிப்பிருக்கும் சங்கரதாசு எழுத்தில் எல்லாம்

சுவைசொட்டும் சந்தநயம் தேய்ந்திருக்கும்"

என்று சுவாமிகளின் சந்தப்பாடல்களை பற்றி புகழ்கிறார்.

**சதி சுலோசனா:**

சதி சுலோச்சனா நாடகத்தில் இந்திரசித்து, தன் நண்பனிடம் பூக்கள் பற்றிக் கேட்க,

"பூவின் வேய்வறம் பலகோடி அதனை

அவர் போதிப்பார் தேடி

அப்பு கலப்பு பதிப்பு கொதிப்பு

செப்பு அருப்பு இருப்பு நெருப்பு

உப்பு உரப்பு கசப்பு புளிப்பு இத்தாதனை

பூவிற்குமேல் இரவில் கண்விழிப்பு

இயம்பிய மொழியெல்லாம் தமிழ்ப் புத்தகக் குறிப்பு"

என அடுக்குமொழி பகர்வது இவரது சந்த நடைக்குச் சான்றாகும்.

**கோவலன் சரித்திரம்:**

இவர் இயற்றிய "கோவலன் சரித்திரம்" மதுரையில் அரங்கேறியபொழுது, காற்சிலம்பு விற்று வர நகருக்குப் போவதாகக் கோவலன் கூறக் கண்ணகியோ,

**"மாபாவியோர் கூடி வாழும் மாநகருக்கு**

**மன்னா போகாதீர்"**

என்று பாடுவது போன்ற காட்சி இதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது.

சுவாமிகள் அவையினர் முன்பு, "மா என்பது அலைமகளையும், பா என்பது கலைமகளையும், வி என்பது மலைமகளையும் குறிக்கிறது" என்று திருவிளையாடல்புராணம் சான்று காட்டி விளக்கினார்.

**நடிப்புத் திறமை:**

* நல்ல உடற்கட்டும் எடுப்பான தோற்றமும் உடைய இவர் "எமன், இராவணன்,

இரணியன்" முதலிய வேதங்கள் புனைந்து மேடையில் நிற்கும் போது பார்பவர்களுக்குக் கிலி அடிக்கும். இவர் எழுத்துத் திறமையோடு நடிப்புத் திறமையும் பெற்றிருந்தார்.

**பம்மல் சம்பந்தனார் (1875 - 1964)**

தமிழ் நாடகத் தந்தை, கலைஞர்

பம்மல் சம்பந்தனார் தனது 18வது வயதில் "சுகுணவிலாச சபையைத்" தொடங்கினார்.

இவர் தேவையற்ற ஆடல் பாடல்களைக் குறைத்தார்.

**கலைஞர்:**

பம்மல் சம்பந்தனார், கட்டுக்குலையாதக் நாடகக் குழுவை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்.

அதனால் நாடகர்களால், "கலைஞர்" என மதிக்கப்பட்டார். இவர் நீ4தித்துறையில் பணியாற்றியவர்.

**நாடகங்கள்:** இவர் 94 நாடகங்களைத் படைத்துள்ளார்.

மனோகரா. யயாதி., சிறுத்தொண்டன், கர்ணன், சபாபதி, பொன்விலங்கு, வாணிபுரத்து வீரன் (ஷோக்ஸ்பியர் நாடகங்களை தழுவி), விருபம்பிய விதமே, அமலாதித்தியன்

**கேளிக்கை நாடகம், நையாண்டி நாடகம்:**

இவர், நாடக்க காட்சிக்கேற்பத் திரைச்சீலைகளையும் பொருத்தமான ஓவியங்களையும் தொங்கவிடுமாறு வற்புறுத்தினார்.

இவர் கேளிக்கை நாடகம் என்ற வகையினையும், நாடக நையாண்டியினையும் தமிழ் நாடக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார்.

**அடுக்குமொழிகள்:**

"போட்டும் புனைந்தழகாய்க் கட்டும்

பீதாம்பரமாம் பட்டும்

சோதி செய் பகட்டும்

செயலைக் கண்டு கிட்டும்

வருணிக்கும்

பொழுது எனக்கு மட்டும்.

**சபாபதி நாடகம்:**

இவரின் சபாபதி என்ற நாடகம் இன்றளவும் மறக்கமுடியாத நகைச்சுவை நாடகம் ஆகும்.

சபாபதி என்ற இந்நாடகம் படிக்கவும் பார்க்கவும் நகைச்சுவையை ஏற்படுத்தவல்லது.

**குறளை மாற்றுதல்:** குறள் வடிவத்தைத் தன் போக்கிற்கேற்ப மாற்றி எழுதுவார்.

**"சூதினும் சூதானது யாதெனில் சூதினும்**

**சூதே சூதா னது"**

**உழவின் சிறப்பு**

**மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை**

**ஆழி தரித்தே அருளும்கை - சூழ்வினையை**

**நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடூழி**

**காக்கும்கை காராளர் கை**

**கம்பர்**

**சொற்பொருள்:**

மேழி - கலப்பை, ஏர்

வேந்தர் - மன்னர்

ஆழி - மோதிரம்

சூழ்வினை - உண்டாகும் வறுமைத் துன்பம்

காராளர் - மேகத்தை ஆளுகின்றவர்களாகிய உழவர்

**ஆசிரியர் குறிப்பு**

இயற்பெயர்: கம்பர்

பிறந்த ஊர்: தேரழுந்தூர், மயிலாடுதுறைக்கு அண்மையில் உள்ளது.

ஆதரித்தவர்: சடையப்ப வள்ளல்

இயற்றிய நூல்கள்: கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம்.

சிறப்பு: கல்வியில் பெரியர் கம்பர், கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.

காலம்: பன்னிரண்டாம் நூற்றாண்டு.

*வேளாண்மைப் பல்கலைக்கழகம் உள்ள இடம் - கோவை

கோவையில் நடைபெறும் வேளாண்மைப் பல்கலைக்கழக கண்காட்சிகுச் செல்ல முகுந்தனுடன் கயல்விழியுடன் வருவதாகச் சொன்னார்.

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேலன் மாமா நெடுமாறன் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

வேளாண்மைத் துறையில் செயற்கை உரங்களை பயன்படுத்துவதால் நீர், நிலம், காற்று, ஆகாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

இயற்கை வேளாண்மைக் கூறுகள் - உழுதல், விதைத்தல், தொழு உரமிடுதல், நீர் பாய்ச்சுதல், களை எடுத்தல், காத்தல் முதலியன.

நிலத்தை எப்படி உழுதல் வேண்டும் - விதைக்கும்முன் நிலத்தைப் பண்பட உழுதல் வேண்டும். அதாவது ஒருபலம் எடையுள்ள மண்ணைக் கால்பலம் எடை அளவிற்கு உலரும்வரை உழுதிடுதல் வேண்டும்.

நன்செய் - நீர்வளமிக்கது. இந்நிலத்தில் நெல், கரும்பு, வாழை முதலிய பயிர்கள் விளையும்.

புன்செய் - நீர்வளம் குறைந்த பகுதி. இதனை வானம் பார்த்த பூமி என வேளாண் மக்கள் கூறுவர். இந்நிலத்தில் கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, துவரை, கொள்ளு, காராமணி முதலிய பயிர்கள் விளையும்.

எந்தெந்தப் பயிர்க்கு எவ்வளவு இடைவெளி வேண்டுமென்பதனை முன்னேர் கூறுவர் - நெல்லுக்கு நண்டோட; கரும்புக்கு ஏரோட; வாழைக்கு வண்டியோட; தென்னைக்குத் தேரோட எனக் குறிச் செனண்றுள்ளனர்.

பஞ்சகவ்வியம் என்பது - பசுவிடமிருந்து கிடைக்கும் கோமயம், சாணம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்து பொருட்களை கலந்து செய்வதே பஞ்சகவ்வியம்.

காப்பு - காத்தல் இதனை "கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ்"

**துணைப்பாடம்: நிலைத்த செல்வம் கல்விச் செல்வம்**

நகை வணிகர் தங்கம், வைரத்தை சிறந்த செல்வம் எனக் கூறுவர்.

புலவர் - கல்விச் செல்வம் சிறந்த செல்வம் எனக் கூறுவர்.

கல்விச் செல்வத்தை யாராலும் களவாட முடியாது.

திருடர்கள் நகைகளை புலவர்க்கு பரிசாகத் தந்தனர்.

புலவர் திருடர்களை உழைத்து சம்பாதிக்க வேண்டும் என கூறினார்.

கல்விச் செல்வம் நிலைத்த செல்வம் என வணிகர் கூறுவர்.

**இலக்கணம்: வேற்றுமை, அடைமொழி**

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும்.

பெயர்ச்சொல்லின் இருதியில் அமைந்து பொருள் வேறுபாட்டைச் செய்யும் உருபுகளை வேற்றுமை * உருபுகள் என்பர்.

பெயரை வேறுபடுத்திக் காட்டும் உருபு வேற்றுமை உருபு.

இவ்வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

இயல்பான பெயர்(எழுவாய்) பயனிலையைக் கொண்டு முடிவது முதல் வேற்றுமை எனவும், எழுவாய் வேற்றுமை எனவும் வழங்கப்படும்.

எழுவாய் வேற்றுமைக்கு எனத் தனி உருபு இல்லை.

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பதாகும்.

பெயர்ச்சொல்லினது பொருளைச் செயப்படு பொருளாக வேறுபடுத்துவது - இரண்டாம் வேற்றுமை ஆகும்.

ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் ஆகியன மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆகும்.

கு - நான்காம் வேற்றுமை உருபு.

இல், இன் - ஐந்தாம் வேற்றுமை உருபுகள்.

இல், இன் என்னும் உருபுகள் சேர்ந்து பொருளை வேறுபடுத்துவது ஐந்தாம் வேற்றுமை எனப்படும்.

அது - ஆறாம் வேற்றுமை உருபு.

பெயர்ச்சொற்களுடன் அது என்னும் வேற்றுமை உருபு சேர்ந்து பொருளை வேறுபடுத்துவது ஆறாம் வேற்றுமை எனப்படும்.

ஏழாம் வேற்றுமைக்கும் கண், உள், மேல், கீழ் என்பன உருபுகளாம்.

எட்டாம் வேற்றுமைக்கு உருபு இல்லை.

எட்டாம் வேற்றுமையை விளி வேற்றுமை என அழைப்பர்.

திங்கள் - நிலவு, மாதம்

நிலவை வெண்ணிலவு என்று அழைப்பார்கள்.

வெண்மை என்னும் நிலவுக்கு ஆடையாக வந்துள்ளது.

பொருள்களை இனம்பிரித்தறிய உதவும் அடைமொழிகள் இனமுள்ள அடைமொழிகள் எனப்படும்.

**விணைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்**

வருகின்றான், வருவான் என செயல் முடிந்ததைக் குறிக்கும் சொல்லே வினைமுற்று ஆகும்.

பழுத்த என்னும் சொல் முற்றுப்பெறாத வினைச்சொல் எனப்படும்.

ஒரு பெயரைக் கொண்டு முடியும் முற்றுப் பெறாத வினைச்சொல்லே பெயரெச்சம் ஆகும்.

எடுத்து வருவான் எந்த வினையெச்சம் எதிர்கால ஆகும்.

"எடுத்து வருகின்றான்" என்பது நிகழ்கால வினையெச்சம் எனப்படும்.

வினையெச்சம் மூன்று காலத்தையும் உணர்த்தும்.

வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும்.

"எடுத்து" என்னும் சொல் முடிவுபெறாத சொல் ஆகும்.

நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் குறிப்பதே மரபு எனப்படும்.

மரபுச் சொற்களைப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைப் பயன்படுத்துவது மரபுப்பிழை எனப்படும்.

மரபுச் சொல்லுக்கு எடுத்துக்காட்டு யானைக்கன்று

மரபுப்பிழைக்கு எடுத்துக்காட்டு யானைக்குட்டி

உயிர்களைப் பலியிட வேண்டாம் என்று மன்னர் பிம்பிசாரர்க்கு அறிவுரை கூறியவர் - கௌதம் புத்தர்.

**திருக்குறள்**

கசடு – குற்றம்

நிற்க - கற்றவாறு நடக்க

எண் - எண்கள், கணக்கு

எழுத்து - இலக்கண இலக்கியங்கள் (வரிவடிம்)

உவப்ப – மகிழ

தலைக்கூடி - ஒன்றுசேர்ந்து

உடையார் – செல்வர்

இல்லார் - ஏழை

ஏக்கற்று – கவலைப்பட்டு

கடையர் - தாழ்ந்தவர்

தொட்டனைத்து - தோண்டும் அளவு

மாந்தர் - மக்கள்

சாந்துணையும் – சாகும்வரையிலும்

ஏமாப்பு - பாதுகாப்பு

காமுறுவர் – விரும்புவர்

விழுச்செல்வம் - சிறந்த செல்வம்

மாடு - செல்வம்

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்

ஒருமைக்காண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருிவருக்கு மாடல்ல மற்றை யாவை

**பிரித்து எழுதுக:**

கசடற - கசடு + அடி

மணற்கேணி - மணல் + கேணி

எழுத்தென்ப - எழுத்து + என்ப

கற்றறிந்தார் - கற்று + அறிந்தார்

மாடல்ல - மாடு + அல்ல

**முக்கூடற் பள்ளு**

**சொற்பொருள்:**

தத்தும் புனல் - தத்திச்செல்லும் நீர்

முத்தம் அடைக்கும் - முத்துகள் மிக்குப் பெருகிடையே அடைத்துத் கொண்டு கிடக்கும்.

கலிப்பு வேலை - கருமார், கொல்லர், தட்டார் முதலியோர் செய்யும் தொழில்கள்.

சித்ரம் - சிறப்பான காட்சிகள்

மதோன் மத்தர் - பெரும்பித்தனாகிய சிவபெருமான்.

முக்கூடற்பள்ளு என்னும் நூலை நாடகப் பாங்கில் அமைத்து இயற்றியவர் - என்னயினாப் புலவர்.

முக்கூடற்பள்ளு சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட நூல் ஆகும்.

ஒன்பது மணிகள் - முத்து, பவளம், மரகதம், மாணிக்கம், புட்பராகம், இரத்தினம், வைரம், வைடூரியம், கோமேதம்

வாய்க்கல் நீரை அடைத்தது - முத்துகள்.

நீர் நிறைந்த பள்ளமான சேற்று நிலத்தில் உழவுத் தொழில் செய்து வாழும் பாமர மக்களாகிய பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்தரித்துக் குறுவதாக அமைந்த நூல் - பள்ளு.

**ஆசிரியர் குறிப்பு:**

இந்நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை.

ஆயினும் நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் "என்னயினாப் புலவர்" எனச் சிலர் கூறுவர்.

சந்த நயம் மிக்க நூல்.

திருநெல்வேலி மாவட்ட பேச்சு வழக்கு அமைப்பில் வடிக்கப்பட்டுள்ளது.

நீர்நிறைந்த பள்ளமான சேற்று நிலத்தில் தொழில் செய்யும் பள்ளர்களை பற்றியது.

திருநெல்வேலிக்குச் சற்று வடகிழக்கில் கூடும் ஆறுகள் - தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம் ஆறு

மூன்று ஆறுகள் கூடும் இடத்திற்கு முக்கூடல் என்று பெயர்.

முக்கூடலுக்கு ஆசூர் வடகரை நாடு என்னும் பெயருமுண்டு.

முக்கூடலுக்குத் தென்பால் உள்ள பகுதி சீவலமங்கைத் தென்கரைநாடு என வழங்கப் பெறுகின்றது.

இரண்டு மனைவிகள் மணந்து திண்டாடும் பள்ளனின் வாழ்க்கை வளத்தை வடித்துரைப்பது போலப் பாடப்பட்ட நூல் - முக்கூடற்பள்ளு.

தென்கரை நாட்டில் மருதசீர் வீற்றிருக்கும் ஊர் மருதூர்.

முக்கூடலில் வாழும் பள்ளி மூத்த மனைவி, மருதூரில் வாழும் பள்ளி இளைய மனைவி.

மருத நிலவளம் பற்றி அறிய உதவும் நூல் - முக்கூடற்பள்ளு.

ஊமத்தம் பூவை விரும்பிச் சூடும் இறைவன் - சிவபெருமான்.

மருதூரில் வீற்றிருக்கும் இறைவன் - சிவபெருமான்

மருதூரில் உள்ள மக்கள் செய்யும் தொழில் - உலோகத் தொழில்

**தனிப்பாடல்**

"இன்பர்வான் எல்லைஇரா மனையே பாடி

என்கொனர்ந்தாய் பாணாநீ என்றால் பாணி

வம்பதாம்க ளபமென்றேன் பூசும் என்றாள்

மாதங்கம் என்றேன்யாம் வாழ்ந்தே மென்றாள்

பம்புசீர் வேழமென்றேன் தின்னு மென்றாள்

பகடென்றான் உழுமென்றாள் பழனத் தன்னைக்

கம்பமா என்றேன்நற் களியாம் என்றாள்

கைம்மாஎன் றேன்சும்மா கலங்கி னாளே!"

**அந்தக்கவி வீரராகவர்**

**சொற்பொருள்:**

களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, கைம்மா - யானை
* களபம் - சந்தனம்
* மாதங்கம் - பொன்
* வேழம் - கரும்பு
* பசுடு - எருது
* கம்பமா - கம்ப மாவு

**ஆசிரியர் குறிப்பு:**

பிறந்த ஊர்: காஞ்சிபுரம் மாவட்டம்
* வாழ்ந்த ஊர்: களத்தூர்
* தந்தை: வடுகநாதர்
* சிறப்பு: சீட்டுக்கவி பாடுவதில் வல்லவர்.
* காலம்: 17ம் நூற்றாண்டு.
* நூல்கள்: சந்திரவாணன் கோவை, சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேயூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்றப் புராணம்.

**நூல் குறிப்பு:**
* இப்பாடல், தனிப்பாடல் திரட்டு" என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.
* தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல்.
* இதில் 110 புலவர்கள் பாடிய 1113 பாடல்கள் உள்ளன.

**தமிழகத்தின் அன்னிபெசன்ட்**

**அறிஞர் அண்ணா:**

அறிஞர் அண்ணா அவர்களால் "தமிழகத்தின் அன்னிபெசன்ட்" எனப் புகழப்பட்டவர்.
* இளமை காலம்: மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் 1833 ஆம் ஆண்டு பிறந்தார்.
* தேவதாசி குடியில் பிறந்தார்.
* தேவதாசி குடும்பத்தில் பிறந்த பெண்களுக்கு ஆடலும் பாடலும் உரியன. ஆனால், இவரது பெற்றோர் அவருக்கு அவற்றைக் கற்றுத்தர மறுத்தால், இவரின் குடும்பத்தை அவ்வினத்தார் ஒதுக்கி வைத்தனர்.
* வறுமையின் காரணமாக அம்மையாரின் தந்தை கிருஷ்ணசுவாமி மகளையும், மனைவியையும் விட்டு சென்றார்.
* அம்மையாரின் தாயார் இவருக்கு ஐந்து வயதாகும் பொது பத்து ரூபாய்க்கு தேவதாசி ஒருவரிடம் விற்றுவிட்டார்.

**சுயம்பு:**
* தனக்கு இசையும், நாட்டியமும் கற்றுத்தந்த சுயம்பு என்பவரை மணந்தார்.
* சுயம்பு, அம்மையாரின் அணைத்து போராட்டங்களுக்கும் துணைப் புரிந்தார்.
**முதல் போராட்டம்:**
* 1917 இல் தனது முதல் போராட்டத்தை மயிலாடுதுறையில் தொடங்கினார்.
* தேவதாசி முறையை எதிர்த்து போராட்டம் நடத்தினார்.
**காந்தி மீது பற்று:**

அம்மையார் காந்தியடிகள் மீது மிகுந்த பற்று வைத்திருந்தார்.
* ஆங்கிலேயர்களின் தடை உத்தரவு காரணமாக தான் பேசாமல் தனது கருத்துக்களை "கரும்பலகையில்" எழுதி வெளிப்படித்தினார்.
**மூவர்ணக் கொடி ஆடை:**
* காந்தி இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்டு, இந்திய திரும்பியவுடன் கைது செய்யப்பட்டார்.
* அம்மையார் மூவர்ணக் கொடியை ஆடையாக உடுத்தினார்.
**குடிசையில் வாழ்தல்:**
* காந்தியத்தை ஏற்போர் குடிசையில் வாழ வேண்டும் என காந்தியடிகள் கூறியதை அடுத்து, அம்மையார் தனது ஓட்டு வீட்டை விட்டு குடிசையில் குடியேறினார்.
* அக்குடிலின் வெளியே, கரும்பலகையில் "காதர் அணிந்கவர்கள், உள்ளே வரவும்" என எழுதி இருந்தார்.
**மொழிப்போர் பேரணி:**
* 1938 ஆம் ஆண்டு நடந்த மொழிப்போர் பேரணியில் உறையூர் (திருச்சி) முதல் சென்னை வரை 42 நாள், 577 மைல் நடைபயணம் மேற்கொண்டார்.
* நடைபயணத்தின் போது 87 பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார்.
* அப்பேரணியில் நடந்து வந்த ஒரே பெண் அம்மையார் மட்டுமே.
**விடிவெள்ளி:**
* அம்மையார், பெண் உரிமைக்குப் பாடுபட்ட விடிவெள்ளியாகத் திகழ்ந்தார்.
* பொதுவாழ்வில் 50 ஆண்டுகள் ஈடுபட்டுத் தனது 80 வயதில் 27.06.1962 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.
**திருமண உதவித் திட்டம்:**
* 1989 ஆம் ஆண்டு மூவலூர் அம்மையாரின் நினைவைப் போற்றும் வகையில், அவரது பெயரால் ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்தினை தமிழக அரசு வழங்கி வருகிறது.

## அம்மானை

**ஆசிரியர் குறிப்பு:**

திருச்செந்திற்கலம்பகம் என்னும் நூலை எழுதியவர் சுவாமிநாத தேசிகர்.

இவரை ஈசான தேசிகர் என்றும் அழைப்பர்.

தந்தை = தாண்டவமூர்த்தி

கல்வி கற்று = மயிலேறும் பெருமாள்

இவர் திருவாவடுதுறை ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகமூர்த்திக்கு தொண்டராய் இருந்தார்.

**நூல் குறிப்பு:**

திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல் 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

கலம்பகம் -= கலம் + பகம் (களம் =12, பகம் = 6, கலம்பகம் = 18)

கலம்பகம் 18 உருபுகளை கொண்டது.

## சீவக சிந்தாமணி

**சொற்பொருள்**:

விண் - வானம்

வரை - மலை

முழவு - மத்தளம்

மதுகரம் - தேன் உண்ணும் வண்டு

**ஆசிரியர் குறிப்பு:**

திருதக்கதேவர் சோழர் குலத்தில் பிறந்தார்.

இவர் சமண தமயத்தை சார்ந்தவர்.

இவர் பாடிய மற்றொரு நூல் "நரி விருத்தம்" ஆகும்.

**நூல் குறிப்பு:** ஐம்பெரும்காப்பியங்களுள் ஒன்று இந்நூல்.

இந்நூலின் கதை தலைவன் சீவகன்.

அவன் பெயரை இணைந்துச் சீவக சிந்தாமணி எனப் பெயர் பெற்றது.

இந்நூலுக்கு மணநூல் என்னும் வேறு பெயரும் உண்டு.

## எங்கள் தமிழ்

**சொற்பொருள்:**

கதி - துணை

பேறு - செல்வம்

நனி - மிகுதி (மிக்க)

தரம் - தகுதி

புவி - உலகம்

**ஆசிரியர் குறிப்பு:**

இயற்பெயர்: கனக சுப்புரத்தினம்

பாரதியார் மீது கொண்ட பற்றினால் பாரதிதாசன் என மாற்றி அமைத்துக்கொண்டார்.

பெற்றோர்: கனகசபை - இலக்குமியம்மாள்

கல்வி: தமிழ், பிரெஞ்சு,ஆங்கிலம் ஆகியவற்றில் புலமை மிக்கவர்.

இயற்றியவை: குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, சேர தாண்டவம், இருண்ட வீடு, தமிழச்சியின் கத்தி, பிசிராந்தையார், குருஞ்சித் திட்டு, அழகியின் சிரிப்பு, தமிழியக்கம் முதலியன.

காலம்: 29.04.1891 - 21.04.1964

## ஓவியக்கலை

**ஓவியம்:**

எல்லைகளையெல்லாம் கடந்து எங்கும் பரந்து வாழும் மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்டு வியக்க வைக்கும் விந்தை மொழி ஓவியம்.
* காண்பவரைக் கவர்ந்திழுக்கும் உள்ளங்களைத் தன்வயப்படுத்தும் உயர்ந்த கலை ஓவியக்கலை.

**கோட்டோவியங்கள்:**
* சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த மக்கள் மலைக்குகைகளிலும் பாறைகளிலும் கோட்டோவியங்கள் வரைந்தனர்.

தமிழகத்தில் 25க்கும் மேற்பட்ட இடங்களில் (மான், போர் செய்தல், விலங்கு வேட்டை ஆகியவற்றை குறிக்கும்) குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**கண்ணெழுத்து:**
* தமிழ் நாட்டில் சங்க காலத்திற்கு முன்னரே ஓவியங்கள் வரையப்பட்டன.
* தாம் வரைந்த ஓவியங்களை முதலில் "சுண்ணெழுத்து" என்றே வழங்கினர்.

**எழுத்து:**
* எழுத்து என்பதற்கு ஓவியம் என்றும் பொருள் உண்டு என பரிபாடலும், குறுந்தொகையும் கூறுகின்றன.

**கோட்டோவியங்கள்:**
* ஓவியம் வரைவதற்கு நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு முதலியன அடிப்படை.
* இவ்வாறு வரையப்படுபவை "கோட்டோவியங்கள்" எனப்படும்.

**நடுகல் வணக்கம்:**
* தொல்காப்பியம் நடு கல் வணக்கம் பற்றிக் கூறுகிறது.
* நடுகல்லி போரில் வீரமரணம் எய்திய வீரனது உருவம், பெயர், பெருமைக்குரிய செயல் முதலியவற்றைப் பொரிக்கும் பழக்கம் இருந்தது.

**ஓவியக்கலையின் வேறுபெயர்கள்:**
* ஓவ, ஓவம், ஓவியம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி

**ஓவியக் கலைஞனின் வேறு பெயர்கள்:**

ஓவியர், ஓவியப்புலவன், கண்ணுள் விளைஞன், சித்திரகாரர், வித்தக விளைஞன், வித்தகர், கிளவி வல்லோன்

**நச்சினார்கினியர் இலக்கணம்:**
* நச்சினார்க்கினியர் தம் உரையில் ஓவியருக்கு, நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்" என இலக்கணம் வகுத்துள்ளார்.

**ஓவியக் குழுக்கள்:**
* ஓவிய கலைஞர் குழுவை "ஓவிய மாக்கள்" என்று அழைத்தனர்.
* ஆண் ஓவியர் = சித்திராங்கதன்
* பெண் ஓவியர் = சித்திரசேனா

**சிலப்பதிகாரம்:**
* ஆடல் மகள் மாதவி, "ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றுத்துறை போகப் பொற்கொடி மடந்தையாக இருந்தனள்" எனச் சிலம்பு பகிர்கிறது.
**வரைகருவிகள்:**
* வண்ணம் தீட்டும் கோல் தூரிகை, துகிலிகை, வட்டிகை எனப்பட்டது.
* வண்ணங்கள் குழப்பும் பலகைக்கு "வட்டிகைப் பலகை" எனப் பெயர்.
**புறநானூறு: "ஓவத்தனைய இடனுடை வனப்பு"**

**புறநானூறு**

இவ்வாறு வீட்டின் அழகை ஓவியத்திற்கு ஒப்ப வைத்துக் கவிஞர் போற்றுகிறார்.

**ஓவிய எழினி:**
* நாடகமேடைகளில் பல வண்ணங்களில் கவின்மிகு காட்சிகள் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் தொங்குகினவற்றை "ஓவிய எழினி" கொண்டு அறிகிறோம்.
**புனையா ஓவியம்:**
* வண்ணம் கலக்காமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதைப் புனையா ஓவியம் என்பர்.
* இன்றும், இது மென்கோட்டு ஓவியமாக நடைமுறையில் உள்ளது.
**நெடுநல்வாடை:**
* ஆடு முதலான 12 இராசிகளையும், விண்மீன்களையும் வரைந்த செய்தி, நெடுநல்வாடை கூறுகிறது.
**தமிழரின் ஓவிய மரபு:**
* ஓவியங்களில் "நிற்றல், இருத்தல், கிடத்தல்" ஆகிய மனித இயல்புகளையும்
* "வீரம், சாந்தம், சினம், வியப்பு, உவகை" ஆகிய மெய்ப்பாடுகளையும்
* "உத்தமம், மத்திமம், அதமம், தசதாளம், நவதாளம், பஞ்சதாளம் முதலிய அளவுகளையும் வலியுறுத்துவது தமிழருக்கே உரிய ஓவிய மரபுகளாக விளங்குகின்றன.
**மகேந்திரவர்மப் பல்லவன்:**
* சங்க்க காலத்தில் செழிந்திருந்த ஓவியக்கலை இடைக்காலத்தில் சிதைந்து மறைந்துபோகத் தொடங்கியது.
* மறைந்து கொண்டிருந்த ஓவியக்கலைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டியவர்கள் பல்லவர்கள்.
* 7 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட முதலாம் மகேந்திரவர்மப் பல்லவன் சிறந்த ஓவியன்.
* கல்வெட்டுகள் இவனைச் "சித்திரகாரப்புலி" எனப் புகழ்கின்றன.
* "தட்சினசித்திரம்" என்னும் ஓவிய நூலுக்கு இம்மன்னன் உரை எழுதியுள்ளான்.
**சித்தன்னவாசல் - ஓவியக் கருவூலம்:**
* திருநந்திக்கரையில் சேரர் கால ஓவியங்கள் கிடைத்துள்ளன.
* புதுக்கோட்கோட்டைக்கு அருகே சித்தன்வாசல் என்னும் குகைக்கோவில் ஓவியங்கள் ஓவியக் கருவூலமாக வைத்து போற்ற தக்கது.
* கி.பி.9ஆம் நூற்றாண்டில் "அவனிய சேகர ஸ்ரீவல்லபன்" என்ற பாண்டிய மன்னன் காலத்தில், மதுரை ஆசிரயர் "இளம்கௌதமன்" இவ்வோவியங்களை வரைந்தார் என வல்வெட்டுகள் கூறுகிறது.
**சோழர் கால ஓவியங்கள்:**
* சோழர்கால வனப்புமிக்க ஓவியங்களைத் தஞ்சைப் பெரியகோவிலில் காணலாம்.
* அதில் கவின்மிகு கயிலைகாட்சி உள்ளது.

## எட்டாம் வகுப்பு

### செய்யுள் - வாழ்த்து

**முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே**

**சித்தேஎன் னுள்ளத் தெளிவே பராபரமே**

**கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த**

**விண்ணே ஆனந்த வியப்பே பராபரமே**

**தாயுமானவர்**

**சொற்பொருள்:**

சுடர் - ஒளி

ஆன்நதம் - மகிழ்ச்சி

பராபரம் - மேலான பொருள், இறைவன்

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - தாயுமானவர்

பெயர் காரணம்: திருச்சி மலைமீது உள்ள இறைவனான தாயுமானவர் அருளாள் பிறந்தமையால் இவருக்கு தாயுமானவர் என்று பெயர் சூட்டப்பட்டது.

பெற்றோர் - கேடிலியப்பர் - கெசவல்லி அம்மையார்.

மனைவி - மட்டுவார்குழலி

ஊர்: நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருமறைக்காடு(வேதாரண்யம்)

நூல்: தாயுமானவர் திருப்பாடல் திரட்டு

பணி: திருச்சயை ஆண்ட விஷய ரகுநாத சொக்கலிங்கரிடம் கருவூல அலுவலர்.

காலம்: கி.பி.18ம் நூற்றாண்டு

நினைவில்லம்: இராமநாதபுரம் மாவட்டம் இலட்சுமிபுரத்தில் உள்ளது.

நூல் குறிப்பு:

இப்பாடல் "தாயுமானவர் திருப்பாடல் திரட்டு" என்னும் நூலில் "பராபரக்கண்ணி" என்னும் தலைப்பில் உள்ளது.

### திருக்குறள்

**சொற்பொருள்:**

வினை – செயல்                    காப்பு - காவல்

| | |
|---|---|
| நீரவர் – அறிவுடையார் | கேண்மை - நட்பு |
| பேதையார் – அறிவிலார் | நவில்தொறும் - கற்கக்கற்க |
| நயம் – இன்பம் | நகுதல் - சிரித்தல் |
| நட்டல் – நட்புக்கொள்ளுதல் | இடித்தல் - கடிந்துரைத்தல் |
| கிழமை – உரிமை | முகநக - முகம் மலர |
| அகம் – உள்ளம் | ஆறு - நல்வழி |
| உய்த்து – செலுத்தி | அல்லல் - துன்பம் |
| உடுக்கை – ஆடை | இடுக்கண் - துன்பம் |
| களைவது – நீக்குவது | கொட்பின்றி - வேறுபாடு இல்லாமல் |
| ஊன்றும் – தாங்கும் | புனைதல் - புகழ்தல் |
| புல் – கீழான | |

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - திருவள்ளுவர்

வேறுபெயர்கள்: முதற்பாவலர், பொய்யில் புலவர், பெருநாவலர், செந்நாப்போதார.

காலம் - கி.மு.31ம் நூற்றாண்டு.

சிறப்பு: **பாரதியார்** இவரை வள்ளுவன் தன்னை "உலகினுக்கே தந்து வான்புகல் கொண்ட வையகமே" என்றார்.

**பாரதிதாசன்** இவரை : வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமோ" என்றார்.

**நூல் குறிப்பு:**

இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

குறள் வெண்பாக்களால் ஆனதால், குறள் எனவும், மேன்மை கருதி திரு என்னும் அடைமொழியுடன் திருகுறள் எனவும் அழைக்கப்பெறுகிறது.

இது "உலகப்பொதுமறை" என போற்றப்படுகிறது.

வாயுறை வாழ்த்து, பொதுமறை, பொய்யா மொழி, தெய்வ நூல் முதலிய பெயர்களும் இதற்கு உண்டு.

**நூல் சிறப்பு:**

உருசிய நாட்டில் அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் உள்ள சுரங்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் திருக்குறளும் இடம்பெற்றுள்ளது.

இங்கிலாந்து நாட்டுக் காட்சிச்சாலையில் திருக்குறள் விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது.

இதன்பெருமையை உணர்ந்த வீராமாமுனிவர் லத்தினிலும் ஜீயு.பொப் ஆங்கிலத்திலும் மொழிபேர்த்துள்ளனார்

**தமிழ் வளர்த்த சான்றோர்**

புதுக்கவிதைக்கு - பாரதியார்

சமுதாய புரட்சிக்கு - பாரதிதாசன்

பொதுவுடைமை - திரு.வி.க

தனித்தமிழுக்கு - மறைமலையடிகள்

பேச்சுக்கலை - அறிஞர் அண்ணா

சிறுகதை - புதுமைப்பித்தன்

**வீரமாமுனிவர் (1680 - 1747)**

நாடு - இத்தாலி நாட்டில் பிறந்தார்.

இயற்பெயர் - "கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி".

இவர் தம் முப்பதாம் வயதில் தமிழகம் வந்தார்.

தமிழின் மீது கொண்ட பற்றின் காரணமாக தன் பெயரை "தைரியநாதன்" என மாற்றிகொண்டார்.

பின்னர் தனித்தமிழுக்கு ஏற்ப "வீரமாமுனிவர்" என மாற்றம் பெற்றது.

**சதுரகராதி தேம்பாவணி:**

தமிழில் முதன்முதலாக "சதுரகராதி" என்னும் அகரமுதலியை படைத்தார்.

கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் எனப் போற்றப்படும் "தேம்பாவணி" என்னும் காப்பியத்தை படைத்தார்.

**எழுத்து சீர்திருத்தம்:**

தமிழ் எழுத்து வரிவடிவத்தை திருத்தி, எழுத்துச் சீர்திருத்தம் செய்தார்.

**குட்டித் தொல்காப்பியம்:**

குட்டித் தொல்காப்பியம் எனப் போற்றப்படும் "தொன்னூல் விளக்கம்" படைத்தார்.

**பிற நூல்கள்:**

கலம்பகம், அம்மானை போன்ற சிற்றிலக்கிய வகை நூல்களையும், பரமார்த்த குரு கதை என்னும் நகைச்சுவை நூலையும் படைத்தார்.

**ரா.பி.சேதுபிள்ளையின் பாராட்டு:**

தேம்பாவணி, காவலூர் கலம்பகம் கதம்ப மாலையாக காட்சி அளிக்கிறது. தொன்னூல் பொன்நூலாக இலங்குகின்றது. சதுரகராதி முத்தாரமாக மிளிர்கிறது. வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார் என ரா.பி.சேதுபிள்ளை பாராட்டுகிறார்.

**குணங்குடி மஸ்தான் (1788 - 1835):**

மாதவஞ்ச்சேர் மேலோர் வழுத்தும் குணங்குடியான்" என்று அழைக்கப்படுபவர்.

இவரது இயற்பெயர் சுல்தான் அப்துல் காதீர்.

இளம்வயதிலே முற்றும் துறந்தவராய் வாழ்ந்தவர். சதுரகிறி , புறாமலை,நாகமலை முதலிய மலை பகுதிகளுக்கு சென்று தனித்திருந்து ஞானம் பெற்றார்.

**தாயுமானவர் மீது பற்று:**

இவர் தாயுமானவர் பாடல்கள் மீட்கு பெரிதும் பற்று கொண்டவர்.

அவருடைய பராப்பரக்கண்ணிப் போலவே ஓசை நயம் மிக்க பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

பராப்பரக்கண்ணி, எக்காலக்கண்ணி, மனோன்மணிக்கண்ணி, நந்தீஸ்வரக்கண்ணி முதலியன இவர் பாடிய சில கண்ணிகள்.

**அழியாப் பேரின்பம்:**

இவர்தம் பாடல்கள் உலகின் உண்மை நிலையை உணர்த்தி அழியாப் பேரின்பப் பெருவாழ்விற்கு நன்மை அழைத்து செல்லும்.

இவர் குருநிலை, தவநிலை, துறவுநிலை, நியமநிலை, காட்சிநிலை, தியானநிலை, சமானநிலை எனப் பொருள்தரும் வகையில் பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

**நான்மணிமாலை:**

இவர் மீது கொண்ட பற்றின் காரணமாக திருத்தணி சரவணப் பெருமாள் நான்மணிமாலை ஒன்று இயற்றியுள்ளார்.

அந்நூலில் "மடல் சூல்புவியில உளத்திருளைக் கருணை ஒளியினாற் களைந்து, விடல்சூழ்பவரின், குனங்குடியான், மிக்கோன எனற்குஓர் தடையுளதோ?" எனக் கேட்கிறார்.

தடை உண்டு என உரைப்பார் தமிழுலகில் இல்லை" என்கிறார்.

**ஆறுமுக நாவலர் (1822 - 1879):**

இவர் இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்தில் நல்லூரில். பிறந்தவர்.

இயற்பெயர் - ஆறுமுகனார்.

இளமையிலே சைவ சிந்தாந்த சாத்திரங்கள் படித்தவர். தமிழ் மொழி ஆங்கில மொழி புலமை ஒருசேர பெற்றவர் ஆவார். இரு மொழி கற்பிக்கும் ஆசிரியர் ஆக திகழ்ந்தார்.

**நாவலர் பட்டம்:** இவரின் சொற்பொழிவு திறமையை கண்டு திருவாவடுதுறை ஆதினம் இவருக்கு "நாவலர்" பட்டம் வழங்கினார்.

இவர் சிறந்த பதிப்பாசிரியர் மற்றும் உரையாசிரியர்.

**இலக்கண வலுவற்ற தூய்மை:** நாவலரே முதன் முதலில் இலக்கண வலுவற்ற தூய்மையான எளிய தமிழ் உரைநடையை கையாண்டார்.

**பரிதிமாற் கலைஞர் பாராட்டு:** தமிழ் உரைநடை வளர்ச்சிக்குபெரும் தொந்தாத்ரியவர்.

உரைநடைக்கு இவர் ஆற்றிய தொண்டிற்காக பருதிமாற் கலைஞர் இவரை "**வசன நடை கைவந்த வல்லாளர்**" என பாராட்டினார்.

**அச்சுக்கூடம் நிறுவுதல்:** சென்னையில் அச்சுக்கூடம் நிறுவி, சிறந்த தமிழ் நூல்கள் பல பதிப்பித்தார்.

பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை போன்ற இலக்கிய நூல்களை பதிப்பித்தார்.

இலக்கண வினாவிடை, இலக்கண சுருக்கம், நன்னூல் விருத்தியுரை, நன்னூல் காண்டிகையுரை, இலக்கண கொத்து, இலக்கண சூறாவளி முதலிய இலக்கண நூல்களை பதிப்பித்து வெளியிட்டார்.

முதல் வகுப்பு முதல் நான்கமா வகுப்பு வரை பாலபாடங்களையும் எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.

**துணைப்பாடம்:**

**ஜி.யு.போப்**

**பிறப்பு:**

பெயர் - ஜியார்ஜ் யுக்ளோ போப் என்று அழைக்கப்படும் ஜி.யு. போப்

பிறந்த ஊர்: பிரான்ஸ் நாட்டின் எட்வர்ட் தீவு

பிறப்பு - கி.பி. 1820 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி

பெற்றோர் - ஜான் போப், கெதரின் போப்

**ஹென்றி:**

போப்பின் தமையனார் ஹென்றி என்பவர், தமிழகத்தில் கிறித்துவமதத்தைப் பரப்பும் சமய குருவாகப் பணியாற்றினார்.

அவரைப்போன்று பணியாற்ற விரும்பி, தமது 19வது வயதில் தமிழகம் வந்தார்.

அவர் பாய்மரக் கப்பலில் தமிழகம் வந்து சரே எட்டு மாதங்கள் ஆகின.

**முதல் சமயப்பணி:**

தமிழ்நாட்டில் சென்னை சாந்தோம் பகுதியில் முதலில் சமயப்பணி ஆற்றினார்.

**திருநெல்வேலி - சாயர்புரம்:**

திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரம் என்னும் பகுதியில் சமயப்பணி ஆற்றினார்.

அங்கு பள்ளிகளை நிறுவினார். கல்விப்பணியையும் சமயப்பணியையும் ஒருங்கே ஆற்றினார்.

சமயக்கல்லூரியில் தமிழ் இலக்கியங்கள், ஆங்கில இலக்கியங்கள் முதலியவற்றையும் கிரேக்கம், இலத்தின், எபிரேயம் முதலிய மொழிகளையும் கற்றுத்தர ஏற்பாடு செய்தார்.

கணிதம், அறிவாய்வு(தருக்கம்), மெய்யறிவு(தத்துவம்) ஆகியவற்றை கற்பிக்கும் கல்லூரி ஆசிரியராகவும் பணியாற்றினார்.

திருநெல்வேலியில் 1842 முதல் 1849 வரை பணியாற்றினார்.

**திருமணம்:**
* 1850 இல் இங்கிலாந்து சென்று திருமணம் செய்துக்கொண்டு, தம் மனைவியுடன் மீண்டும் தமிழகம் வந்து தஞ்சாவூரில் சமயப்பணி ஆற்றினார்.
**தமிழ் இலக்கிய ஆர்வம்:**
* தஞ்சையில் பணியாற்றிய எட்டு ஆண்டுக் காலத்தில், புறநானூறு முதலான சங்க நூல்களையும் நன்னூல் முதலான இலக்கணங்களையும் பயின்றார்.
* அவற்றை ாங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.
**ஏடுகளில் தமிழ் பணி:**

இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு" போன்ற ஏடுகளில் ஆராய்ச்சி கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார்.

அக்கட்டுரைகளில் புறநானூற்றுப் பாடல்களும், புறப்பொருள் வெண்பாமாலைத் திணை விளக்கங்களும், தமிழ்ப்புலவர் வரலாறும் இடம் பெற்றன.

**தமிழ் செய்யுட் கலம்பகம்:**
* போப் உயர்ந்த பண்பாட்டுக்குரிய பொறுமை, சினமின்மை, நட்பு முதலானவற்றை விளக்கும் 600 செய்யுள்களை, நீதிநூல்களில் இருந்து எடுத்து, "தமிழ் செய்யுட் கலம்பகம்" என்னும் தொகுத்து அதன் விளக்கங்களையும் எழுதி வெளியிட்டார்.
**தமிழ் பாடலின் முன்னோடி:**
* பள்ளி குழந்தைகளுக்காக வினாவிடை முறையில் இரு இலக்கண நூல்களை எழுதி வெளியிட்டார்.
* பெரியவர்கள் கற்கும் வகையில் இலக்கண நூலொன்றையும் படைத்தார்.
* மேலை நாட்டார் தமிழை எளிதில் கற்றுக்கொள்ளும் வகையில் "தமிழ்-ஆங்கில அகராதி" ஒன்றையும், "ஆங்கிலம்-தமிழ் அகராதி" ஒன்றையும் எழுதி வெளியிட்டார்.
* பழைய தமிழ் இலக்கியங்களில் இருந்து சில செய்யுள்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டு, அதனைப் பாடநூலாக வைக்க ஏற்பாடு செய்தார்.
**உதகை:**

1858 ஆம் ஆண்டு உதகமண்டலம் சென்ற அவர், பள்ளி ஒன்றைத் தொடங்கி அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

**தமிழ்த்தொண்டு:**

இங்கிலாந்திற்கு சென்ற போப் 23 ஆண்டுகள் இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராக பணிபுரிந்தார்.

**தமிழ் மாணவன்:**

13.02.1908 அன்று போப் தம் இன்னுயிரை நீத்தார்.

அவர், தம் கல்லறையில் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என எழுத வேண்டுமென்று தமது இறுதிமுறியில் எழுதி வைத்தார்.

அவர் தன்னை "தமிழ் மாணவன்" என்றே தம்மை கூறிக்கொண்டார்.

**இலக்கணம்:**

## குற்றியலுகரம்

குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்

குறுமை - குருகிய

இயல் - ஓசை

உகரம் - உ என்னும் எழுத்து ஆகும்.

குறில் எழுத்து எத்தனை மாத்திரை ஒரு மாத்திரை கால அளவில் ஒலிக்க வேண்டும்.

நெடில் எழுத்து இரண்டு மாத்திரை கால அளவில் ஒலிக்க வேண்டும்.

மெய்யெழுத்துகள் அரை மாத்திரை கால அளவில் ஒலிக்க வேண்டும்.

உகரம் குறிலானால் ஒரு மாத்திரை கால அளவில் ஒலிக்க வேண்டும்.

கு,சு,டு,து,பு,று ஆகிய ஆறு வல்லின மெய் எழுத்துகளைச் சேர்த்து வரும் போது உகரம் அரை மாத்திரையாகக் குறைத்து ஒலிக்கும்.

கு,சு,டு,து,பு,று என்பன வல்லின மெய்களின் மேல் உகர ஊர்ந்து வரும் எழுத்துகள் ஆகும்.

குற்றியலுகரம் அரை மாத்திரை அளவில் அளவில் ஒலிக்கும்.

கு,சு,டு,து,பு,று என்னும் ஆறு வல்லின எழுத்துக்கள் தனிநெடிலைச் சார்ந்து வரும்போது, பல எழுத்துக்களைச் சார்ந்து சொல்லின் இறுதியில் வரும்போது ஒரு மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும்.

எஃகு, கஃகு, அஃது இந்தச் சொற்களில் இருந்து கு, சு,து என்னும் வல்லின மெய்கள் மேல் ஊர்ந்த உகரமானது ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வந்துள்ளதால் இவை ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

சுக்கு, கச்சு, பட்டு இச்சொற்களில் கு,க,டு ஆகிய எழுத்துகளுக்கு முன் வல்லின மெய்யெழுத்துகள் வந்தால் அவை வல்லினத் தொடர்க் குறிறியலுகரம் ஆகும்.

சங்கு, மஞ்சு, நண்டு, சந்து இச்சொற்கள் மென்றொடர்க் குற்றியலுகரம்.

கொய்து, சார்பு, மூழ்கு இச்சொற்கள் இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

நெடில் தொடர்க் குறிறியலுகரத்தைத் தவிர ஏனைய ஐவகைக் குற்றியலுகரச் சொற்கள் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களைப் பெற்று வரும்.

**குற்றியலிகரம்**

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்

இகரம் - இ என்னும் எழுத்தாகும்.

குற்றியலிகரத்தில் வரும் இகரம், தன் மாத்திரையிலிருந்து அரை மாத்திரை அளவு குறைந்து ஒலிக்கும்.

நிலைமொழி குற்றியலுகரமாக இருந்து, வருமொழி யகரம் வரின், நிலைமொழி உகரம், இகரமாகத் திரிந்து தன் மாத்திரை அளவில் குறைந்து ஒலிப்பது குற்றியலிகரம்.

கேண்மியா, சென்மியா ஆகியவற்றில் வரும் "மியா" என்னும் அசைச் சொல்லில் உள்ள இரகரம் தன் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும்.

இகரம் தன் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும்

யகரம் வரக் குறள் உத்திரி இகரமும்

அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய. - நன்னூல் 93

**முற்றியலுகரம்**

தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாத உகரம் முற்றியலுகரம் எனப்படும்.

தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் உகரம் வல்லின உகரம் எனப்படும்.

காணு, உண்ணு, உருமு இவற்றின் ஈற்றிலுள்ள மெல்லின (னு,மு) முற்றியலுகரங்கள்.

**நான் விரும்பும் கவிஞர்**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த வருடம் - 29.04.1891

பாரதிதாசனின் தந்தை பெயர் - கனகசபை

பாரதிதாசனின் இயற்பெயர் – சுப்புரத்தினம்

பரதியாரால் 'சுப்பு ரத்தினம் ஓர் கவி' என தமிழ் கூறும் நள் உலகுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.புரட்சி கவிஞர்.பாரதி மேல் கண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார் . விடுதலை கவி

பாரதிதாசன் எழுதிய பிறநூல்கள் - இசையமுது, குடும்ப விளக்கு, மணிமேகலைவெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம், படித்த பெண்கள், இளைஞர் இலக்கியம், குறிஞ்சித் திட்டு போன்றவை.

**செய்யுள்:**

**இனியவை நாற்பது**

குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே

கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே

மயரிக எல்லராய் மாண்புடையார்ச் சேரும்

திருவுந்தீர் வின்றேல் இனிது.

சலவரைச் சாரா விடுதல் இனிதே

புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே

மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்

தகுதியால் வாழ்தல் ிினிது

**பூதந்சேந்தனார்.**

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| குழவி – குழந்தை | பிணி - நோய் |
| கழறும் – பேசும் | மயரி - மயக்கம் |

சலவர் – வஞ்சகம் மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதந்சேந்தனார்.

ஊர் - மதுரை

காலம் - கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

**நூல் குறிப்பு:**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இனிய கருத்துக்களை நாற்பது பாடல்களில் தொகுத்துரைப்பதால் இனியவை நாற்பது எனப் பெயர்பெற்றது.

ஒவ்வொரு பாடலும் மூன்று அல்லது நான்கு நற்கருத்துகளை இனிமையாகக் கூறும்.

## தமிழ்ப்பசி

சொற்பொருள்:

குவை - குவியல்

மாரன் - மன்மதன்

**ஆசிரியர் குறிப்பு:**

இயற்பெயர் - க.சச்சிதானந்தன்

ஊர் - இலங்கையில் யாழ்ப்பான மாவட்ட பருத்தித்துறை

பணி - ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் விரிவுரையாளர் பணி

புலமை - தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் புலமை.

படைப்புகள் - ஆனந்தத்தேன்(கவிதைத்தொகுதி - 1954), அன்னபூரணி (புதினம்), யாழ்பானக்காவியம்

சிறப்பு - மகாவித்துவான் நவநீதகிருட்டின பாரதியின் மாணவர். இவர் தம் பாடல்களில் **கம்பனின் மிடுக்கையும், பாரதியின் சினப்போக்கையும்** ஒருமித்துக் காணலாம்.

## செய்தி உருவாகும் வரலாறு

உலகில் எங்கே ஒரு மூலையில் நடைபெறும் சிறிய நிகழ்வு செய்தி ஆகிறது.

அறிவியல் தொழில்நுடப் வளர்ச்சியின் பெரிய முன்னேற்றத்தின் விளைவாக உடனுக்குடன் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

ஏன்? என்ன? எப்போது? எப்படி? எங்கே? யார்? எனும் அன்புத் தொண்டர் ஆறுபேர்கள் அறியச் செய்வார் செய்தியினை கூறியவர் - அறிஞர் கிப்ளிங்

ஏன்? என்ன? எப்போது? எப்படி? எங்கே? யார்? எனும் வினாக்களுக்கு விடைகள் இடம்பெறும் பக்கம் - செய்தியின் முகப்புப் பக்கம்.

ஏன்? என்ன? எப்போது? எப்படி? எங்கே? யார்? எனும் வினாக்களுக்கு விடைகள் காணும் பணி - கடலில் மூழ்கி முத்தெடுப்பது போன்ற அரிய பணி.

செய்தியை இனங்கண்ட பின்னர் செய்தியாளர் செய்தியைத் திரட்டும் பணியில் ஈடுபடுகிறார்கள்.

செய்தியைப் பெறுதல் என்பது துப்பறிதல் போன்றது.

செய்தியாளர்கள் அரசின் அறிக்கை, வாணிகக் குழுக்களின் வெளியீடுகள், நிதியமைச்சரின் வரவு செலவுத் திட்டங்கள் போன்றவற்றை படித்து செய்தியைத் திரட்டுகின்றார்கள்.

செய்தியாளர்கள் அறவியல் ஆய்வு முறைகளையும் அவற்றை எப்படி பயன்படுத்துவது என்பதையும் அறிய புள்ளியியல் உதவுகிறது.

பொதுமக்களின் கருத்துக்களை கூறெடுப்பு ஆய்வு வாயிலாக நடத்துவார்கள்.

செய்திகளை உள்ளூர்ச் செய்தியாளர், வெளியூர்ச் செய்தியாளர், சிறப்புச் செய்தியாளர், ஆர்வலர்கள் அரசு அறிக்கைகள், செய்தி நிறுவனங்கள் மூலம் பெறலாம்.

உலகெங்கும் நடக்கும் செய்திகளை கம்பியில்லாத் தந்தி, தொலைபேசி, செல்பேசி, தொலை அச்சு தொலை நகல், வானொலி. தொலைக்காட்சி, கணினி மூலம் உடனுக்குடன் பெறலாம்.

இலண்டன் டைம்ஸ் இதழின் செய்தியாளர் இந்திய சீனப்போரின் போது நேரடியாகப் போர் நடைபெறிகின்ற இடத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டினார்கள்.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" செய்தியாளர் தில்லியிலுள்ள சிறைச்சாலையின் நிலை பற்றி அறிய தானே சிறைப்பட்டு செய்திகளைத் திரட்டித்தந்து புகழ் பெற்றார்.

விளையாட்டுப் போட்டிகள், புகழ்பெற்ற விசாரணைகள், சட்டப்பேரவை நடவடிக்கைகள், மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை காண செய்தியாளர்களுக்குத் தனி இடம் ஒதுக்கியிருப்பர்.

செய்தியின் பகுதிகள் தலைப்புச் செய்தி, முகப்புச்செய்தி, உடல்பகுதிச் செய்தி (மூன்று) எனப் பதிப்புகள் பிரிக்கப்பட்டு விடியற்காலையில் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் செய்தித்தாள்கள் அச்சடிக்கப்படுகின்றன.

**இதழியல் கலைச்சொற்கள்:**

Bulletin - சிறப்புச்செய்தி இதழ்

Deadline - குறித்த காலம்

Editorial - தலையங்கம்

Fake News - பொய்ச்செய்தி

Flash News - சிறப்புச் செய்தி

Folio No - இதழ் எண்

Green Proff - திருத்தப்படாத அச்சுப்படி

Layout - செய்தித்தாள் வடிவமைப்பு

**செய்யுள்:**

**திருவள்ளுவமாலை**

**தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட**
**பனையளவு காடும் படித்தால் - மனையளகு**
**வள்ளைக்(கு) உறங்கும் வளநாட! வள்ளுவனார்**
**வெள்ளைக் குறட்பா வரி**

**கபிலர்**

**சொற்பொருள்:**

வள்ளை - நெல் குத்தும்போது பெண்கள் பாடும் பாட்டு

அளகு - கோழி

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - கபிலர்

காலம் - கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்றும், சங்ககாலத்திற்கு பின் என்றும் கூறுவர்.

**நூல் குறிப்பு:**

திருக்குறளின் சிறப்பை உணர்த்த திருவள்ளுவமாலை என்னும் தனிநூல் எழுந்தது.

இந்நூலில் 53 புலவர்கள் பாடிய 55 பாடல்கள் உள்ளன.

இப்பாடலில் அறிவியல் அணுகுமுறையை சார்ந்தது.

**உவமை:**
* சிறுபுல்லின் தலையில் தினையளவினும் சிருபனிநீர் நெடிதுயர்ந்த பனை மரத்தின் உருவத்தை தன்னுள் தெளிவாக காட்டும்.

**உவமிக்கப்படும் பொருள்:**
* வள்ளுவரின் குறள் வெண்பாக்கள் அருள்பெறும் கருத்துக்களைத் தம்மகத்தே அடக்கிக் காட்டும்.

**அறிவியல் கருத்து**
* ஒளியைக் கோட்டம் அடையச் செய்வதனால் தொலைவில்லுள்ள பொருளின் உருவத்தை புள் நுனியில் தேங்கிய சிருபனித்துளி மிகத்தெளிவாகக் காட்டும் என்ற கபிலரின் சிந்தனை அன்றைய தமிழரின் அறிவியல் கருத்தை வெளிப்படுத்துக்கிறது.

**நளவெண்பா**

**சொற்பொருள்:**

ஆழி – கடல்

விசும்பு - வானம்

செற்றான் – வென்றான்

அரவு - பாம்பு

| | |
|---|---|
| பிள்ளைக்குருகு – நாரைக்குஞ்சு | வள்ளை - ஒருவகை நீர்க்கொடி |
| கடா – எருமை | வெளவி - கவ்வி |
| சங்கின் பிள்ளை – சங்கின்குஞ்சுகள் | கொடி - பவளக்கொடி |
| கோடு – கொம்பு | கழி - உப்பங்கழி |
| திரை – அலை | மேதி - எருமை |
| கள் – தேன் | புள் - அன்னம் |
| சேடி – தொழி | ஈரிருவர்  - நால்வர் |
| கடிமாலை – மணமாலை | தார் - மாலை |
| காசினி – நிலம் | வெள்கி - நாணி |
| மல்லல் – வளம் | மடநாகு - இளைய பசு |
| மழவிடை – இளங்காளை | மறுகு - அரசநீதி |

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - புகழேந்திப் புலவர்

பிறந்த ஊர் - களத்தூர்

சிறப்பு - வரகுண பாண்டியனின் அவைப் புலவர்

ஆதரித்த வள்ளல் - சந்திரன் சுவர்க்கி

காலம் - பனிரெண்டாம் நூற்றாண்டு

இவரை "வெண்பாவிற் புகழேந்தி" என சிறப்பிப்பர்.

**நூல் குறிப்பு:**

நளவெண்பா என்பது, நாளது வரலாற்றை வெண்பாக்களால் கூறும் நூலென விரிந்து பொருள் தரும்.

இந்நூல் சுயம்வர காண்டம், கலித்தொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று காண்டங்களைக் கொண்டது.

இதில் 431 வெண்பாக்கள் உள்ளன.

**உரைநடை:**

**உலகம் உள்ளங்கையில்**

கணக்கிடுவதற்காக முதலில் எளிதான "மணிச்சட்டம்" உருவாக்கப்பட்டது. இதுவே கணினி உருவாக முதல் படியாக இருந்தது.

பாரிஸ் நகரை சேர்ந்த பிளேஸ் பாஸ்கல் என்பவர் கணக்கிடும் கருவியை கண்டுபிடித்தார்.

1833 இல் இங்கிலாந்தை சேர்ந்த சார்லஸ் பாப்பேஜ் என்பவர் கணினியை முதலில் வடிவமைத்தார். இவரே கணினியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

ஆங்கில கவிஞர் பைரனின் மகள் லேடி ல்வ்வோஸ் என்பவர், கணிதச் செயல்பாட்டிற்குத் தேவையான கட்டளைகளை வகுத்தமையால் அவர் "முதல் செயல் திட்ட வரைவாளர்" எனப் போற்றப்படுகிறார்.

எண்ணிலக்க கணினியை கண்டுபிடித்து அதற்கு "ஹார்வார்டு மார்க்-1" எனப் பெயரிட்டனர். 1960ஆம் ஆண்டு மின்காந்த நாடா பயன்படுத்தி செய்தி அனுப்பப்பட்டது.

இணையம் என்னும் வடிவாத்த்திற்கு வித்த்ித்தவர் ஜொன் பாஸ்டல்

ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தை சேர்ந்த டிம்பெர்நெர் லீ என்னும் வல்லுநர் "உலகளாவிய வலைப்பின்னல்" எனப் பெயரிட்டார். இதனை "வையாக விரிவு வலை" எனவும் அழைக்கலாம்.

கடந்த 20 ஆண்டுக் கணினிப் பயணத்தில் இணையத்தில் இணையத்தின் பங்கு மிகச் சிறந்தது என்றே சொல்வேன்" என பில்கேட்ஸ் கூறுகிறார்.

**விவேகசிந்தாமணி**

தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு

தியங்கியே கிடந்ததைக் கண்டு

தான்அதைச் சம்பு வின்கனி என்று

தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள்

வான்உறு மதியம் வந்தென்(று) எண்ணி

மலர்க்கரம் குவியுமென்(று) அஞ்சிப்

போனது வண்டோ பறந்தது பழந்தான்

புதுமையோ இதுஎனப் புகன்றாள்

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| மது – தேன் | தியங்கி - நாவல் |
| சம்பு – நாவல் | மதியம் - நிலவு |

**நூல் குறிப்பு:** விவேகசிந்தாமணி என்னும் இந்நூல், புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு.

இந்நூலை தொகுத்தவர் யாரென தெரியவில்லை.

**பாரதத்தாய்**

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| வாய்மை – உண்மை | களையும் - நீக்கும் |
| வண்மை - வள்ளல் தன்மை | சேய்மை - தொலைவு |

**பிரித்து எழுதுக:**

தாய்மையன் பிறனை - தாய்மை + அன்பின் + தனை

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - அசலாம்பிகை அம்மையார்

ஊர் - திண்டிவனத்திற்கு அருகில் உள்ள இரட்டணை

**நூல்கள்:**

ஆத்திசூடி - வெண்பா

திலகர் புராணம்

குழந்தை சுவாமிகள் பதிகம்

காந்தி புராணம் (2034 பாடல்கள்)

இராமலிங்க சுவாமிகள் பதிகம் (409 பாடல்கள்)

சிறப்பு: இவரை "**இக்கால ஔவையார்**" என **திரு.வி.க** பாராட்டுகிறார்.

## இந்திய விடுதலைப் போரில் தமிழகப் பெண்களின் பங்கு

**வேலு நாச்சியார்:**

*ஆங்கிலேயரை எதிர்த்து ஆயதம் ஏந்தி போராடிய முதல் பெண்மணி

*இவர் இராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து சேதுபதியின் மகள்.

*சிவகங்கை மன்னர் முத்துவடுக நாதரை மணந்தார்.

*1772 இல் ஆங்கிலேயருக்கு முத்துவடுக நாதருக்கும் ஏற்பட்ட போரில் முத்துவடுக நாதர் வீரமரணம் அடைந்தார்.

*பின்பு வேலு நாச்சியாரே தலைமை ஏற்று போர் புரிந்தார.

*வேலு நாச்சியாருக்கு உதவியவர் மைசூர் மன்னன் ஹைதர் அலி. இவர் 5000 படை வீரர்களை உதவிக்கு அனுப்பினார்.

*1780 ஆண் ஆண்டு தம் கணவரை கொன்றவர்களை வென்று மீண்டும் சிவகங்கையை மீட்டார்.

**கடலூர் அஞ்சலையம்மாள்:**

*1890 ஆம் ஆண்டு கடலூரில் உள்ள முதுநகரில் பிறந்தார்.

*1921 ஆண் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கியபோது இவரும் தம் பொதுவாழ்க்கையை தொடங்கினார்.

*நீலன் சிலையை அகற்றும் போராட்டம் உட்பட பல போராட்டங்களில் பங்கு பெற்று சிறைக்கு சென்றார்.

*வேலூர் சிறையில் இருந்த போது, கருவுற்ற நிலையில் இருந்த இவரை ஆங்கிலேயே அரசு வெளியில் அனுப்பிவிட்டு, மகப்பேற்றிற்குப் பின் மீண்டும் சிறையில் அடைத்தது.

*நீலன் சிலையை அகற்றும் போராட்டத்தில் தனது 9 வயது மகளையும் ஈடுபடுத்தினார். இவருடன் இவர் மகளும் சிறைத்தண்டனை பெற்றார்.

*காந்தியடிகள் சிறையில் வந்து பார்த்து, இவரின் மகள் அம்மாக்கண்ணுவை தன்னுடன் அழைத்து சென்று வார்தாவில் உள்ள ஆசிரமத்தில் படிக்க வைத்து அவருக்கு லீலாவதி எனப்பெயரும் இட்டார்.

*இவர் காந்தியடிகளால் "**தென்னாட்டின் ஜான்சிராணி**" என அழைக்கப்பட்டார்.

**அம்புஜத்தம்மாள்:**

*பிறப்பு: 1899 ஆம் ஆண்டு

*இவர் அனைனை கஸ்துரிபாயின் எளிமையான தோற்றத்தினால் கவரப்பட்டு எளிமையாக வாழ்ந்தார். இவர் பாரதியாரின் பாடல்களை பாடி விடுதலை உணர்வை ஊட்டினார்.

*இவர் "காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள்" என்று அழைக்கப்பப்படுவர்.

தன் தந்தையின் பெயரோடு காந்தியடிகளின் பெயரையும் இணைத்து "சீனிவாச காந்தி நிலையம்" *என்ற தொண்டு நிறுவனத்தை தொடங்கினார்.

*இவர் தம் எழுபதாண்டு நினைவாக, "நான் கண்ட பாரதம்" என்ற நூலை எழுதினார்.
*1964 ஆம் ஆண்டு இவருக்கு "தாமரைத்திரு" (பத்மஸ்ரீ) என்ற விருது வழங்கப்பட்டது.

பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும்

நற்றவ வானினும் நனிசீறாந் தனவே- பாரதியார்

**இலக்கணம்:**

**தொகா நிலைத் தொடர்**

ஒரு தொடரில் இருசொற்கள் அமைந்து இரண்டிற்கும் இடையில் சொல்லோ உருபோ மறையாது பொருளை உணர்த்துமானால் அது தொகாநிலைத்தொடர் எனப்படும்.

"கபிலன் வந்தான்" - இதில் கபிலன் என்னும் எழுவாயைத் தொடர்ந்து வந்தான் என்னும் பயனிலை வந்துள்ளதால், இது எழுவாய்த் தொடர் என்பர்.

"கதிரவா! வா" என்பது **விளித்தொடர்** ஆகும்.

கண்டேன் சீதையை - வினைமுற்று முதலில் வந்து பெயரைத் தொடர்வதால் இதை, **வினைமுற்றுத்தொடர்** என்பர்.

விழுந்த மரம் - விழுந்த என்னும் எச்சவினை மரம் என்னும் பெயர்ச் சொல்லோடு முடிவதால் இது **பெயரெச்சத்தொடர்.**

வந்துபோனான் -இதில் வந்து என்னும் எச்சவினை போனான் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளதால் இது **வினையெச்சத் தொடர்** என்பர்.

வீட்டைக்கட்டினான் - இத்தொடரில் ஐ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்துள்ளதால் இதனை **வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்**.

மற்றொன்று - மற்று + ஒன்று "மற்று" என்னும் இடைச்சொல்லை அடுத்து ஒன்று என்னும் சொல் தொடர்ந்து வந்துள்ளதால் இது **இடைச்சொற்றொடர்**

மாமுனிவர் - இத்தொடரில் மா என்பது உரிச்சொல், இதைத் தொடர்ந்து முனிவர் என்னும் சொல் வந்துள்ளதால், இது **உரிச்சொற்றொடர்.**

வாழ்க வாழ்க வாழ்க - இதில் ஒரே சொல் பலமுறை அடுக்கி வந்துள்ளதால் இது **அடுக்குத்தொடர்**.

தொகாநிலை தொடரின் வகைகள் - ஒன்பது.

**இரட்டைக்கிளவி அடுக்குத்தொடர்**

பாம்பு பாம்பு - இதனைப் பிரித்தால் பொருள் தரும். எனவே இது அடுக்குத்தொடர் ஆகும்.

"கலகல" - இதனை பிரித்தால் பொருள் தராது. எனவே இது இரட்டைக்கிளவி ஆகும்.

**உரிய எழுத்து வழக்குச் சொற்களை அறிவோம்:**

**பேச்சு வழக்கு - எழுத்து வழக்கு**

* கோர்த்து - கோத்து
* நாட்கள் - நாள்கள்
* பதட்டம் - பதற்றம்
* சுவற்றில் - சுவரில்
* மனிதில் - மனத்தில்
* சிலவு - செலவு

அருகாமையில் - அருகில்

**பிழை திருத்தம்:**

**பிழை - சரி**

ஓர் மாவட்டம் - ஒரு மாவட்டம்

ஒரு அமைச்சர் - ஓர் அமைச்சர்

அவரது மகனோடு - அவருடைய மகனோடு

மேற்க்கொண்டார் - மேற்கொண்டார்

அந்த சுற்றுலா - அந்தச் சுற்றுலா

கண்டதை கூறவே - கண்டதைக் கூறவே

அவர்தான் - அவர்தாம்

**செய்யுள்:**

**திருமந்திரம்**

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**

**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே**

**-திருமூலர்**

**சொற்பொருள்**

*திடம் – உறுதி *மெய்ஞ்ஞானம் - மெய்யறிவு

*உபாயம் - வழிவகை

**ஆசிரியர் குறிப்பு:**

*பெயர் - மூலன் என்னும் பெயர், திரு என்னும் பெயரடை பெற்று, அத்துடன் அர் என்னும் மரியாதைப்பன்மையும் பெற்று, திருமூலர் என ஆயிற்று.

*காலம் - ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதி.

**நூல் குறிப்பு:**

*சைவத் திருமுறைகளின் பத்தாவது திருமுறை திருமந்திரம்.

*இதற்குத் "**தமிழ் மூவாயிரம்**" என்னும் வேறுபெயரும் உண்டு.

*இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது.

*"ஒன்றே குளம் ஒருவனே தேவன்" என்பது இந்நூலின் புகழ்பெற்ற தொடராகும்.

* இப்பாடல் மூன்றாம் தந்திரத்தில் எழுநூற்று இருபத்து நான்காவது பாடல் ஆகும்.

**தேம்பாவணி**

**சொற்பொருள்:**

*நகை – புன்னகை *முகை - மொட்டு

*மேனி - உடல்

**ஆசிரியர் குறிப்பு:**

*பெயர் – வீரமாமுனிவர்

*காலம் - 1680 - 1747

*இயற்பெயர் - கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி

*பெற்றோர் - கொண்டல் போபெஸ்கி, எலிசபெத்

*பிறந்த ஊர் - இத்தாலி நாட்டில் காஸ்திக்கிளோன்

*அறிந்த மொழிகள் - இத்தாலியம், இலத்தின், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம்

*தமிழ்க் கற்பித்தவர் - மதுரைச் சுப்ரதீபக் கவிராயர்

*சிறப்பு - முப்பதாம் வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தமை.

*இயற்றிய நூல்கள் - ஞானஉபதேசம், பரமார்த்த குரு கதை, சதுரகராதி, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம்,கித்தேரியம்மாள் அம்மானை.

**நூல் குறிப்பு:**

*தேம்பாவணி - தேம்பா + அணி

*தேம்பாவணி - தேன் + பா + அணி(தேன் போன்ற இனிய பாடல்களாலான மாலை)

*இந்நூலின் தலைவர் இயேசு பெருமானின் வளர்ப்பு தந்தை சூசையப்பர்.

*இந்நூலை "**கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம்**" என்று சிறப்பிப்பர்.

*இந்நூலின் 3 காண்டங்களும், 36 படலங்களும், 3615 பாடல்களும் உள்ளன.

நகைசெய் தன்மையி னம்பெழீ - இப்பாடல் மகவருள் படலதில் வந்துள்ளது.

---

## நாடகக்கலை

**நாடகம் – பொருள் விளக்கம்:**

- நாடு + அகம் = நாடகம்
- நாட்டை அகத்தில் கொண்டது நாடகம்.
- நாட்டின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால், நாடகம் எனப் பெயர் பெற்றது.
- நாடகம் என்பது உலக நிகழ்சிகளைக் காட்டும் கண்ணாடி என்பது முற்றிலும் பொருந்தும்.
- கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டுவதும், கூத்தாக ஆடிக்காட்டுவதும் நாடகம் என்பர்.
- இதற்குக் கூத்துக்கலை என்னும் பெயர் உண்டு.

**நாடகக்கலையின் தோற்றமும் வளர்ச்சியும்:**

- தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம்.
- நாடகம் என்பது “போலச் செய்தல்” என்னும் பண்பு அடிப்படையாக கொண்டது.
- பிறர் செய்வதைப்போல தாமும் செய்து பார்க்க வேண்டும் என்ற மனித உணர்சித்தான் நாடகம் தோன்றக் காரணம்.
- மரப்பாவைக்கூத்து->பொம்மலாட்டம்->தோல்பாவைக்கூத்து->நிழற்பாவைக்கூத்து என வளர்ச்சி அடைந்தது.

**இலக்கியங்களில் நாடகம்:**

- தொல்காப்பிய மெய்பாட்டியல் நாடகப்பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்துள்ளது.
- “கூத்தாட் டவைக்குல்லாத் தற்றே” என்னும் குறள் வழியாக நாடக அரங்கம் இருந்த செய்தி அறியலாம்.
- சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், “நாடகமேத்தும் நாடகக் கணிகை” என்று மாதவியை குறிப்பிடுகிறார்.

**கூத்து:**

- தனிப்பாடல்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடுவதை நாட்டியம் என்றும், ஏதேனும் ஒரு கதையை தழுவி வேடம் புனைந்து ஆடுவதை நாடகம் என்றும் குறிப்பிட்டு வந்துள்ளார்.

- நாட்டியம், நாடகம் இரண்டிற்கும் பொதுவாகக் “கூத்து” என்ற சொல்லே வழக்கில் இருந்தது.

**அடியார்க்கு நல்லார்:**

- சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர்.
- இவர் கூத்துவகைகளைப் பற்றியும், நாடகநூல்கள் பற்றியும் தமது உரையில் கூறியுள்ளார்.
- **சிலப்பதிகாரம்** நாடக கலையை பற்றியும் காட்சித் திரைகளை பற்றியும் நாடக அரங்கின் அமைப்பு பற்றியும் விரிவாக கூறுகின்றது.

- முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்து நூல் முதலிய பல நாடக நூல்கள் நாடகத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது.

- பரிதிமாற்கலைஞர், செய்யுள் வடிவில் இயற்றிய தம் நாடகவியல் எனும் நூலில் நாடகம் அதன் விளக்கம், வகைகள், எழுதப்பட வேண்டிய முறைகள் பற்றி கூறியுள்ளார்.

**நாடக ஆராய்ச்சி நூல்கள்:**

- சுவாமி விபுலானந்தர் = மதங்க சூளாமணி
- மறைமலையடிகள் = சாகுந்தலம்
- இவ்விரண்டு நூல்களும் நாடகம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்.

**தொழில்முறை நாடக அரங்குகள்:**

- பம்மல் சம்பந்தனார், “நாடகத்தமிழ்” என்ற தம் நூலில் தொழில் முறை நாடக அரங்குகளைப்பற்றிய செய்திகளை நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார்.

**காலம்தோறும் நாடகக்கலை:**

- ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் “மத்தவிலாசம்” என்ற நாடக நூலை எழுதியுள்ளான்.
- பதினொன்றாம் நூற்றாண்டில் இராசராசசோழன் ஆட்சிக் காலத்தில் “இராசராசேச்சுவர நாடகம்” நடைபெற்றதாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.
- நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் குறவஞ்சி நாடகம் தோன்றின.
- பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நொண்டி நாடகம் தோன்றின.

- பதினெட்டாம் நூற்றாண்டில் அருணாச்சலக் கவிராயரின் இராம நாடகம், கோபால கிருட்டின பாரதியின் நந்தனார் சரித்திரம் ஆகியன கட்டியங்காரன் உரையாடலோடு முழுவதும் பாடல்களாக அமைந்தன. இக்காலத்தில் தோன்றிய பெரும்பாலான நாடகங்கள் ராமாயணம் மஹாபாராதம் முதலிய காவியங்களின் கதைக்கூறுகளில்லிருந்து படைக்கப்பட்டன

**சமுதாய சீர்திருத்த நாடகங்கள்:**

- காசி விஸ்வநாதரின் “டம்பாச்சாரி விலாசம்”.
- பேராசிரியர் சுந்தரனாரின் “மனோன்மணியம்” கவிதை நாடக காப்பியததை 1891 இல் வெளியிட்டார். இது  லார்ட் லிட்டன் எழுதிய மறைவழி எனும் ஆங்கில கதையை தழுவியது.

**தேசிய நாடகங்கள்:**

- “**கதரின் வெற்றி**” நாடகம் தான் தமிழ்நாட்டில் முதன் முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகம்.
- இதனைத் தொடர்ந்து தேசியக்கொடி, தேசபக்தி முதலிய நாடகங்கள் நடத்தப்பட்டன.

**சிறப்பிடம் பெற்றவர்கள்:**

- பரிதிமாற் கலைஞர் - தமிழ் நாடக பேராசிரியர்
- சங்கரதாசு சுவாமிகள் - தமிழ் நாடக உலகின் இமயமலை, தமிழ் நாடக தலமையாசிரியர் . என்றும்அலைக்கப்த்டார். பிரகலாதான், சிறுத்ததொண்டர், லவகுச,பவளக்கொடி,அபிமன்யு,சுந்தரி முதலான 40க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதிுள்ளார்.
- பம்மல் சம்பந்தனார் - தமிழ் நாடக தந்தை. 90க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களை மொழிபெயர்த்துள்ளார். இவரின் மனோகரன் நாடகம் 70 ஆண்டுகள் தமிழ் நாடக மேடையில் புகழ் பெற்று விளங்கியது. தம் நாடக அனுபவங்களை எல்லாம் நாடக மேடை நினைவுகள் எனும் தலைப்பிலும், நடிப்பு காலையில் தேர்ச்சி பெறுவது எப்படி எனும் தலைப்பிலும் எழுதியுள்ளார்.
- கந்தசாமி - தமிழ் நாடக மறுமலர்ச்சி தந்தை

**கவிமணியின் கூற்று:**

- “நாடகச் சாலையொத்த நற்கலாசாலையொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து” என்ற கவிமணியின் கூற்றிற்குஏற்ப மக்களின் கண்ணை, செவியை, கருத்தைக் கவரும் வகையிலும் நாடகங்கள் கதை அழகோடு கவிதை அழகையும் கொண்டு வாழ்வைத் தூய்மைப்படுத்தும் வகையிலும் அமைதல் வேண்டும்.

## கம்பராமாயணம்

தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறஉம்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே

**-கம்பர்**

**சொற்பொருள்:**

தாது - மகரந்தம்

போது - மலர்

பொய்கை - குளம்

பூகம் - கமுகம்(பாக்கு மரம்)

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - கம்பர்

ஊர் - நாகை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூர்.

போற்றியவர் - சடையப்ப வள்ளல்

இயற்றிய நூல்கள் - சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம்.

காலம் - கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு எனக் கூறுவர்.

வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தமிழில் காப்பியம் இயற்றியவர் - கம்பர். அந்நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார். அதுவே கம்பராமாயணம் என வழங்கலாயிற்று. எனவே இது வழிநூல் எனப்படுகிறது.

கதை மாந்தரின் வடசொற் பெயர்களைத் தொல்காப்பிய நெறிப்படி தமிழ்ப்படுத்திய பெருமைக்குரியவர் கம்பர்.

**நூல் குறிப்பு:**

ஆறு காண்டங்களைக் கொண்டது கம்பராமாயணம்.

அவை: பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்.

காண்டம் - பெரும் பிரிவு

படலம் - உட்பிரிவு

இப்பாடல் பால காண்டத்து ஆற்றுப்படலத்தில் உள்ளது.

தற்போதைய உத்தரப்பிரதேச மாநிலத்தில் பாயும் சரயு நதியின் வளம் இதில் கூறப்பட்டுள்ளது.

## விழுதும் வேரும்

**தூலம்போல் வளர்கி ளைக்கு**
**விழுதுகள் தூண்கள்! தூண்கள்**
**ஆலினைச் சுற்றி நிற்கும்**
**அருந்திறல் மறவர்! வேறோ**
**வாலினைத் தரையில் வீழ்த்தி**
**மண்டிய பாம்பின் கூட்டம்!**
**நீலவாண் மறைக்கும் ஆல்தான்**
**ஒற்றைக்கால் நெடிய பந்தல்!**

**பாரதிதாசன்**

**சொற்பொருள்:**

திறல் - வலிமை

மறவர் - வீரர்

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - பாரதிதாசன்

இயற்பெயர் - கனக சுப்புரத்தினம்

பெற்றோர் - கனகசபை, இலக்குமி

ஊர் - புதுச்சேரி

காலம் - 29.04.1891 - 21.04.1964

சிறப்புப்பெயர்கள் - பாவேந்தர், புரட்சிக்கவிஞர்

**சிறப்பு:**

பாரதியாருடன் கொண்ட நெருங்கிய தொடர்பினால் பாரதிதாசன் எனத் தன்பெயரை அமைத்துக்கொண்டார்.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனையைக் கவிதை வடிவில் தந்தவர்.

**இயற்றிய நூல்கள்:**

பாண்டியன் பரிசு குடும்ப விளக்கு இருண்ட வீடு அழகின் சிறப்பு

கண்ணகி புரட்சிக் காப்பியம் குருஞ்சித்திட்டு தமிழியக்கம்

பிசிராந்தையார்

**காட்டுயிரிகள்**

தொல்காப்பியர் ஓர் அறிவு முதல் ஆறு அறிவு வரை குறிப்பிட்டுள்ளார்.

ஓரறிவு - மெய்யினால் அறியும் உயிர் (புல், மரம் போன்ற தாவரங்கள்)

ஈரறிவு - மெய், கண் கொண்டது (நத்தை, சங்கு)

மூவறிவு - மெய், வாய், மூக்கு கொண்டது )எறும்பு, கரையான், அட்டை)

நாலறிவு - மை, கண், மூக்கு, வாய் கொண்டது( நண்டு, தும்பி, வண்டு)

ஐயறிவு - மெய், கண், மூக்கு, வாய், செவி(விலங்கு, பறவை).

ஆறறிவு - மெய், வாய், மூக்கு, கண், செவி, மனம் (மனிதர்).

அக்டோரபர் முதல் வாரத்தை அரசு வனவிலங்கு வாரமாகக் கொண்டாடி வருகிறது.

வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் - 1972

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் நான்காம் நாள் "உலக வனவிலங்கு நாள்" கொண்டாடப்படுகிறது.

ஐம்புதங்கள் - நிலம், நீர், காற்று, வானம்

ஐம்பூதங்களில் உயிருள்ள, உயிரற்ற இருவகையான பொருள்கள் உள்ளன.

உலகிலேயே அதிகயளவு மழை பெறும் இடம் - அசாமில் மரங்கள் அடர்ந்துள்ள "சிரபுஞ்சி"

உயிரிகளின் ஆற்றலுக்கு அடிப்படையாக தாவரங்கள் விளங்கிறது.

வனவிலங்குப் பாதுகாப்புச்சட்டம் வனவிலங்குகளை வேட்டையாடுதலை தடுக்கிறது.

**சென்னை அருங்காட்சியகம்**

அருங்காட்சியகம் சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.

சென்னை எழும்பூர் அருங்காட்சியகம் கி.பி.1851 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

அருங்காட்சியகத்தில் பதின்மூன்று காட்சியகங்கள் உள்ளன.

**திருக்குறள்:**

**பண்புடைமை**

வழக்கு – நன்னெறி

ஆன்ற - உயர்ந்த

நயன் – நேர்மை

நன்றி - உதவி

பாடறிவார் – நெறியுடையார்

மாய்வது - அழிவது

நண்பு – நட்பு

கடை – பழுது

நகல்வல்லர் - சிறிது மகிழ்பவர்

நயம் இல - தீங்கு, இனிமையற்ற

மாயிரு ஞாலம் - மிகப்பெரிய உலகம்

திரிந்தற்று - திரிவது போன்றது

நகையுள்ளும் - விளையாட்டாகவும்

அரம் - வாளைக் கூர்மையாக்கும் கருவி

**திருவருட்பா**

**வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்**

**வாடினேன் பசியினால் இளைத்தே**

**வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த**

**வெற்றாறைக் கண்டுளம் பதைத்தேன்**

**நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்**

**நேர்உறக் கண்டுளந் துடித்தேன்**

**ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்**

**சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.**

**-இராமலிங்க அடிகள்.**

**சொற்பொருள்:**

பசியறாது - பசித்துயர் நீங்காது

அயர்ந்த - களைப்புற்ற

நீடிய - தீராத

ஆசிரியர் குறிப்பு:

பெயர் - இராமலிங்க அடிகளார்

பெற்றோர் - இராமையா, சின்னம்மை

ஊர் - சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மருதூர்

சிறப்பு பெயர் - திருவருட்பிரகாச வள்ளலார்

சிறப்பு - வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, சத்திய தருமசாலை ஆகியவற்றை நிறுவனார்.

இயற்றிய நூல்கள் - திருவருட்பா, சீவகாருணிய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம்

காலம் - 1823 - 1874

**நூல் குறிப்பு:**

திரு + அருள் + பா = திருவருட்பா.

இறைவன் திருவருளைப் பெறுவதற்காகப் பாடிய பாடல் என்றும், இறைவனின் திருவருளால் பாடிய பாடல் என்றும் இருவகைப் பொருள் கொள்வர்.

இது 5818 பாடல் கொண்டது.

பாட பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல் பிள்ளை பெருவிண்ணப்பம் எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது

## தமிழர் வானியல்

**வானியல் அறிவு:**

உலகம், ஐம்பூதங்களாகிய நிலம், நீர், வெப்பம், காற்று, வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்

கலந்த மயக்கம் ஆதலின்

-தொல்காப்பியம்

இதுபோன்று புறநானூற்று பாடலும் கூறுகிறது.

மண்திணிந்த நிலனும்

நிலன் ஏந்திய விசும்பும்

விசும்பு தைவரு வளியும்

வளித்தலை இய தீயும்

முரணிய நீரும் என்றாங்கு

ஐம்பெரும்பூத்தது இயற்கை போல – புற**ம் 2**

**உலகம் தட்டையா? உருண்டையா?**

பதினைந்தாம் நூற்றாண்டில் போலந்து நாட்டை சேர்ந்த **நிக்கோலஸ் கோபர்நிகஸ்** என்பவர் உலகம் தட்டை இல்லை உருண்டையானது என்று கூறினார். ஆனைல் அதை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கலீலியோ, உலகம் உருண்டையானது என்பதை தம் தொலைநோக்கி மூலம் கண்டுபிடித்து சொன்னார்.

ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் தம்குரலில் கூறியுள்ளார்.

**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை - 1031**

**ஞாயிற்றுக் காட்சி:**

வான்வெளியில் மிகப்பெரிய விண்மீன் ஞாயிறு.

சிலபதிகாரத்தில் இளங்கோவடிகள், "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றும்" என்று போற்றியுள்ளார்.

ஞாயிற்றைச் சுற்றிய பாதையை "ஞாயிறு வட்டம்" என்றனர் பழந்தமிழர் எனப் புறநானூறு கூறுகிறது.

செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்

பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும் புறம்**30**

**திங்கள் தோற்றம்:**

தானே ஒளிவிடக்கூடிய ஞாயிற்றை "**நாள்மீன்**" என்றும், ஞாயிற்றிடமிருந்து ஒளி பெற்று ஒளிவிடக்கூடியவற்றை "**கோள்மீன்**" என்றும் அழைப்பர்.

திங்கள் தானே ஒளி வீசுவதில்லை, எனபதை திருவள்ளுவர் வெளிப்படுத்துகிறார்.

மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல்

காதலை வாழி மதி. -1118

திங்களை பாம்பு கொண்டற்று என்னும் குறள் "திங்கள் மறைப்பு" (சந்திரகிரகணம்) பற்றியதாகும்.

**கோள்கள் பற்றிய தமிழரின் கருத்து:**

கோள்களின் நிறம், வடிவம் முதலியவற்றையும் அறிந்திருந்தனர்.

செந்நிறமாய் இருந்த கோளைச் செவ்வாய் என்றனர்.

வெண்மை நிறமுடைய கோளை வெள்ளி என்றனர்.

வெள்ளிக்கோளுக்கு ஒரு சிறப்பு உண்டு. ஞாயிறு உதயத்திற்கு முன்பே வெள்ளி எழுந்து விடியலை உணர்த்துவதால் இதனை "விடிவெள்ளி" என்றனர்.

புதிதாகக் கண்டறிந்த கோளை புதன் என அழைத்தனர். புதிதாக அறிந்ததால் அதற்கு "அறிவன்" என்றும் பெயருண்டு.

வியா என்றால் பெரிய, நிறைந்த எனப் பொருள்படும். வானில் பெரிய கோலாக வளம் வருவதையே வியாழன் என்றனர்.

சனிக்கோளைக் "காரிக்கோள்" என்றழைத்தனர். இக்கோளில் கந்தகம் இருப்பதாக ஆய்வு கூறுகிறது.

**தூமகேது:**

தூமகேதுவை வால்நட்சத்திரம் என்றும் கூறுவர்.

தமிழ் இலக்கியங்களில் தூமகேது பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

**வான்வழிப் பயணம்:**

"**வளவன் ஏவா வானவூர்தி**" (**புறநானூறு**) கூறுகிறது.

வானூர்தி ஒட்டுகிறவனைத் தமிழில் "**வலவன்**" என அழைத்தனர்.

**சீவகசிந்தாமணியில்** "மயிற்பொறி விமானத்தின்" கூறப்பட்டுள்ளது.

**கம்பராமாயணத்தில்** இராவணன் செலுத்திய "புட்க விமானமும்", **பெருங்கதையில்** "வானூர்தி வடிவமும்" அதனை இயக்கும் முறையும் கூறப்பட்டுள்ளது.

**வில்லிபாரதம்:**

வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்

மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்

தேன்பெற்ற துழாய் அலங்கல் கல்ப மார்பும்

திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்

ஊன்பெற்ற புகழியினால் அழிந்து வீழ்ந்தும்

உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே(று) என்னை அன்றி
இருநிலத்தில் பிறந்தோரில் யார்பெற் றாரே.

**வில்லிப்புதூரார்.**

**சொற்பொருள்:**

வான்பெற்ற நதி – கங்கையாறு

துழாய் அலங்கல் – துளிசிமாலை

பகழி – அம்பு

ஊன் – தசை

களபம் - சந்தனம்

புயம் - தோள்

இருநிலம் - பெரிய உலகம்

நாமம் - பெயர்

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - வில்லிபுத்தூரார்

தந்தை - வீரராகவர்

ஆதரித்தவர் - வக்கப்பாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான்

காலம் - பதினான்காம் நூற்றாண்டு

**நூல் குறிப்பு:**

இந்நூல் பத்து பருவங்களை கொண்டது. 4350 விருத்தப் பாக்களால் ஆனது.

**யார் கவிஞன்?**

காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
கைம்மாறு விளைந்துபுகழ் பெறுதல் வேண்டி
மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை
மறைத்துவிட்டு பாடுபவன் கவிஞன் அல்லன்;
தேசத்தைத் தன்னினத்தைத் தாழ்த்தி விட்டுத்
தேட்டையிடப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
மீசைக்கும் கூழுக்கும் ஆசைப் பட்டு
மேல்விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன்;
ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவ ரேனும்

ஆள்களனத் துஞ்சாமல், தனது நாட்டின்
மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவன்;
மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது
காட்சிக்குப் புளியாகிக் கொடுமை மாளக்
கவிதைகளைப் பைசுபவன் கவிஞன் ஆவன்;
தாழ்ச்சிசொலும் அடிமையலன் மக்கட் கெல்லாம்
தலைவனெனப் பாடுபவன் கவிஞன், வீரன்.

முடியரசன்

**சொற்பொருள்:**

கைம்மாறு – பயன்

மாசற்ற - குற்றமற்ற

தேட்டை - திரட்டிய செல்வம்

மீட்சி – மேன்மை, மாலை - நீங்க

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - முடியரசன்

இயற்பெயர் - துரைராசு

பெற்றோர் - சுப்புராயலு, சீதாலட்சுமி

ஊர் - தேனி மாவட்டம் பெரியகுளம்

காலம்: 1920 - 1998

இயற்றிய நூல்கள் - பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள் முதலியன.

பணி: காரைக்குடி மீனாட்சி சுந்தரம் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர்.

பட்டம் - பறம்புமலையில் நடந்த விழாவில் "கவியரசு" என்னும் பட்டம் குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பெற்றது.

பரிசு - பூங்கொடி என்னும் காவியத்திற்காக தமிழக அரசு1966 ஆம் ஆண்டு வழங்கியது.

சிறப்பு - முயிரசன், பாரதிதாசன் பரம்பரைக் தலைமுறைக் கவிஞர்களுள் மூத்தவர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர்.

## தேவநேயப்பாவாணர்

**வாழ்க்கை குறிப்பு:**

பெற்றோர் - ஞானமுத்து, பரிபூரணம்

ஊர் - சங்கரன்கோவில்

கல்வி - பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலைத் தமிழ், பிஓ.எல்.,

காலம் - 07.02.1902 - 15.01.1981

**தமிழ்பற்று:** தன்மை மோதிய மிதிவண்டிக்காரர் கூறிய மன்னித்து கொள்க என்ற சொல்லை, மன்னிப்பு உருதபச்சொல், பொருத்துக்கொள்க என தமிழில் சொல்லவும் என்று கூறி, மிதிவண்டிக்காராரையும் சொல்லச் செய்தவர்.

**தமிழை வளர்த்தவர்:**

தமிழின் தொன்மையை உலகறிய செயதவர் – **கால்டுவெல்**

தமிழின் பெருமையை தரணி முழுவதும் பரப்பியவார் - போப்

தனித் தமிழுக்கு வித்திட்டவர் - பரிதிமாற்கலைஞர்

தமிழைத் தழைக்கத் செய்த செம்மல் - மறைமலையடிகள்

தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் - தேவநேயப்பாவாணர்.

**தமிழை மீட்டல்:**

மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் தனித்தமிழ் ஊற்று; செந்தமிழ் ஞாயிறு; இலக்கியப் பெட்டகம்; இலக்கணச் செம்மல்; தமிழ்மானங் காத்தவர்.

உலக முதன்மொழி தமிழ்; இந்திய மொழிகளுக்கு மூலமும் வேறும் தமிழ்; திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என்று வாழ்நாள் முழுவதும் ஆய்வுசெய்து நிறுவியவர்.

உலகின் முதல் மாந்தன் தமிழன்; தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டம்" என்பதும் மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் பழந்தமிழர் நாகரிகமே என்பதும் அவரது ஆய்வின் இரு கண்கள்.

"**தமிழை வடமொழி வல்லான்மையில் இருந்து மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைதான்**" என்று கூறினார்.

**அனைத்தும் தமிழில்:**

கோவில்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டும் என்றார்.

பிறப்பு இறப்புத் தொடர்பான சடங்குகள் யாவும் தமிழில் நடைபெறவேண்டும் என்றும் பாவாணர் வலியுறுத்தினார்.

**பகலுணவு, இரவுணவு:**

ஒருமுறை தன் ஆசிரிய நண்பர்களுடன் சென்று தாரைமங்கலம் என்னும் ஊரில் தங்கினார்.அங்கு ஒருவர் பாவனாரிடம், "ஐயா பகலுணவும் இராவுணவும் எவ்வாறு இருந்தன?" என்று கேட்டார்.பாவாணர், "பாகல் உணவு, பகல் உணவாகவும்(பகலில் கிடைத்த சிறிதளவு உணவையே அனைவரும் பகுத்துண்ண நேர்ந்தது), இரா உணவாகவும் (அனைவரும் உணவின்றி இரவைக் கழித்தல்) இருந்தன"  என்றார்.

தமிழ் வளர்த்தல் பசியும் பட்டினியும் பஞ்சாய்ப் பறந்துவிடும் என்று எண்ணியவர் பாவாணர்.

**நீலமலை(நீலகிரி):**

ஒருமுறை நீலமலைக்குச் சென்று அங்கு கிருட்டினையா என்பவர் வீட்டில் உணவு உண்டார்.கிருட்டினையா வெளியே சென்று மீண்டும் வீடு வரும்போது பாவாணர் அங்கு விறகு வெட்டி கொண்டு இருந்தார்.கிருட்டினையா, இதை நீங்கள் செய்ய

வேண்டாம் என கூறியதற்கு, "உண்ட வீட்டிற்கு ஏதாவது செய்யவேண்டும், உட்கார்ந்து கொண்டு உண்டு செல்வது நன்றாகாது" என்றார்.

**பாவாணரின் படைப்புகள்:**

தமிழ் வரலாறு, முதல் தாய்மொழி, தமிழ்நாடு விளையாட்டுகள், தமிழர்திருமணம்

வடமொழி வரலாறு, தமிழர் மதம்,மண்ணிலே வின், பண்டைத் தமிழர் ,நாகரிகமும் பண்பாடும், உயர்தரக் கட்டுரை இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திருக்குறள் மரபுரை

**அகரமுதலி:**

பாவாணர் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக 08.05.1974 அன்று பணியமர்த்தப்பட்டு, அரசின் உதவியோடு சில தொகுதிகளை வெளிக்கொணர்ந்தார்.

இருநூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

**தன்மானம் மிக்கவர்:**

தாம் பணியாற்றிய கல்வி நிறுவனமொன்றில் தொடர்ந்து பணியாற்ற

இயலாத சூழல் நேர்ந்தபோது, "எனக்கு வறுமையும் உண்டு; மனைவி

மக்களும் உண்டு; அவற்றோடு மானமும் உண்டு" என்று வெளியேறினார்.

**சிறப்புகள்:**

பாவாணர் பெயரில் சென்னை அண்ணாசாலையில் நூலகம் செயல்பட்டு வருகிறது.

இவர் படித்துப் பணியாற்றிய இராசபாளையத்திற்கு அருகிலுள்ள முறம்பில், பாவாணர் கோட்டம், அவர்தம் முழு உருவச்சிலை, அவர் பெயரில் நூலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

**தமிழன்னைக்கு பெருமை:**

மதுரையில் 05.01.1981 அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது, "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றித் தமிழன்னைக்கு பெருமை சேர்த்தார்.

மணம் நுகர்ந்தத்ர்க்கு பணம்

ஶ்ரீமதி எஸ்.லக்ஸ்மி, பார் புகழும் பாரம்மர்த்த குரு கதைகள்

தமிழின் சிறப்பு - கி ஆ.பெ.விஸ்வநாதம்

தமிழ் விருந்து- ரா பி சேதுபிள்ளை

ஜன்னல் போர்த்துகிசிய சொல். காலதர் என்பது காற்று வரும் வழி

**முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்**

உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே

**சொற்பொருள்:**

மதி – அறிவு

உதயம் – கதிரவன்

நறவம் – தேன்

சலதி – கடல்

மதலை – குழந்தை

பருதிபுரி - கதிரவன் வழிபட்ட இடம் (வைதீஸ்வரன் கோவில்)

அமுதகிரணம் - குளிர்ச்சியான ஒளி

மதுரம் - இனிமை

கழுவிய துகளர் - குற்றமற்றவர்

புவனம் - உலகம்

**ஆசிரியர் குறிப்பு:**

பெயர் - குமரகுருபரர்

பெற்றோர் - சண்முகசிகாமணிக் கவிராயர், சிவகாமி சுந்தரியம்மை

ஊர் - திருவைகுண்டம்

இயற்றிய நூல்கள் - கந்தர்கலிவெண்பா, மதுரை மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, நீதிநெறி விளக்கம் முதலியன.

சிறப்பு - தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். திருப்பணந்தாளிலும், காசியிலும் தம்பெயரால் மடம் நிறுவி உள்ளார்.

இறப்பு - காசியில் இறைவனடி சேர்ந்தார்.

காலம் பதினேழாம் நூற்றாண்டு.

**நூல் குறிப்பு:**

96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ்.

இறைவனையோ நல்லாரையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்பெருவது பிள்ளைத்தமிழ்.

பத்து பருவங்கள், பருவத்திற்கு பத்து பாடல் என நூறு பாடல்கள் கொண்டது.

இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.

ஆண்பாற் பிள்ளைத்தமிழின் பருவங்கள் = காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்.

பெண்பாற் பிள்ளைத்தமிழ் பருவங்கள் = காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ,அம்மானை, கழங்கு(நீராடல்), ஊசல்.

புள்ளிருக்குவேளூரில் (வைதீஸ்வரன் கோவில்) எழுந்தருளியுள்ள முருகப்பெருமானின் பெயர் முத்துக்குமாரசுவாமி.

அவர் மீது பாடப்பட்டதால் இது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என பெயர் பெற்றது.

நமக்குப் பாடப்பகுதியாக உள்ள பாடல் வருகைப் பருவத்தில் இடம்பெற்றுள்ளது. இது நூலின் ஆறாவது பருவமாகும். குலைந்தாயின் 13ம் திங்களில் நிகழ்வது,தளர் நடையிட்டு வரும் குழந்தைந் சிறப்புகளைக்கூறி அருகில் வா வா என அழைக்கும் பாடல்களை கொண்டதாகும்.

## இலக்கியத்தில் நகைச்சுவை

**நகைச்சுவை:**

இலக்கியச் சுவைகலில் மிகவும் நுட்பமானது நகைச்சுவை.

இச்சுவையை உணர்ந்து போற்ற தனி ஆற்றல் வேண்டும்.

நகைச்சுவையை போற்றுவதற்குத் தேவைப்படும் ஆற்றல், அதைக் கவிதைகளில் வடிபதிலேயே உள்ளது.

நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்குப் பகலும் இருளாய் தோன்றும்.

"முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டினேன்" எனத் தொடங்கும் நகைச்சுவை உணர்வு மிக்க பாடல் நாட்டுப்புறப்பாடலில் இடம் பெற்றுள்ளது.

**தொல்காப்பியம்:**

தொல்காப்பியம், "எள்ளல், இளமை, அறியாமை, மடமை" ஆகிய நான்கு காரணங்களால் நகைச்சுவை தோன்றும் என்கிறது.

**திருக்குறள்:**

நகைச்சுவையின் இன்றியமையாமைப் புலப்படுத்த வந்த வள்ளுவர்,

**நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**

**பகலும்பாற் பட்டன் றிருள்.**

என நகைச்சுவை உணர்வு இல்லாதவர்களுக்கு பகலும் இருளாகத் தோன்றும் என்கிறார்.

**காந்தியடிகள்:**

காந்தியடிகள், நகைச்சுவை உணர்வு மட்டும் தனக்கு இல்லையெனில், எப்பொழுதோ தனது வாழ்க்கையை இழந்திருக்கக்கூடும் எனக் கருதினார்.

**இலக்கியங்களில் நகைச்சுவை:**

கம்பராமாயணத்தில் கம்பரின் நகைச்சுவை உணர்வு அவர் தம் பாடல்களின் மூலம் அறியலாம்.

**அஞ்சலை அரக்க! பார்விட் டந்தர மடைந்தா னன்றே**

**வெஞ்சின வாழி, மீலான், வாளும்போய் வீழ்ந்ததன்றே**

வாலியை பற்றி அனுமனிடம் இராவணன் வினவும் போது, அனுமன் அதற்கு, "அஞ்ச வேண்டா! அரக்கர் தலைவா, வாலியும் இறந்தான், அவனது வாழும் இறந்துவிட்டது! ஆனால் சூரியகுலத் தோன்றலாகிய வாலியின் அழிவுக்குக் காரணமானது இராமனின் ஒரு கணையே என்பதை மட்டும் மறந்துவிடாதே!: எனக் கூறினார்.

**கலிங்கத்துப்பரணி:**

சிற்றிலக்கியங்களில் ஒன்றான் கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார் நகைச்சுவை உணர்வு தோன்ற, பல பாடல்களைப் பாடியுள்ளார்.

காணமுடியாத பேய்களை உருவாக்கி, உயிருள்ள உண்மைப்பிறவிகள் போல் நம் கண்முன்னே நடமாடவிட்டு நகைச்சுவைக்குரிய செயல்களை அவற்றிடையே காட்டியுள்ளார்.

**காளமேகப்புலவர்:**

இரு பொருள் தருமாறு பாடுவதில் வல்லவர்.

"நாங்கள் கவிராசர்கள்" என்று செருக்குடன் கூறிய புலவர்களின் செருக்கை அடக்கும்படி, கவி எனபதற்கு குரங்கு என்னும் பொருள் தோன்றுமாறு

**வாலெங்கே? நீண்டுஎழுந்த வல்லுகி ரெங்கே? நாலு**

**காலெங்கே? ஊன்வடிந்த கண்ணெங்கே? - சாலப்**

**புவிராயர் போற்றும் புலவர்காள்! நீங்கள்**

**கவிராயர் என்றிருந்தக் கால்.**

**எனும் பாடலைப் பாடினார்.**

**பாரதிதாசன்:**

பாவேந்தர் பாரதிதாசன் மயிலின் கழுத்து நீண்டு இருப்பதாய் நகைச்சுவையுடன் பாடியுள்ளார்.

**அயலான் வீட்டில் அறையில் நடப்பதை**

**எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே**

**இயற்கை யன்னை இப்பெண் கட்கெல்லாம்**

**குட்டைக் கழுத்தைக் கொடுத்தான்; உனக்கோ**

**கறையொன் றில்லாக் கலாப மயிலே!**

**நிமிர்ந்து நிற்க நீள் கழுத்து அளித்தான்.**

பெண்களின் கழுத்து நீண்டிருந்தால், அண்டைவீடு அறையிலே நடப்பதை ஆர்வத்தோடு பார்ப்பார்களாம் மயில் அப்படிப் பார்காதாம்: எனக் கூறுகிறார்.

**கவிமணி:**

நாஞ்சில் நாடு கவிஞர் கவிமணி தேசிய விநாயகம், மருமக்கள் வழி மான்மியம்" என்னும் நகைச்சுவை நூலினை அளித்துள்ளார்.

இந்நூல் நகைச்சுவை களஞ்சியம் எனப்படுகிறது.

**புணர்ச்சி - இயல்பு - விகாரம்**

நிலைமொழியும் வருமொழியும் சேரும் போது எவ்வித மாற்றமும் ஏற்பட வில்லையென்றால் அது இயல்புப்புணர்ச்சி ஆகும்.

பொன்+வளையல் = பொன் வளையல் இணையும் இருசொற்களில் முதல் சொல் நிலைமொழி எனப்படும்.

நிலைமொழியின் இறுதி எழுத்துப் புள்ளியாக(மெய்யாக) இருந்தால் அதை மெய்யீறு எனக் கூறுவர்.

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் மெய்யாக இருந்தால் அவை உயிரீறு எனச் சொல்லப்படும்.

வருமொழியின் முதல் எழுத்து உயிர் மெய்யாக இருப்பின் அதை மெய்முதல் என அழைப்பர்.

வருமொழியின் முதல் எழுத்து உயிராக இருப்பின் அதை உயிரிமுதல் என அழைப்பர்.

நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது மாற்றங்கள் ஏற்படுமானால் அதனை விகாரப்புணர்ச்சி என்பர்.

விகாரப்புணர்ச்சி மூன்று வகைப்படும். அவை: தோன்றல், கெடுதல், திரிதல்.

புணர்ச்சி இரண்டு வகைப்படும். அவை: இயல்பு, விகாரம்

# ஒன்பதாம் வகுப்பு

**கடவுள் வாழ்த்து**

**உலகம் யாவையும் தாமுள வாக்கலும்**
**நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அழகி லாவிளை யாட்டுடை யாரவர்**
**தலைவர் அன்னவர்க் கேசர ணாங்களே**

**கம்பர்**

**சொற்பொருள்:**

உளவாக்கல் - உண்டாக்குதல், படைத்தல்

நீக்கல் - அழித்தல்

நீங்கலா - இடைவிடாது

அலகிலா - அளவற்ற

அன்னவர் - அத்தகைய இறைவர்

சரண் - அடைக்கலம்

நிலைபெறுத்தல் – காத்தல் தலைவர் - இறைவர்

**இலக்கண குறிப்பு:**

யாவையும் - முற்றும்மை

ஆக்கல், நீக்கல், விளையாட்டு - தொழிற்பெயர்

அலகிலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**ஆசிரியர் குறிப்பு:**

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை அருகிலுள்ள தேரழுந்தூரில் கம்பர் பிறந்தார்.

இவர் ஏர் எழுபது, சிலை எழுபது, சரஸ்வதி அந்தாதி, சடகோபர் அந்தாததி, திருக்கை வழக்கம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

இவர் குலோதுங்கச்சோழனின் அவைப் புலவராக விளங்கினார்.

திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர்.

கவிச்சக்ரவர்த்தி என்றும் கல்வியில் பெரியவர் கம்பர் என்றும் போற்றப்பட்டார்.

இவரின் காலம் கி.பி.பனிரெண்டாம் நூற்றாண்டு.

**நூல் குறிப்பு:**

வடமொழியில் வால்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தை தழுவித் தமிழில் கம்பர் எழுதியதே கம்பராமாயணம்.

கம்பர் இந்நூலுக்கு இட்ட பெயர் - இராமாவதாரம்

இது பால காண்டம், அயோத்திய காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உடையது.

உத்திரபிரதேச மாநிலத்தில் பாயும் சரயு நதியின் வளம் கம்பராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.

கம்பராமாயணப் பாடல் பாலகண்டத்து ஆற்றுப்படலத்தில் உள்ளது.

## திருக்குறள்

**சொற்பொருள்:**

அகழ்வாரை – தோண்டுபவரை தலை - சிறந்த பண்பு

பொறுத்தல் – பொறுத்துக்கொள்ளுதல்b இறப்பு – துன்பம்

இன்மை - வறுமை

ஒரால் - நீக்குதல்

மடவார் - அறிவிலிகள்

விருந்து - வீட்டிற்கு புதியவராய் வந்தவர்

நிறை - சால்பு

ஒறுத்தாரை - தண்டித்தவரை

போன்றும் - உலகம் அழியும்வரை

நோநொந்து - துன்பத்திற்கு வருந்தி

மிக்கவை - தீங்குகள்

தகுதியான் - பொறுமையால்

துறந்தார் - பற்றற்றவர்

இன்னா - தீய

**ஆசிரியர் குறிப்பு:**

இவர் நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபாங்கி, பெருநாவலர் என்னும் சிறப்பு பெயர்களால் அழைக்கப்படுவார்.

இவரின் காலம் கி.மு.31 ஆண் நூற்றாண்டு என்று கூறுவர்.

**நூல் குறிப்பு:**

திரு+குறள் = திருக்குறள்

திரு= செல்வம், சிறப்பு, அழகு, மேன்மை, தெய்வத்தன்மை எனப் பல பொருள் உண்டு.

குறள் = குறுகிய அடி உடையது.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளை கொண்டது.

அறம் 38 அதிகாரங்களாகவும், பொருள் 70 அதிகாரங்களாகவும், இன்பம் 25 அதிகாரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இந்நூலை போற்றிப் பாராட்டிய பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவ மாலை.

**இலக்கண குறிப்பு:**

பொறுத்தல் - தொழிற்பெயர்

அகல்வார், இகழ்வார் - வினையாலணையும் பெயர்

மறத்தல், பொறுத்தல் - தொழிற்பெயர்

நன்று - குறிப்பு வினைமுற்று

விருந்து - பண்பாகு பெயர்

ஓரால், நீக்குதல் - தொழிற்பெயர்

நீங்காமை - எதிர்மறைத் தொழிற்பெயர்

ஒருத்தார், பொறுத்தார் - வினையாலணையும் பெயர்

தற்பிறர் - ஏழாம் வேற்றுமைத் தொகை.

செய்யினும் - இழிவு சிறப்பும்மை

நொந்து - வினையெச்சம்

அரண், திறன் - ஈற்றுப்போலிகள்

விடல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று

இறந்தார் - வினையாலணையும் பெயர்

உண்ணாது - வினையெச்சம்

**உரைநடை: திராவிட மொழிகள்**

**மொழிகள்:**

தனக்கென தனிச்சிறப்பும், பல மொழிகள் தோன்றிவளர அடிப்படையாகவும் உள்ள மொழி = மூலமொழி

மூலமொழியில் இருந்து தோன்றி வளர்ந்த மொழிகள் - கிளைமொழிகள்.

இந்திய மானிடவியல் கணக்கெடுப்பு:

இந்தியாவில் மொத்தம் பனிரெண்டு மொழிக்குடும்பங்கள் உள்ளன.

அவற்றுள், 324 மொழிகள் பேசப்படுவதாக இந்திய மானிவியல் கணக்கொடுப்பு தெரிவிக்கின்றது.

**இந்தியமொழிக் குடும்பங்கள்:**

இந்தியாவில் பேசப்படும் மொழிகள் அனைத்தையும் "இந்தோ-ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ-ஆசிய மொழிகள், சீன-திபெத்திய மொழிகள்" என அடங்குவர்.

நம்நாட்டில் 1300க்கும் மேற்பட்ட மொழிகளும், அதன் கிளைமொழிகளும் பேசப்பட்டு வருகின்றன.

**மொழிகளின் காட்சிசாலை:**

மொழியியல் அறிஞர் ச. அகத்தியலிங்கம் இந்திய நாட்டை "மொழிகளின் காட்சிசாலை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**திராவிட மொழிக் குடும்பங்கள்:**

**தென்திராவிட மொழிகள்:**

தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா

**நடுத்திராவிட மொழிகள்:**

தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பொங்கோ, ஜதபு

**வடதிராவிட மொழிகள்:**

கரூக், மால்தோ, பிராகுய்

திராவிட பெரு மொழிகள் = தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்

திராவிடம்: திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழியாகும்.

திராவிடம் என்னும் சொல் திராவிடநாடு எனும் பொருளைத் தரும்.

திராவிடம் என்னும் சொல்லை முதலில் பயன்படுத்தியவர் - குமாரிலபட்டர்.

திராவிட மொழிகள், திராவிட இநம், திராவிட நாகரிகம் முதலிய சொற்றொடர்களில் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கால்டுவெல் கூறியுள்ளார்.

கால்டுவெல் திராவிடம் என்னும் சொல்லை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

**கால்டுவெல் கூற்று:**

தமிழையும் அதன் கிளைமொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளை ஒரு காலத்தில் தமிளியன் (tamilian) அல்லது தமுலிக் (tamulic) என்று அழைத்தனர்.

அவற்றுள் தமிழ், மிகுந்த சிற்ப்பும் பழமையும் பெற்ற மொழியே எனினும், பல திராவிட மொழிகளில் அதுவும் ஒன்று.

எனவே, இவ்வினமொழிகள் அனைத்தையும் "திராவிட" எனும் சொல்லைத் தாம் கையாண்டதாகத் கால்டுவெல் கூறியுள்ளார்.

**ஈராஸ் பாதிரியார் கூற்று:**

திராவிட என்னும் சொல்லே தமிழ் எனும் சொல்லிலிருந்து உருவானது.

தமிழ் - திரமிள - திரவிட - திராவிட என உருவாயிற்று எனக் கூறுகிறார் மொழியியல் அறிஞர் ஈராஸ் பாரதிரியார்.

திராவிட மொழிகள் என்றாலே தமிழ் மொழியைதான் குறிக்கும் என்கிறார்.

**தலைமைச் சிறப்பு:**

திராவிட மொழிகள் அனைத்திற்கும் மூலமான மொழியை "முன்னைத் திராவிட மொழி, மூலத் திராவிட மொழி, தொன்மை திராவிட மொழி" எனப் பல்வேறு சொற்களால் குறிப்பர்.

இம்மூலமொழியாக முதன்முதலில் தனித்து வளர்ந்த மொழி தமிழ்.

மற்ற திராவிட மொழிகள் தமிழில் இருந்து பிறந்தவை.

எண்பது விழுக்காடு அளவிற்குத் திராவிட மொளிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிட மொழி தமிழ்.

மாமரம் - புவி அரசு , இரவின் அறுவடை.( thunai paadam )

**சிறுபஞ்சமூலம்**

**கனவனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை**<br>**எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் - பண்வனப்புக்**<br>**கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் தன்னோடு**<br>**வட்டான்நன் றென்றால் வனப்பு**

**காரியாசான்**

**சொற்பொருள்:**

கண்ணோட்டம் - இறக்கம் கொள்ளுதல்

எண்வனப்பு - ஆராய்சிக்கு அழகு

வேந்தன் - அரசன்

வனப்பு - அழகு

கிளர்வேந்தன் - புகழுக்குரிய அரசன்

வாட்டான் - வருத்தமாட்டான்

**இலக்கணக்குறிப்பு:**

கண்ணோட்டம், செல்லாமை, உறைதல், என்றல் - தொழிற்பெயர்கள்

கேட்டார், வாட்டான் - வினையாலணையும் பெயர்

**ஆசிரியர் குறிப்பு:**

காரியாசான் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணவர் எனச் சிறப்புப்பாயிரம் கூறுகிறது.

இவர் சமண சமயத்தை சார்ந்தவர்.

இவரும் கணிமேதவியாரும் ஒருசாலை மாணாக்கர்.

**நூல் குறிப்பு:**

இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இந்நூலில் கடவுள் வாழ்த்துடன் 97 வெண்பாக்கள் உள்ளன.

கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகையின் வேர்களும் உடல் நோயைத் தீர்ப்பன.

இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து அறக்கருத்துகள் உள்ளன.

ஐந்து அறக்கருத்துக்களும் மக்கள் மனநோயைப் போக்குவன.

**பாஞ்சாலி சபதம்**

**சொற்பொருள்:**

எம்பி - என் தம்பி

களிக்க - மகிழ

மடப்பிடி - பாஞ்சாலி

கோமான் - அரசன்(திருதராட்டிரன்)

நுந்தை - நும் தந்தை

அடவி - காடு

தடந்தோள் - வலியதோள்

மருங்கு - பக்கம்

குலவு - விளங்கும்

பண்ணவர் - தேவர்

அரம்பையர் - தேவமகிளிர்

வீறு - வலிமை

கோலமுறு - அழகு மிக்க

செறிந்த - அடர்ந்து

கா - காடு

குலவு - விளங்கும்

ஞாலம் - உலகம்

ஞானம் - அறிவு

புன்மை - இழிந்த தன்மை

சதுரங்கச் சேனை - நால்வகைப் படைகள்

**இலக்கணக்குறிப்பு:**

அழைத்தனன் - முற்றெச்சம்

மாநகர் - உரிச்சொற்றொடர்

சார்ந்தவர் - வினையாலணையும் பெயர்

நுந்தை - நும் தந்தை என்பதன் மரூஉ

அடவி மலையாறு - உம்மைத்தொகை

கடந்து - வினையெச்சம்

தடந்தோள் - உரிச்சொற்றொடர்

செறிந்து, பாய்ந்து - வினையெச்சம்

பாலாடையும் நறுநெய்யும் தேனும் - எண்ணும்மை

நீளமுடி, நன்செய், புன்செய் - பண்புத்தொகை

காத்தல் - தொழிற்பெயர்

தொல்லுலகு - பண்புத்தொகை

தாளமும் வேளமும் - எண்ணும்மை

பதமலர் - உருவகம்

பாய்ந்து, செறிந்து - வினையெச்சங்கள்

ஞாலமெலாம், மக்களெலாம் - எல்லாம் எனபதன் தொகுத்தல் விகாரம்.

காத்தல் - தொழிற்பெயர்

தாளமும் மேளமும் - எண்ணும்மை

**ஆசிரியர் குறிப்பு:**

சுப்ரமணிய பாரதியார், தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தலி 11.12.1882 ஆண்டு பிறந்தார்.

பெற்றோர் - சின்னசாமி - இலக்குமி அம்மையார்

துணைவி - செல்லம்மாள்

இவர் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய நூல்களை படைத்துள்ளார்.

ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை இலக்கியங்களை எழுதியுள்ளார்.

இவர் 11.9.1921 அன்று மறைந்தார்.

**நூல் குறிப்பு:**

பாஞ்சாலி சபதம் வியாசரின் பாரதத்தை தழுவி எழுதப் பெற்றது.

பாஞ்சாலி சபதம் இரு பாகங்கள் உடையது.

இது சூழ்ச்சிச்சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் என ஐந்து சருக்கங்களையும், 412 பாடல்களையும் கொண்டது.

**சிறப்பு:**

பாரதியார் "பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, தேசியக்கவி, மாகவி" எனப் புகழப்பெற்றார்.

சுதேசமித்திரன், இந்திய முதலிய இதழ்களின் ஆசிரியராக இருந்தார்.

## உரைநடை:

## இக்காலக் கவிதைகள்

**உரைநடைக் காலம்:**

இருபதாம் நூற்றாண்டை "உரைநடைக் காலம்" என்பர்.

எனினும் கவிதை வடிவமும் கவினுற வளர்ந்து வந்தது.

இருபதாம் நூற்றாண்டில் அறிவியலும், இலக்கியமும் விரைவாக வளர்ந்தன.

செய்யுள், உரைநடை என்னும் இரு வடிவிலும் புதுவகை இலக்கியங்கள் மலர்ந்துள்ளன.

**பாரதியார்:**

பாரதியாரின் கவிதைகள் இருபதாம் நூற்றாண்டில் அரும்பிய மறுமலர்ச்சிக்கு வித்தாக இருந்தது.

மன்னர்களை மட்டுமே மகிழ்வித்து வந்த கவிதை மரபை மாற்றி, எளிய மக்களை நோக்கிக் கவிதைக் கருவியைத் திருப்பி அமைத்த பெருமை பாரதியைச் சாரும்.

இந்திய ஒருமைப்பாத்தின் உயர்வினை விளக்கும் அவரின் கவிதை வரிகள்:

முப்பது கோடி மாகமுடையாள் உயிர்

தமிழ் வளர்ச்சிக்கு வழி சொல்லும் மற்றொரு கவிதை :

பிறநாட்டு நல்லறிக்கர் சாத்திரங்கள் தமிழ்மொழியில்

**பாரதிதாசன்:**

தமிழ், தமிழர், தமிழுணர்வு, சமுதாய மறுமலர்ச்சி, பெண்ணடிமை, திராவிட இயக்கச் சிந்தனை, பொதுவுடமை முதலியவற்றை பாரதிதாசன் கவிதைகள் வெளிப்படுத்தின.

"எங்கள் பகைவர் எங்கே மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"

எல்லோருக்கும் எல்லாம் என்றருபதான இடம் நோக்கி- பொதுவுடமை வரி

**கவிமணி:**

*கவிமணியின் கவிதைகள் கற்போரைக் களிப்பில் ஆழ்த்துவன.

*கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் தொடுத்தவனும் நீதானோ, எனத் தாலாட்டு பாடியவர்.

*"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா"

*"சாலைகளில் பல தொழில்கள் பெருகவேண்டும்
சபைகளிலே தமிழ் எழுந்து முழங்கவேண்டும்"

**நாமக்கல் கவிஞர்:**

*இவரின் கவிதைகளில் காந்தியச் சிந்தனை அதிகம்.

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு"

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்"

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"

காந்தியக் கவிஞர் எனப் போற்றப்படுபவர்.

**முடியரசன்**

இவரின் கவிதையில் பகுத்தறிவு நோக்கும், முற்போக்குச் சிந்தனையும் தமிழுணர்வும் அதிகம் காணலாம்.

ஆங்கிலமோ பிறமொழியோ
பயின்றுவிட்டால்
அன்னைமொழி பேசுவதற்கு நாணுகின்ற
தீங்குடை மனப்போக்கர் வாழும்நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி?

**சுரதா:**

சுரதாவின் கவிதைகளில் புதிய உவமைகளைக் காணலாம்.
* உவமைக் கவிஞர் என்று அழைப்பர்.

மறைமலையடிகளைப் பற்றி சுரதா பாராட்டுதல்.

முல்லைக்கோர் காடுபோலும்

முத்துக்கோர் கடலேபோலும்

சொல்லுக்கோர் கீரன்போலும்

தூதுக்கோர் தென்றல்போலும்

கல்விக்கோர் கம்பன்போலும்

கவிதைக்கோர் பரணர்போலும்

வில்லுக்கோர் ஓரிபோலும்

விளங்கினார், வென்றார், நின்றார்.

சுரதாவின் பாடல்களில் வரலாற்றுச் செய்திகளும், இலக்கண விளக்கங்களும் கலந்து வரும்.

சுரதா மறைமலையடிகளாரை உவமைகளால் பாராட்டியுள்ளார்.

**வாணிதாசன்:**

பாரதிதாசனைத் தொடர்ந்து இயற்கையின் அழகை எழிலுறப் படம் பிடித்துக் காட்டுவதில் வாணிதாசன் கவிதைகள் சிறந்து விளங்குகின்றன.

சுத்தானந்த பாரதியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், கவிஞர் கண்ணதாசன், தமிழ்ஒளி போன்றோர் மரபுக் கவிதைகளை புனைந்து தமிழன்னைக்கு மேலும் வளமும் பெருமையும் சேர்த்துள்ளனர்.

மனிதகுல வளர்ச்சிக்கும் ஏற்றவாறு சிந்தனை மாற்றங்களும் சமூக மாற்றத்தின் விளைவே புதுக்கவிதையின் தோற்றம்.

அமெரிக்கக் கவிஞர் "வால்ட்விட்மனின்" சாயலில் வசன கவிதை எழுதியவர் - பாரதியார்.

பாரதிதாசன் உரைநடைகள் அனைத்தும் கவிதைநடை கொண்டவை.

மேலை நாட்டு இலக்கியத் தொடர்பும், சமுதாயச் சூழ்நிலையும் தமிழில் புதியதொரு வடிவம் தோன்றக் காரணமாக இருந்தவை.

**மணிக்கொடி:**

ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப.இராசகோபாலன், க.நா.சுப்பிரமணியன் முதலியோர் தொடக்கத்தில் மணிக்கொடி என்னும் இதழில் புதுக்கவிதை எழுதினார்.

எழுத்து: எஸ்.வைதீஸ்வரன், தருமு சிவராமு, மணி, சி.சு. செல்லப்பா முதலியோர் எழுத்து என்னும் இதழில் புதுக்கவிதைப் படைத்தனர்.

**வல்லிக்கண்ணன்:**

புதுக்கவிதை வரலாற்றில் வல்லிக்கண்ணன் பங்கு போற்றத்தக்கது.

ஏழையின் குடிசையில்

அடுப்பும் விளக்கும் தவிர

எல்லாமே எரிகின்றன.

என்பது இவரின் புதுக்கவிதையன் எளிய வடிவை காட்டும்.

கோவை வானம் பாடி குழுவினர் புதுக்கவிதையை பரவலாக்க பாடுபட்டனர்.

உச்சி மலையிலே ஊரும் அருவிகள்

ஒரே வழியில் கலக்குது

ஒற்றுமை இல்லா மனிதகுலம்

உயர்வு தாழ்வு வளர்க்குது - பட்டுக்கோட்டையார்

**துணைப்பாடம்:**

**கண்ணதாசன் கவியின்பம்**

முத்தையா என்ற இயற்பெயர் கொண்டவர்.

சிவகங்கை மாவட்டம் சிறுகூடல்பட்டியில் 24.06.1927 அன்று பிறந்தார்.

பெற்றோர் = சாத்தப்பன், விசாலாட்சி

ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடி மாகாவியம், ஏசுகாவியம் முதலியன அவர் படைத்த நெடுங்கவிதை நூல்கள்.

"இராசதண்டனை" என்பது கம்பர்-அம்பிகாபதி வரலாற்றை வைத்து அவர் படைத்த இனிய நாடகம்.

ஆயிரம் தீவு அங்கயற்க்கண்ணி, வேலங்குடி திருவிழா முதலான பல புதினங்களை அவர் படைத்துள்ளார்.

இவற்றின் சேரமான் காதலி என்ற புதினம் சாகித்திய அகாடமி பரிசை பெற்றுள்ளது.

தென்றல், முல்லை, கண்ணதாசன், கடிதம், தமிழ்மலர் முதலிய இதழ்கள் தொடங்கி, அவற்றின் ஆசிரியராக இருந்து பணியாற்றினார்.- தெமுகத

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களின் வரிசையில் தனக்கென்று தனி முத்திரையைப் * பதித்தவர் - கவியரசு கண்ணதாசன்

வாழ்க்கையும் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகளுமே கவிதைக்குரிய பொருள்களாம்.

*இருட்பகை இரவி இருளெனத் தம்மையும் – மனோன்மணியம் .சுந்தரனார்.

வாயசம் - காகம், இரவி - சூரியன், சிறை - இறக்கை

இப்பாடலில் பயின்று வந்த அணி- தற்குறிபேற்ற அணி

*வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும் – காளமேகப் புலவர்

**புறநானூறு**

- **உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
- **செல்வத்து பயனே ஈதல் -நக்கீரனார்.**

**சொற்பொருள்:**

நிகழ்ற்றிய - நிழல் செய்த

துஞ்சான் - துயிலான்

மா - விலங்கு

நாழி - அளவுப்பெயர்

ஈதல் - கொடுத்தல்

துய்ப்போம் - நுகர்வோம்

நடுநாள்யாமம் - நள்ளிரவு

கல்லா -கல்வியறிவில்லாத

தப்புந -இழக்க

**இலக்கணக்குறிப்பு:**

வெண்குடை - பண்புத்தொகை

நாழி - ஆகுபெயர்

ஈதல் - தொழிற்பெயர்

கல்லா ஒருவற்கும் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

துய்ப்போம் - தன்மைப் பன்மை வினைமுற்று

**ஆசிரியர் குறிப்பு:**

மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

இவர் இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர்.

பத்துப்பாட்டில் "திருமுருகாற்றுப்படை", "நெடுநல்வாடை" எனும் இரு நூல்களை படைத்துள்ளார். இப்பாடலில் இவர், உலகியல் உண்மையைக் கூறியுள்ளார்.

**நூல் குறிப்பு:**

புறம் + நான்கு + நூறு = புறநானூறு

புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது இந்நூல்.

இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

இந்நூலின் சில பாடல்களை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

புறம் என்பது ஒருவரின் வீரம், கொடை, கல்வி முதலிய சிறப்புகளைக் குறிக்கும்.

இப்பாடல்கள் வாயிலாகப் பண்டைத் தமிழ் மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, வீரம், கொடை, கல்வி முதலியற்றை அறியலாம்.

**குறுந்தொகை**

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே**

**தேவகுலத்தார்.**

**சொற்பொருள்:**

நீர் - கடல்

கருங்கோல் - கருமை நிறமுடைய கொம்பு

உயர்ந்தன்று - உயர்ந்தது

அளவின்று - அளவினையுடையது.

**இலக்கணக்குறிப்பு:**

நிலத்தினும், வானினும், நீரினும் - உயர்வு சிறப்பும்மை

கருங்கோல், பெருந்தேன் - பண்புத்தொகை

**பிரித்தறிதல்:**

ஆரளவு - அருமை+அளவு

கருங்கோல் - கருமை+ கோல்

பெருந்தேன் - பெருமை+தேன்

**நூல் குறிப்பு:**

குறுமை+தொகை = குறுந்தொகை

குறைந்த அடிகளால் பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பே குறுந்தொகை.

இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

இந்நூலை தொகுத்தவர் பூரிக்கோ.

பாரதம் பாடிய பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.

இப்பாடல்கள் குறைந்த அளவாக நான்கடிகளையும் அதிக அளவாக எட்டு அடிகளையும் கொண்டிருக்கின்றன.

பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.

இந்நூல் வாயிலாகப் பண்டைத் தமிழரின் இல்வாழ்க்கை, ஒழுக்கம், மகளிர், மாண்பு, அறவுணர்வு முதலியவற்றை அறியலாம்.

எட்டுத்தொகை நூல் - குறுந்தொகை

குறுந்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை - 401

ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

**திருவிளையாடற் புராணம்**

பரஞ்சோதி முனிவர்

**சொற்பொருள்:**

வையை நாடவன் - பாண்டியன்

உய்ய - பிழைக்க

இரந்து செப்பினான் - பணிந்து வேண்டினான்.

தென்னவன் குலதெய்வம் - சொக்கநாதன் (அ)) சுந்தரபாண்டியன்

இன்னல் - துன்பம்

நல்கினார் - அளித்தார்

இறைஞ்சி - பணிந்து

அளக்கில் கேள்வியார் - அளவற்ற கேள்வியறிவினர்.

சிரம் துளக்கி - தலையசத்து

புறம்பு - வெளியில்

பையுள் - வருத்தம்

நம்பி - தருமி

கண்டம் - கழுத்து

வழுவு பாடல் - குற்றமுள்ள பாடல்

ஆர்அவை - (புலவர்) நிறைந்த அவை

சீரணி - புகழ்வாய்ந்த

வேணி - செஞ்சடை

மீனவன் - மீன்கொடியை உடைய பாண்டியன்

விபுதர் - புலவர்

பொற்கிழி - பொன் முடிப்பு

கிளத்தினேன் - சொன்னேன்

ஓரான் - உணரான்

அற்குற்ற - (அல்கு+ உற்ற) - இருளையொத்த

நாற்றம் - நறுமணம்

குழல் - கூந்தல்

அல்கு - இரவு

ஞானப்பூங்கோதை - உமையம்மை

உம்பரார் பதி - தேவர் தலைவன் (இந்திரன்)

கரந்தான் - மறைந்தான்

நாவலன் - புலவர்

**இலக்கணக் குறிப்பு:**

உரைத்து, இரந்து - வினையெச்சங்கள்

சொல்லி, இறைஞ்சி - வினையெச்சங்கள்

விளக்கி, சிறந்து - வினையெச்சங்கள்

மகிழ்ந்த - தொழிற்பெயர்

தூங்கிய, ஆயந்த - பெயரெச்சங்கள்

நேர்ந்த - வினையெச்சம்

கொண்டு, வைத்து - வினையெச்சங்கள்

நோக்கி - வினையெச்சம்

கிளத்தினேன் - தன்மை ஒருமை வினைமுற்று

தேராக்கீரன் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

புனைமலர் - வினைத்தொகை

பற்றுவான், அஞ்சான் - வினையாலணையும் பெயர்கள்

குற்றம் - தொழிற்பெயர்

விழுந்து - வினையெச்சம்

செந்நீ, வெம்மை - பண்புத்தொகை

தேய்ந்த, பாய்ந்த, ஆய்ந்த, காய்ந்த - பெயரெச்சங்கள்

**ஆசிரியர் குறிப்பு:**

நாகை மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்) என்னும் ஊரில் பிறந்தார்.

தமிழிலும், வடமொழியிலும் புலமை பெற்றவர்

மீனாட்சி சுந்தர தேசிகர்.

பரஞ்சோதி முனிவர் துறவியாகச் சிவாலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டு வந்தார்.

மதுரை மீனாட்சி அம்மனையும் சோமசுந்தரக் கடவுளையும் வணங்கியவர். அந்நகரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார்.

அந்நகரத்தார் கேட்டுக் கொண்டதற்கு இணைங்க திருவிளையாடற் புராணத்தை இயற்றினார். அந்நூலை சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் இருந்து வடமொழி, தென் மொழிப்புலவர் யாவரும் போற்ற அரங்கேற்றினார்.

திருவிளையாடற் போற்றிக்கலி வெண்பா, மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

**நூற்குறிப்பு:**

திருவிளையாடற் புராணம், மதுரைக் காண்டம் (பதினெட்டுப் படலம்), கூடற்காண்டம் (முப்பது படலம்), திருவாலவாய்க் காண்டம் (பதினாறு படலம்) என்னும் முப்பெரும் பகுதிகளையும் படலம் என்னும் அறுபத்து நான்கு உட்பிரிவுகளையும் உடையது.

இதில் மூவாயிரத்து முந்நூற்று அறுபத்தி மூன்று விருத்தப் பாக்கள் உள்ளன.

மதுரையில் இறைவன் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை இப்படலங்கள் விளங்குகின்றன.

இந்நூல், இறைவனின் திருவிளையாடல்களை விளக்கி எழுந்த நூல்களுல் விரிவானதும் சிறப்பானதும் ஆகும்.

தொடைநயம் பக்திச்சுவை மிக்க இந்நூலுக்கு ந.மு. வேங்கடசாமி உரையெழுதியுள்ளார்.

உடல் முழுவதும் கண்களை உடையவர் - சிவபெருமான்

பொற்கிழி பெறச்சென்ற தருமியைத் தடுத்தவர் - நக்கீரனர்

இறைவனிடம் பாடலைப் பெற்றுச் சென்றவர் - தருமி

தமிழ்ப்புலவர்கள் இறைவனுக்கும் தமிழுக்கும் உள்ள பிணைப்பை உறுதிப்படுத்தவே திருவிளையாடல் புராணம் முதலிய புராணங்களை இயற்றியதாகக் கொள்ளலாம்.

புலவர் தம் புலமைத் திறத்தை அறிய இறைவனை வேண்டிச் சங்கப் பலகையைப் பெற்றனர்.

வங்கிய சேகர பாண்டியனின் மகன் வங்கிய சூடாமணியாண்டியன் மதுரையில் அரசாட்சிப் பொறுப்பை ஏற்றனர்.

சூடாமணிபாண்டியனுக்கு சண்பகப் பாண்டியன் என்னும் பெயர் வழங்கலாயிற்று.

**உரைநடை: கடற்பயணம்**

தமிழ்நாட்டு வாணிக வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது.

உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத்திலேயே வருவாய் மிகுதி.

அயல்நாட்டு வாணிகத்திலேயே தரைவழியாகச் செய்யும் வாணிகத்தைவிட, நீர் வழியாகச் செய்யும் வாணிகம் பெரும் பொருளைத் தரும்.

அந்நாளில் கடல் வாணிகம் மிகவும் சிறந்திருந்தது.

எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா, சீனம் போன்ற நாடுகள் தமிழர்களின் பொருள்களை விரும்பிப் பெற்றன.

**தமிழரின் கடற்பயணம்:**

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்று ஔவையும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கணியன் பூங்குன்றனாரும் கூறியுள்ளனர். இவையே தமிழர்களின் உலகளாவிய சிந்தனைக்கும் பன்னாட்டுத் தொடர்புக்கும் சான்றுகளாகும்.

தொல்காப்பியம் தமிழர்கள் பிற நாடுகளுக்கு கடற்பயணம் மேற்கொண்டதை "முந்நீர் வழக்கம்" எனக் குறிப்பிட்டுள்ளது.

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள "பொருள்வயிற் பிரிவு" விளக்குகிறது. இப்பிரிவு "காலில்(தரைவழிப் பிரிதல்) களத்தில் (நீர்வழிப் பிரிதல்) பிரிவு" என இரு வகைப்படும்.

**யவனர்:**
* தமிழர்கள் கிரேக்கரையும் உரோமானியரையும் "யவனர்" என அழைத்தனர்.
**கப்பல் கட்டுதல்:**
* "கலம்செய் கம்மியர்" என ஒருவகைத் தொழிலாளர் தமிழகத்தில் இருந்தனர்.
* அவர்களால் பெருங்கப்பல்கள் கட்டப்பட்டன.
**புறநானூறு கூறும் உவமை:**
* நான்கு பக்கமும் நீர் நிரம்பிய கழனிகள் உள்ளன. அதன் நடுவில் தனியாக மதிலோடு கூடிய அரசனது கோட்டை உள்ளது. அகேகாட்டையின் தோற்றமானது நடுக்கடலில் செல்லும் கப்பலுக்கு உவமையாகப் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.
**கடசலைக் குறிக்கும் சொற்கள்:**
* ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி.
**மரக்கலத்தைக் குறிக்கும் சொற்கள்:**
* கப்பல், களம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புனை, தோணி, தெப்பம், திமில்,

அம்பி, வங்கம், மதிவை, பஃறி, ஓடம்.
* கடலில் செல்லும் பெரிய கலம் நாவாய் எனப்படும்.

**பட்டினப்பாலை:**

புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைப்புண்டு தறியில் கட்டப்பட்ட யானை அசைவதுபோல் அசைந்தன.

அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின எனப் பட்டினப்பாலை கூறுகின்றது.

துறைமுகங்கள்: காவிரிப்பூம்பட்டினம், முசிறி, கொற்கை

**முசிறி:**

முசிறி சேரர் துறைமுகம்.

அங்குச் "சுள்ளி" என்னும் பெரிய ஆற்றில் யவனர்களின் மரக்கலங்கள், ஆற்றுத்துறைகள் கலங்கிப் போகும்படி வந்து நின்றன.

யவனர்கள் பொன்னை சுமந்து வந்து அதற்கு ஈடாக மிளகை ஏற்றி சென்றனர் என்ற செய்தியை அகநானூறு கூறுகிறது.

**கொற்கை:**

கொற்கை பாண்டிய துறைமுகம்.

இத்துறைமுகத்தில் முத்துக்குளித்தல் மிகச் சிறப்பாக நடந்ததை வெனிசு நாட்டறிஞர் மார்க்கோபோலோ கூறியுள்ளார்.

மதுரைக்காஞ்சியும் சிறுபாணாற்றுப்படையும் கொற்கை முத்தின் சிறப்பை கூறியுள்ளன.

"விளைந்து முதிர்ந்த விழுமுத்து" என மதுரைக்காஞ்சி கூறுகிறது.

ஏற்றுமதிப் பொருள்களில் முத்தே முதலிடம்.

கடற்கரையை அடுத்து இருக்கும் ஊர்களைப் பட்டினம், பாக்கம் என்றழைப்பர்.

**காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்):**

இது சோழர்களின் துறைமுகம்.

இங்கு பெரும்பாலும் வாழ்ந்தவர்கள் வணிகர்கள்.

அங்கு சுங்கச்சாலையும் கலங்கரை விளக்கமும் இருந்தன.

**ஏற்றுமதி இறக்குமதி:**

பழந்தமிழகத்தின் வணிகப் பொருள்களைப் பற்றிய குறிப்புகள் பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் கூறுகின்றது.

தமிழகப் பொருள்கள் சீனத்தில் விற்கப்பட்டன.

சீனத்துப் பட்டும் சர்க்கரையும் தமிழகத்திற்கு இறக்குமதி ஆயின.

கரும்பு, அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவில் இருந்து கொண்டு பயிரிடப்பட்டது.

கடல்சார் பல்கலைக்கழகத்தின் வாயிலாகப் பட்டம், பட்டயக்கல்வி கற்பிக்கப்பெற்று வருகின்றன.

பட்டினப் பாலையிலும் மதுரைக்காஞ்சியிலும் ஏற்றுமதியான பொருள்கள் - இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண் துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி.

**கடல் கடந்த தமிழ்**

தமிழ் - கிரேக்கம்

அரிசி - ஒரைஸா

கருவூர் - கரோரா

காவிரி - கபிரில்

குமரி - கொமாரி

சோபட்டினம் - சோபட்னா

தொண்டி - திண்டிஸ்

மதுரை - மதோரா

முசிறி - முசிரில்

**திணையும் - நிலமும்**

குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும்

மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும்

நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும்

பாலை - மணலும் மணல்சார்ந்த இடமும்.

**துணைப்பாடம்: கெலன் கெல்லர்**

அமெரிக்காவின் புகழ்பெற்ற எழுத்தாளராகவும் அரசியல் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கியவர்.

இந்த உலகத்தில் அமைதி மலர வேண்டும் எனக் கேட்பேன் என்றவர் கெலன்.

பத்தொன்பது மாதக் குழந்தையாக இருந்த போது கெலன் கெல்லருக்கு ஏற்பட்ட கொடிய நோய் - கண்கள் பாரா, காதுகள் கேளா, வாய்பேசாது.

கென் கெல்லர் தனது ஆறாவது வயதில் அலெக்சாண்டர் கிரகாம்பெல் உதவியுடன் பெர்கின்ஸ் பள்ளியில் சேர்ந்தார்.

பார்வையற்றோருக்கான பெர்கின்ஸ் பள்ளி அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் அமைந்துள்ளது.

கெலனின் ஆசிரியர் - அன்னிசல்லிவான்

ஹோரஸ்மான் பால்டனில் உள்ள காது கேளாதோருக்கான பள்ளியிலும், நியூயார்க்கில் உள்ள ரைட்ஹூமாசன் பள்ளியிலும் முறைப்படி பயின்றார்.

கெலன் பிரெய்லி முறையில் எழுதவும் படிக்கவும் கற்றார்.

ஆசிரியை அன்னிசல்லிவான் அளித்த பயிற்சியின் பயனாக கேம்பிரிட்ஜ் ரெட்கிளிஃப் கல்லூரியின் நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று இளங்கலைப்பட்ட வகுப்பில் சேர்ந்தார்.

கண்ணிழந்தோருக்கும், காதுகேளாதோர்க்கும் அல்லும் பகலும் அயராது உழைத்தவர் - கெலன்.

பார்வையற்றோருக்கென தேசிய நூலகம் ஒன்றை உருவாக்கி உலகம் முழுவதிலும் இருந்து நூல்கள் வந்து குவிய ஏற்பாடு செய்தார்.

கெலன் கெல்லர் நிதி என ஒன்றைத் தொடங்கி, அந்நிதியில் சேர்ந்த தொகையான ரூபாய் ஒன்றரைக் கோடியை அப்பள்ளிகளுக்கு வழங்கினார்.

ஆசிரியர் அன்னிசல்லிவான் 1930 ஆண் ஆண்டு இறந்தார்.

அன்னிசல்லிவான் இறந்த பிறகு பாலி தாமசன் உதவியுடன் வாழ்ந்தார் கெல்வின்.

கெலன் வாஷிங்டன் நகரின் புகழ்பெற்ற பெண்மணியாகத் திகழ்ந்தார்.

கடவுளின் அருளால் மூன்று நாள் மட்டும் தமக்குப் பார்வை கிட்டியதாகக் கனவு கண்டார் கெலன்.

"வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை, ஒன்று போனால் இன்னொன்று வரும். அந்த நம்பிக்கையிருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது" எனக் கூறியவர் கெலன்.

நீங்கள் கண்பார்வை அற்றவராகவும் காது கேளாதவராகவும் இருந்தும் கூட எப்படி உங்களால் சாதிக்க முடிந்தது என கெலனிடம் கேட்டவர் - விக்டோரியா மகாராணி.

கெலன் கெல்லர் முதல் நாள் பார்த்தது - ஆசிரியர்.

இரண்டாவது நாள் கதிரவன் தோன்றுவதைக் கண்டார்.

புகழ் பெற்ற லியினார் டோ டாவின்சி கலைஞர்களின் ஓவியங்களையும் கலைப் பொருள்களையும் கண்டு மகிழ்ந்தார்.

மூன்றாவது நாள் நகின் கிழக்கு பக்கத்திலுள்ள ஆற்றுப்பாலத்தை உற்று நோக்கினார். நியூயார்க்கில் உள்ள கம்பீரமான இரட்டைக் கோபுரக் கட்டடத்தைக் கண்டு களித்தார்.

மக்களின் முகத்தில் வெளிப்படும் மகிழ்ச்சி, துண்பத்தைப் பார்த்து புரிந்துக் கொண்டார்.

செகப்பிரியருடைய நாடகத்தைப் பார்த்தார்.

1880 சூன் 27ல் அமெரிக்காவில் உள்ள அலபாமா மாகாணத்தில் துஸ்கும்பியாவில் பிறந்து சாதனையாளராகத் திகழ்ந்த கெலன், 1968 ஆம் ஆண்டு சூன் முதல் நாள் இவ்வுலகை வாழ்வை நீத்தார். அவரது உடல் வாஷிங்டனில் அன்னி, பாலி ஆகியோரது உடல்களுக்கு அருகே நல்லடக்கம் செய்யப்பட்டது.

உலகின் எட்டாவது அதிசயம் எனப் பாராட்டப் பெற்றவர் கெலன்.

**திருக்குறள்**

**சொற்பொருள்:**

செவிச்செல்வம் - கேள்விச்செல்வம்

தலை - முதன்மை

போழ்து - பொழுது

ஈயப்படும் - அளிக்கப்படும்

ஆவி உணவு - தேவர்களுக்கு வேல்வியின்போது கொடுக்கப்படும் உணவு

ஆன்றோர் - கல்வி, கேளவி, பண்பு

ஒப்பர் - நிகராவர்

ஒற்கம் - தளர்ச்சி

ஊற்று - ஊன்றுகோல்

ஊற்றுக்கோல் - ஊன்றுகோல்

ஆன்ற - நிறைந்த

வணங்கிய - பணிவான

அற்றே - போன்றதே

எனைத்தானும் - எவ்வளவு சிறிதே ஆயினும்

அனைத்தானும் - கேட்ட அளவிற்கு

பிழைத்துணர்ந்தும் - தவறாக உணர்ந்திருந்தாலும்

பேதைமை - அறியாமையின் பாற்பட்ட தீய சொற்கள்.

இழைத்துணர்ந்து - நுட்பமாக ஆராய்ந்து

ஈண்டிய ஆய்ந்தறிந்த

தகையவே - நுட்பமாகிய

வணங்கிய - பணிவான

வாயினராதல் - மொழியினை உடையவர்

வாயுணர்வின் மாக்கள் -உணவுச் சுவை மட்டும் அறிந்தோர்.

அவியினும் - இறந்தாலும்

**இலக்கணக் குறிப்பு:**

வயிற்றுக்கும் - இழிவு சிறப்பும்மை

கேட்க - வியங்கோள் வினைமுற்று

இழுக்கல், ஒழுக்கம் - தொழிற்பெயர்கள்

ஆன்ற - பெயரெச்சம்

அவியினும் வாழியினும் - எண்ணும்மை

அவியுணவு - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

ஊற்றுக்கோல் - ஊன்று கோல் என்பதன் வலித்தல் விகாரம்

ஆன்ற பெருமை - பெயரெச்சம்

கேளாத் தகையவே - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**பிரித்தறிதல்:**

சுவையுணரா = சுவை + உணரா

வாயுணர்வு = வாய் + உணர்வு

செவிக்குணவு = செவிக்கு + உணவு

**பொதுவான குறிப்புகள்:**

திருக்குறளில் பத்து அதிகாரப் பெயர்கள் உடைமை என்னும் சொல்லில் அமைந்துள்ளன.

திருக்குறள் ஏழு சீர்களால் அமைந்த வெண்பாக்களைக் கொண்டது.

ஏழு எண்ணுப்பெயர் எட்டுக் குறட்பாகளில் இடம்பெற்றுள்ளது.

அதிகாரங்கள் 133. இதன் கூட்டுத்தொகை ஏழு.

மொத்த குறட்பாக்கள் 1330. இதன் கூட்டுத்தொகை ஏழு.

செவிக்குணவாவது - கேள்வி

ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் - ஊற்றுக்கோல்

உடைமைகள் பத்துதிருக்குறலில் பத்து அதிகாரப் பெயர்கள் உடைமை என்னும் சொல்லில் அமைந்துள்ளன. அவை:

அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அருளுடைமை, அறிவுடைமை, ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, நாணுடைமை .

**சீட்டுக்கவி**

**சொற்பொருள்:**

கந்துகம் - பந்து

கோணம் - வாட்படை

குந்தம் - சூலம்

கொடை - வேனிற்காலம்

பாடலம் - பாதிரிப் பூ

மா - மாமரம்

சடிலம் - சடை

கிள்ளை - கிலி

கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கொடை, குந்தம், பாடலம், சடிலம், கிள்ளை - குதிரை

**இலக்கணக் குறிப்பு:**

எழுதி, புரந்து - வினையெச்சம்

படித்த, தீர்த்த - பெயரெச்சம்

பாடாத, பறவாத, சூடாத - எதிர்மறைப் பெயரெச்சம்

விடல் - தொழிற்பெயர்.

**ஆசிரியர் குறிப்பு:**

அந்தக்கவி வீரராகவர் காஞ்சிபுரம் மாவட்டம் பூதூரில் பிறந்து பொன் விளைந்த கலதூரில் வாழ்ந்தவர்.

தந்தை - வடுகநாதர்.

இவர் பிறவிலேயே கண் பார்வை அற்றவர்.

எனினும் கேள்வியறிவின் வாயிலாக கல்வி பயின்றார்.

இவர் ஏடுகள் ஏழுதாமல் தன் மனத்திலேயே எழுதிப் படித்தார் என அவரே கூறுகிறார்.

இலங்கை சென்று பரராசசேகர மன்னனை பாடி ஒரு யானை, போற்பந்தம், ஓர் ஊர் ஆகியவற்றைப் பரிசிலாகப் பெற்று ஊர் திரும்பினார்.

**படைத்த நூல்கள்:**

திருக்கழுக்குன்றப் புராணம், திருக்கழுக்குன்ற மாலை, சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், திருவாரூர் உலா, சந்திரவாணன் கோவை.

**நூல் குறிப்பு:**

இப்பாடல் தனிப்பாடல் திரட்டு எனும் நூலில் இடம்பெற்றுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல்.

இதில் 110 புலவர்கள் பாடிய 113 பாடல்கள் உள்ளன.

புலவர், பெருமாலும் அரசர் முதலான கொடையாளர்களுக்குத் தாம் விரும்பும் பொருளைப் பெறவேண்டி, ஓலைச்சீட்டில் கவியாக எழுதி அனுப்புவர். * அக்கவிதைக்கு சீட்டுக்கவி எனப் பெயர்.

இதற்கு ஓலைத்தூக்கு, ஓலைப்பாசுரம் என்னும் வேறு பெயர்களும் உண்டு.

**மொழித்திறன் பயிற்சி**

சுவிட்ச் - பொத்தான்

ஐஸ்வாட்டர் - குளிர் நீர்

கூல்ட்ரிங்ஸ் - குளிர்பானம்

கிரைண்டர் - மின் அரைவை

பிரிஜ் - குளிர்சாதனப் பெட்டி

டீ - தேநீர்

வாஷிங்மெஷின் - சலவை இயந்திரம்

டெலிபோன் - தொலைபேசி

**பழமொழி அறிவோம்:**

1. Bend the tree while it is young

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

2. As is the mother, so is her daughter

தாயைப்போலப் பிள்ளை, நூலைப் போல சேலை

3.A friend in need is a friend indeed

உயிர்காப்பான் தோழன்

4.A man of courage never wants weapons

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

5.Blood is thicker than water

தான் ஆடாவிட்டாலும் தன்தசை ஆடும்.

6.In a fiddler's house all are dancers

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்.

7. No man can flay a stone

கல்லிலே நார் உரிக்க முடியுமா?

8. Difficulties give way to diligence

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.

9. Command your man and do it your self

வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்

10.Charity is a double blessing

தருமம் தலை காக்கும்.

**உரைநடை: ஆனந்தரங்கர் நாட்குறிப்பு**

**வரலாற்று ஆவணம்:**

ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு ஓர் இலக்கியமாகவும், வரலாற்று ஆவணமாகவும் மதிக்கப் பெற்றது.

**இளமைக்காலம்:**

ஆனந்தரங்கர் சென்னை பெரம்பூரில் பிறந்தவர்.

தந்தை - திருவேங்கடம்

தன் மூன்றாம் வயதில் தன் தாயை இழந்தார்.

"எம்பார்" என்பவரிடம் கல்வி கற்றார்.

**புதுவைக்கு செல்லுதல்:**

இவரின் தந்தை திருவேங்கடம், மைத்துனர் நைனியப்பரின் வேண்டுகோளுக்கு இணங்க புதுவையில் குடியேறினார்.

அங்கு அரசுப்பணியில் உதவியாளராகச் சேர்ந்து நாளடைவில் திவானாகப் பதவி உயர்வு பெற்றார்.

**துபாசி:**

ஆனந்தரங்கர் கல்வி கற்றபின்னர், பாக்குக் கிடங்கு நடத்தி வந்தார்.

"துய்ப்ளே" என்னும் ஆளுநரின் மொழிபெயர்ப்பாளர்(துபாசி) இறந்ததால், ஆனந்தரங்கர் அப்பணிக்கு அமர்த்தப்பட்டார்.

**ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு:**

ஆனந்தரங்கர் துபாசியாகப் பணியாற்றிய காலத்தில், 1736 ஆம் ஆண்டு முதல் 1761 ஆண் ஆண்டு வரை ஏறத்தாழ 25 ஆண்டுகள் நாட்குறிப்பு எழுதியுள்ளார்.

தம் நாட்குறிப்புக்கு "தினப்படிச் செய்திக்குறிப்பு", "சொஸ்த லிகிதம்" எனப் பெயரிட்டார்.

**வரலாற்றுச் செய்திகள்:**

பிரெஞ்சுப்படை காரைக்காலைப் பிடிக்கச் சென்று தோலிவியடைந்தது, தில்லியின் மீது பாரசீகப் படையெடுப்பு, குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை

வழங்கிய செய்திகள், இலபூர்தொனோ கப்பல் பிரெஞ்சு நாட்டில்லிருந்து சென்றது, வெளிநாட்டுப் பயணிகள் வந்து சென்ற நிகழ்வுகள் முதலிய முக்கிய வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றுள்ளது.

ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கிறது.

**வணிகச் செய்தி:**
* துறைமுக நகரங்களில் உள்ள மக்களின் வருவாய்க்கு அடிப்படையாய் அமைவது அங்கு வரும் கப்பல்களின் போக்குவரத்தே ஆகும்.
புதுச்சேரிக்கு கப்பல்கள் வந்த செய்தி கேட்டதும் மக்கள் மகிழ்தனர்.

அது குறித்து, "நாட்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற் போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும், அவரவர் வளவிலே கல்யாணம் நடப்பது போலவும், நீண்டநாள் தவங்கிடந்து புத்திர பாக்கியம் கிட்டினாற் போலவும், தேவாமிர்த்ததைச் சுவைத்ததுபோலவும் சந்தோஷித்தார்கள்; அதைக் காகிதத்தில் எழுத முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும் பகுதி வாணிகச் செய்திகளையே விவரிக்கின்றன.

**தண்டனைச் செய்தி:**

நீதி வழங்கல், தண்டனை அளித்தல் முதலிய செய்திகளும் நாட்குறிப்பில் இடம் பெற்றுள்ளன.

திருட்டு கும்பலின் தலைவனுக்கு கடைத் தெருவில் தூக்கில் இடப்பட்டது என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

**பண்பாட்டு நிலை:**

ஆனந்தரங்கர், தம் நாட்குறிப்பில் தந்தைக்கும் மகனுக்கும் இடையேயான உறவு, பெரியவர்களை மதிக்கும் பண்பு, பெரியவர்களுக்கு வணக்கம் செய்தல், கோவில் * திருவிழாக்கள், பலகை வழக்கங்கள், சடங்குகள் போன்றவர்றை குறித்துள்ளார்.

**ஆனந்தரங்கர் பெற்ற சிறப்புகள்:**

முசபர்சங், ஆனந்தரங்கருக்கு மூவாயிரம் குதிரைகளை வழங்கி, அவருக்கு "மண்சுபேதார்" என்னும் பட்டம் வழங்கினார்.

பின்பு செங்கல்பட்டு கோட்டைக்கு தளபதியாகவும், பின்பு அமாமாவட்டம் முழுமைக்கும் ஜாகிர்தாராகவும் நியமித்தார்.

ஆளுநர் மாளிகைக்குள் பல்லக்கில் செல்லும் உரிமை அவருக்கு வழங்கப்பட்டது.

அவர் தங்கப் பிடி போட்ட கைத்தடி வைத்துக்கொள்ளவும் செருப்பணிந்து ஆளுநர் மாளிகைக்குள் செல்லவும் உரிமை பெற்றிருந்தார்.

**பெப்பிசு:**

உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் முன்னோடி - பெப்பிசு

இந்தியாவின் பெப்பிசு - ஆனந்தரங்கர்

நாட்குறிப்பு வேந்தர் - ஆனந்தரங்கர்

**பிறமொழி சொற்கள்:**

சொஸ்த = தெளிந்த அல்லது உரிமையுடைய

லிகிதம் = கடிதம் அல்லது ஆவணம்

வளவு = வீடு

துபாசி = இருமொழிப்புலமை உடையவர்(மொழிப்பெயர்ப்பாளர்)

டைஸ் என்னும் இலத்தின் சொல்லுக்கு நாள் என்பது பொருள்.

இச்சொல்லில் இருந்து டைரியம் என்னும் இலத்தின் சொல் உருவானது.

இச்சொல்லுக்கு நாட்குறிப்பு என்பது பொருள். இதிலிருந்து டைரி என்னும் ஆங்கிலச் சொல் உருவானமது.

**பிற குறிப்புகள்:**

அருணாச்சலக் கவிராயர் தம் இராமநாடகத்தைத் திருவரங்கரத்தில் அரங்கேற்றிய பின்னர், மீண்டும் ஒருமுறை ஆனந்தரங்கர் முன்னிலையில் அரங்கேற்றினார்.

கே.கே.பிள்ளை, "ஆனந்தரங்கருடைய நாட்குறிப்புகள் அவரது காலத்தில் யாருமே புரிந்திராத அரியதொரு இலக்கியப் பணி என்றார்.

"தான் நேரில் கண்டும் கேட்டும் அறிந்துள்ள செய்திகளைச் சித்திரகுப்தனைப் போல் ஒன்றுவிடாமல் குறித்து வைத்துள்ளார்" - வ.வே.சு

துய்ப்ளே ஆட்சியில் ஆனந்தரங்கருக்குத் தனிப்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன.

**ஆனந்தரங்கர் குறித்து வெளிவந்த இலக்கியங்கள்:**

ஆனந்தரங்கர் கோவை = தியாகராச தேசிகர்

கள்வன் நொண்டிச் சிந்து

ஆனந்தரங்கர் பிள்ளைத்தமிழ் = அறிமதி தென்னகன்

ஆனந்தரங்கர் விஜயசம்பு = சீனுவாசக்கவி (வடமொழி)

ஆனந்தரங்கர் ராட்சந்தமு = கச்தூரிரங்கக்கவி(தெலுங்கு)

**செய்யுள்: முத்தொள்ளாயிரம்**

**சொற்பொருள்:**

உய்ம்மின் - பிழைத்துக் கொள்ளுங்கள்

மலை - வளமை

வள் - நெருக்கம்

விசும்பு - வானம்

பரவு - புறா

நிறை - எடை

ஈர்த்து - அறுத்து

துலை - துலாக்கோல் (தராசு)

நிறை - ஒழுக்கம்

மேனி - உடல்

மறுப்பு - தந்தம்

ஊசி - எழுத்தாணி

மறம் - வீரம்

கனல் - நெருப்பு

மாறன் - பாண்டியன்

களிறு - யானை

**இலக்கணக் குறிப்பு:**

மாமலை - உரிச்சொற்றொடர்

நெடுமதில் - பண்புத்தொகை

வாங்குவில் - வினைத்தொகை

உயர்துலை - வினைத்தொகை

குறையா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

இலைவேல் - உவமைத்தொகை

மருப்பூசி, மார்போலை - உருவகம்

மாறன்களிறு - ஆறாம் வேற்றுமைத் தொகை

**பிரித்தெழுதுக:**

தந்துய்ம்மின் = தந்து + உய்ம்மின்

வில்லெழுதி = வில் + எழுதி

பூட்டுமின் = பூட்டு + மின்

மருப்பூசி = மறுப்பு + ஊசி

எமதென்று = எமது + என்று

மொய்யிலை = மெய் + இலை

**நூல் குறிப்பு:**

மூவேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைகத் கொண்டது.

ஆயினும்இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை.

"புறத்திரட்டு" என்னும் நூல் வாயிலாக 108 வெண்பாக்களும், பழைய உரைநூல்களில் மேற்கோளாக 22 வெண்பாக்களும் கிடைத்துள்ளன.

இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

விசும்பு - வானம்

துலை - துலாக்கோல்

மருப்பு - தந்தம்

கனல் - நெருப்பு

களிறு - யானை

**கலிங்கத்துப்பரணி**

**சொற்பொருள்:**

தீயின்வாய் - நெருப்பில்

சிந்தை - எண்ணம்

கூர - மிக

நவ்வி - மான்

முகில் - மேகம்

மதி - நிலவு

உகு - சொரிந்த(பொழிந்த

புனல் - நீர்

**இலக்கணக் குறிப்பு:**

வெந்து, உலர்ந்து, எனா, கூர - வினையெச்சங்கள்

செந்நாய் - பண்புத் தொகை

கருமுகிலும் , வெண்மதியும் - எண்ணும்மை

கருமுகில், வெண்மதி - பண்புத்தொகைகள்

கடக்க ஓடி, இளைத்து - வினையெச்சங்கள்

வியர்த்த வியர்வன்றோ - பெயரெச்சம்

**பிரித்தெழுதுக:**

வாயினீர் - வாயின் + நீர்

வெந்துலர்ந்து - வெந்து + உலர்ந்து

காடிதனை  - காடு + இதனை

கருமுகில் - கருமை + முகில்

வெண்மதி - வெண்மை + மதி

**ஆசிரியர் குறிப்பு:**

கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் சயங்கொண்டார்.

இவர், திருவாரூர் மாவட்டத்திலுள்ள தீபங்குடி என்னும் ஊரினர். முதல் குலோத்துங்கச் சோழனின் அரசவைப் புலவராகத் திகழ்ந்தவர்.

பரணிக்கோர் சயங்கொண்டார் எனப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாராட்டியுள்ளார்.

இசையாயிரம், உலாமடல் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவரது காலம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு.

**நூற் குறிப்பு:**

ஆயிரக்கணக்கான யானைகளாப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்குப் பரணி என்பது பெயர்.

இது தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

பரணி இலக்கியங்களுள் தமிழில் தோன்றிய முதல் நூல் கலிங்கத்துப் பரணி.

கலிங்க மன்னன் அனந்தபன்மன் மீது முதல் குலோத்துங்கச் சோழன் போர்தொடுத்து வெற்றி பெற்றான்.

அவ்வெற்றியைப் பாராட்டி எழுந்த இந்நூல் தோல்விவுற்ற கலிங்க நாட்டின் பெயரால் அமைந்துள்ளது.

இந்நூல் ஐந்நூற்றுத் தொண்ணூற்றொன்பது தாழிசைகள் உள்ளன.

சயங்கொண்டாரின் சமகாலப் புலவரான ஒட்டக் கூத்தர் இந்நூலைத் "தென்தமிழ்த் தெய்வப்பரணி" எனப் புகழ்ந்துள்ளார்.

**பரணி இலக்கியங்கள்:**

தக்கயாகப்பரணி

மோகவதைப்பரணி

சீனத்துப்பரணி

வங்கத்துப்பரணி

பாசவதைப்பரணி

திராவிடத்துப்பரணி

ஆயிரம் யானை அமரிடை வென்ற

மாணவ னுக்கு வகுப்பது பரணி

பன்னிரு பாட்டியல்

பேரறிஞர் அண்ணா "எனக்கு விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப்பரணியே" என்றார்.

**உரைநடை: உலகளாவிய தமிழர்**

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி - புறப்பொருள் வெண்பாமாலை

உலகில் உள்ள 235 நாடுகளில் ஏறத்தாழ 154 நாடுகளில் தமிழர்கள் உள்ளனர்.

இருபது நாடுகளில் இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர் வாழ்கின்றனர்.

சாதுவன் வணிகம் செய்யும் பொருட்டு கடல் கடந்து சென்ற குறிப்பு மணிமேகலையில் உள்ளது.

வாணிகம், வேலைவாய்ப்பு காரணமாகவே தமிழர்கள் அயல்நாடுகளுக்கு சென்று வந்தனர்.

இது குறித்து செய்தி சங்க இலக்கியங்களிலும் காணப்படுகிறது.

திரைகடலோடியும் திரவியம் தேடு என்றவர் - ஔவையார்.

சிங்கப்பூர், மலேசியா, பினாங்குத் தீவு ஆகிய நாடுகளில் கோவில்கள் கட்டி ஆண்டுதோறும் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

ரியூனியன் தீவில் வாழ்பவர்கள் பெரும்பாலும் தமிழர்களே.

இலங்கையில் வாழும் தமிழர்களில் 95 விழுக்காட்டினர் தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழிலேயே கல்வி கற்கின்றனர்.

இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் தமிழ், ஆட்சிமொழியாகத் திகழ்கிறது.

சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்ற குறிப்பு மணிமேகலையில் உள்ளது.

இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் ஆட்சி மொழியாகத் தமிழ் திகழ்கிறது.

உலகெங்கும் அச்சு ஒலி, ஒளி ஊடகங்களை தமிழர் நடத்தி வருகின்றனர்.

**துணைப்பாடம்: திரு.வி.கலியாணசுந்தனாரின் தமிழ் பணி**

**பிறப்பும் கல்வியும்:**

சென்னைக்கு அருகே துள்ளம் என்னும் ஊரில் விருதாச்சலனார் - சினம்மையாரின் மகனாக 26.08.1883 ஆம் நாள் பிறந்தார்.

சென்னை ராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் படித்தார்.

கதிரைவேலனாரிடம் தமிழ் இலக்கியங்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் படித்தார்.

**தமிழ் பற்று:**

"எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்பதை முழு மூச்சாக கொண்டார்.

வடமொழிச் சொற்களை கலவாமல் தூய தமிழிலே எழுதவும் பேசவும் செய்தார்.

**பிறமொழியறிவு:**

தமிழை வளர்க்க பிற மொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளல்ல என்றார்.

* ஆங்கிலத்தில் மிக்க புலமை பெற்றிருந்தார்.

காந்தியடிகள் தமிழகம் வந்த போதெல்லாம் அவரின் மேடை பேச்சை மொழிபெயர்த்தார்.

**இளைஞர்களுக்கு அறிவுரை:**

இளைஞர்களே! தமிழுலகின் இழிந்த நிலை ஊறுங்கள்; ஓர்ந்து உங்கள் பொறுப்பை உணருங்கள்; தமிழ்த்தையைப் புதுப்போர்வையில் ஒப்பனை செய்து அரியாசனத்தில் அமர்த்த சூள்கொண்டு எழுங்கள்; எழுங்கள்; பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள்" என்று அறைகூவல் விடுத்தார்.

**பேசுப்பணி:**

"திரு.வி.க நடை" என்ற ஒரு தனி நடையை நடைமுறைப் படுத்தினார்.

பேசுவது போலவே எழுதுவது, எழுதுவது போலவே பேசுவது ஆகும்.

அறிஞர் அண்ணா உள்ளிட்ட அக்கால இளைஞர்களை தன் உணர்ச்சிமிகு பேச்சால் தம்பால் ஈர்த்தார்.

**எழுத்துப்பணி:**

உரைநடை எழுதுவது எனது தொழில் என்று கூறினார்.

"அவருக்கு வாய்ந்த மொழிநடை மலை எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது" என்று தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் பாராட்டி உள்ளார்.

**உரைநடை நூல்கள்:**

மனித வாழ்கையும் காந்தியடிகளும்

பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம்

இமயமலை அல்லது தியானம்

முருகன் அல்லது அழகு

சைவத்திரு

சைவத்தின் சமரசம்

கடவுட் காட்சியும் தாயுமானவரும்

இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

தமிழ்நாடும் நம்மாழ்வாரும்

நாயன்மார் வரலாறு

தமிழ்நூல்களில் பௌத்தம்

காதலா? முடியுமா? சீர்திருத்தமா?

என் கடன் பணிசெய்து கிடப்பதை

இந்தியாவும் விடுதலையும்

தமிழ்ச்சோலை

உள்ளொளி

**செய்யுள் நூல்கள்:**

முருகன் அருள்வேட்டல்

திருமால் அருள்வேட்டல்

கிருத்துவின் அருள்வேட்டல்

அருகன் அருகே

உரிமை வேட்டல்

பொதுமை வேட்டல்

பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியடிகளும்

**இதழ்ப்பணி:**

தேசபக்தன், நவசக்தி என்னும் இதழ்களின் வாயிலாகத் தொழிலாளர் முன்னேற்றம் பெறப் பாடுபட்டார்.

**தமிழ் வாழ்வினர்:**

வயதாகி படுக்கையில் இருந்த போதும் வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுகைப் பிதற்றல்" என்னும் நூலை மு.வ உதவியுடன் வெளியிட்டார்.

அவர் மனைவி இறந்த போதும், "நான் தனியாக வாழவில்லை; தமிழோடு வாழ்கிறேன்" எனக் கூறியவர்.

1953 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பதினேழாம் நாள் தமது எழுபத்தோரம் வயதில் இறந்தார்.

**உமர்கய்யாம் பாடல்கள்**

**சொற்பொருள்:**

பகர்வது - சொல்வது

தெளிவீரே - தெளியுங்கள்

துவ்வா - நுகராத

அகன்று - விலகி

ஆழி - கடல்

**இலக்கணக் குறிப்பு:**

நோக்கி - வினையெச்சம்

துவ்வா விடம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**ஆசிரியர் குறிப்பு:**

கவிமணி தேசிக விநாயகனார் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் பிறந்தவர்.

பெற்றோர் - சிவதாணு - ஆதிலட்சுமி அம்மையார்

மொழிபெயர்ப்பு - உமர்கய்யாம் பாடல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். அப்பாடல்களின் தொகுப்பு "உமர்கய்யாம் பாடல்கள்" என்பது.

இவர் கணிதம், வானவியல் ஆகியவற்றில் புலமைமிக்கவர்.

இவரின் கவிதைகள் மக்கள் அடையும் இன்ப துன்பங்களையும், இறைவனது படைப்பையும் பாடுபொருளாகக் கொண்டவை.

உமர்கய்யாம் பதினொன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீக கவிஞர்.

இவரின் முழுப்பெயர் கியதுதின் அபுல்பாத் உமர்கய்யாம் எனபது.

**இயற்றிய நூல்கள்:**

மலரும் மாலையும்

மருமக்கள் வழி மான்மியம்

குழந்தைச் செல்வம்

ஆசிய ஜோதி

காலம்: 1876 - 1954 ஆம் ஆண்டு வரை.

**நூற் குறிப்பு:**

இந்நூல் இம்மை மறுமை பற்றி ரூபாயத் என்னும் பெயரில் உமர்கய்யாம் எழுதிய செய்யுள்களின் மொழி பெயர்ப்பு.

இதனையே கவிமணி மொழிபெயர்த்துள்ளார்.

இதில் நூற்றுப் பதினைந்து பாடல்கள் உள்ளன.

வாழ்க்கைத் தத்துவத்தை இப்பாடல்கள் விளக்குகின்றன.

ரூபாய் என்பது நான்கடிச் செய்யுள்.

**மணிமேகலை**
- சீத்தலைச்சாத்தனார்

**சொற்பொருள்:**

ஆயம் - தோழியர் கூட்டம்

ஆசனம் - இருக்கை

நாத்தொலைவில்லை - சொல் சோர்வின்மை

யாக்கை - உடல்

பிணிநோய் - நீங்கா நோய்

பேதைமை - அறியாமை

செய்கை - இருவினை

உணர்வு - அறிவியல் சிந்தனை

அரு - உருவமற்றது

உரு - வடிவம்

வாயில் - ஐம்பொறிகள்

ஊறு - புலன்களின் இயல்பு

நுகர்வு - இன்பதுன்ப நுகர்ச்சி

வேட்கை - விருப்பம்

பவம் - பயன் நோக்கிய செயல்

தோற்றம் - பிறப்பு

பெரும்பேறு - வீடுபேறு

கொடு - கொம்பு

அலகில - அளவற்ற

தொக்க விலங்கு - விலங்குத்தொகுதி

குரலை - புறம் பேசுதல்

வெஃகல் - பெருவிருப்பம்

வெகுளல் - கடுஞ்சினம் கொள்ளுதல்

பொல்லாக் காட்சி - மாயத் தோற்றம்

சீலம் - ஒழுக்கம்

தானம் - கொடை

புரைதீர் - குற்றம் நீங்கிய

கேண்மின் - கேளுங்கள்

உய்ம்மின் - போற்றுங்கள்

உறைதல் - தங்குதல்

கூற்று - எமன்

மாசில் - குற்றமற்ற

புக்கு - புகுந்து

இடர் - இன்னல்

முத்தேர் நகை - முத்துச் சிரிப்பு

தொழுது - வணங்கி

**இலக்கணக் குறிப்பு:**

தேவியும் ஆயமும் - எண்ணும்மை

அருந்தவர், நல்வினை - பண்புத்தொகை

வாழ்க - வியங்கோள் வினைமுற்று

செய்தவம், வீழ்கதிர் - வினைத்தொகை

பெரும்பேறு - பண்புத்தொகை

ஆழ்நரகு - வினைத்தொகை

பல்லுயிர், நல்லவினை, தீவினை, பேரின்பம் - பண்புத்தொகை

ஆய்தொடி நல்லாய் - இரண்டாம் வேற்றுமா உருபும் பயனும் பயனும் உடன் தொக்க தொகை

காமத்தீ - உருவகம்

கடுஞ்சொல் - பண்புத்தொகை

பொல்லக்காட்சி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

தெளிதல் - தொழிற்பெயர்

பயன் தெரிபுலவர் - வினைத்தொகை

அரைசன் - இடைப்போலி

நல்லறம் - பண்புத்தொகை

**பிரித்தறிதல்:**

எழுந்தெதிர் = எழுந்து + எதிர்

அறிவுண்டாக = அறிவு + உண்டாக

இயல்பீராறு = இயல்பு + ஈறு + ஆறு

நன்மொழி = நன்மை + மொழி

எனக்கிடர் = எனக்கு + இடர்

நல்லறம் = நன்மை + அறம்

தொழுதேத்தி = தொழுது + ஏத்தி

உண்டென்று = உண்டு + என்று

**ஆசிரியர் குறிப்பு:**

மணிமேகலையின் ஆசிரியர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

சாத்தான் என்பது இவரின் இயற்பெயர்.

இவர் திருச்சியில் உள்ள சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர்

தானிய வாணிகம் செய்தவர்.

தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்நூர்புலவன் என்று இளங்கோவடிகள் இவரை பாராட்டியுள்ளார்.

இவரது காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்.

இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவராவர்.

*நூல் குறிப்பு:*

இந்நூல் ஐம்பெரும்காபியங்களுள் ஒன்று.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒரே கதைத் தொடர்புடையவை.

இவை இரண்டும் "இரட்டை காப்பியங்கள்" என அழைக்கப்படும்.

மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் குறுவதனால் இந்நூலுக்கு "மணிமேகலை துறவு" என்ற பெயரும் உண்டு.

இந்நூல் பௌத்த சமயச் சார்பு உடையது.

முப்பது காதைகள் கொண்டது. இருபத்தி நான்காவது காதை என்பது ஆபுத்திரன் நாடு அடைந்த காதை பாடப் பகுதியாக இடம்பெற்றுள்ளது.

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகள் - மணிமேகலை

தீவதிலகையின் உதவியால் அமுத சுரபியைப் பெற்றுப் புகார் நகரை மணிமேகலை அடைந்தாள்.

**ஐம்பெரும்காப்பியங்கள்:**

சிலப்பதிகாரம்

மணிமேகலை

சீவக சிந்தாமணி

வளையாபதி

குண்டலகேசி

**உணவே மருந்து**

தமிழர் மருத்துவத்தில் உணவு என்பது அணைத்து நோய்களையும் தீர்க்கக்கூடிய சஞ்சீவி மருந்தாக கருதப்படுகிறது.

பசியின் கொடுமையை "பசிப்பிணி என்னும் பாவி" என்றது மணிமேகலை காப்பியம்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என மணிமேகலையும் . புறநானூறும் கூறுகின்றன.

திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் உணவே மருந்தாகும் தன்மையை திருவள்ளுவர் தெளிவாக கூறியுள்ளார்.

முன் உண்டது செரித்தது கண்டு உண்பார்க்கு மருந்துண்ணும் தேவை ஏற்படாது என்பது வள்ளுவர் வாக்கு.

நம் நாட்டு சமையலுக்கு புழுங்கல் அரிசியே சிறந்தது.

நோய்க்கு முதல் காரணம் உப்பு.

"மீதூண் விரும்பேல்" என்றவர் ஔவை.

நீரின்றமையாது உலகு எனக் கூறியவர் - வள்ளுவர்.

உடலைக் காத்தலின் தேவையை வலியுறுத்தியவர் - திருமூலரும்.

**அறுசுவையின் பயன்கள்:**

இனிப்பு - வளம்

துவர்ப்பு- ஆற்றல்

கைப்பு - மென்னை

கார்ப்பு - உணர்வு

உவர்ப்பு - தெளிவு

புளிப்பு - இனிமை

**நோய் நீக்கும் மூலிகைகள்**

**கீழக்காய்நெல்லி:**

இதனை கீழாநெல்லி, கீழ்வாய்நெல்லி என்று கூறுவர்.

மஞ்சள் காமாலைக்கு கைகண்ட மருந்தாக பயன்படுகிறது.

இதனை கற்கண்டுடன் சேர்த்து உண்பதால் சிறுநீர்த் தொடர்பான நோய்கள் நீங்கும்.

**துளசி:**

துளசி செயிடின் இலைகளை நீரில்இட்டு கொதிக்க செய்து ஆவி பிடித்தால் மார்புசளி, நார்க்கோவை, தலைவலி நீங்கும்.

துளசி இலைகள் பூசினால் படை நீங்கும்.

**தூதுவளை:**

இது செடி வகை இல்லை, இது கொடி வகையை சேர்ந்தது.

இக்கொடியில் சிறு முள்கள் உண்டு.

இதனை தூதுளை, சிங்கவல்லி என்றும் அழைப்பர்.

வள்ளலார் இதனை "ஞானப்பச்சிலை" என்று கூறுவார்.

இது குரல் வளத்தை மேம்படுத்தும், வாழ்நாளை நீடிக்கும்.

**குப்பைமேனி:**

குப்பைமேனி, நச்சுக்கடிகளுக்கு நல்ல மருந்து.

இதனை "மேனி துலங்க குப்பைமேனி" என்று சிறபிப்பர்.

**கற்றாழை:**

இது வறண்ட நிலத்தாவரம்.

இதனை "குமரி" என்பர்.

பெண்களின் கருப்பை சார்ந்த நோய்களை நீக்குவதால் "குமரி கண்ட நோய்க்கு குமரி கொடு" என்பர்.

**முருங்கை:**

இதனை அரைத்து தடவினால் எலும்பு முறைவி விரைவில் கூடும்.

இரும்பு சத்து நிறைந்துள்லதால் கூந்தலை வளரச் செய்வதில் பெரும் பங்கு உண்டு.

**கறிவேப்பில்லை:**

இது சீதபேதி, நச்சு போன்றவற்றை சரி செய்யும். மணமூட்டி உணவின் மாது விருப்பை உண்டாக்கும்.

**கரிசலாங்கண்ணி:**

இரத்தசோகை, செரிமான கோளாறு, மஞ்சள் காமாலைக்கு சிறந்த மருந்து.

கண் பார்வையை தெளிவாக்கும்

நரையை போக்கும்.

இதனை "கரிசாலை, கையாந்தகரை, பிருங்கராசம், தேகராசம்" என்று கூறுவர்.

மணித்தகாகாளிக்கீரை வாய்ப்புண்ணையும், குடற்புண்ணையும் குணப்படுத்தும்.

அகத்திக்கீரை பல் சார்ந்த நோய்களை குணமாக்கும்.

வல்லாரை நினைவாற்றலை பெருக்க உதவும்.

வெப்ப நாடான நமது நாட்டுச் சமையலுக்குப் புழுங்கலரிசியே ஏற்றது.

மஞ்சள் நெஞ்சிலுள்ள சளியை நீக்கும்.

கொத்துமல்லி - பித்தத்தைப் போக்கும்

சீரகம் - வயிற்றுச் சூட்டைத்தணிக்கும்

மிளகு - தொண்டைக் கட்டைத் தொலைக்கும்

பூண்டு - வளியகற்றி வயிற்றுப்பொருமலை நீக்கிப் பசியை மிகுவிக்கும்

வெங்காயம் - குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்தும்.

பெருங்காயம் - வளியை வெளியேற்றும்.

இஞ்சி - பித்தத்தை ஒடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும்.

தேங்காயை - நீர்க்கோவையை நீக்கும்.

நல்லெண்ணெய் கண் குளிர்ச்சியும் அறிவுத்தெளிவும் உண்டாக்கும்.

**பழமொழி:**

நொறுக்குத் தீனி வயிற்றுக்குக் கேடு

நொறுங்கத் தின்றால் நூறு வயது

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

**திருக்குறள்**

**சொற்பொருள்:**

கடன் - கடமை

சான்றோர் - நல்ல குணங்கள் நிறைந்தவர்

நாண் - நாணம்

ஒப்புரவு - உதவுதல்

கண்ணோட்டம் - உயிர்களிடத்து இரக்கம்

வாய்மை - உண்மை

சால்பு - சான்றாண்மை

ஆற்றுவார் = செயல் செய்பவர்

ஆற்றல் - வலிமை

மாற்றார் -பகைவர்

துலையல்லார் - ஆற்றலில் குறைந்தவர்

கட்டளை - உரைகடல்

இன்னா - தீங்கு

இனிய - நன்மை

செய்யாக்கால் - செய்யாவிடத்து

இன்மை - வறுமை

இளிவன்று - இழிவானதன்று

திண்மை - வலிமை

ஊழி - உலகம்

ஆழி - கடல்

இருநிலம் - பெரிய நிலம்

பொறை - சுமை

**இலக்கணக் குறிப்பு:**

என்ப - பலர்பால் வினைமுற்று

மேற்கொள்பவர் - வினையாலணையும் பெயர்

உள்ளதூஉம் - இன்னிசையளபெடை

அன்று - குறிப்புவினை முற்று

கண்ணோட்டம் - தொழிற்பெயர்

கொல்லா நலத்தது, சொல்லா நலத்தது - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பணிதல் - தொழிற்பெயர்

ஆற்றுவார், மாற்றார் - வினையாலணையும் பெயர்

இன்மை, திண்மை - பண்புப் பெயர்கள்

சான்றவர் - வினையாலணையும் பெயர்

இருநிலம் - உரிச்சொற்றொடர்

மன், ஓ - அசைச்சொற்கள்

**இன்பம்**

**கற்றவர் முன்தாம் கற்ற**

**கல்வியைக் கூறல் இன்பம்**

**வெற்றியை வாழ்வில் சேர்க்கும்**

**வினைபல புரிதல் இன்பம்**

**சிற்றினக் கயவரோடு**

**சேராது வாழ்தல் இன்பம்**

**பெற்றதை வழங்கி வாழும்**

**பெருங்குணம் பெறுதல் இன்பம்**

**சுரதா**

**சொற்பொருள்:**

இசைபட - புகழுடன்

கயவர் - கீழ்க்குணமுடையோர்

**இலக்கணக்குறிப்பு:**

தளிர்க்கை - உவமைத்தொகை

பழந்தமிழ், சிற்றினம், பெருங்குணம் - பண்புத்தொகை

வழங்கி - வினையெச்சம்

கற்றல், பெறுதல், வாழ்தல் - தொழிற்பெயர்

**ஆசிரியர் குறிப்பு:**

உவமை கவிஞர் சுரதா அவர்களின் இயற்பெயர் இராசகோபாலன்.

இவர் நாகை மாவட்டம் பழையனூரில் 23.11.1921 அன்று பிறந்தார்.

பெற்றோர் - திருவேங்கடம், செண்பகம்

பாவேந்தர் பாரதிதாசன் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரை சுப்புரத்தினதாசன் என மாற்றிக்கொண்டார். அதன் சுருக்கமே சுரதா.

**படைப்புகள்:**

தேன்மழை, துறைமுகம்,

சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள்

**நூல் குறிப்பு:**

தேன்மழை நூலில் இயற்கையெழில் முதலாக ஆராய்ச்சி ஈறாகப் பதினாறு பகுதிகளாகக் கவிதைகள் இடம் பெற்றுல்ளன. அவற்றுள் தேன்துளிகள் என்னும் பகுதியில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

**சிறப்பு:**

இவரின் தேன்மழை நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கானப் பரிசை பெற்றுள்ளது.

இவர் கலைமாமணி பட்டத்தையும், தமிழக அரசின் பாவேந்தர் விருதையும் பெற்றுள்ளார்.

குழந்தையின் தளிர்க்கைபட்ட கூழினை உண்பது இன்பம்.

கற்றவர் முன் தாம் கற்ற கல்வியைக் கூறல் இன்பம்

வெற்றியை வாழ்வில் சேர்க்கும் வினைபல பிரிதல் இன்பம்

சிற்றினக் கயவரோடு சேராது வாழ்தல் இன்பம்.

**உரைநடை: பெருந்தலைவர் காமராசர்**

**இளமைப் பருவம்:**

விருதுநகர் மாவட்டத்தில் குமாரசாமி, சிவகாமி தம்பதியருக்கு மகனாய் 1903 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15 ஆம் நாள் பிறந்தார்.

நாட்டாண்மைக்காரராக இருந்த காமராசரின் தாத்தா, பல சமயங்களில் பஞ்சாயத்துக் கூட்டங்களுக்குத் தன்பெயரன் காமராசரையும் அழைத்துச் செல்வார்.

திண்ணைப் பள்ளியில் தமிழ் எழுத்துக்களைக் கற்று, அதன்பிறகு ஓர் ஆண்டு தமிழ்ப்பாடம் கற்றார்.

அவருக்கு பன்னிரண்டு வயதிலேயே கல்வியில் நட்டமில்லாமல் போயிற்று.

**அரசியலில் ஈடுபாடு:**

காமராசர் நாள்தோறும் செய்தித்தாள்களை படித்தும், அரசியல் கூட்டங்களில் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும் தம்முடைய

அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டார்.

"மெய்கண்டான் புத்தகசாலை" என்ற நூலை நிலையத்திற்கு சென்று

இலெனின், கரிபால்டி. நெப்போலியன் போன்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை படித்து திறமையாக பேசவும் வாதம் புரியவும் கற்றுக் கொண்டார்.

இளம் வயதிலேயே தேசிய இயக்கமான காங்கிரசில் சேர்ந்தார்.

சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு முதலிய போராட்டங்களில் கலந்துகொண்டு பதினோராண்டுகள் சிறையில் கழித்தார்.

அவரது தன்னலமற்ற உழைப்பைக் கண்டு தலைவர் சத்தியமூர்த்தி

அவரை கட்சியின் செயலாளராக நியமித்தார்.

காமராசரின் அரசியல் குரு சத்தியமூர்த்தி.

1937இல் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**தலைவர்களை உருவாக்குபவர்:**

1939 ஆம் ஆண்டு தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

12 ஆண்டுகள் அப்பதவியில் செல்வாக்குமிக்க தலைவராகத் திகழ்ந்தார்.

1945இல் பிரகாசம், 1947இல் ஓமந்தூர் இராமசாமி மற்றும் 1949இல் குமாரசாமி ஆகியோர் முதல்வராகப் பதவியேற்பதற்குக் காரணமாக இருந்தார்.

நேருவின் மறைவுக்குப்பின் லால்பகதூர் சாஸ்திரியையும், பகதூர் மறைவுக்கு பின்பு இந்திரா காந்தியையும் நாட்டின் பிரதமராக ஆக்கியதில் இவர் பெரும்பங்காற்றினார்.

பலர் ஆட்சி அமைக்க இவர் காரணமாக இருந்ததால் இவர்

"தலைவர்களை உருவாக்குபவர்" என அழைக்கப்பட்டார்.

**முதல்வர் காமராசர்:**

1954-இல் இராஜாஜி முதல்வர் பதவியில் இருந்து விலகியதும் காமராசர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1963 இல் தாமாகப் பதவி விலகும்வரை அப்பதவியில் திறம்படச் செயல்பட்டார்.

காமராசர் ஆட்சிக் காலத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் தொழில்துறை அமைச்சராகவும், சி.சுப்பிரமணியம் கல்வியமைச்சராகவும் பணியாற்றினார்.

**தொழில் முன்னேற்றம்:**

காமராசர் முதல்வராக இருந்த போது இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

கிண்டி, அம்பத்தூர், ராணிப்பேட்டை முதலிய இடங்களில் பெரிய தொழிற்பேட்டைகளும், மாவட்டந்தோறும் சிறிய தொழிற்பேட்டைகளும் அமைக்கப்பட்டன.

இவர் காலத்தில் கூட்டுறவு இயக்கம் சிறப்பாக நடைபெற்றது.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, கிண்டி அறுவைசிகிச்சைக் கருவித் தொழிற்சாலை,

சர்க்கரை ஆலை, சிமெண்ட் தொழிற்சாலை, பெரம்பூர்த் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலை முதலியன இவரது காலத்தில் தொடங்கப்பெற்றன.

**கல்விப் புரட்சி:**

காமராசர் காலத்தில் கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது.

"தெருதோறும் தொடக்கப்பள்ளி, ஊர்தோறும் உயர்நிலைப்பள்ளி" என்பதே நோக்கமாக அமைந்தது.

பள்ளி வேலைநாள்களை 180 இல் இருந்து 200 ஆக உயர்த்தினார்.

தொடக்கப்பள்ளியில் மதிய உணவுத் திட்டம் இவரால் தொடங்கப்பட்டது.

ஈராண்டுகளில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் 133 நடத்தி, பல கோடி ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள் பெற்று பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை பொருட்கள் வாங்கப்பட்டன.

மருத்துவக்கல்லூரி முதலான தொழிற்கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடனளிக்க ஏற்பாடு செய்தார்.

**சமுக முன்னேற்றத் திட்டங்கள்:**

தஞ்சாவூர்ப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை திருத்தி, சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு அறுபது விழுக்காடு பங்கு கிடைக்க வழிவகை

செய்தார்.

நிலசீர்திருத்தம் இவரால் கொண்டுவரப்பட்டது.

நில உச்ச வரம்பு முப்பது ஏக்கர் எனக் குறைக்கப்பட்டது.

சிறுதொழிலாளர் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மக்கள் நலத்திட்டங்களில் ஓய்வூதியம் முக்கியமானது.

**காமராசர் திட்டம்:**

1962 ஆம் ஆண்டு சீனப்படையெடுப்புக்கு பின், காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு சரியத் தொடங்கியது.

கட்சியை வலுப்படுத்த மூத்த தலைவர்கள் அமைச்சர் பதவியில் இருந்து விலகி கட்சிப்பணியில் ஈடுபட வேண்டும் எனக் காமராசர் திட்டம்

ஒன்றை கொண்டுவந்தார். அத்திட்டமே "காமராசர் திட்டம்" ஆகும்.

முதலில் தாமே முதல்வர் பதவியைவிட்டு விலகிக் கட்சிப்பணிக்குத் திரும்பினார்.

**அகில இந்திய காங்கிரஸ் தலைவர்:**

புவனேசுவர் நகரில் 1963 ஆம் ஆண்டில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் காமராசர் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராகப் பதவியேற்றார்.

நாடெங்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கட்சிப்பூசல்களைப் போக்கி, மக்களிடம் நேரடித் தொடர்புகொண்டார்.

இந்தியப் பிரதமர் நேரு 1964 ஆம் ஆண்டு காலமானார்.

சாஸ்திரி எதிர்பாராதமுறையில் 1966 ஆம் ஆண்டு தாஸ்காண்டில் உயிரிழந்தார். இந்த இரு சமயங்களிலும்ல் புத்தி சாதுர்யமாக செயல்பட்டு பிரதமரை தேர்வு செய்தார்.

அனைத்துக் கட்சியினராலும் மதிக்கப்பெறும் பெருந்தலைவராக உயர்ந்தார்.

**காமராசருக்குச் செய்த சிறப்புகள்:**

காமராசரக்கு நடுவணரசு "பாரத ரத்னா விருது (இந்திய மாமணி)" அளித்துச் சிறப்பித்து,

நாடாளுமன்றத்தில் இவருக்கு ஆளுயர வெண்கலச்சிலையை நிறுவியது.

தமிழக அரசு இவரின் பெயரால்" மதுரை காமராசர் பல்கலைக்கழகம்" எனப் பெயர் சூட்டியது.

கன்னியாகுமரியில் காமராசர் மணி மண்டபம் கட்டப்பட்டது.

சென்னை மெரினா கடற்கரைச் சாலையில் சிலை அமைத்து சிறப்பித்தது.

காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது.

அவரின் விருதுநகர் இல்லமும் அரசுடைமை ஆக்கி நினைவு இல்லமாக்கப்பட்டது.

தேனாம்பேட்டையில் காமராசர் அரங்கம் நிறுவப்பட்டது.

காமராசர் பிறந்த நாளான சூலை 15 ஆம் நாள் ஆண்டுதோறும் "கல்வி வளர்ச்சி நாளாக" தமிழ அரசு அறிவித்துள்ளது.

இவரை "கல்விக் கண் திறந்தவர்" எனத் தமிழுலகம் போற்றுகிறது.

**மறைவு:**

1972 ஆம் ஆண்டு காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**புகழுரைகள்:**

தன்னலமற்ற தலைவர்

கர்மவீரர்

கல்விக்கண் திறந்த முதல்வர்

ஏழைப்பங்காளர்

**நாட்டுப்புறப்பாடல்**

**பாடலின் பொருள்:**

மீனவர்களாகிய எங்களுக்கு விடிவெள்ளிதான் விளக்கு.

பரந்த கடலே பள்ளிக்கூடம்

கடலே எங்களின் உற்ற தோழன்.

மீன்பிடி வலையே படிக்கும் நூல்.

கட்டுமரமே வாழும் வீடு.

காயும் கதிரே வீட்டுக்கூரை.

மேகமே குடை

பிடிக்கும் மீன்களே பொருள்கள்.

இடியும் மின்னுலும் பார்க்கும் கூத்து

வெண்மணலே படுத்துறங்கும் பஞ்சு மெத்தா.

நிலவே முகம் பார்க்கும் கண்ணாடி.

மூச்சடக்கி நீந்துதலே வழிபாடு

வணங்கும் தலைவர் பெருவானம்.

**சொற்பொருள்:**

விரிகடல் - பரந்த கடல்

காயும் ரவிச்சுடர் - சுட்டெரிக்கும் சூரியக்கதிர்

யோகம் - தியானம்

மீனவர்களுக்கு இரவில் விளக்காக விளங்குவது - விடிவெள்ளி

மீன்வலை - மீனவரின் படிக்கும் நூல்

மீனவர் கண்ணடியாகப் பயன்படுத்துவது - முழுநிலவே

மீனவரின் வாழும் வீடு - கட்டு மரம்

**பெண்மே**

**சொற்பொருள்:**

உறுதி - உளஉறுதி

சொரூபம் - வடிவம்

தரணி - உலகம்

தாரம் - மனைவி

சேவை - தொண்டு

அயலார் - உறவல்லாதோர்

**இலக்கணக்குறிப்பு:**

அன்பும் ஆர்வமும் அடக்கமும் - எண்ணும்மை

இன்ப சொரூபம் - உருவகம்

**ஆசிரியர் குறிப்பு:**

கவிஞர் வெ.இராமலிங்கனார், நாமக்கல் மாவட்டம் மோகனூரில் பிறந்தார்.

பெற்றோர் = வெங்கடராமன் - அம்மணி அம்மாள்

தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர்.

இவருக்கு நடுவண் அரசு "பத்ம பூஷன்" விருது வழங்கிச் சிறப்பித்தது.

இவரின் காலம் கி.பி.1888 முதல் 1972 வரை.

இவர் தமிழக மக்களால் காந்தியக் கவிஞர் எனப் பெருமையுடன் வழங்கப் பெற்றார்.

**நூற்குறிப்பு:**

நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் கவிதைத் தொகுப்பில் தெய்வத் திருமலர், தமிழ்த் தேன்மலர், காந்திமலர், தேசிய மலர், சமுதாய மலர், பெரியோர் புகழ் மலர், திருநாள் மலர், சிறுகாப்பிய மலர், இசைமலர், அறிவுரை மலர், பல்சுவை மலர் ஆகிய தலைப்புகளில் கவிதைகள் அமைந்துள்ளன. இப்பாடல், சமுதாய மலர் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

**படைப்புகள்:**

இசை நாவல்கள் - 03

கட்டுரைகள் - 12

தன்வரலாறு - 03

புதினங்கள் - 05

இலக்கியத்திறனாய்வுகள் - 07

கவிதைத் தொகுப்புகள் - 10

சிறுகாப்பியங்கள் - 05

மொழிபெயர்ப்புகள் - 04

**தில்லையாடி வள்ளியம்மை**

**பெற்றோரும் பிறப்பும்:**

வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் உள்ள ஜோகன்ஸ்பார்க் என்னும் நகரில் பிறந்தார்.

இவரின் பெற்றோர் - முனுசாமி, மங்களம்.

இவரின் தாயார் பிறந்த ஊரான தில்லையாடியின் பெயரைக் கொண்டு தில்லையாடி வள்ளியம்மை என்று அழைக்கப்பட்டார்.

**அறப்போர்:**

தென்னாப்பிரிக்க நாட்டில் திருமணப்பதிவுச் சட்டப்படியும், கிறித்துவ மதச் சட்டப்படியும் நடைபெறாத திருமணங்கள் செல்லாது என்று அந்நாட்டு

உச்ச நீதிமன்றம் 1912 ஆண் ஆண்டு வழங்கிய தீர்ப்பை எதிர்த்து காந்தியடிகள் தலைமையில் இந்தியர்கள் அறப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின்போது காந்தியடிகள் நிகழ்த்திய வீரம் செறிந்த உரை, சிறுமி வள்ளியம்மையின் மனதில் ஆழமாகப் பதிந்தது.

1913 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23 ஆம் தேதி வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைபெற்ற அறப்போரில் வள்ளியம்மை கைது செய்யப்பட்டார்.

அவருக்கு தென்னாப்பிரிக்க நீதிமன்றம் 3 மாதம் கடுங்காவல் தண்டனை அளித்தது.

**சிறைவாழ்க்கை:**

சிறையில் வள்ளியம்மைக்கு கல்லும் மண்ணும் கலந்த உணவே தரப்பட்டது.

அவரின் உடல்நலம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

சிறையில் உயிருக்கு போராடிய நிலையில் விடுதலை செய்யப்பட்டார்.

**நாட்டுப்பற்று:**

விடுதலை செய்யப்பட்ட வள்ளியம்மை தமது வீட்டில் படுத்த படுக்கையாக இருந்தார்.

இதனை அறிந்த காந்தியடிகள் அவரை காண வந்தார்.

"சிறைத்தண்டனைக்காக நீ வருந்துகிறாயா?" என்று காந்தியடிகள் அவரிடம் கேட்டார்.

அதற்கு வள்ளியம்மை, "இல்லை இல்லை மீண்டும் சிறை செல்லத் தயார்" என்று கூறினார்.

அத்துடன் இந்தியர்களின் நலனுக்காக எத்தகு இன்னல்களையும் ஏற்பேன் என்றார்.

உடல் நலம் குன்றிய வள்ளியம்மை 1914 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ஆம் தேதி தமது 16 ஆம் வயதில் மரணம் அடைந்தார்.

**காந்தியடிகளின் கருத்து:**

என்னுடைய சகோதரியின் மரணத்தை விடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்குப் பேரிடியாக இருந்தது என்று காந்தியடிகள் மனம் வருந்தினார்.

மாதர்களுக்கு அணிகலன்களாகத் திகழும் துன்பத்தைத் தாங்கும் மனவலிமை, தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்.

அவருடைய தியாகம் வீண் போகாது.

சத்தியத்திற்காக உயிர் நீத்த அவருடைய உருவம் என கண்முன் நிற்கிறது.

நம்பிக்கை தான் அவரது ஆயுதம்" என்று வள்ளியம்மை குறித்து "இந்தியன் ஒப்பீனியன்" இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார்.

தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் "தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகம்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**அரசு செய்த சிறப்புகள்:**

தில்லையாடி - நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருக்கடையூருக்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

தில்லையாடியில் தமிழக அரசு அவரது சிலையை நிறுவி உள்ளது.

கோ-ஆப்-டெக்ஸ் என்று அழைக்கப்படும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் சென்னையில் உள்ள தனது 600வது விற்பனை மையத்திற்கு

"தில்லையாடி வள்ளியம்மை மாளிகை" என்று பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தி உள்ளது.

சென்னை, வண்டலூர் உயிரியல் பூங்காவில் பிறந்த பெண்புலிக்குட்டிக்கு தமிழக முதல்வர், தில்லையாடி வள்ளியம்மை நினைவாக "வள்ளி" எனப்

பெயரிட்டார்.

தில்லையாடி வள்ளியம்மை நினைவைப் போற்றி நடுவணரசு, அஞ்சல்தலையும் அஞ்சல் உறையும் வெளியிட்டுள்ளது.

**இராணி மங்கம்மாள்**

தமிழ்நாட்டில் நாயக்கர் மரபில் பெண்கள் முடிசூடி ஆட்சி செய்ததாக வரலாறு இல்லை.

காப்பாட்சியாளராக ஆட்சி புரிந்து உள்ளனர்.

மதுரையை ஆண்டு வந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி இராணி மங்கம்மாள்.

இராணி மங்கம்மாளின் கணவர் இறந்தபோது அவர் மகன் அரங்க கிருஷ்ணமுத்துவீரப்பன் இளம் வயதினனாக இருந்தான், அவனுக்கு துணையாக இருக்க வேண்டும் என்னும் கடமை உணர்வினால் இராணி மங்கம்மாள் உடன்கட்டை ஏறவில்லை.

மங்கம்மாள் தனது மகன் அரங்க கிருஷ்ணமுத்துவீரப்பனுக்குத் திருமணம் செய்வித்த பின்னர் முடிசூட்டினார்.

அரசாட்சியை அடக்கத்தோடும் தந்திரத்தோடும் நாம் நோக்கவேண்டும்; முன்கோபமும் அதன் விளைவும் அரசியலில் ஒருபோதும் வெற்றியைத் தராது.

பகைவரை எதிர்கொள்ள எப்போதும் ஆய்த நிலையில் இருப்பதோடு மிகுந்த பொறுமையுடனும் செயல்பட வேண்டும்" என அறிவுரை கூறினார்.

முத்துவீரப்பன், "நேர்மையை காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை" என்ற கொள்கையுடன் ஆட்சி புரிந்தான்.

முத்துவீரப்பன் இறந்த சில நாட்களில் அவன் மனைவி சின்னமுத்தம்மாள் ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்து, சில நாட்களில் அவரும் இறந்தார்.

முத்துவீரப்பன் ஏழாண்டுக்காலம் ஆட்சி செய்தார்.

அம்மைநோயால் பாதிக்கப்பட்டு உலக வாழ்வை நீத்தார்.

கி.பி.1688 ஆண் ஆண்டு பெயரன் விசயரங்கச் சொக்கநாதன் பெயரளவில் அரியணை ஏற்றப்பட்டான்.

பாட்டி மங்கம்மாள் காப்பாட்சியாளராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்.

அரசியல் பட்டறிவும், ஆட்சிப் பொறுப்பும் இராணி மங்கம்மாளின் மனத்தைக் கல்லாக்கியிருந்தன.

கி.பி. 1688 ஆம் ஆண்டு பெயரன் விசயரங்கச் சொக்கநாதன் பெயரளவில் அரியணையில் ஏற்றப்பட்டான.

மங்கம்மாள் துயரங்களைத் தாங்கிக்கொண்டு ஆட்சிக் கடமைகளை அழகுற ஆற்றக்கூடிய வீராங்கனை என மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்.

திருவிதாங்கூரின் மன்னர் - இரவிவர்மா

இராணி மங்கம்மாள் காலத்தில் மைசூர் மன்னன் - சிக்கதேவராயன்

முகலாய பேரரசர் அவுரங்கசீப் தனது தக்கான நடவடிக்கை மேற்கொண்டிருந்த நேரம் மங்கம்மாள் பெரும் செல்வம் அவர்களுக்கு கொடுத்து தனது ஆட்சியை காப்பாற்றிக்கொண்டார்.

முகலாயரின் உதவியோடு மராத்தியர்களிடம் இழந்த சில பகுதிகளை மீட்டார்.

தளபதி நரசயப்பர் தலைமையில் மங்கம்மாள் அனுப்பிய படை திருவிதாங்கூர் மன்னர் இரவிவர்மாவை தோற்கடித்து வெற்றி பெற்றனர்.

தளபதி நரசப்பையன் தலைமையில் மங்கம்மாள் அனுப்பிய படை திருவிதாங்கூர் மன்னர் இரவிவர்மாவை தோற்கடித்து வெற்றி பெற்றனர்.

தளபதி நரசப்பையன் தலைமையில் சென்ற படை தஞ்சை மராத்திய மன்னர் ஷாஜியை தோற்கடித்து, தஞ்சை அமைச்சர் பாலாஜி பண்டிதரிடம் இருந்து பெரும் பொருள்களை பெற்றுவந்தது.

மைசூர் மன்னர் சிக்கதேவராயன் காவிரியின் குறிக்கே அணைகட்டிய போது, அவரை மங்கம்மாள் எதிர்த்தார்.

மங்கம்மாளுக்கு துணையாக தஞ்சை மராட்டியர் உதவினார்.

அச்சமயம் பெரும் மழைப் பொழிவால் அணைகள் உடைந்தன. சிக்கல் தற்காலிகமாக முடிவடைந்தது.

ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாக கருதும் சமயத்தைக் கைக்கொண்டு வாழவிடுவதே தருமம் என்ற கொள்கையை மங்கம்மாள் பின்பற்றினார்.

சமயத் தொடர்பாக சிறை வைக்கப்பட்ட மெல்லோ பாதிரியாரை விடுதலை செய்து, போசேத் என்ற குருவைத் தம் அரசவையில் வரவேற்று விருந்தோம்பினார்.

மதுரையில் பெரியதொரு அன்னச்சத்திரத்தைக் கட்டினார்.

இவர் பல சாலைகளை அமைத்தார். கன்னியாகுமரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை, "மங்கம்மாள் சாலை" எனப்படுகிறது.

ஆணித்திங்களில் "ஊஞ்சல் திருவிழா" நடத்தினார்.

மங்கம்மாள் மத்தியச் சந்தை, மதுரைக் கல்லூரி, உயர்நிலைப்பள்ளிக் கட்டடம், இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவரின் பழைய அலுவலகம் போன்றவற்றை கட்டினார்.

மங்கம்மாளின் பெயர் மங்காத புகழோடு விளங்கும்.

## இரட்சணிய யாத்திரிகம்

எச்.ஏ கிருட்டினனார்

இறை மகனாகிய இயேசு பெருமான் பெத்தலகேமில் மரியன்னைக்கு மகனாகப் பிறந்தார்.

இயேசு பெருமானின் தந்தை - சோசப்

குழந்தை இயேசுவை, ஏரோது மன்னனின் கொடுமையிலிருந்து காப்பாற்றும் பொருட்டுத், தந்தை சோசப்பும் தாய் மரியன்னையும் குழந்தையோடு எகிப்துக்குச் சென்றனர்.

இயேசு யூதேய காட்டிலிருந்து புனித யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார்.

இயேசுவைக் காட்டிக் கொடுத்தவர் - யூதாசு

இயேசு, யூதேய மரபுகளை மீறினார் எனப் பொய்க் குற்றஞ் சாட்டி, பிலாந்து மன்னன் மரணதண்டனை விதித்தான்.

இயேசுவின் தோள்களில் சிலுவையினைச் சுமத்தித் துன்புறுத்திக் கல்வாரிமலைக்குக் கொண்டு சேர்த்தனர்.

**சொற்பொருள்:**

ஈண்டு - இவ்விடம்

புகல்வது - சொல்வது

காண்டகு - காணத்தக்க

இருப்பாணி - இரும்பு ஆணி

கடாவினார் - அடித்தார்

கீண்டு - தோண்டி

செற்றம் - சினம்

குருசு - சிலுவை

சொற்ற - சொன்ன

துளக்கம் - விளக்கம்

சுருதிமுதல் - மறை முதல்வராகிய இயேசுநாதர்

சதைப்புண்டு - சிதைக்கப்பட்டு

பன்னரிய - சொல்லுதற்கரிய

பலபாடு - பல துன்பம்

இரும்பொறை - பெரும்போறுமை

வித்தகன் - ஆண்டவன்

தொழும்பர் - அடியார்

இசைபெறுதல் - புகழ்பெறுதல்

துஞ்சினவர் - உறங்கியவர்

கீண்டு - பிளந்து

இருப்புமுனை - ஆணியின் நுனி

வதைப்புண்டு - துன்பமடைந்து

மாண்டுபடும்போது - இறக்கும்நிலையில்

இரட்சகர் - காப்பவர்

மன்றாடும் - மிக வேண்டுதல்

ஆகடியம் - ஏளனம்

**இலக்கணக்குறிப்பு:**

செங்கை, சேவடி, வெவ்விருப்பு - பண்புத்தொகைகள்

இருப்பாணி - வலித்தல் விகாரம்

கனிவாய் - உவமைத்தொகை

வன்மறவோர் பண்புத்தொகை

**பிரித்தறிதல்:**

ஈண்டினியான் - ஈண்டு+இனி+யான்

காண்டகு - காண் + தகு

சேவடி - செம்மை + அடி

வெவ்விருப்பாணி - வெம்மை + இரும்பு+ ஆணி

மற்றிரண்டு - மற்று+இரண்டு

குருசேற்றி - குருசு + ஏற்றி

தன்னரிய - தன் + அரிய

தவிப்பெய்தி - தவிப்பு + எய்தி

இத்தகைய - இ+தகைய

மனநலம் - மனம் + நலம்

எடுத்துரைக்கும் - எடுத்து + உரைக்கும்

ஈண்டிவரே - ஈண்டு + இவரே

இருப்புமுனை - இரும்பு

எழுத்திட்டார் - எழுத்து + இட்டார்

என்றாகடியமான - என்று + ஆகடியம் + ஆன

பங்கிட்டார் - பங்கு + இட்டார்

**ஆசிரியர் குறிப்பு:**

இரட்சணிய யாத்திரக நூலாசிரியர் எச்.ஏ.கிருட்டினனார். திருநெல்வேலி மாவட்டத்தில்லுள்ள கரையிருப்பு என்னும் ஊரில் 1827 ஏப்ரல் 23 ஆம் தேதி பிறந்தார்.

தந்தை - சங்கர நாராயணர் பெரும் புலவராக விளங்கினார்.

அன்னையார் - தெய்வ நாயகி அமமாள்.

இவர்கள் ரெட்டியாபட்டியில் வாழ்ந்தவர்கள். பிறகு கரையிருப்பு சென்று வாழ்ந்த கிருட்டினனார், 30வது வயது தம் பெயரை எச்.ஏ.கிருட்டினனார் என மாற்றிக் கொண்டார்.

தந்தையிடம் தமிழ் இலக்கியங்களையும், மாணிக்கவாசகத்தேவரிடம் இலக்கணங்களையும், பிலவணச் சோதிடரிடம் வடமொழியையும் கற்றார்.

சாயர்புரம் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம். இரட்சணியக்குறள் என்னும் நூல்களையும் இயற்றினார்.

கிறித்துவக் கம்பர் எனப் புகழ்பெற்ற பெருங்கவிஞர் 1900 ஆண் ஆண்டு பிப்ரவரி 3 ஆண் தேதி இயற்கை எய்தினார்.

நூற்குறிப்பு:

இரட்சணியயாத்திரிகம் என்பதன் பொருள் (உயிர், தன்னைக் காக்க வேண்டி) இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் என்பது, ஆன்ம ஈடேற்றத்தை விரும்புபவர் என்பதும் பொருந்தும்.

ஜான் பன்யன் என்னும் புகழ்பெற்ற ஆங்கில நூலாசிரியர் இயற்றிய பிலிகிரிம்ஸ் புரோகிரஸ் என்னும் நூலைத்தழுவி ஹென்றி ஆல்பர்ட்டு கிருட்டினனார் வழிநூலாகத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெயரில் இயற்றினார்.

**பொங்கல் திருவிழா**

தமிழர் திருநாள் - பொங்கல் விழா, தைத்திங்கள் நாள் விழா, தமிழினத்தின் தனி விழா, பண்பாட்டுப் பெருவிழா.

வளமையின் அடையாளமே - அறுவடைக் காலம்

வீடும், நாடும் தூய்மைப்படுகிற சுற்றுப்புறச் சூழலைப் போற்றுகின்ற இனிய திருநாள் - போகித் திருநாள்

உழவுக்கு உறுதுணையான மாடுகளை நன்றியுணர்வோடு மதித்துப் போற்றிடும் திருநாள் - மாட்டுப் பொங்கல்

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரிடத்தில் நிலைத்து உழவுத் தொழில் செய்து, பண்பட்ட நாகரிக வாழ்வை மேற்கொண்டவர்கள் - தமிழர்கள்

ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் மகர சங்கராந்தி எனவும், ஜப்பான் ஜாவா முதலிய நாடுகளில் அறுவடைத் திருவிழா எனவும் கொண்டாடப்படுகிறது.

தமிழகம் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, மொரீசியது, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற கடல் கடந்த நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

**ஓய்வும் பயனும்**

அறிவியல் ஆய்வு செய்வாய் - நீ

அன்றாடச் செய்தி படிப்பாய்!

செறிவுறும் உன்றன் அறிவு - உளச்

செழுமையும் வலிவும் பெறுவாய்!

மருத்துவ நூல்கள் கற்பை - உடன்

மனநூலும் தேர்ந்து கற்பாய்!

திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய் -வருந்

தீமையடையும் பொய்யும் களைவாய்!

-பெருஞ்சித்திரனார்

**ஆசிரியர் குறிப்பு:**

பாவலேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் இயற்பெயர் துரை.மாணிக்கம்

இவர் சேலம் மாவட்டம் சமுத்திரம் பகுதியை சேர்ந்தவர்.

பெற்றோர் - துறைசாமி, குஞ்சம்மாள்

10.03.1933 அன்று பிறந்த இவர் 11.06.1995 ஆம் தேதி மறைந்தார்.

கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள் மூலம் தமிழ் உணர்வை ஊட்டினார்.

**எதிர்காலம் யாருக்கு?**

**ஆசிரியர் குறிப்பு:**

மீரா என்னும் பெயர் மீ.இராசேந்திரன் என்பதன் சுருக்கமே.

இவர் சிவகங்கையில் பிறந்தார்.

தாம் படித்த சிவகங்கை கல்லூரியில் பேராசிரியராகவும், முதல்வரகாகவும் பணியாற்றினார்.

மூன்றும்ஆறும், கோடையும் வசந்தமும், ஊசிகள், கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், குக்கூ ஆகிய கவிதை நூல்களையும், வா இந்தப்பக்கம், மீரா கட்டுரைகள் ஆகிய கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார்.

தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு, பாவேந்தர் விருது, சிற்பி இலக்கிய விருது, தமிழ் சான்றோர் பேரவை விருது போன்ற பரிசுகளை வென்றுள்ளார்.

**வஞ்சகமாய் நெஞ்சமோடு மோதல்**

வஞ்சமாய நெஞ்சமோடு மொழிதல் என்ற பாடலை எழுதியவர் - மதுரகவி பாஸ்கரதாஸ்

**இலக்கணக்குறிப்பு:**

மனக்குரங்கு - உருவகம்

நாடுநகர் - உம்மைத்தொகை

செம்பொன் - பண்புத்தொகை

மாடும்ஆடும் - எண்ணும்மை

**ஆசிரியர் குறிப்பு:**

பாஸ்கரதாஸ் மதுரை நகரில் பிறந்தவர்

இவர் இனிய இசையமைப்பால் புதிய பல இசையுருக்களை அமைத்தவர்.

இசைப்புலமையுடன் நாடகப்புலமையும் பெற்றவர்.

நாடக மேடைகளில் விடுதலைப் பாடல்களை இசைத்தவர்.

இவரின் பாடல்களைக் கேட்ட காந்தியடிகள் இவரை பெரிதும் பாராட்டினார்.

இவரைச் சிறப்பிக்கும் வகையில் மதுரையில் இவர் வாழ்ந்த பகுதிக்கு மதுரகவி பாஸ்கரதாஸ் நகர் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இவரின் காலம் கி.பி. 1892 - 1952 வரை.

பாடப்பகுதியில் உள்ள பாடல் மதுகைவி பாஸ்கரதாஸ் கீர்த்தனைகளின் இரண்டாம் பாகத்தில் இடம் பெற்றுள்ளது.

**திருவிளையாடல்புராணம்**

**சொற்பொருள்:**

வையை நாடவன் - பாண்டியன்

உய்ய - பிழைக்க

இறந்து - பணிந்து

தென்னவன் குலதெய்வம் - சொக்கநாதன் (அ) சுந்தரபாண்டியன்

இறைஞ்சி - பணிந்து

சிரம் - தலை

மீனவன் - மீன் கொடியை உடைய பாண்டியன்

விபுதர் - புலவர்

தூங்கிய - தொங்கிய

பொற்கிழிய - பொன்முடிப்பு

நம்பி - தருமி

பைபுள் - வருத்தம்

பனவன் - அந்தணன்

கண்டம் - கழுத்து

வழுவு - குற்றம்

சீரணி - புகழ் வாய்ந்த

வேணி - செஞ்சடை

ஓரான் - உணரான்

குழல் - கூந்தல்

ஞானப்பூங்கோதை - உமையம்மை

கற்றைவார் சடையன் = சிவபெருமான்

உம்பரார் பத்தி - இந்திரன்

நுதல் - நெற்றி

ஆய்ந்த நாவலன் - நக்கீரன்

காய்ந்த நாவலன் - இறைவன்

**இலக்கணக்குறிப்பு:**

உரைத்து, இரந்து - வினையெச்சம்

சொல்லி, இறைஞ்சி - வினையெச்சம்

மகிழ்ச்சி - தொழிற்பெயர்

தூங்கிய, ஆய்ந்த - பெயரெச்சம்

நேர்ந்து - வினையெச்சம்

கொண்டு, வைத்து - வினையெச்சம்

தேரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பனைமலர் - வினைத்தொகை

பற்றுவான், அஞ்சான் - வினையாலணையும் பெயர்

குற்றம் - தொழிற்பெயர்

தேய்ந்த, பாய்ந்த, ஆய்ந்த, காய்ந்த - பெயரெச்சம்

விழுந்து - வினையெச்சம்

வம்மை - பண்புத்தொகை

**ஆசிரியர் குறிப்பு:**

பரஞ்சோதி முனிவர் நாகை மாவட்டம் திருமறைக்காடு (வேதாரண்யம்) என்னும் ஊரில் பிறந்தார்.

தந்தை - மீனாட்சி சுந்தர தேசிகர்

மதுரை நகரத்தார் வேண்டுகோளுக்கு இணங்க, திருவிளையாடல்புராணம் இயற்றினார்.

இந்நூலை சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் அரங்கேற்றினார்.

இவர், திருவிளையாடல் போற்றிக்கலிவெண்பா, மதுரைப் பதிற்றுபத்துதந்தாதி ஆகிய நூல்களையும், வேதாரண்ய புராணம் என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் இயற்றினார்.

**நூல் குறிப்பு:**

திருவிளையாடல் புராணம், கந்தபுராணத்தின் ஒரு பகுதியான ஆலாசிய மான்மியத்தை அடிப்படையாக கொண்டது.

இந்நூல் மதுரைக்காண்டம் (18 படலம்), கூடற்காண்டம் (30 படலம்), திருவாலவாய்க்காண்டம்(16 படலம்) என்னும் முப்பெரும் பகுதிகளை உடையது.

இந்நூலின் 3363 விருதப்பாக்கள் உள்ளன.

இந்நூலில் இறைவனின் 64 திருவுளையாடல்கள் கூறப்பட்டுள்ளன.

ந.மு.வேங்கடசாமி இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

பத்தாம் வகுப்பு

**கடவுள் வாழ்த்து**

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்

கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்

பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும்

கைதான் நெகிழ விடேன்உடை யாய் என்னைக் கண்டுகொள்ளே"

மாணிக்கவாசகர்

**சொற்பொருள்:**

மெய் - உடல்

விதிவிதிர்த்து - உடல் சிலிர்த்து

விரை - மணம்

நெகிழ - தளர

ததும்பி - பெருகி

கழல் - ஆண்கள் காலில் அணியும் அணிகலன்

சயசய - வெல்க வெல்க

**இலக்கணக்குறிப்பு:**

விடேன் -  தன்மை ஒருமை வினைமுற்று

ஆசிரியர் குறிப்பு:

சைவ சமயக்குரவர் நால்வரில் ஒருவர்.

திருவாதவூரில் பிறந்தவர். இவ்வூர் மதுரைக்கு அருகில் உள்ளது.

இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக பணிப் புரிந்தார்.

திருப்பெருந்துறை இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர்.

இவரை "அழுத்து அடியடைந்த அன்பர்" என்பர்.

திருவாசகமும் திருகொவையாரும் இவர் அருளியவை.

இவர் எழுப்பிய கோவில், தற்போது "ஆவுடையார் கோவில்" என வழங்கப்படும் திருப்பெருந்துறையில் (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ளது.

**நூல் குறிப்பு:**
* சைவத் திருமுறைகளில் எட்டாவது திருமுறை இவரின் திருவாசகமும் திருகோவையாரும் ஆகும்.
திருவாசகத்தில் 658 பாடல்கள் உள்ளன.

திருவாசகத்தை சிறப்பிக்க, "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்னும் தொடர் வழங்கலாயிற்று.

திருவாசகத்தை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

சதகம் என்பது நூறு பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும்.

**ஜி.யு.போப்:**
உலக வரலாற்றிலேய் மேதையான மாணிக்கவாசகரை விடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனதை கவர்கின்றவர் யாரும் இல்லை" என்கிறார் ஜி,யு.போப்.

## திருக்குறள்

**சொற்பொருள்**

விழுப்பம் - சிறப்பு

ஓம்பப்படும்  - காத்தல் வேண்டும்

பரிந்து - விரும்பி

தேரினும் - ஆராய்ந்து பார்த்தாலும்

குடிமை - உயர்குடி

இழுக்கம் - ஒழுக்கம் இல்லாதவர்

அழுக்காறு - பொறாமை

ஆகம் - செல்வம்

ஏதம் - குற்றம்

எய்துவர் - அடைவர்

இடும்பை - துன்பம்

வித்து - விதை

ஒல்லாவே - இயலாவே

ஒட்ட - பொருந்த

ஒழுகல் - நடத்தல்

கூகை - கோட்டான்

இகல் - பகை

திரு - செல்வம்

தீராமை - நீங்காமை

பொருதகர் - ஆட்டுக்கடா

சேருவர் - பகைவர்

சுமக்க - பனக

கிழக்காந்தலை - தலைகீழ் (மாற்றம்)

எய்தற்கு - கிடைத்தற்கு

கூம்பும் - வாய்ப்பற்ற

**இலக்கணக்குறிப்பு**

ஒழுக்கம் - தொழிற்பெயர்

காக்க - வியங்கோள் வினைமுற்று

பரிந்து, தெரிந்து - வினையெச்சம்

இழிந்த பிறப்பு - பெயரெச்சம்

கொளல் - அல் ஈற்றுத் தொழிற்பெயர்

உடையான் - வினையாலணையும் பெயர்

உரவோர் - வினையாலணையும் பெயர்

எய்தாப் பழி - ஈறு கேட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

நல்லொழுக்கம் - பண்புத்தொகை

சொலல் - தொழிற்பெயர்

அருவினை - பண்புத்தொகை

அறிந்து - வினையெச்சம்

**ஆசிரியர் குறிப்பு:**

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்

தமிழுலகம் இவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர், பெருநாவல் முதலிய பெயர்களால் போற்றுகின்றது.

பிறப்பொக்கும் எல்லா உயிரிக்கும் என்னும் பொது நெறி காட்டியவர்.

இவரின் காலம் கி.மு.31 ஆம் நூற்றாண்டு என்பர்.

தமிழக அரசு தைத்திங்கள் இரண்டாம் நாள் திருவள்ளுவர் நாளாக அறிவித்து கொண்டாடுகிறது.

**நூல் குறிப்பு:**

திரு + குறள் = திருக்குறள்

உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது.

இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலாகவும், ஒன்பது இயல்களையும், 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் கொண்டது.

"வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகம்" என்றும், "இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே" என்றும் பாவேந்தர் போற்றுகின்றார்.

மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812 இல் திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்து தஞ்சையில் வெளியிட்டார்.

**ஏலாதி**

கணிமேதாவியார்

**சொற்பொருள்:**

வணங்கி - பணிந்து

மாண்டார் - மாண்புடைய சான்றோர்

நுணங்கிய நூல் - நுண்ணறிவு நூல்கள்

நோக்கி - ஆராய்ந்து

**இலக்கணக்குறிப்பு:**

நூல்நோக்கி - இரண்டாம் வேற்றுமைத்தொகை

பலியில்லா மன்னன் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம

**பிரித்தறிதல்:**

வழியொழுகி = வழி + ஒழுகி

**ஆசிரியர் குறிப்பு:**

ஏலாதியை இயற்றியவர் கணிமேதாவியார்.

இவர் சமண சமயத்தை சார்ந்தவர்.

காலம் கி.பி.5 ஆம் நூற்றாண்டு.

இவர், திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

**நூல் குறிப்பு:**

இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட 81 வெண்பாக்களைக் கொண்டுள்ளது.

ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றால் ஆன மருந்துக்கு ஏலாதி எனப் பெயர்.

**உரைநடை: உயர்தனிச் செம்மொழி**

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்:**

**"வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்**

**வேரூன்றிய நாள்முதல் உயரிமொழி**"

என்று தமிழின் பெருமையைப் போற்றுகிறார் பெருஞ்சித்திரனார்.

**செம்மொழியின் இலக்கணம்:**

"திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்" என்று பரிதிமாற்கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

**பாவாணர் கூற்று:**

தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை என வரும் 16 செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி; அதுவே நம்மொழி என்பார் பாவாணர்.

**முஸ்தபாவின் செம்மொழி தகுதிப்பாடுகள்:**
தொன்மை, பிறமொழித் தாக்கமின்னை, தாய்மை, தனித்தன்மை, இலக்கிய வளமும்

இலக்கியச் சிறப்பும், பொதுமைப் பண்பு, நடுவுநிலைமை, பண்பாடு கலை பட்டறிவு வெளிப்பாடு, உயர்சிந்தனை, கலை இலக்கியத் தனித்தன்மை வெளிபாடு, மொழிக் கோட்பாடு எனப் 11 தகுதிகளை அறிவியல் தமிழறிஞர் முஸ்தபா வரையறுத்துள்ளார்.

**தொன்மை:**

* முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரிக் கண்டம். அவன் பேசிய மொழி தமிழ் மொழியே என்பர்.

உலகம் தோன்றிய போதே தோன்றிய தமிழை, அதன் தொன்மையைக் கருத்து "என்றுமுள தென்தமிழ்" என்பார் கம்பர்.

**பிறமொழித் தாக்கமின்மை:**

பிறமொழி சொற்களை நீக்கினால் பல மொழிகள் இயங்காது.

அதனால், தமிழ் ஒன்றோ பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் இனிதின் இயங்கவல்லது.

**தாய்மை:**

தமிழ் மொழியானது திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்கிறது.

தமிழ் மொழி பிராகுயி முதலான வடபுல மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது என்பார் கால்டுவெல்.

1090 மொழிகளுக்கு வேர்ச்சொல்லையும், 109 மொழிகளுக்கு உறவுப்பெயர்களையும் தந்துள்ளது தமிழ்.

**தனித்தன்மை:**

இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைத் கொண்டது தமிழ்.

தமிழர் அகம், புரம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்துள்ளனர்.

திருக்குறள், மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்துள்ளது.

**இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு:**

உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள்.

இவற்றின் மொத்த அடிகள் = 26350

அக்காலத்தே இவ்வளவிற்கு "விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகின் வேறு எம்மொழியிலும் இல்லை" என்பது உலக இயக்கியங்களை ஆய்ந்த "கமில்கவலபில்" என்னும் செக் நாடு மொழியியல் அறிஞரின் முடிவு.

மாக்சுமுல்லர் என்னும் மொழி நூலறிஞரோ தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டி இருக்கின்றனர்.

சங்க இலக்கியங்கள் "மக்கள் இலக்கியங்கள்" எனப்படும்.

தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்கச் சவிருப்பதை உண்டாக்குவது" என்பார் கெல்லட்.

நமக்கு கிடைத்த இலக்கண நூல்களுள் மிகவும் பழமையானது தொல்காப்பியம்.

தொல்காப்பியம் மூன்று இலக்கணங்களை கூறியுள்ளார். அவரின் அகத்தியர் ஐந்து இலக்கணங்களை கூறியுள்ளார்.

**பொதுமைப் பண்பு**

தமிழர் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்தவர்கள்.

செம்புலப் பெயல்நீர்போல அன்புள்ளம் கொண்டவர்கள்.

**நடுவுநிலைமை:**

சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை

இயற்கையோடு இணைந்தவை.

மக்கள் சிற்ப்புடன் வாழ ஏற்ற கருத்துக்களை மொழிபவை.

**பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு:**

சங்கப்படைப்புகள், "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம், பிறன்மனை நோக்காப் பேராண்மை" முதலிய பண்பாட்டு நெறிமுறைகளையும் வெளிப்படுத்துகிறது.

**உயர் சிந்தனை:**

யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என உலக மக்களை ஒன்றினைந்து உறவுகளாக்கிய உயர்சிந்தனை மிக்கது புறநானூறு.

"பிறப்பொக்கும் எல்லா உயிரிக்கும்" எனத் திருக்குறள் உலகுக்கு எடுத்துரைக்கிறது.

**கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு:**

தமிழ்ச்சான்றோர் மொழியை, "இயல், இசை, நாடக" எனப் பிரிந்து வளமடையச் செய்தனர்.

எளிய குடிமகனையும் குடிமகளையும் காப்பியத் தலைவர்களாக்கிக் காப்பியம் படைத்தனர்.

**மொழிக் கோட்பாடு:**

"இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது" என்பார் முனைவர் எமினோ.

ஒருமொழி 35 ஒலிகள் இருந்தாலே போதும் என்பர், ஆனால் தமிழோ 500 ஒலிகளைக் கொண்டுள்ளது.

**செம்மொழி:**

சிறப்புமிக்க தமிழைச் "செம்மொழி" என அறிவித்தல் வேண்டும் என்ற  முயற்சி 1901 இல் தொடங்கி 2004 தொடர்ந்து.

நடுவண் அரசு 2004 ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழைச் செம்மொழியாக அறிவித்துள்ளது.

**துணைப்பாடம்: பரிதிமாகலைஞர்**

**பிறப்பு:**
* சூரிய நாராயண சாஸ்திரி என்னும் தம் பெயரைப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழாக்கிக் கொண்டவர்.
மதுரை அடுத்த விளாச்சேரியில் பிறந்தார்.

பெற்றோர் = கோவிந்தசிவனார், இல்ட்சுமி அம்மாள்.

தம் பெற்றோருக்கு மூன்றாவது மகனாக, 1870 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஆறாம் தேதி பிறந்தார்.

**கல்வி:**

தந்தை கோவிந்த சிவனாரிடமே வடமொழி பயின்றார்.

மகாவித்துவான் சபபதியாரிடம் தமிழ் பயின்றார்.

சென்னை கிறித்துவக் கல்லூரியில் இளங்கலை பயின்றார்.

இளங்கலை தேர்வில் தமிழிலும் தத்துவத்திலும் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார்.

**இயற்றமிழ் மாணவர்:**

தமிழ் பயிலும் ஆர்வம் மிக்க மாணவர்களுக்குத் தம்முடைய இல்லத்திலேயே தமிழ் கற்பித்தவுடன், அவர்களை "இயற்றிமிழ் மாணவர்" எனப் பெயரிட்டு அழைத்தார்.

**மதுரைச் தமிழ்ச்சங்கம்:**

மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ முயன்றவர்களுள் இவரும் ஒருவர்.

பாசுகரசேதுபதி தலைமையில் பாண்டித்துரை தேவர் மேற்பார்வையில் பரிதிமாற்கலைஞர், உ.வே.சாமிநாதர், இராகவனார் ஆகிய பேராசிரியர்களின் துணையோடு மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது.

**திராவிட சாஸ்திரி:**

யாழ்பாணம் சி.வை.தாமோதரனார், பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப் புலமையும் கவிபாடும் திறனையும் கண்டு, "திராவிட சாஸ்திரி" என்னும் சிறப்புப் பட்டதை வழங்கினார்.

**தனிப்பாசுரத்தொகை:**

பரிதிமாற்கலைஞர், தாம் இயற்றிய "தனிப்பாசுரத்தொகை" என்னும் நூலில் பெற்றோர் இட்ட சூரியநாரா.ண சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரை மாற்றிப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழ் பெயரைச் சூட்டிக்கொண்டார்.

இந்நூலினை, ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

**கம்பராமாயண உவமை:**

பரிதிமாற் கலைஞர் சென்னைக் கிறித்துவ கல்லூரியில் படித்தபோது நடந்த நிகழ்வு.

கல்லூரி முதல்வரும் ஆங்கிலப் பேராசிரியருமான வில்லியம் மில்லர் என்பவர் டென்னிசன் இயற்றிய "ஆர்தரின் இறுதி"என்னும் நூலில் இருந்து ஒரு பாடலில் படகின் துடுப்பு அன்னப்பறவைக்கு உவமையாக கூறப்பட்டது.

தமிழில் இது போன்ற உவமைகள் உண்டா என அவர் கேட்க, பரிதிமாற் கலைஞர் கம்பராமாயண குகப்படலத்தில் உள்ள"விடுநனி கடிது" என்னும் பாடலை பாடி பொருள் கூறினார்.

**தமிழ் சிறப்பை உணர்த்தல்:**

வடமொழியும் தமிழ்மொழியும் கலந்து எழுதுதல் என்பது, தமிழ்மணியோடு பவளத்தைப்போலச் செந்நிறம் உடையதான மிளகாய்ப் பலம் கலந்தது போன்ற பயனையே தந்தது என்பது பரிதிமாற்கலைஞர் கருத்து.

தமிழ்த்தாயின் எழில் மிகுந்த உடலுக்கு, மனிபிரவாள நடை எரிச்சலைத் தான் தரும் எனபதனை உணர்ந்த பரிதிமாற் கலைஞர், வடசொல் கலப்பைக் கண்டித்தார்.

**தமிழ்த்தொண்டு:**

பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் தமிழை விலக்கி வடமொழியை கொண்டு வர முடிவு செய்யப்பட்டது.

ஆனால் பரிதிமாற் கலைஞரின் உறுதியான எதிர்பால் பல்கலைக்கழகம் அம்முடிவை கைவிட்டது.

**படைப்புகள்:**

ரூபாவதி, கலாவதி முதலிய நற்றமிழ் நாடகங்களை இயற்றினார்.

அவர் ரூபாவதி, கலாவதி என்னும் பெண்பால் வேடங்களும் புனைந்து நடித்தார்.

"சித்திரக்கவி" என்னும் நூலைப் படைத்தார்.

குமரகுருபரரின் "நீதிநெறிவிளக்கம்" என்னும் நூலில் இருந்து 51 பாடல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

**இதழ்ப் பணி:**

மு.சி.பூர்ணலிங்கம் தொடங்கி வைத்த "ஞானபோதினி" என்னும் இதழைப் பரிதிமாற்கலைஞர் நடத்தினார்.

மும்மொழிப் புலமை உடையவர்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரின் "செந்தமிழ்" இதழில் உயர்தனிச் செம்மொழி என்னும் தலைப்பில், தமிழின் அருமை பெருமைகளை விளக்கி அரியதொரு கட்டுரை வரைந்தனர்.

தமிழ்மொழி "உயர்தனிச் செம்மொழி" என முதன்முதலாக நிலைநாட்டினார்.

**மறைவு:**

தமிழ் உள்ளங்கொண்டு அயராது தமிழ்த் தொண்டாற்றிய பரிதிமாற்கலைஞர் தமது 33 அகவையில் (02.11.1903) இயற்கை எய்தினார்.

நடுவண் அரசு பரிதிமாற்கலைஞர்க்கு அஞ்சல்தலை வெளியிட்டு சிறப்பித்துள்ளது.

**செம்மொழிக் காலக்கோடு**

1901 - மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழ் பரிதிமாற் கலைஞரின் உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரை வெளியிடப்பட்டது.

1918 - மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டித் தீர்மானம் நிறைவேற்றி, அதை இந்திய அரசுக்கும் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி வற்புறுத்தியது.

1918 - சைவ சித்தாந்த மாநாட்டில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1919 - கரந்தைத் தமிழ்ச்சங்கம் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது.

1966 - உயர்தனிச் செம்மொழி என்னும் ஆங்கில நூல் தேவநேயப்பாவாணரால் எழுதி வெளியிடப்பட்டது.

2004 - நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது.

**பரிதிமாற்கலைஞரின் சொல்லாக்கங்கள்**

Aesthetic - இயற்கை வனப்பு

* Biology - உயிர்நூல்

Classical Language - உயர்தனிச் செம்மொழி

Green Rooms - பாசறை

Instinct - இயற்கை அறிவு

Order of Nature - இயற்கை ஒழுங்கு

Snacks - சிற்றுரை

**இலக்கணம்:** எழுத்து

உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துக்களை முதலெழுத்துக்கள் என்பர்.

ஐ - இரண்டு மாத்திரை

**ஐகாரக்குறுக்கம்**
ஐ என்னும் நெட்டெழுத்தைத் தனியாக ஒலித்துப் பார்த்தால் அது, தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் ஒலிக்கும் ஆனைல் இவ்வெழுத்தைச் (ஐ) சொல்லின் முதலிலும் இடையிலும் ஈற்றிலும் வருமாறு எழுதி ஒலித்துப் பார்க்கும்போது ஆஃது, ஒலி குறைந்து ஒலிப்பதனை உணர்வீர்.
சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் ஐகாரம் தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகராம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

**ஔகாரக்குறுக்கம்**
ஔ என்னும் நெடில் எழுத்தும், "ஐ" என்னும் நெட்டெழுத்தைப்போலவே தனியாக ஒலிக்கும்போது, இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பதில்லை. ஆனால் சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம் ஒன்றரை மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும். அதுவே ஔகாரக்குறுக்கம் எனப்படும். சொல்லுக்கும் இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வாராது.

**மகரக்குறுக்கம்**
"ம்" என்னும் மெய்யெழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தல் மகரக்குறுக்கம் எனப்படும். அதாவது, "ம்" என்னும் மெய்யெழுத்து, செய்யுளில் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து, கால் மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.
**ஆய்தக்குறுக்கம்**
ஆய்தம் + குறுக்கம் = ஆய்தக்குறுக்கம். ("ஃ" என்னும் எழுத்து குறைந்து ஒலிப்பது.) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு (த்) சேரும்போது ஆய்தமாகத் திரியும். இவ்வாறு திரிந்த ஆய்தம் தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவாக ஒலிக்கும். இதுவே ஆய்தக்குறுக்கம் எனப்படும்.
**சிலப்பதிகாரம்: மதுரைக் காண்டம் (வழக்குரை காதை)**

இளங்கோவடிகள் சேரமரபினர் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தாய் நற்சோணை, இவர்தம் தமையன் சேரன் செங்குட்டுவன்.

சிலப்பதிகாரம் இசை நாடகமாக அமைந்துள்ளது.

சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் - அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர். ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

பாண்டிய மன்னனின் துறைமுகம் - கொற்கை

காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாசாத்துவானின் மகன் கோவலன்

காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாநாய்கனின் மகள் கண்ணகி

கோவலன், ஆடலரசி மாதிவியை விரும்பிக் கண்ணகியை விட்டுப் பிரிந்தான்.

மாதவி, இந்திரவிழாவில் கானல்வரிப் பாடலைப் பாடினாள்.

பாடலின் பொருளைத் தவறாகப் புரிந்துகொண்ட கோவலன், மாதவியை விட்டு பிரிந்தான்.

வாணிகம் செய்தற்பொருட்டுக் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான்.

அவர்களுக்கு வழித்துணையாகக் கவுந்தியடிகள் என்னும் சமணத்துறவி சென்றார்.

மதுரை நகர்ப்புறத்தில் மாதிரி என்னும் இடைக்குல மூதாட்டியிடம் அவ்விருவரையும் அடைக்கலப்படுத்தினார்.

கோவலன் சிலம்பு விற்றுவர மதுரைநகரக் கடைவீதிக்குச் சென்றான்.

புறாவின் துன்பத்தைப் போக்கிய மன்னன் சிபி

சொற்பொருள்:

கொற்கை - பாண்டிய நாட்டின் துறைமுகம்

தென்னம் பொருப்பு - தென் பகுதியில் உள்ள பொதிகைமலை

பசுந்துணி - பசிய துண்டம்

தடக்கை - நீண்ட கைகள்

தாருகன் - அரக்கன்

பேர் உரம் கிழித்த பெண் - அகன்ற மாப்ரினைப் பிளந்த துர்க்கை

செற்றம் - கறுவு

செயிர்த்தனள் - சினமுற்றவள்

பொற்றொழில் சிலம்பு - வேலைப்பாடுமிக்க பொற்சிலம்பு

கடைமணி - அரண்மனை வாயில்மணி

ஆழி - தேர்ச்சக்கரம்

ஏசா - பழியில்லா

கொற்றம் - அரச நீதி

நற்றிரம் - அறநெறி

வாய்முதல் - (வாயின் முதலாகிய) உதடு

படரா - செல்லாத

இலக்கணக்குறிப்பு:

மடக்கொடி - அன்மொழித்தொகை

படராப் பஞ்சவ, அடங்காப் பசுந்துணி, தேரா மன்னா, ஏசாச் சிறப்பின் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

அவ்வூர் - சேய்மைச்சுட்டு

வாழ்தல் - தொழிற்பெயர்

என்கால், என்பெயர், நின்னகர், என்பதி - ஆறாம் வேற்றுமைத்தொகைகள்

தாழ்ந்த, தளர்ந்த - பெயரெச்சங்கள்

வருக, தருக, கெடுக - வியங்கோள் வினைமுற்று

பிரித்தறிதல்:

எள்ளறு - எள் + அறு

புள்ளுறு - புள் + உறு

அரும்பெறல் - அருமை + பெறல்

பெரும்பெயர் - பெருமை + பெயர்

அவ்வூர் - அ + ஊர்

பெருங்குடி - பெருமை + குடி

பெண்ணணங்கு - பெண் + அணங்கு

நற்றிறம் - நன்மை + திறம்

காற்சிலம்பு - கால் + சிலம்பு

செங்கோல் - செம்மை + கோல்

ஆசிரியர் குறிப்பு:

இளங்கோவடிகள் சேரமரபினர்

இளங்கோவடிகளின் தந்தை - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தாய் - நற்சோணை.

தமையன் - சேரன் செங்குட்டுவன்.

இளையவரான இளங்கோவே நாடாள்வார் என்று கணியன் கூறிய கருத்தைப் பொய்ப்பிக்கும்பொருட்டு, இளங்கோ இளமையிலேயே துறவு பூண்டு குணவாயிற் கோட்டத்தில் தங்கினார்.

இளங்கோவடிகள் அரசியல் வேறுபாடு கருதாதவர், சமய வேறுபாடற்ற துறவி

இவர் காலம்: கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

இளங்கோவடிகளின் சிறப்புணர்ந்த பாரதியார், "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" எனப் புகழ்கிறார்.

நூற்குறிப்பு:

சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்.

சிலம்பால் விளைந்த கதையை முதன்மையாகக் கொண்டது ஆதலின் சிலப்பதிகாரமாயிற்று.

சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம் புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் முப்பெருங் காண்டங்களையும்முப்பது காதைகளையும் உடையது.

புகார்காண்டம் பத்துக் காதைகளையும்

மதுரைக்காண்டம் பதிமூன்று காதைகளையும்

வஞ்சிக்காண்டம் ஏழு காதைகளையும் கொண்டுள்ளது.

இது உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள் எனவும் வழங்கப்பெறும்.

முதற் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம் எனச் சிலப்பதிகாரத்தைப் போற்றிப் புகழ்வார்.

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" எனப் பாரதியாரால் போற்றப்பட்டது இக்காப்பியம்.

மதுரைக்காண்டத்தின் பத்தாவது காதை வழக்குரை காதை.

காலத்தாலும் கதைத்தொடர்பாலும் பாவகையாலும் ஒன்றுபட்டது இரட்டைக்காப்பியமான சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் வழங்குவர்.

**தமிழ் வளர்ச்சி**

பாவேந்தர் பாரதிதாசன்

பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் - சுப்புரத்தினம்

பிறப்பு: 1891 ஏப்ரல் 29 புதுவையில் பிறந்தார்.

தாய்: இலக்குமி

தந்தை: கனகசபை

படைப்புகள்: குடும்ப விளக்கு, இருண்டவீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு

சிறப்பு பெயர்: , பாவேந்தர், புரட்சிக்கவிஞர்

சிறப்பு: பாரதிதாசன் பரம்பரை என்றொரு கவிஞர் பரம்பரையே அவர் காலத்தில் உருவானது.

தமிழக அரசு, பாவேந்தர் படைப்புகளை நாட்டுடைமையாக்கியுள்ளது.

ஆண்டு தோறும் சிறந்த கவிஞர்களுக்குப் பாவேந்தர் விருது வழங்கி வருகிறது

திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் அமைத்துச் சிறப்புச் சேர்த்துள்ளது.

சொற்பொருள்:

தெளிவுறுத்தம் - விளக்கமாகக் காட்டும்

சுவடி - நூல்

எளிமை - வறுமை

உலகியலின் அடங்கலுக்கும் - வாழ்வியல் முழுமைக்கும்

நாணிடவும் - வெட்கப்படவும்தகத்தகாய - ஒளிமிகுந்த

சாய்க்காமை - அழிக்காமை

நூற்கழகங்கள் - நூலகங்கள்

களைந்தோம் - நீக்கினோம்

தாபிப்போம் - நிலைநிறுத்துவோம்

இலக்கணக்குறிப்பு:

புதிது பதிது, சொல்லிச் சொல்லி - அடுக்குத்தொடர்கள்

செந்தமிழ் - பண்புத்தொகை

சலசல - இரட்டைக்கிளவி

பிரித்தறிதல்:

வெளியுலகில் - வெளி + உலகில்

செந்தமிழ் - செம்மை + தமிழ்

ஊரறியும் - ஊர் + அறியும்

எவ்விடம் - எ + இடம்

**உரைநடை: பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகள்**

தொண்டு செய்து பழுத்த பழம்

தூயதாடி மார்பில் விழும்

மண்டைச் சுரப்பை உலகு தொழும்

மனக்குகையில் சிறுத்தை எழும். இப்பாடல் வரிகள் பெரியாரைப் பற்றிய பாவேந்தரின் படப்பிடிப்பு.

பெண்களின் சமூக விடுதலைக்காக போராடியவர் - பெரியார்.

பெரியாரின் இரண்டு பெண்விடுதலைச் சிந்தனைகள் 1. அடிப்படைத் தேவைகள் 2. அகற்றப்படவேண்டியவை

அடிப்படைத் தேவைகள்: பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி

அகற்றப்படவேண்டியவை: குழந்தை திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு

பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது என்றவர் பெரியார்.

பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை ஒழிக்கப்பட் வேண்டும் என்றவர் - பெரியார்.

ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்கவேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும் என்றவர் - பாரதியார்.

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் - பெரியார்

ஆணுக்குப் பெண் இளைப்பில்லை - என்று சிந்தித்தவர் - பெரியார்

பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனிதசமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்கவேண்டும் என்று வலியுறுத்தியவர் - பெரியார்.

சடங்குகளையும் மூடநம்பிக்கைகளையும் களைவதில் உறுதியான உள்ளம் படைத்தவராக இருந்தவர் - பெரியார்

சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த விளையாட்டு எனக்கூறி அதனை நீக்கப் பாடுபட்டவர் - பெரியார்.

தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை.

பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர் பெரியார்

அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் புட்சி ஏற்படும் என்றவர் - பெரியார்

பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று சொத்துரிமை

பெரியார் சமூக முரண்களை எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை முட்டறுத்தவர்.

**இலக்கணம்: சொல்**

ஒரு சொல் தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது - தனிமொழி

பதம், மொழி, கிளவி என்பன ஒரு பொருள்தரும் பல சொற்கள்.

பதம் - பகுபதம் (பகுக்கவியலும் பதம்);  பகாப்பதம் (பகுக்கவியலாப் பதம்)

மொழி - தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி

கிளவி - இரட்டைக்கிளவி (இரட்டைச்சொல்)

எ.கா: பூ, கை, தா, வா - இவை ஓரெழுத்துச் சொற்கள்

மண், மாந்தர், நடந்தனர் இவை இரண்டு முதலாகப் பல எழுத்துகள் தொடர்ந்த சொற்கள்.

மொழி - தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.

ஒரு சொல் தனித்து நின்று பொருளை உணர்த்துவது தனிமொழி.

இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட சொற்கள் தொடர்ந்துவந்து பொருளை உணர்த்துவது தொடர்மொழி.

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிற சொற்களுடன் தொடர்ந்துநின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி.

தொழிலைக் குறிக்கும் சொல் - வினைச்சொல்

வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

ஓர் எச்ச வினை பெயரைக் கெண்டு முடிந்தால், அது பெரயெச்சம் எனப்படும்.

முற்றுப்பெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினைமுற்றைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும்.

வினையெச்சம் இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என மூன்று வகைப்படும்.

**தொகைச்சொற்களை விரித்தெழுதுக**

இருவினை - நல்வினை, தீவினை, தன்வினை, பிறவினை

இருதிணை - உயர்திணை, அஃறிணை, அகத்திணை, புறத்திணை

முத்தமிழ் - இயல், இசை, நாடகம்

முப்பால் - அறம், பொருள், இன்பம்

மூவிடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை

மூவேந்தர் - சேரன், சோழன்,. பாண்டியன்

நாற்றிசை - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு

நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்

ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்

ஐம்புலன் - தொடுஉணர்வு, உண்ணல், உயிர்த்தல், காணல், கேட்டல்

ஐம்பொறி - மெய், வாய், மூக்கு, கண், செவி

**இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக:**

Charity begins at home - தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்.

Covet all lose all - பேராசை பெருநட்டம்

Diamonds cut diamonds - முள்ளை முள்ளால் எடு

East or west, home is the best - எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது.

Enpty vessels make the greatest sound - குறை குடம் கூத்தாடும்.

**செய்யுள்:**

கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம் குகப்படலம்

**சொற்பொருள்:**

ஆயகாலை - அந்தநேரத்தில்

அம்பி - படகு

நாயகன் - தலைவன்

நாமம் - பெயர்

துறை - தோணித்துறை

தொன்மை - தொன்றுதொட்டு

கல் - மலை

திரள் - திரட்சி

காயும் வில்லினன் - பகைவர்களை அழிக்கும் வில்லாற்றல் பெற்றவன்

துடி - பறை

அல் - இருள்

சிருங்கிபேரம் - கங்கைக்கரையோர நகரம்

திரை - அலை

மருங்கு - பக்கம்

உபகாரத்தன் - பயன்கருதாது உதவுபவன்

கூவா முன்னர் - அழைக்கும் முன்னர்

குறுகி - நெருங்கி

இறைஞ்சி - வணங்கி

சேவிக்க - வணங்க

நாவாய் - படகு

நெடியவன் - உயர்ந்தவனாகிய இராமன்

குறுகினன் - வந்துள்ளான்

நாவாய் - படகு

இறை - தலைவன்

பண்ணவன் - நற்குணங்கள் பல உடைய இலக்குவன்

பரிவு - இரக்கம்

குறிஞ்சி - தலைமுடி

மேனி - உடல்

அருத்தியன் - அன்பு உடையவன்

மாதவர் - முனிவர்

முறுவல் - பன்னகை

விளம்பல் - கூறுதல்

சீர்த்த - சிறந்த

பவித்திரம் - தூய்மையானது

இனிதின் - இநிமையானது

உண்டனெம் - உண்டோம் என்பதற்குச் சமமானது

தழீஇய - கலந்த

கார்குலாம் - மேகக்கூட்டம்

பார்குலாம் - உலகம் முழுதும்

இன்னல் - துன்பம்

ஈர்கிலா - எடுக்க இயலாத

தீர்கிலேன் - நீங்கமாட்டேன்

அடிமைசெய்குவென் - பணிசெய்வேன்

கடிது - விரைவாக

முடுகின - செலுத்தினன்

முரிதிரை - மடங்கிவிழும் அலை

இடர் - துன்பம்

அமலன் - குற்றமற்றவன்

நுதல் - நெற்றி

இளவல் - தம்பி

உன்னேல் - நினைக்காதே

கடிது - விரைவாக

முடுகினன் - செலுத்தினன்

முரிதிரை - மடங்கிவிழும் அலை

இடர் - துன்பம்

நயனம் - கண்கள்

இந்து - நிலவு

நுதல் - நெற்றி

குரிசில் - தலைவன்

இருத்தி - இருப்பாயாக

**இலக்கணக்குறிப்பு:**

போர்க்குகன் -இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

கல்திரள்தோள் - உவமைத்தொகை

நீர்முகில் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

திரைக்கங்கை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

இருந்தவள்ளல் - பெயரெச்சம்

வந்துஎய்தினான் - வினையெச்சம்

கூவா - கூறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

குறுகி, சேவிக்க - வினையெச்சங்கள்

தேவா - விளி

கழல் - தானியாகுபெயர்

வந்தனென் - தன்மை ஒருமை வினைமுற்று

அழைத்தி(அழைப்பாய்) - முன்னிலை ஒருமை வினைமுற்று

வருக - வியங்கோள் வினைமுற்று

பணிந்து, வளைந்து, புதைத்து - வினையெச்சங்கள்

இருத்தி - முன்னிலை ஒருமை வினைமுற்று

தேனும் மீனும் - எண்ணும்மை

மாதவர் - உரிச்சொற்றொடர்

அமைந்த காதல் - பெயரெச்சம்

சீர்த்த - ஒன்றன்பால் வினைமுற்று

தழீஇய (தழுவிய) - சொல்லிசை அளபெடை

கார்குலாம்(காரது குலாம்) - ஆறாம் வேற்றுமைத்தொகை

உணர்த்துவான் - வினையாலணையும் பெயர்

பார்த்தகண்ணை - பெயரெச்சம்

தீர்கிலேன் - செய்குவென் - தன்மை ஒருமை வினைமுற்றுகள்.

நனிகடிது - உரிச்சொற்றொடர்

நெடுநாவாய், நெடுநீர் - பண்புத்தொகைகள்

என்னுயிர் - ஆறாம் வேற்றுமைத்தொகை

நின்கேள் - நான்காம் வேற்றுமைத்தொகை

தாமரை நயனம் - உவமைத்தொகை

தீராக் காதலன் - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

மலர்ந்த கண்ணன் - பெயரெச்சம்

இனிய நண்ப - குறிப்புப் பெயரெச்சம்

**ஆசிரியர் குறிப்பு:**

பிறந்த ஊர்- தேரழுந்தூர் (நாகை மாவட்டம்)

தந்தை - ஆதித்தன்

காலம் - இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவன்

ஆதரித்தவர் - திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல்

செய்ந்நன்றி மறவா இயல்பினார்.

தம்மை ஆதரித்த வள்ளல் சடையப்பரை ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல் எனப் பாடிச் சிறப்பித்துள்ளார்.

கம்பரது காலம் - கி.பி.12 ஆம் நூற்றாண்டு

இயற்றிய நூல்கள் - கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி, அந்தாதி, திருக்கை வழக்கம்

சமகாலத்துப் புலவர்கள் - செயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் என்று பாரதியார் புகழ்ந்து பாடியுள்ளார்.

வடமொழியில் கம்பராமாயணத்தை வால்மீகி முனிவர் எழுதினார். கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.

கம்பராமாயணத்தில் 6 காண்டங்கள் உள்ளன.

1. பாலகாண்டம்
2. அயோத்தியா காண்டம்
3. ஆரண்ய காண்டம்
4. கிட்கிந்தா காண்டம்
5. சுந்தர காண்டம்
6. யுத்த காண்டம்

தமிழுக்குக் கதி என்ற சிறப்பும் கம்பராமாயணத்திற்கு உண்டு.

குகப்படலத்தை கங்கைப்படலம் எனவும் கூறுவர்.

இடர் - துன்பம்

நாவாய் - படகு

இறை - தலைவன்

இந்து - நிலவு

இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது.

கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டம் இரண்டாம் காண்டமாகும்.

அயோத்தியா காண்டத்தில் 13 படலங்கள் உள்ளன.

பாடப்பகுதியான குகப்  படலம் ஏழாம் படலமாகும்.

இப்பகுதியைக் கங்கைப் படலம் எனவும் கூறுவர்.

கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றது.

பொருள், அணி, நடை ஆகியவற்றால் சிறந்தது.

கற்போர்க்கு இனிமை தரும் கவிச்சுவை நிறைந்தது.

சொற்சுவையும் பொருட்சுவையும் தமிழ்ப் பண்பாடும் மிளிர்ந்துள்ளது.

தொல்காப்பிய நெறி நின்றவர் - கம்பர்

வடமொழி எழுத்தையும் பிறமொழிக் கலப்பையும் தடுத்தவர் - கம்பர்

உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தாலும் போதும்; மீண்டும் அதனைப் புதுப்பித்துவிடலாம் என்றவர் - கால்டுவெல்.

**உரைநடை: அண்ணல் அம்பேத்கர்**

அம்பேத்கர் மராட்டிய கொங்கண் மாவட்டத்தில் தபோலி என்னும் அம்பவாடே பிறந்தார்.

பிறந்த தேதி: 14.04.1891

தந்தை: இராம்ஜி சக்பால்

தாய்: பீமாபாய்

இவர்களுக்கு 14வது பிள்ளையாகப் பிறந்தார்.

இயற்பெயர்: பீமாராவ் ராம்ஜி

மகாபாரதப் பீமனைப்போலவே தன்மகனும் எவருமே அசைக்க முடியாத வீரனாக வருங்காலத்தில் வரவேண்டும் என்ற எண்ணத்தில் பீம் எனப் பெயர் சூட்டினார் தந்தை இராம்ஜி சக்பால்.

ஆசிரியர் என்பவர் அறிவுக்கடலாக மட்டுமன்றி அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும்.

**கல்வி:**

1908 இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் உயர்நிலைப்படிப்பு

1912 இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலை பட்டம்

1915 இல் அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம்

1916 இல் இலண்டம் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றார். மீண்டும் இலண்டன் சென்று அறிவியல் முதுகலைப் பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

**அம்பேத்கர் முதலில் நடத்தப் பெற்ற போராட்டங்கள்:**

1924 ஆம் ஆண்டு கேரளாவில் உள்ள வைக்கத்தில் நடத்திய ஒடுக்கப்பட்டோர் ஆலயநுழைவு முயற்சியும்,

1927 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் இருபதாம் தேதி அம்பேத்கார் மராட்டியத்தில் மகாத்துக் குளத்தில் நடத்திய தண்ணீர் எடுக்கும் போரட்டமும் மனித உரிமைக்காக முதலில் நடத்தப்பட்ட போராட்டங்கள் எனலாம்.

இங்கிலாந்து சொல்வதற்கெல்லாம் இந்தியா தலையசைக்கும் என்பது தவறு; இந்தநிலை எப்போதோ மாறிவிட்டது; இந்திய மக்களின் எண்ணங்கலை நீங்கள் ஈடேற்ற வேண்டும்" என ஆங்கிலேயரிடம் அச்சமின்றி ஆணித்தரமாகக் கூறியவர் - அன்னல் அம்பேத்கர்.

தன்னாட்சித் தகுதியை இந்தியாவிற்கு வழங்க வேண்டும் என முன்மொழிந்தவர் - அன்னல் அம்பேத்கர்.

வட்டமேசை மாநாடு நடைபெற்ற ஆண்டு - 1930

அந்த மாநாட்டில் அம்பேத்கர் கலந்துகொண்டார்.

அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினனாக நான் பேசுகிறேன் என்று தனது கருத்தைத் தொடங்கினார் அம்பேத்கர்.

ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்குரல் வட்டமேசை மாநாட்டின் வழியே உலகஅரங்கில் எதிரொலித்தது.

இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் வகுக்க 7 பேர்  கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இந்தியா முழுமையான குடியரசு நாடாகத் தன்னை அறிவித்துக் கொண்ட தேதி - 26.01.1950

செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம்

உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம் என்றவர் அம்பேத்கர்.

மக்கள் கல்விக்கழகத்தைத் தோற்றுவித்தவர் - அம்பேத்கர்

1946 ஆம் ஆண்டு மக்கள் கல்விக்கழகத்தைத் தோற்றுவித்தார்.

மும்பையில் அவரின் அரிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

இந்தியாவின் தேசியப் பங்குவீதம் என்னும் நூலைப் பொருளாதாரத் துறையின் சிறந்த நூலாகக் கருதிப் பொருளியல் வல்லுநர்களும் பேரசிரியர்களும் பெரிதும் மதித்துப் போற்றினார்கள்.

இந்திய நாட்டின் சாதி என்னும் இருளை அகற்ற வந்த அறிவுக்கதிர் அம்பேத்கர்.

சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது என்றவர் அம்பேத்கர்.

சனநாயகத்தின் மறுபெயர்தான் சகோதரத்துவம்; சுதந்தரம் என்பது சுயேச்சையாக நடமாடும் உரிமை; உயிரையும் உடைமையையும் பாதுகாக்கும் உரிமை அது.

எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரி நடத்துவதே சமத்துவமாகும் என்று சனநாயகத்திற்கு அரியதொரு விளக்கம் தந்தவர் அம்பேத்கர்.

சமத்துவத்தின் மறுபெயரே மனிதநேயம்; எங்கே சமத்துவம் மறுக்கப்படுகின்றதோ, அங்கே மனிதப் பண்பு மறைந்துவிடுவதை அவர் அனைவருக்கும் உணர்த்தியவர் அம்பேத்கர்.

**பெரியாரின் புகழாரம்:**

அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர்

பகுத்தறிவுச் செம்மல்

ஆராய்ச்சியின் சிகரம்

மக்களின் மாபெரும் வழிகாட்டி

அப்பெருந்தலைவரைப்போல வேறு யாரையும் நாம் காணமுடியாது என்று பெரியார் புகழாரம் சூட்டினார்.

அம்பேத்கரை ஆசியக் கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும் என்று புகழ்ந்தவர் - நேரு

தன்னலமற்றவர்; மிகவும் ஆர்வத்துடனும் விரைந்து தன்னந் தனியாகச் செயல்பட்டவர். தமக்கு கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர் என்று இராசேந்திர பிரசாத் பாராட்டியுள்ளார்.

**இறப்பு :** 06.12.1956

**விருதுகள்:**

இந்திய அரசு 1990 ஆம் ஆண்டு பாரத ரத்னா (இந்திய மாமணி) என்னும் உயரிய விருதை அண்ணல் அம்பேத்கருக்கு வழங்கி பெருமைப்படுத்தியது.

சமுதாயமெனும் மரத்தின் வேரைச் சாதிப் புழுக்கள் அரித்துவிடாமல் தடுத்த நச்சுக்கொல்லி மருந்து அவர்.

**துணைப்பாடம்: அன்றாட வாழ்வியல் சட்டம்**

உலக நாடுகளிடையேயுள்ள தொடர்புகளை ஒழுங்கு படுத்தும் சட்டத்தை அனைத்து நாட்டுச் சட்டம் என்கிறோம்.

நம் நாட்டின் முதன்மையான வாழ்வியல் அடிப்படைச் சட்டத்தை அரசியல் அமைப்புச் சட்டம் என்கிறோம்.

நாட்டின் நாடாளுமன்றமும் மாநிலச் சட்டமன்றங்களும் அரசுத் துறைகளின் அலுவலகங்களும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில்தான் இயங்குகின்றன.

பௌத்தர்களுக்கும் சமணர்களுக்கும் தனியான மதச் சட்டங்களென எவையுமில்லை.

சட்டப்படி தண்டிக்கத்தக்க செயலையே குற்றமென்கிறோம்.

குற்றங்கள் சட்டம் செய்யக்கூடாது என்று வலியுருத்திச் சொன்னதைச் செய்தல் மற்றொன்று, சட்டம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவதைச் செய்யாமல் இருத்தல் என இருவகைப்படும்.

**போக்குவரத்து சட்டங்கள்:**

சிவப்பு விளக்கு எரிந்தால், உடனே வண்டியை நிறுத்துதல் வேண்டும்

பச்சை விளக்கு எரிந்தால் புறப்படுதல் வேண்டும்.

அரசியல் சாசனத்தின் 19(1) ஆவது பிரிவின்படி குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் முழுமையான பேச்சுரிமை, எழுத்துரிமை உண்டு.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் சரத் - 2005 பிரிவு 6

International Law - சர்வதேச சட்டம்

Constitutional Law - அரசியில் அமைப்புச் சட்டம்

Supreme Court - உச்சநீதி மன்றம்

High Courts - உயர்நீதி மன்றங்கள்

Writs - சட்ட ஆவணங்கள்

Substantive Laws - உரிமைச் சட்டங்கள்

Procedureal Laws - செயற்பாட்டு முறைச்சட்டங்கள்

Indian penal code - இந்தியச் தண்டனைச் சட்டத் தொகுப்பு

Criminal Procedure code - குற்றவியல் செயற்பாட்டுமுறைத் தொகுப்பு

Civil Procedure code - உரிமையியல் செயற்பாட்டுமுறைத் தொகுப்பு

Indian Evidence Act - இந்தியச் சான்று சட்டம்

Transfer of Property Act - சொத்துமாற்றுச் சட்டம்

Indian Succesion Act - இந்திய வாரிசுரிமைச் சட்டம்

Court fee stamp - நீதிமன்றக் கட்டண வில்லை

**இலக்கணம்**

எழுத்திலக்கணம். சொல்லிக்கணம் ஆகிய இரண்டிலும் கூறப்படாத பொதுவான செய்திகள் சொல்லப்படுவதால் இது பொது என அழைக்கப்படுகிறது.

**வெளிப்படை, குறிப்பு**

வெளிப்படையாகத் தன்பெருளை உணர்த்தும் சொல் வெளிப்படை எனவும், ஒரு தெடர் முன்னும் பின்னும் வருகின்ற சொற்கள் உணர்த்தும் குறிப்பால் ஒரு பொருளைத் தருவது குறிப்பு எனவும் கூறுவர்.

**எ.கா:**

உலகிலேயே பண்பாட்டில் தமிழ்நாடுதன் தலைசிறந்து விளங்குகின்றது.

பூப்பந்து விளையாட்டில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது.

இவ்விரு தொடர்களிலும் முதல் தொடரில் தமிழ்நாடு என்னும் சொல் வெளிப்படையாக இடத்தைக் குறித்து வந்துள்ளது.

இரண்டாம் தொடரில், தமிழ்நாடு என்பது ஆகுபெயராய் நின்று குறிப்பால் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களைக் குறிக்கிறது.

## குறிப்புச்சொற்கள்

ஒன்றொழி பொதுச்சொல், விகாரச்சொல், தகுதிவழக்குச்சொல், ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக்குறிப்புச் சொல், முதற்குறிப்புச் சொல், தொகைக்குறிப்புச்சொல் போன்றவை குறிப்பால் தரும் சொற்களாம்.

### ஒன்றொழி பொதுச்சொல்

உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டிலும் பொதுவான சொற்கள் உண்டு.

ஒரு சொல், தொடரில் முன்னும் பின்னும் வரும் சொற்களின் தொடர்பாலும், குறிப்பாலும் ஒரு பாலை நீக்கி, மற்றொருபாலைச் சுட்டும். அதற்கு ஒன்றொழி பொதுச்சொல் என்று பெயர்.

## இனங்குறித்தல்

ஒருசொல், தன்பொருளையும் குறித்துத் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது இனங்குறித்தல் எனப்படும்.

எ.கா: கதிர்வேல் வெற்றிலை தின்றான்.

இத்தொடரில் கதிர்வேல் வெற்றிலை மட்டுமா தின்றான். வெற்றிலையோடு அதற்கு இனமான பாக்கு, சுண்ணாம்பு முதலானவற்றையும் சேர்த்துத் தின்றான் எனப் பொருள்படுகிறது.

## அடுக்குத்தொடர்

அசைநிலைக்கும், விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள் நிலைக்கும், செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு, மூன்று, நான்குமுறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.

**எ.கா:**

அன்றே அன்றே - அசைநிலை

போ போ - விரைவு

எறி எறி - சினம்

வருக வருக - மகிழ்ச்சி

தீ தீ தீ - அச்சம்

நொந்தேன் நொந்தேன்  - துன்பம்

கோடி கோடி கோடி கோடியே - இசை நிறை

**இரட்டைக்கிளவி**

இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் இரட்டித்தே வரும்; பிரித்தால் பொருள் தராது; இதனை இரட்டைக்கிளவி என்பர்.

அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடு

அடுக்குத்தொடர்  - இரட்டைக்கிளவி

சொற்கள் தனித்தனியே நிற்கும் - சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும்

பிரித்தால் பொருள் தரும் - பிரித்தால் பொருள் தராது.

இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும்  -  இரட்டித்தே வரும்.

விரைவு, அச்சம், வெகுளி, மகிழ்ச்சி  - இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும்.

**தமிழ்ப்பழமொழிகள்:**

Money makes many things - பணம் பத்தும் செய்யும்

Eagles don't catch files - புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

Old is gold - காலம் பொன் போன்றது

Prevention is better than cure - வருமுன் காப்பதே சிறந்தது.

Solw and steady wins the race - முயற்சி திருவினையாக்கும்.

**நற்றிணை**

**மிழைகிழான் நல்வேட்டனார்**

**சொற்பொருள்:**

அரி - நெற்கதிர்

செறு - வயல்

யாணர் - புதுவருவாய்

வட்டி - பனையோலைப் பெட்டி

நெடிய மொழிதல் - அரசிடம் சிறப்புப் பெறுதல்

**இலக்கணக்குறிப்பு:**

சென்ற வட்டி - பெயரெச்சம்

செய்வினை - வினைத்தொகை

புன்கண், மெய்கண் - பண்புத்தொகைள்

ஊர(ஊரனே) - விளித்தொடர்.

**பிரித்தறிதல்:**

அங்கண் - அம் + கண்

பற்பல - பல + பல

புன்கண் - புன்மை + கண்

மென்கண் - மென்மை + கண்

**ஆசிரியர் குறிப்பு:**

மிளை என்னும் ஊரில் பிறந்தவராதலால், *கிளைகிழான் நல்வேட்டனார்* என்னும் பெயர் பெற்றார்.

இவர், ***ஐந்திணைகளைப் பற்றியும் பாடல் இயற்றியுள்ளார்.***

இவர் பாடியனவாக நற்றிணையில் நான்கு பாடலும் குறுந்தொகையில் ஒன்றுமாக ஐந்து பாடல் உள்ளன.

இவர் சங்ககாலத்தவர்.

**நூற்குறிப்பு:**

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்கநூல்கள் எனப் போற்றப்படுவன.

எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவதும், "நல்" என்று அடைமொழி கொடுத்துப் போற்றப்படுவதும் நற்றிணையே.

இஃது அகத்திணை நூலாகும்.

நற்றிணை பல்வேறு காலங்களில் புலவரால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூல்.

ஓரறிவு உயிரிகளையும் விரும்பும் உயரிய பண்பு, விருந்தோம்பல், அறவழியில் பொருளீட்டல் முதலிய தமிழர்தம் உயர் பண்புகளைத் தெள்ளத்தெளிவாக எடுத்தியம்பும் நூலிது.

ஐந்திணைக்குமான பாடல் உள்ளன.

இதில் உள்ள பாடல்கள், ஒன்பது அடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டு அடிப் பேரெல்லையும் கொண்டவை.

இப்பாடல்களைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த மாறன் வழுதி.

நற்றிணைப் பாடல்கள் நானூறு.

பாடினோர் இருநூற்றெழுபத்தைவர்

பாடப்பகுதி - நற்றிணையிலுள்ள இருநூற்றுப் பத்தாவது பாடல்.

**புறநானூறு**

கண்ணகனார்

**சொற்பொருள்:**

துகிர் - பவளம்

மன்னிய - நிலைபெற்ற

சேய - தொலைவு

தொடை - மாலை

கலம் - அணி

**இலக்கணக்குறிப்பு:**

பொன்னும் துகிரும் முத்தும் பவளமும் மணியும் - எண்ணும்மைகள்

மாமலை - உரிச்சொற்றொடர்

அருவிலை, நன்கலம் - பண்புத்தொகைகள்

**பிரித்தறிதல்:**

அருவிலை - அருமை + விலை

நன்கலம் - நன்மை + கலம்

**ஆசிரியர்குறிப்பு:**

கண்ணகனார் கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்களுள் ஒருவர்.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தபொழுது, பிசிராந்தையாரின் வருகைக்காக் காத்திருந்தான்.

அப்போது, அவருடன் இருந்தவர் கண்ணகனார் ஆவார்.

அவன் உயிர் துறந்தபொழுது மிகவும் வருந்திய கண்ணகனார் இப்பாடைப் பாடினார்.

**நூற்குறிப்பு:**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு.

இது, புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது.

இந்நூல் சங்ககால மக்களின் வாழ்க்கைநிலை, மன்னர்களின் வீரம், புகழ், கொடை, வெற்றிகள் பற்றிய பல்வேறு செய்திகளைக் கூறுகின்றது.

தமிழரின் வரலாற்றை அறியவும், பண்பாட்டு உயர்வை உணரவும் பெரிதும் உதவுகிறது.

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல் - இருநூற்றுப் பதினெட்டாம் பாடல்

**உரைநடை: பேச்சுக்கலை**

ஆய கலைகள் அறுபத்து நான்கு

நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை - பேச்சுக்கலை

மேடைப்பேச்சில் நல்ல தமிழைக்கொண்டு மக்களை ஈர்த்தோர் - தமிழ்த்தென்றல் திரு.வி.க, பேரறிஞர் அண்ணா, ரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார் முதலியோர்.

மேடைப்பேச்சில் உணர்ந்ததனை உணர்த்தும் வகையிலும் தெரிவித்தல் வேண்டும்.

மேடைப்பேச்சின் முக்கூறுகள் - எடுத்தல், தொடுத்தல், முடித்தல்

# 11thSTD

**கடவுள் வாழ்த்து**

| அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே |
| --- |

ஆரமிர்தே என்கண்ணே அறிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமும்தே சமும்வகுத்துக் கருவி ஆதி
விரிவினையும் கூட்டிஉயிர்த் திரளை ஆட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங் கேளே
- தாயுமானவர்

**குறிப்பு:**

- தாயுமானவர் பாடல்கள் என்னும் தொகைநூலில் 1452 பாடல்கள் உள்ளன.
- இந்நூல் “தமிழ் மொழியின் உபநிடதம்” எனப் போற்றப்படுகிறது.
- இவர் வேதாரண்யம் என்னும் திருமறைக்காட்டில் கேடிலியப்ப பிள்ளைக்கும், கெசவல்லி அம்மைக்கும் மகனாகப் பிறந்தார்.
- திருச்சியில் உள்ள தாயுமானவர் அருளால் பிறந்தமையால் இவருக்கு தாயுமானவர் எனப் பெயரிடப்பட்டது.
- கேடிலியப்ப பிள்ளை திருச்சிராப்பள்ளியை ஆண்ட விசயரங்க சொக்கநாத நாயக்கர் என்ற அரசரிடம் கணக்கராகப் பணிபுரிந்து வந்தார்.
- அவர் மறைவுக்குப் பின்னர்த் தாயுமானவர் அப்பணியை ஏற்றார்.
- இவரின் மனைவி மட்டுவார்குழலி.
- திருமூலர் மரபில் வந்த மௌனகுருவிடம் ஆசி பெற்றவர்.
- இவர் முக்தி அடைந்த இடம் இராமநாதபுரம் மாவட்டம் இலட்சுமிபுரம்.
- காலம் பதினெட்டாம் நூற்றாண்டு.

**சொற்பொருள்:**

- ஆரமிர்தே – அரிய அமிழ்தே
- பூரணமாய் – முழுமையாய்
- புனிதம் – தூய்மை
- விழுப்பொருள் – மேலானப்பொருள்

**இலக்கணக்குறிப்பு:**

- பழச்சுவை – ஆறாம் வேற்றுமைத் தொகை
- தரும் பொருளே – செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்
- காலமும் தேசமும் – எண்ணும்மை
- உயிர்த்திரள் – ஆறாம் வேற்றுமைத் தொகை
- விழுப்பொருள் – உரிச்சொற்றொடர்

---

**மொழி வாழ்த்து**

---

வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக்
கையி னாலுரை கால மிரிந்திடப்
பைய நாவைய சைத்த பழந்தமிழ்
ஐயை தாடலை கொண்டு பணிகுவாம்
- பள்ளியகரம் நீ.கந்தசாமிப் புலவர்

**குறிப்பு:**

- பள்ளியகரம் நீ.கந்தசாமிப் புலவர் தஞ்சை மாவட்டம் பள்ளியகரத்தில் பிறந்தவர்.
- பெற்றோர் = நீலமேகம் பிள்ளை, சௌந்தரவல்லி அம்மையார்.
- இவர் ஒரு பன்மொழிப் புலவர்.
- கரந்தைத் தமிழ் சங்கத்தில் பல ஆண்டுகள் அமைச்சராகத் விளங்கினார்.
- தாமஸ்கிரே என்பார் எழுதிய ஆங்கிலக் கவிதை ஒன்றைத் தமிழில் செய்யுள் வடிவில் “இரங்கற்பா” என்னும் தலைப்பில் மொழி பெயர்த்தார்.

**சொற்பொருள்:**

- வையம் – உலகம்
- இரிந்திட – விலகிட
- பைய – மெல்ல
- தாள் – திருவடி
- ஐயை – தாய்

**இலக்கணக்குறிப்பு:**

- தொன்மக்கள் – பண்புத்தொகை
- உள்ளம் – ஆகுபெயர்
- உரைகாலம் – வினைத்தொகை
- ஐயைதாள் – ஆறாம் வேற்றுமைத் தொகை
- தாள் தலை – இரண்டாம் வேற்றுமைத்தொகை

---

**நாட்டு வாழ்த்து**

---

திருநி றைந்தனை தன்னிக ரொன்றிலை
தீது தீர்ந்தனை நீர்வளஞ் சார்ந்தனை
மருவு செய்களின் நற்பயன் மல்குவை
வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை
பெருகு மின்ப முடையை குறுநகை
பெற்றொ ளிர்ந்தனை பல்பணி பூண்டனை
இருநி லத்துவந் தெம்முயிர் தாங்குவை
எங்கள் தாய்நின் பதங்கள் இறைஞ்சுவாம்
- பாரதியார்

**குறிப்புகள்:**

- வங்கமொழியில் பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர் எழுதிய “வந்தே மாதரம்” என்னும் பாடலின் மொழிப்பெயர்பே இப்பாடல்.
- தேசியக்கவி எனப் போற்றப்படும் பாரதியார் எட்டயபுரத்தில் 11.12.1882இல் பிறந்தார்.
- பாரதியார் மதுரையில் உள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகவும், பின்னர்ச் சென்னையில் இருந்து வெளிவந்த “சுதேசமித்திரன்” இதழின் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார்.
- மேலும் “சக்கரவர்த்தினி” என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகவும், “இந்தியா” என்ற வாரப்பத்திரிகைக்கு ஆசிரியராகவும் திகழ்ந்தார்.
- இவர் கீதையை மொழிபெயர்த்தார்.
- 11.09.1921 அன்று மறைந்தார்.

**சொற்பொருள்:**

- திரு – செல்வம்
- மருவு – பொருந்திய

- செய் – வயல்
- மல்குதல் – நிறைதல்
- இருநிலம் – பெரிய பூவுலகு

**இலக்கணக்குறிப்பு:**

- மருவு செய் – வினைத்தொகை
- பெருகும் இன்பம் – செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம்
- நற்பயன் – பண்புத்தொகை

---

**புறநானூறு**

---

**நூல் குறிப்பு:**

- புறம் + நான்கு + நூறு = புறநானூறு
- இதனை புறப்பாட்டு, புறம் எனவும் வழங்குவர்.
- இந்நூலில் 400 பாடல்கள் உள்ளன.
- இந்நூலின் கடவுள் வாழ்த்து பாடியவர் = பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூலின் சில பாடல்களை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**பரணர்:**

- இவர் வரலாற்றுக் குறிப்புகளை பாடல்களுள் பொதிந்து வைத்துப் பாடுவதில் வல்லவர்.
- கபிலர் போல மிக்க புகழுடன் வாழ்ந்தவர்.
- கபிலபரணர் என்னும் தொடரால் இது விளங்கும்.
- இவர் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்து பாடிக் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனிடம் உம்பற்காட்டு வாரியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகப் பெற்றவர்.

**பேகன்:**

- பேகன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன்.
- கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கியவன்.
- மலைநாட்டை ஆண்டவன்.
- இவனது ஊர் நல்லூர்.
- இவனது குடி ஆவியர் குடி.

**சொற்பொருள்:**

- அறுகுளம் – நீர் வற்றிய குளம்.
- உகுத்தும் – பெய்தும்
- உவர்நிலம் – களர்நிலம்
- ஊட்டியும் – சாலப் பெய்தும்
- கடாஅயானை – மதக்களிறு
- மாரி – மழை

**இலக்கணக்குறிப்பு:**

- அறுகுளம், அகல்வயல் – வினைத்தொகை
- வரையா மரபு – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- கடாஅ – இசைநிறை அளபெடை

**அகநானூறு**

**நூல் குறிப்பு:**

- அகம் + நான்கு + நூறு = அகநானூறு
- இந்நூலில் நானூறு பாடல்கள் உள்ளன.
- நூலில் உள்ள 3 பிரிவுகள் = களிற்றியானைநிரை, மணிமிடைபவளம், நித்திலக்கோவை
- களிற்றியானைநிரையில் 120 பாடல்களும், மணிமிடைபவலத்தில் 180 பாடல்களும், நித்திலக்கோவையில் 100 பாடல்களும் உள்ளன.
- நூலின் அடிஎல்லை = 13 – 31
- இந்நூலினை “நெடுந்தொகை” என்றும் வழங்குவர்.
- 1,3,5 என ஒற்றைப்படை எண்கள் அமைந்த பாடல்கள் = பாலைத்திணை பாடல்கள்
- 2,8 என வருவன = குறிஞ்சித்திணை பாடல்கள்
- 4,14 என வருவன = முல்லைதினைப் பாடல்கள்
- 6,16 என வருவன = மருதத்திணை பாடல்கள்
- 10,20 என வருவன = நெய்தல் திணை பாடல்கள்.
- நூலை தொகுத்தவர் = மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருதிரசன்மனார்
- நூலை தொகுப்பித்தவர் = பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

**சொற்பொருள்:**

- ஓங்குமலை – உயர்ந்த மலை
- சிலம்பு – மலைச்சாரல்
- வேங்கை பிடவு – மலைநிலத்தே வளரும் மரங்கள்
- உகிர் – நகம்
- உழுவை – ஆண்புலி
- கவலை – கிளைவழி
- சாஅய் – மெலிவுற்று

**இலக்கணக்குறிப்பு:**

- ஓங்குமலை – வினைத்தொகை
- அவிழாக் கோட்டுகிர் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- நிரம்பா நீளிடை – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- நீளிடை – வினைத்தொகை
- உண்ணா உயக்கம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- சாஅய் – இசைநிறைஅளபெடை
- தொல்கவின் – பண்புத்தொகை
- பிரிந்தோர் – வினையாலணையும் பெயர்.

**ஐங்குறுநூறு**

**நூல் குறிப்பு:**

- ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு
- அடி எல்லை = 3 முதல் 6
- ஒவ்வொரு தினைக்கும் நூறு பாடல்கள் என மொத்தம் 500 பாடல்கள் உள்ளன.
- மருதத்திணை பாடல்கள் பாடியவர் = ஓரம்போகி

- நெய்தல் திணை பாடல்கள் பாடியவர் = அம்மூவன்
- குறிஞ்சி திணை பாடல்கள் பாடியவர் = கபிலர்
- பாலை திணை பாடல்கள் பாடியவர் = ஓதலாந்தை
- முல்லைதிணை பாடல்கள் பாடியவர் = பேயன்
- இந்நூலை தொகுத்தவர் = புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்.
- தொகுப்பித்தவர் = சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை
- கடவுள் வாழ்த்து பாடியவர் = பாரதம் பாடிய பெருந்தேவனார்.

**கபிலர்:**

- இவர், "புலனழுக் கற்ற அந்தணாளன்" எனப் புகழப்பட்டவர்.
- வள்ளல் பாரியின் அவைகளப் புலவர்.
- குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறு நூற்றில் குருஞ்சித்தினை பாடகள் நூறு, பதிற்றுபத்தில் ஏழாம் பத்து, கலித்தொகையில் குறுஞ்சி கலியில் உள்ள 29 பாடல்கள் முதலியன இவர் பாடியவை.

**சொற்பொருள்:**

- தோகை – மயில்
- வதுவை – திருமணம்

**இலக்கணக்குறிப்பு:**

- இருந்ததோகை – பெயரெச்சம்
- மருள் – உவமவுருபு
- இழையணி – வினைத்தொகை
- நாட – அண்மைவிளி
- நுந்தை – நும் தந்தை என்பதன் மரூஉ
- வாழியர் – வியங்கோள் வினைமுற்று
- நன்மனை – பண்புத்தொகை

---

## திருக்குறள்

---

**நூல்குறிப்பு:**

- "தமிழ் மாதின் இனிய உயிர்நிலை" என்று உலகோரால் பாராட்டப்படும் நூல் திருக்குறள்.
- திருக்குறள் "தமிழர் திருமறை" ஆகும்.
- திருக்குறள் என்பது அடையடுத்த கருவியாகு பெயர்.
- திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை கொண்டது.
- அறத்துப்பால் முப்பத்தி எட்டு அதிகாரங்களை உடையது. அது பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களை கொண்டுள்ளது.
- பொருட்பால் எழுபது அதிகாரங்களையும், அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களையும் கொண்டுள்ளது.
- காமத்துப்பால் 25 அதிகாரங்களையும், களவியல், கற்பியல் என்ற இரன்டு இயல்களையும் உடையது.
- **சொற்பொருள்:**

அமரருள் – தேவர் உலகம்

உய்க்கும் – செலுத்தும்

ஆரிருள் – நரகம்

செறிவு – அடக்கம்

தோற்றம் – உயர்வு

பணிதல் – அடங்குதல்

எழுமை – ஏழு பிறப்பு

சோகாப்பர் – துன்புறுவர்

கதம் – சினம்

தாளாற்றி – மிக்க முயற்சி செய்து

வேளாண்மை – உதவி

திரு – செல்வம்

இடம் – செல்வம்

கடன் – முறைமை

கூகை – கோட்டான்

தகர் – ஆட்டுக்கிடாய்

செறுநர் – பகைவர்

மாற்றான் – பகைவர்

சாகாடு – வண்டி

அமரருள் – தேவர் உலகம்

ஆரிருள் – நரகம்

செறிவு – அடக்கம்

தோற்றம் – உயர்வு

பணிதல் – அடங்குதல்

எழுமை – ஏழு பிறப்பு

சோகாப்பர் – துன்புறுவர்

கதம் – சினம்

தாளாற்றி – மிக்க முயற்சி செய்து

வேளாண்மை – உதவி

திரு – செல்வம்

இடம் – செல்வம்

கடன் – முறைமை

கூகை – கோட்டான்

தகர் – ஆட்டுக்கிடாய்

செறுநர் – பகைவர்

காக்க – கடைப்பிடித்து ஒழுகுக

சீர்மை – விழுப்பம், சிறப்பு

மாண – மிகவும்

ஒருமை – ஒருபிறப்பு

ஏமாப்பு – பாதுகாப்பு

வடு – தழும்பு

செவ்வி – தகுந்த காலம்

தந்த – ஈட்டிய

புத்தேள் உலகம் – தேவர் உலகம்

அற்று – போலும்

ஒல்கார் – தளரார்

கேடு – பொருள்கேடு

இகல் – பகை

பொள்ளென – உடனடியாக

சுமக்க – பணிக

பீலி – மயில்தோகை

இறும் – முரியும்

உய்க்கும் – செலுத்தும்

காக்க – கடைப்பிடித்து ஒழுகுக

சீர்மை – விழுப்பம், சிறப்பு

மாண – மிகவும்

ஒருமை – ஒருபிறப்பு

ஏமாப்பு – பாதுகாப்பு

வடு – தழும்பு

செவ்வி – தகுந்த காலம்

தந்த – ஈட்டிய

புத்தேள் உலகம் – தேவர் உலகம்

அற்று – போலும்

ஒல்கார் – தளரார்

கேடு – பொருள்கேடு

இகல் – பகை

பொள்ளென – உடனடியாக

சுமக்க – பணிக

மாற்றான் – பகைவர்

சாகாடு – வண்டி

பீலி – மயில்தோகை

இறும் – முரியும்

**இலக்கணக்குறிப்பு:**

அடங்காமை – எதிர்மறைத்தொழிற்பெயர்

காக்க – வியங்கோள் வினைமுற்று

அடங்கியான் – வினையாலணையும் பெயர்

எல்லார்க்கும் – முற்றும்மை

உடைத்து – குறிப்பு வினைமுற்று

காவாக்கால் – எதிர்மறை வினையெச்சம்

அடங்கல் – தொழிற்பெயர்

உலகு – இடவாகுபெயர்

பொருட்டு – குறிப்பு வினைமுற்று

அறிவான் – வினையாலணையும் பெயர்

மற்றையான் – குறிப்பு வினையாலணையும் பெயர்

தப்பாமரம் – ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

கடனறிகாட்சி – வினைத்தொகை

இல்பருவம் – பண்புத்தொகை

கேடு, கோள் – முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இகல்வெல்லும் – இரண்டாம் வேற்றுமைத்தொகை

அருவினை – பண்புத்தொகை

கருதுபவர் – வினையாலணையும் பெயர்

பொருதகர் – வினைத்தொகை

சுமக்க – வியங்கோள் வினைமுற்று

வினைவலி – ஆறாம் வேற்றுமைத்தொகை

ஆரிருள் – பண்புத்தொகை

அதனினூஉங்கு – இன்னிசை அளபெடை

மலையினும் – உயர்வு சிறப்பும்மை

பணிதல் – தொழிற்பெயர்

எழுமை, ஐந்து – ஆகுபெயர்

நன்று – பண்புப்பெயர்

ஆற்றுவான் – வினையாலணையும் பெயர்

தந்தபொருள் – பெயரெச்சம்

பெறல் – தொழிற்பெயர்

வாழ்வான் – வினையாலணையும் பெயர்

பேரறிவு – பண்புத்தொகை

பெருந்தகை – பண்புத்தொகை

ஒல்கார் – வினையாலணையும் பெயர்

ஆதல் – தொழிற்பெயர்

பகல்வெல்லும் – ஏழாம் வேற்றுமைத்தொகை

ஒழுகல் – தொழிற்பெயர்

செயின் – வினையெச்சம்

ஒடுக்கம் – தொழிற்பெயர்

ஒள்ளியவர் – வினையாலணையும் பெயர்

ஒக்க – வியங்கோள் வினைமுற்று

செயல் – வியங்கோள் வினைமுற்று

| | |
|---|---|
| செல்வார் – வினையாலணையும் பெயர் | அறியார் – எதிர்மறை வினையாலணையும் பெயர் |
| ஒழுகான் – முற்றெச்சம் | பெய்சாகாடு – வினைத்தொகை |
| சாலமிகுந்து – உரிச்சொற்றொடர் | கொம்பர் – ஈற்றுப்போலி |
| ஈக – வியங்கோள் வினைமுற்று | ஆகாறு – வினைத்தொகை |
| கேடு – முதனிலை திரிந்த தொழிற்பெயர் | வாழ்க்கை – தொழிற்பெயர் |

---

**சீவக சிந்தாமணி**

---

**நூல் குறிப்பு;**

- சிந்தாமணி என்பதற்கு ஒளிகுன்றாத மணி என்பது பொருள்.
- இக்காப்பியத்தை இயற்றியவர் திருத்தக்கதேவர்.
- இவர் சோழ நாட்டினர். சமணத் துறவி.
- இவர் நரி விருத்தம் என்ற நூலையும் படைத்துள்ளார்.
- சீவக சிந்தாமணிக்கு "மண நூல்" என்ற பெயரும் உண்டு.
- இது நாமகள் இலம்பகம் முதலாக முத்தி இலம்பகம் ஈறாகப் 13 இலம்பகம் கொண்டுள்ளது.
- இந்நூல் விருத்தம் என்ற பாவினால் அமைந்த முதல் நூல்.
- இந்நூலிற்கு உரை கண்டவர் = உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்.
- சீவகன் வரலாற்றை கூறுவதால் இந்நூல் சீவக சிந்தாமணி எனப் பெயர் வழங்கப்படுகிறது.

**காந்தருவதத்தையார் இலம்பகம்:**

- வெள்ளி மலையின் வேந்தன் கலுழவேகன்.
- அவன் மகள் காந்தருவதத்தை.
- காந்தருவதத்தையின் தோழி வீணாபதி
- யாழ்போர் நடந்த இடம் இராசமாபுரம்
- காந்தருவதத்தை சீதத்தன் என்னும் வணிகனிடம் ஒப்படைக்கப்பட்டாள்.
- சீவகனின் நண்பன் நபுலன்
- போட்டியில் சீவகன் காந்தருவதத்தையை வென்று அவளை மணம் முடித்தான்.

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| சிலை – வில் | பொழில் – சோலை |
| குரங்கின – வளைந்தன | பறவை – கின்னரமிதுனம் என்னும் பறவை |
| கருங்கொடி – கரிய ஒழுங்கு | மிடறு – கழுத்து |
| கொடி – ஒழுங்கு | கடி – விளக்கம் |
| எயிரு – பல் | விம்மாது – புடைக்காது |
| எரிமலர் – முருக்கமலர் | உளர – தடவ |
| இவுளி – குதிரை | கால் – காற்று |
| நுனை – கூர்மை | கடம் – காடு |
| பிணை – பெண்மான் | மாழ்கி – மயங்கி |

இழுக்கி – தப்பி

எழினி – உறை

மொய்ம்பு – வலிமை

மடங்கல் – சிங்கம்

கணிகை – பொதுமகள்

கொல்லை – முல்லைநிலம்

குரங்கி – வளைந்து

தூமம் – அகிற்புகை

நிலமடந்தை – பெற்ற தாய்

இருவிசும்பு – செவிலித்தாய்

கைத்தாய் – செவிலித்தாய்

ஓதி – சொல்லி

புரி – முறுக்கு

பத்தர் – யாழின் ஓர் உறுப்பு

**இலக்கணக்குறிப்பு:**

எழீஇ – சொல்லிசை அளபெடை

சிறுநுதல் – அன்மொழித்தொகை

பாவை – உவமை ஆகுபெயர்

சிலைத் தொழில் – ஆறாம் வேற்றுமைத்தொகை

கருங்கொடி – பண்புத்தொகை

இருங்கடல் – பண்புத்தொகை

கடிமிடறு – உரிச்சொற்றொடர்

பவளச்செவ்வாய் – உவமைத்தொகை

விரிமலர் – வினைத்தொகை

கோதை – உவமை ஆகுபெயர்

எரிமலர் – உவமத்தொகை

செவ்வாய் – அன்மொழித்தொகை

ஒப்ப – உவமஉருபு

இன்னரம்பு – பண்புத்தொகை

விடுகணை – வினைத்தொகை

திண்டேர் – பண்புத்தொகை

வடிநுனை – வினைத்தொகை

அடுதிரை – வினைத்தொகை

கழித்தவேல் – பெயரெச்சம்

அன்ன – உவமஉருபு

நீக்கி – வினையெச்சம்

நெடுங்கண் – பண்புத்தொகை

தடங்கண் – உரிச்சொற்றொடர்

சுரந்து, முதிர்ந்து – வினையெச்சம்

நின்றாள் – வினையாலணையும் பெயர்

போக, நடக்க – வியங்கோள் வினைமுற்று

கமழ் ஓதி – அன்மொழித்தொகை

காளை – உவம ஆகுபெயர்

---

## சீறாப்புராணம்

---

**நூல் குறிப்பு:**

- சீறா என்பதற்கு வாழ்க்கை என்பது பொருள், புராணம் என்பதற்கு வரலாறு என்பது பொருள்.
- சீறாப்புராணம் என்பதற்கு நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு என்று பொருள்.
- இந்நூல் விலாதத்துக் காண்டம்(பிறப்பியற் காண்டம்), நுபுவ் வத்துக் காண்டம்(செம்பொருட் காண்டம்), ஹிஜ்ரத்துக் காண்டம்(செலவியற் காண்டம்) என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.
- இந்நூலில் 5027 விருதப்பாக்கள் உள்ளன.
- பெருமானார் பிறந்ததும் இளமை நிகழ்வுகளும் திருமணமும் விலாதத்துக் காண்டத்தில் கூறப்பட்டுள்ளது.
- வானவர் ஜிப்றாயில் மூலம் திருமுறை நபிகள் பெருமானார்க்கு அருளப்பட்டதும் அதன்பின் மக்கத்தில் நடந்தவையும் நுபுவ்வத்துக் காண்டத்தில் பேசப்படுகின்றன.
- மக்கத்தை விட்டுப் பெருமானார் மதீனம் சென்றதும் தீன் நிலை நிறுத்தற்காக நிகழ்ந்த போர்களும் பிறவும் ஹிஜ்றத்துக் காண்டத்தில் வரையப்பட்டுள்ளன.

- சீறாப்புரானத்தில் நபிகளின் வாழ்வு முற்றிலுமாகப் பாடி நிறைவு செய்யப்படவில்லை.
- பனூ அகமது மரைக்காயர் என்பவர் தாம் பெருமானாரின் தூய திருவாழ்வு முழுமையும் பாடி முடித்தார். அது “சின்ன சீறா” என வழங்கப்படுகிறது.

**ஆசிரியர் குறிப்பு:**

- உமறுப்புலவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர்.
- செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணத்தை எழுதினார்.
- நூல் முடிவுறும் முன்னரே சீதக்காதி மறைந்தார்.
- பின் அபுல் காசிம் என்ற வள்ளலின் உதவியால் சீறாப்புராணம் நிறைவு பெற்றது.
- உமறுப்புலவர் முதுமொழிமாலை என்ற எண்பது பாக்களால் ஆன நூலையும் படைத்துள்ளார்.

**விடமீட்ட படலம்:**

- நபிகளின் நண்பர் = அபூபக்கர்
- இருவரும் தங்கி இருந்த இடம், தௌர் மலைக்குகை.
- குகையில் இருந்த ஒரு பொந்தின் வழியாக வந்த பாம்பு அபூபக்கரின் உள்ளங்காலை தீண்டியது.
- அபூபக்கர் மயக்கம் அடையும் நிலையில் நபிகள் உறக்கம் களைந்து எழுந்து நடந்ததை அறிந்து கொண்டார்.
- நபிகள் தனது எச்சில் தடவி அபூபக்கரை மீட்டார்.
- **சொற்பொருள்:**

| | |
|---|---|
| கான் – காடு | நகம் – மலை |
| சிரம் – தலை | முழை - குகை |
| வளை – புற்று | பாந்தள் – பாம்பு |
| பிடவை – துணி | வெருவி – அஞ்சி |
| பொறி – புள்ளிகள் | உரகம், பணி – பாம்பு |
| பருவரல் – துன்பம் | நித்திரை – தூக்கம் |
| கடி – மணம் | காந்தி – பேரொளி |
| நறை – தேன் | பரல் – கல் |
| கெந்தம் – பற்கள் | வேகம் – சினம் |
| சென்னி – தலை | மரைமலர் – தாமரை மலர் |
| கோடிகம் – ஆடை | கால் – காற்று |
| கான்று – உமிழ்ந்து | பன்னகம் – பாம்பு |
| வரை – மலை | புடை – வளை, பொந்து |
| முரணி – மாறுபட்டு | புதியன் – இறைவன் |

**இலக்கணகுறிப்பு:**

| | |
|---|---|
| செழுந்துயில் – பண்புத்தொகை | இகலவர் – வினையாலணையும் பெயர் |

| | |
|---|---|
| மலைமுழை - ஏழாம் வேற்றுமைத்தொகை | வெருவி, கிழித்து – வினையெச்சம் |
| போர்த்த பிடவை – பெயரெச்சம் | இலை – இல்லை என்பதன் இடைக்குறை விகாரம் |
| அறிகிலார் – எதிர்மறை வினையாலணையும் பெயர் | மதிமுகம் – உவமத்தொகை |
| கடிநறை – உரிச்சொற்றொடர் | மலர்ந்தாள் – உவமைத்தொகை |
| மென்மலர் – பண்புத்தொகை | வல்லுடல் – பண்புத்தொகை |
| படுவிடம் – வினைத்தொகை | பரந்து, தாக்கி – வினையெச்சம் |
| என்ன – உவமஉருபு | மதி – உவம ஆகுபெயர் |
| அருமறை – பண்புத்தொகை | நின்றோன் – வினையாலணையும் பெயர் |
| நினைத்தவர் - வினையாலணையும் பெயர் | வெவ்விடம் – பண்புத்தொகை |

---

**மனோன்மணீயம்**

**நூல் குறிப்பு;**

- நாடகக் காப்பியங்களால் சிறப்புப் பெற்று விளங்கும் வடமொழிக்கு ஈடாக நடிப்புப் செவ்வியும் இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப் பெற்றது இந்நாடகம்.
- இந்நாடகம் லிட்டன் பிரபு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய "இரகசிய வழி" என்ற நூலைத் தழுவி அமைந்தது.
- எனினும் இது வழிநூல் என்னாது முதல் நூல் எனவே கொள்ளப்பெறும் சீர்மையுடையது.
- அங்கங்களையும் காட்சிகளையும் அமைத்து எழுதுவது நாடக நன்னூல் மரபு.
- இந்நாடகம் 5 அங்கங்களையும் 20 காட்சிகளையும் கொண்டு விளங்குகிறது.
- இடையே சிவகாமி சரிதம் என்னும் துணைக் கதை ஒன்றும் இடம் பெற்றுள்ளது.
- **ஆசிரியர் குறிப்பு:**

- பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை, கேரள மாநிலம் ஆலப்புழையில் பிறந்தவர்.
- பெற்றோர் = பெருமாள் பிள்ளை, மாடத்தி அம்மையார்.
- இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.
- இவரின் ஞானாசிரியர் = கோடாக நல்லூர் சுந்தர சுவாமிகள்
- இவர் இயற்றிய நூல்கள் = நூல் தொகை விளக்கம், திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி.
- அந்நாளைய சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ்பகதூர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.
- இவரது நீராருங்கடலுடுத்த என்ற தமிழ் வாழ்த்துப்பாடலே தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்கப்பட்டுள்ளது.

**கதை:**

- மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் ஜீவகன்.
- அமைச்சர் குடிலன் வஞ்சகம் மிக்கவன்.
- ஜீவகன் மதுரையை விட்டு திருநெல்வேலியில் கோட்டை அமைத்து அங்கு தங்கினான்.
- சுந்தர முனிவர் கோட்டையில் தனக்கு ஒரு அறை பெற்று அதில் சுரங்க வழியை அமைத்தார்.
- ஜீவகனின் மகள் மனோன்மணி. இவள் சேர நாட்டு அரசன் புருடோத்தமனை கனவில் கண்டு காதல் கொள்கிறாள்.
- அமைச்சன் குடிலனின் மகன் பலதேவனை, சேர அரசனிடம் தூது அனுப்பினான் மன்னன்.

- பலதேவனின் முறையற்ற பேச்சால் சினம் கொண்ட சேர அரசன் பாண்டிய நாடு மீது போர் தொடுத்தான்.

**சொற்பொருள்:**

- செந்தழல் – வேள்வியில் மூட்டுகிற நெருப்பு
- வானோர் – தேவர்கள்
- இந்தனம் – விறகு
- உகம் – யுகம்
- திருந்தலீர் – பகைவர்கள்
- செயமாது – வெற்றித் திருமகள்(விசயலட்சுமி)
- காயம் – உடம்பு

**இலக்கணக்குறிப்பு:**

- செந்தழல் – பண்புத்தொகை
- ஆகுக – வியங்கோள் வினைமுற்று
- போர்க்குறி – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- கனங்கணம் – அடுக்குத்தொடர்

## குயில் பாட்டு

**ஆசிரியர் குறிப்பு;**

- பாரதியார் தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும், இலக்குமி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார்.
- தேசியக்கவி, மகாகவி எனப் போற்றப்படுபவர்.
- இந்தியா, விஜயா என்னும் இதழ்களை வெளியிட்டார்.
- சுதேசமித்திரன் என்ற இதழின் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார்.

**சொற்பொருள்:**

- வாரி – கடல்
- கோற்றொடியார் – பெண்கள்(உலக்கையைத் தொடியணிந்த கையில் கொண்ட பெண்கள்)
- குக்குவென – நெல்லடிக்கும் பொது பெண்கள் ஏற்படுத்தும் ஒலிக்குறிப்பு
- பண்ணை – வயல்வெளி
- வேய் – மூங்கில்

**இலக்கணக்குறிப்பு:**

- கானப்பறவை – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- நீரோசை – ஆறாம் வேற்றுமைத் தொகை
- பெருங்கடல் – பண்புத்தொகை
- பழகு பாட்டு – வினைத்தொகை

## அழகர் கிள்ளைவிடு தூது

**தூது:**

- தூது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

- தலைவன் ஒருவனைக் கண்டு காதல் கொண்ட தலைவி ஒருத்தி தன் காதலையும் பிரிவாற்றாமையும் வெளிப்படுத்த விரும்பித் தலைவன்பால் தூது அனுப்புதல்.
- தூதின் இலக்கணம் கூறும் நூல் = இலக்கண விளக்க நூற்பா
- தூது வெண்டளை விரவிய கலிவெண்பாவால் பாடப்படும்.
- தூதாக செல்பவை = அன்னம், மயில், கிளி, குயில், வண்டு, நெஞ்சம், முகில், தென்றல், மான், தமிழ்.

**அழகர் கிள்ளைவிடு தூது:**

- திருமாலிருஞ்சோலை மலையில் கோவில் கொண்டிருக்கும் அழகரிடத்து பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை என்ற புலவர் கிளியைத் தூது விடுவதாக அமைத்துப் பாடியிருப்பது அழகர் கிள்ளை விடு தூது ஆகும்.
- இந்நூல் 250 ஆண்டுகளுக்கு முந்தைய நூலாகும்.
- இந்நூல் காப்பு வெண்பா ஒன்றையும் 239 கண்ணிகளையும் உடையது.
- பாட்டின் இரண்டு அடி கண்ணி எனப்படும்.

**ஆசிரியர் குறிப்பு:**

- சொக்கநாதப் பிள்ளை மரபினர் பலபட்டடைக்கணக்கு என்னும் ஒருவகைப் பணியைச் செய்து வந்தனர்.
- இவர் தந்தையார் பெயர் சொக்கலிங்கம் பிள்ளை.
- நூல்கள் = மதுரை மும்மணிக்கோவை, தென்றல் விடு தூது போன்றவை.

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| அரி – சிங்கம் | அரன் – சிவன் |
| அவுணன் – இரணியன் | காயம் – உடம்பு |
| சேனை – சைனியம் | பண்ணும் தொழில் – காத்தல் தொழில் |
| படி – உலகம் | பாதவம் – மருத மரம் |
| பெண் – அகலிகை | பாரம் – பளு |
| நாரி – சீதாப்பிராட்டி | வேலை – கடல் |

**இலக்கணக்குறிப்பு:**

- வன்காயம் – பண்புத்தொகை
- அரைத்திடும் சேனை – எதிர்காலப் பெயரெச்சம்
- மலர்க்கால் – உவமைத்தொகை
- வன்கானகம் – பண்புத்தொகை

---

## கலிங்கத்துப்பரணி

---

**பரணி:**

- பரணி என்பது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- போர் முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரனைப் பாடுவதைப் பரணி என்றனர்.

> ஆணை ஆயிரம் அமரிடை வென்ற
> மாண வனுக்கு வகுப்பது பரணி
> --- இலக்கண விளக்கப் பாட்டியல்

- பரணி என்ற நாள்மீன் காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்றது என்றும் அந்நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கும் பெயராக வந்தது என்றார் உ.வே.சா
- தோற்றவர் பெயரில் பரணி நூல் வழங்கப்பெறும்.

**கலிங்கத்துப்பரணி:**

- தமிழின் முதல் பரணி நூல் இது.
- இந்நூல் 509 தாழிசைகள் கொண்டது.
- இந்நூலை ஒட்டக்கூத்தர், “ தென்தமிழ் தெய்வப்பரணி” என்று சிறப்பித்துள்ளார்.
- இன்றைய ஒரிசா மாநிலம் பண்டு கலிங்கம் என்று வழங்கப்பட்டது.
- அந்நாட்டின் மீது போர் தொடுக்க முதல் குலோத்துங்கச்சோழன் தன் படைத்தளபதி கருணாகரத் தொண்டைமான் என்பவரை அனுப்பி வெற்றிபெற்றதை இந்நூல் கூறுகிறது.

**செயங்கொண்டார்:**

- கலிங்கத்துப்பரணி பாடியவர் செயங்கொண்டார்.
- இவர் முதல் குலோத்துங்கசோழனின் அவைப்புலவர்.
- இவரின் காலம் 11ஆம் நூற்றாண்டு அல்லது 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.
- பலபட்டடைச் சொக்கநாதர் இவரைப் “பரணிக்கோர் செயங்கொண்டார்” எனப் புகழ்ந்துள்ளார்.

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| வரை – மலை | சேர – முற்றும் |
| மாசை – பழிப்பை | எற்றி – உண்டாக்கி |
| அரை – இடுப்பு | கலிங்கம் – ஆடை |
| அமணர் – சமணர் | முந்நூல் – பூணூல் |
| சிலை – வில் | அரிதனை – பகை |
| மடி – இறந்த | சயத்தம்பம் – வெற்றித்தூண் |
| கடகரி – மத யானை | வயமா – குதிரை |
| அபயன் – முதல் குலோத்துங்கச்சோழன் | வண்டையார் கோன் – கருணாகரத் தொண்டைமான் |

**இலக்கணக்குறிப்பு:**

| | |
|---|---|
| மாசை எற்றி – இரண்டாம் வேற்றுமை விரி | வன்தூறு – பண்புத்தொகை |

போந்து – வினையெச்சம் களம் கண்டோம் – இரண்டாம் வேற்றுமைத்தொகை

எரிந்து, நாட்டி – வினையெச்சம் பறித்தமயிர் – பெயரெச்சம்

---

## முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

**பிள்ளைத்தமிழ்:**

- கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகப் பாவித்து அவர் தம் குழந்தைப் பருவத்தைப் பத்துப் பருவங்களாகப் பகுத்துக் கொண்டு பருவத்துக்குப் பத்து ஆசிரிய விருத்தம் அமையப் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும்.
- பிள்ளைத்தமிழ் 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- இது ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும்.
- ஆண் பால் பிள்ளைத்தமிழ் பருவங்கள் = காப்பு, செங்கீரை, தாள், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்.
- பெண்பால் பிள்ளைத்தமிழ் பருவங்கள் = காப்பு, செங்கீரை, தாள், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல்.

**குமரகுருபரர்:**

- முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் பாடியவர் குமரகுருபரர்.
- தாமிரபரணி நதிக்கரையில் உள்ள திருவைகுன்டத்தில் பிறந்தார்.
- பெற்றோர் = சன்முகசிகாமணி கவிராயர், சிவகாமசுந்தரி.
- பிறந்தது முதல் ஐந்து ஆண்டுகள் பேசாமல் இருந்தார்.
- திருச்செந்தூர் முருகப்பெருமானின் அருளால் பேசும் திறம் பெற்றார்.
- நூல்கள் = கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறிவிளக்கம், காசிக் கலம்பகம் முதலான பல நூல்கள்.
- **சொற்பொருள்:**

புலராமே – வறண்டு விடாமல் கம்முதல் – குரல் தேய்ந்து மங்குதல்

விரல் – பெருவிரல் சிவவாமே – சிவக்காமல்

அஞ்சனம் – கண்மை கலுழ்தல் – அழுதல்

தாள் – கால் வயித்தியநாதபுரி – புள்ளிருக்குவேளூர்

**இலக்கணக்குறிப்பு:**

மெல்லிதழ் – பண்புத்தொகை மென்குரல் – பண்புத்தொகை

நுண்டுளி – பண்புத்தொகை

பொழி திருமுகம் – வினைத்தொகை

கண்மலர் – உருவகம்

ஆடுக – வியங்கோள் வினைமுற்று

## பெத்தலகேம் குறவஞ்சி

**குறவஞ்சி:**

- குறவஞ்சி என்பது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- தொல்காப்பியர் கூறும் வனப்பு என்பதுள் குறவஞ்சி அடங்கும்.
- உலாப் போகும் மன்னனையோ தெய்வத்தையோ கண்டு தலைவி காதல் கொண்டு, அதனால் மனம் நலிவதும், வீதியிலே குறத்தி வருகையும், தலைவி அவளை அழைத்து குறி கேட்பதும், குறத்தி தலைவியின் கையைப் பார்த்து கைக்குறி, முகக்குறி, பல்லிசொல் போன்றவற்றை கூறுவது போல் அமையப்பெறும்.
- குறவஞ்சி நாடக வடிவில் அமையப்பெறும்.

**நூல் குறிப்பு:**

- பெத்தலகேம் குறவஞ்சியில் உலாவரும் மன்னர் இயேசுவாகவும் தேவமோகினியாக தலைவி சீயோன் மகளாகவும், குறவஞ்சி விசுவாசமாகவும் குறி கூறுதல் தீர்க்க தரிசனமாகவும். சிங்கன் குருவாகவும், நூவன் உபதேசியாகவும், அவர்கள் பிடிக்கும் பறவைகளாக மக்களும் அதற்குப் பயன்படும் வலையாக இறைவாக்கு என்ற நற்செய்தியும் உருவாக்கப்பட்டது.
- இந்நூல் முற்றுருவகமாகத் திகழ்வது தனிச்சிறப்பு ஆகும்.

**ஆசிரியர் குறிப்பு:**

- இந்நூலின் ஆசிரியர் தஞ்சை வேதநாயக சாத்திரியார்.
- பெற்றோர் = தேவசகாயம், ஞானப்பூ அம்மையார்
- ஊர் = திருநெல்வேலி
- தஞ்சையில் மதபோதராக விளங்கிய சுவார்ட்ஸ் பாதிரியார் இவரை தம் மாணவராக ஏற்றுக்கொண்டார்.
- தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னரின் உற்ற தோழராக விளங்கினார்.
- நூல்கள் = ஞானத்தச்சன், ஞானவுலா, ஆரணாதிந்தம்.

**சொற்பொருள்:**

- ஏகன் – இறைவன்
- தற்பரன் – இறைவன்

**இலக்கணக்குறிப்பு;**

- அருந்தவம் – பண்புத்தொகை
- தானதர்மம் – உம்மைத்தொகை
- பேய்க்கணங்கள் – ஆறாம் வேற்றுமைத்தொகை
- அமைந்த, கொடுத்த – பெயரெச்சம்

## மறுமலர்ச்சிப் பாடல்கள் - எந்நாளோ?

**ஆசிரியர் குறிப்பு:**

- “பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை அத்தனையும் படைப்பாய் இந்நாள்! தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறுந் துடித்தெழுந்தே” என்பார் பாவேந்தர்.
- பெற்றோர் = கனகசபை, இலக்குமியம்மாள்
- ஊர் = புதுச்சேரி
- தமிழ்நாட்டு இரசூல் கம்சதோவ் எனப் பாராட்டப்பட்டவர்.
- நூல்கள் = குடும்பவிளக்கு, பாண்டியன் பரிசு, இருண்டவீடு, தமிழச்சியின் கத்தி, சேரதாண்டவம், பிசிராந்தையார், அழகின் சிரிப்பு, குறிஞ்சித்திட்டு போன்ற பல.
- “வாழ்வினில் செம்மையை செய்பவள் நீயே” என்ற அவரின் தமிழ் வாழ்த்துப் பாடல் புதுவை அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக பாடப்பட்டு வருகிறது.
- குயில் என்ற இலக்கிய இதழை நடத்தினார்.
- “புதுவைக் குயில்” என்றும் இவரை அழைப்பர்.

**சொற்பொருள்:**

- உன்னதம் – உயர்வு
- இமமலை – இமயமலை
- கீர்த்தி – புகழ்
- பண் – பாடல்

**இலக்கணக்குறிப்பு:**

- அருந்தமிழ் - பண்புத்தொகை
- புதுக்குநாள் – வினைத்தொகை
- பகர்வார் – வினையாலணையும் பெயர்
- தண்கடல் – பண்புத்தொகை

---

## பூக்கட்டும் புதுமை

---

**முடியரசன்:**

- பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களுள் மூத்தவர் இவர்.
- ஊர் = மதுரை
- பெற்றோர் = சுப்புராயலு, சீதாலட்சுமி
- இயற்பெயர் = துரைராசு
- தந்தை பெரியாரிடமும், அறிஞர் அண்ணாவிடமும் நெருங்கிப் பழகியவர்.
- சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டவர்.
- தமது மறைவின் பொழுதும் எச்சடங்குகளும் வேண்டாம் என்றே உரைத்து, அவ்வாறே நிறைவேறச் செய்தவர்.
- காரைக்குடி மீனாட்சி சுந்தரம் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றினார்.
- நூல்கள் = பூங்கொடி, காவியப்பாவை.
- பூங்கொடி என்னும் காவியம் தமிழக அரசின் பரிசை பெற்றது.
- பறம்பு மலையில் நடந்த விழாவில் கவியரசு என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

**சொற்பொருள்:**

- ஈர்க்கின்ற – கவர்கின்ற
- புலம் – அறிவு
- புல்லடிமை – இழிவைச் சேர்க்கும் அடிமைத்தனம்

**இலக்கணக்குறிப்பு:**

- பூக்கின்ற, ஈர்க்கின்ற – பெயரெச்சம்
- செங்கதிர் – பண்புத்தொகை
- புல்லடிமை – பண்புத்தொகை
- காகிதப்பூ – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

---

**விடுதலை விளைத்த உண்மை**

---

**கண்ணதாசன்;**

- “மாற்றம் எனது மானிடத் தத்துவம்” எனப் பாடியவர்.
- பிறந்த ஊர் = சிறுகூடல்பட்டி
- தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர்.
- பெற்றோர் = சாத்தப்பன், விசாலாட்சி
- இயற்பெயர் = முத்தையா
- இதழ்கள் = தென்றல், தென்றல்திரை, சண்டமாருதம், முல்லை, கண்ணதாசன்

**சொற்பொருள்:**

- தட்டின்றி – குறையின்றி
- மூவாத – மூப்படையாத
- மீன் – விண்மீன்
- தளை – விலங்கு
- வதிபவர் – வாழ்பவர்
- மிடிமை – வறுமை

---

**தளை**

---

**சிற்பி பாலசுப்பிரமணியம்:**

- இவரின் ஊர் = கோவை மாவட்டம் பொள்ளாச்சி
- பெற்றோர் = பொன்னுசாமி, கண்டியம்மாள்
- கருத்தோவியங்களை வடிவமைக்கும் சொல்லேருழவர்
- பாரதியார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் தலைவராகப் பணியாற்றியவர்.
- கவிதை நூல்கள் = சிரித்த முத்துக்கள், நிலவுப்பூ, ஒளிப்பறவை, சூரிய நிழல், ஆதிரை.
- உரைநடை நூல்கள் = இலக்கியச் சிந்தனை, மலையாளக் கவிதை, அலையும் சுவடும், ஒரு கிராமத்து நதி.
- “ஒரு கிராமத்து நதி” என்னும் நூலுக்குச் சாகித்திய அகாதமியின் பரிசு பெற்றார்.
- தமிழக அரசின் பாவேந்தர் பரிசு, தஞ்சைப் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில இலக்கிய நூல்பரிசு பெற்றுள்ளார்.

---

**கண்**

---

**நா.காமராசன்:**

- பிறந்தது = மதுரை மாவட்டம் போடி-மீனாட்சிபுரம் கிராமம்.
- பெற்றோ = நாச்சிமுத்து, இலட்சுமி அம்மாள்.
- மறுமலர்ச்சி யுகந்தின் கவிஞராக திகழ்ந்தவர்.
- கிராமிய சந்தங்களுடன் புதுப்பார்வை திகழப் படிமக் கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளார்.
- இவரின் “கருப்பு மலர்கள்” என்னும் தொகுப்பு நூல், கவிதை உலகில் ஒரு திருப்பத்தை உருவாக்கியது.
- படைப்புகள் = சூரியகாந்தி, சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள், தாஜ்மகாலும் ரொட்டித்துண்டும்.

**இலக்கணக்குறிப்பு:**

- பகல்பூக்கள் – ஏழாம் வேற்றுமைத்தொகை
- புருவக்கொடி – உருவகம்
- மனப்பறவை – உருவகம்

---

**தண்ணீர் வங்கிகள்**

---

**ந.கருணாநிதி:**

- கவிஞர் ந.கருணாநிதி 28.03.1939இல் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் பிறந்தவர்.
- பெற்றோர் = நடேசன், சிவகாமியம்மாள்
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்.
- பூவிருந்தவல்லி அரசு மேல்நிலைப்பள்ளியில் முதுகலை தமிழாசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.
- இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார்.
- இவரின் கவிதை தொகுப்பு = நமக்குள்ளே மலரட்டும் நல்லிணக்கம்

**இலக்கணக்குறிப்பு:**

- இணையிலாப் பசுமை – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- இலா – இடைக்குறை
- வான்மழை – ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை

---

**வழிபாட்டுப் பாடல்கள் - சிவபெருமான்**

---

**திருநாவுக்கரசர்:**

- சைவத் திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் ஆகும்.
- அவற்றுள் 4,5,6 ஆகிய திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடியது.
- திருநாவுக்கரசர் தென்னார்காடு மாவட்டம், திருவாமூர் என்னும் ஊரில் பிறந்தார்.
- பெற்றோர் = புகழனார், மாதினியார்,இவரின் தமக்கையார் = திலகவதியார்
- இயற்பெயர் = மருள் நீக்கியார்
- இவரின் வேறு பெயர்கள் = வாகீசர், அப்பர்

- சைவநெறியில் தோய்ந்த இவர் சாதி வேற்றுமைகளைத் களைய முற்பட்ட சமுதாயப் பற்றாளர்.
- இவர் “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்னும் திருவாக்கைத் தந்தவர்.
- காலம் = கி.பி.ஏழாம் நூற்றாண்டு

**சொற்பொருள்:**

- நமன் – எமன்
- நடலை – இறப்பு
- பிணி – நோய்
- ஏமாப்பு – பாதுகாப்பு

---

**திருமால்**

---

**ஆண்டாள்:**

- ஆண்டாள் அருளியது திருப்பாவை, நாச்சியார் திருமொழி.
- திருப்பாவையை “வேதம் அனைத்திற்கும் வித்து” என்பர்.
- நாலாயிர திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் மூன்றாவது பிரபந்தமாக வைக்கப்பட்டிருப்பது திருப்பாவை.
- பாவை என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
- பாவை என்பது இருமடியாகு பெயர்.
- திருப்பாவை பாக்கள் முப்பதும் வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீர் கொச்சகக் கலிப்பா வகையை சார்ந்தவை.
- இவரின் காலம் எட்டாம் நூற்றாண்டு.
- இவர் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்.

**சொற்பொருள்:**

- ஆழி – கடல், சக்கரம்
- சார்ங்கம் – வில்
- பாழி – வலிமை

**இலக்கணக்குறிப்பு;**

- கரவேல் – எதிர்மறை ஏவல் வினைமுற்று
- உதைத்த – பெயரெச்சம்

---

**இயேசுபிரான்**

---

**எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை:**

- இவர் திருநெல்வேலி மாவட்டம் கரையிருப்பு என்னும் பகுதியில் பிறந்தவர்.
- பெற்றோர் = சங்கர நாராயண பிள்ளை, தெய்வநாயகி அம்மை
- ஹென்றி அல்பிரடு என்பதன் சுருக்கமே எச்.ஏ ஆகும்
- படைப்புகள் = போற்றித் திருவகவல், இரட்சணியமனோகரம், இரட்சணிய யாத்திரிகம்.
- இரட்சணியமனோகரம் கலி விருதப்பாவால் அமைந்த நூல்.
- இவரை “கிறித்துவக் கம்பர்” என்பர்.

**சொற்பொருள்:**

- துசங்கட்டுதல் – விடாப்பிடியாக ஒரு செயலை முன்னின்று நடத்திக்காட்டுதலுக்கு வழங்கப்படும் வட்டார வழக்கு.

**இலக்கணக்குறிப்பு:**

- பெருங்குணம் – பண்புத்தொகை
- கட்டும் – செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம்

---

**புத்தர்**

---

**புத்தமித்திரர்:**

- வீரசோழியம் ஒரு ஐந்திலக்கணம் கூறும் நூல்.
- வீரராசேந்திர சோழன் விருப்பத்திற்கு ஏற்பப் புத்தமித்திரர் பாடியது.
- இந்நூலுக்கு பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார்.

**சொற்பொருள்:**

- இருவினை – நல்வினை, தீவினை
- பரவுதும் – யாம் தொழுதும்
- ஓங்குநீர் – கடல்
- முப்பகை – காமம், வெகுளி, மயக்கம்
- முனிவர் – துறவி

**இலக்கணக்குறிப்பு:**

- பரவுதும் – தன்மைப் பன்மை வினைமுற்று
- நிழல் போதி – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- நீங்கா இன்பம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- யாவரும் – முற்றும்மை
- வீற்றிருந்த – பெயரெச்சம்
- வினைப்பிணி – உருவகம்

# 12th STD

---

**கடவுள் வாழ்த்து**

---

**ஆசிரியர் குறிப்பு:**

- கம்பர் சோழ நாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தவர்.
- இவரின் காலம் கி.பி. பனிரெண்டாம் நூற்றாண்டு.
- கம்பரைத் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் என்பார் ஆதரித்து வந்தார்.
- "கவிச்சக்ரவர்த்தி" எனப் போற்றப்படுபவர் கம்பர்.
- "கல்வியில் பெரியவன் கம்பன், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்" என்னும் தொடர்கள் அவர்தம் பெருமையை விளக்குகின்றன.
- நூல்கள் = சடகோபர் அந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதி அந்தாதி.

**நூற் குறிப்பு:**

- வடமொழியில் வான்மீகி முனிவர் இயற்றிய இராமாயணத்தை தழுவி, தமிழில் கவிப் பேரரசர் கம்பர் இயற்றியது கம்பராமாயணம்.
- கம்பரால் இயற்றப்பட்டதால் "கம்பராமாயணம்" என வழங்கப்படுகின்றது.
- கம்பர் தம்நூலுக்கு இட்ட பெயர் "இராமாவதாரம்"

**சொற்பொருள்:**

- ஒன்றேயென்னின் – ஒன்றே என்று கூறின்
- நம்பி – இறைவன்

**இலக்கணக்குறிப்பு:**

- வாழ்க்கை – தொழிற்பெயர்
- அம்மா – வியப்பிடைச்சொல்

---

## மொழி வாழ்த்து

---

**நூல் குறிப்பு:**

- தோரமங்கலம் திரு.அ.வரதநஞ்சையப் பிள்ளை இயற்றியது "தமிழரசி குறவஞ்சி".
- 96வகை சிற்றிலக்கியங்களுள் குறவஞ்சியும் ஒன்று.
- தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் = சுவாமிமலை முருகப்பெருமான்.
- தமிழன்னையையே பாட்டுடைத் தலைவியாக்கி இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

- தமிழரசி குறவஞ்சியை இயற்றியவர் தோரமங்கலம் திரு.அ.வரதநஞ்சையப் பிள்ளை.
- பெற்றோர் = அப்பசாமிப் பிள்ளை, வரதாயி அம்மையார்.
- இவர் விரைந்து கவி பாடுவதில் வல்லவர்.
- கரந்தை தமிழ் சங்கத்தில் "ஆசிரியர்" என்னும் சிறப்புப்பட்டம் பெற்றவர்.
- "புலவரேறு" எனச் சிறப்பிக்கபடுவார்.

- கரந்தை தமிழ் சங்கத்தில் நமச்சிவாய முதலியார் தலைமையில் “தங்கத் தோடா” பரிசு பெற்றுள்ளார்.
- தமிழவேள் உமாமகேசுவரனார் இவரிடம் கேட்டு கொண்டதற்கு இணங்க இந்நூலை இயற்றினார்.
- இந்நூலை கரந்தை தமிழ் சங்கத்தின் வெள்ளி விழாவின் பொது ஞானியரடிகள் தலைமையில் அரங்கேற்றினர்.

**சொல்பொருள்:**

- நண்ணும் – கிட்டிய
- இசைத்த – பொருந்தச் செய்த
- வண்ணம் – ஓசை
- பிறமொழி – வேற்றுமொழி
- வண்மை – வளமை

**இலக்கணக்குறிப்பு:**

- அசைத்த, இசைத்த – பெயரெச்சம்
- உலகம் – இடவாகுபெயர்
- திருந்துமொழி – வினைத்தொகை
- வாழிய – வியங்கோள் வினைமுற்று
- அடிவாழ்த்துவம் – இரண்டாம் வேற்றுமைத்தொகை
- வாழ்த்துவம் – தன்மைப் பன்மை வினைமுற்று

---

**நாட்டு வாழ்த்து**

---

**நூல் குறிப்பு:**

- “நாமக்கல் கவிஞர் பாடல்கள்” என்னும் நூலில் கவிஞரின் பாடல்கள் பல தொகுக்கப்பட்டுள்ளது.
- கவிஞர் சத்தியாகிரகத் தொண்டர்கள் பாடுவதற்கென இயற்றிய சில பாடல்கள் “என்னுடைய நாடு” என்னும் தலைப்பில் தேசிய மலரில் இடம் பெற்றுள்ளன.

**ஆசிரியர் குறிப்பு:**

- இயற் பெயர் = இராமலிங்கனார்
- பெற்றோர் = வெங்கடராமன், அம்மணியம்மாள்
- இவற் முத்தமிழிலும், ஓவியக்கலையிலும் சிறந்தவர்.
- இவர் தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தார்.
- தமிழக அரசு இவரை சட்ட மேலவை உறுபினராக நியமித்தது.
- நடுவண் அரசு இவருக்கு “பத்மபூஷன்” விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

**சொற்பொருள்:**

- வாடின – தளர்ந்த
- ஓடின – மறைந்தன

**இலக்கணக்குறிப்பு:**

- தினந்தினம் – அடுக்குத்தொடர்
- வந்தவர் – வினையாலணையும் பெயர்
- போனவர் – வினையாலணையும் பெயர்
- இல்லாதவர் – எதிர்மறை வினையாலணையும் பெயர்
- யாரையும் – முற்றும்மை
-

---

**புறநானூறு**

---

**நூல் குறிப்பு;**

- புறம் + நான்கு + நூறு = புறநானூறு
- இந்நூலை புறப்பாட்டு, புறம் எனவும் அழைப்பர்.
- நானூறு பாடல்கள் உள்ளன.
- இதனை தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை.
- இந்நூலின் 11 புறத்திணைகளும், 65 துறைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.
- ஜி.யு.போப் இந்நூலின் சில பாடல்களை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

**ஆசிரியர் குறிப்பு:**

- நரிவெரூஉத் தலையார்.
- இவரால் பாடப்பட்டவன் சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும் பொறை ஆவான்.
- இவர் இயற்றிய பாடல்கள் குறுந்தொகையிலும், திருவள்ளுவமாலையிலும் உள்ளன.

**சொற்பொருள்:**

- கயன்முள் – மீன்முள்
- திரைகவுள் – சுருக்கங்களை உடைய கன்னம்
- கணிச்சி – மழுவாயுதம்
- திறல் – வலிமை
- ஒருவன் – எமன்
- ஆறு – நெறி

**இலக்கணக்குறிப்பு:**

- கயன்முள் – ஆறாம் வேற்றுமைத்தொகை
- திரைகவுள் – வினைத்தொகை
- கூர்ம்படை – பண்புத்தொகை
- ஆற்றீர் – முன்னிலை பன்மை எதிர்மறை வினைமுற்று
- படூஉம் – இசைநிறை அளபெடை

---

**அகநானூறு**

---

**நூல் குறிப்பு:**

- அகம் + நான்கு + நூறு = அகநானூறு
- அடி எல்லை = 13 முதல் 31
- நானூறு பாடல்கள் உள்ளன.

- தொகுத்தவர் = மதுரை உப்பூரி குடிகிழார் மகன் உருதிரசன்மனார்
- தொகுபித்தவர் = பாண்டியன் உக்கிரப் பெருவழுதி
- வேறுபெயர்கள் = அகம், நெடுந்தொகை
- இந்நூலில் மூன்று பகுதிகள் உள்ளன.
- முதல் 120 பாடல்கள், “களிற்றியானை நிறை” எனப்படும்.
- அடுத்த 180 பாடல்கள், “மணிமிடை பவளம்” எனப்படும்.
- கடைசி 100 பாடல்கள் “நித்திலக்கோவை” எனப்படும்.
- 1,3,5 என ஒற்றைப்படை எண்கள் அமைந்த பாடல்கள் = பாலைத்திணை பாடல்கள்
- 2,8 என வரும் பாடல்கள் = குறிஞ்சித்திணை பாடல்கள்
- 4,14 என வரும் பாடல்கள் = முல்லைதினைப் பாடல்கள்
- 6,16 என வரும் பாடல்கள் = மருதத்திணை பாடல்கள்
- 10,20 என வரும் பாடல்கள் = நெய்தல் திணை பாடல்கள்.

**சொற்பொருள்:**

- பசை – ஒட்டும் பசை(ஈரம்)
- பச்சை – தோல்
- மாச்சிறைப் பறவை – கரிய சிறகுகள் உடைய வெளவால்
- முதுமரம் – பழையமரம்
- முகை – மொட்டு
- கடிமகள் – மணமகள்
- கதப்பு – கூந்தல்
- தண்பதம் – குளிர்பதம்

**இலக்கணக்குறிப்பு:**

- உயர்சினை – வினைத்தொகை
- சிறைப்பறவை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- பகலுறை – ஏழாம் வேற்றுமைத்தொகை
- முதுமரம் – பண்புத்தொகை
- கடிமகள் – உரிச்சொற்றொடர்
- புல்லார் – இரண்டாம் வேற்றுமைத் தொகை
- வல்விரைந்து – ஒருபொருட்பன்மொழி

---

## நற்றிணை

---

**நூல் குறிப்பு:**

- நன்மை + திணை = நல் + திணை = நற்றிணை
- எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக அமையப்பெற்றது நற்றிணை.
- நானூறு பாடல்கள் உள்ளன.
- அடி எல்லை = 9 முதல் 12
- இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- தொகுத்தவர் = பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

**ஆசிரியர் குறிப்பு:**

- நக்கண்ணையார் பெண்பாற் புலவர் ஆவார்.
- இவர் “பெருங்கோழி நாயக்கன் மகள் நக்கண்ணை” என் கூறப்படுபவர்.
- உறையூர் வீரை வேண்மான் வெளியன் தித்தன் என்னும் சோழ மன்னனின் மகன் போரவைக் கோப்பெருநற்கிள்ளி ஆவான்.

- அவன் தன் தந்தையோடு பகைத்துக் கொண்டு நாடிழந்து, வறுமையில் புல்லரிசிக் கூழுண்டு வாழ்ந்து வந்தான்.
- அந்நிலையிலும் ஆமூர் மல்லன் என்பவனை போரில் வெற்றி கொண்டான்.
- அவன் வீரத்தைக் கண்ட நக்கண்ணையார் அவ்வரசனைத் தாம் மணந்து கொள்ள விரும்பியதாக அவர் பாடிய புறநானூற்று 83,84,85 ஆம் பாடல்கள் மூலம் அறியலாம்.

**சொற்பொருள்:**

- இறவு – இறாமீன்
- முதல் – அடி
- பிணர் – சருச்சரை(சொர சொரப்பு)
- தடவு – பெருமை
- சுறவு – சுறாமீன்
- கொடு – கொம்பு
- மருப்பு – தந்தம்
- உழை – பெண்மான்
- உரவு – வலிமை

**இலக்கணக்குறிப்பு:**

- இறவுப்புறம் – ஆறாம் வேற்றுமைத்தொகை
- களிற்று மருப்பு – ஆறாம் வேற்றுமைத்தொகை
- முள்ளிலை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
- நன்மான், நெடுந்தேர் – பண்புத்தொகை
- செலீஇய – சொல்லிசை அளபெடை

---

**குறுந்தொகை**

---

**நூல் குறிப்பு:**

- குறுமை + தொகை = குறுந்தொகை
- அடி எல்லை = 4 முதல் 8
- இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- நானூற்றி ஒரு பாடல் உள்ளன.

**ஆசிரியர் குறிப்பு:**

- கபிலர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரில், அந்தணர் மரபில் பிறந்தவர்.
- கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரியை உயிர்த் தோழராக கொண்டவர்.
- பாரியின் அவைகளப் புலவராக விளங்கியவர்.
- இவர் குருஞ்சித் திணை பாடல்கள் பாடுவதில் வல்லவர்.

**கபிலரை பற்றிய புகழுரைகள்:**

- நக்கீரர் = வாய்மொழிக் கபிலன்
- பெருங்குன்றூர்க் கிழார் = நல்லிசைக் கபிலன்
- பொருந்தில் இளம்பூரனார் = வெறுத்த கேள்வி விளங்கு புகழ் கபிலன்
- மாறோக்கத்து நப்பசலையார் = புலனழுக்கற்ற அந்தணாளன், பொய்யா நாவிற் கபிலன்

**சொற்பொருள்:**

- ஒழுகுநீர் – ஓடுகின்ற நீர்
- ஆரல் – ஆரல் மீன்
- குருகு – நாரை

**இலக்கணக்குறிப்பு:**

- யாரும் – முற்றும்மை
- ஒழுகுநீர் – வினைத்தொகை
- குருகும் – இழிவு சிறப்பும்மை

---

**ஐங்குறுநூறு**

---

**நூல் குறிப்பு:**

- ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு
- அடி எல்லை = 3 முதல் 6
- ஐநூறு பாடல்கள் உள்ளன.
- ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்கள் உள்ளன.
- குருஞ்சித் திணை பாடல்கள் பாடியவர் = கபிலர்
- முல்லைத் திணை பாடல்கள் பாடியவர் = பேயன்
- மருதத் திணை பாடல்கள் பாடியவர் = ஓரம்போகி
- நெய்தல் திணை பாடல்கள் பாடியவர் = அம்மூவன்
- பாலை திணை பாடல்கள் பாடியவர் = ஓதலாந்தை
- இந்நூலில் கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- தொகுத்தவர் = புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்
- தொகுபிதவர் = சேரமான் யானைக் கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை

**ஆசிரியர் குறிப்பு:**

- ஆந்தையார் என்பது இயற்பெயர்.
- ஓதலூர் என்னும் ஊர்.
- ஓதலூர் மேலைக் கடற்கரைக் பகுதியில் குட்டநாட்டில் உள்ளது.
- ஆந்தை என்பது ஆதன் தந்தை என்பதன் மரூஉ.

**சொற்பொருள்:**

- மறு – குற்றம்
- தூவி – இறகு
- மரபு – முறைமை
- ஓதி – கூந்தல்
- கிளை – சுற்றம்
- ஊன் – தசை
- நிணம் – கொழுப்பு
- வல்சி – உணவு
- போலாம் – பொன்
- விறல் – வலிமை

**இலக்கணக்குறிப்பு:**

- பச்சூன், பைந்நிணம் – பண்புத்தொகை
- பொலம்புனை – மூன்றாம் வேற்றுமைத்தொகை
- புனைகலம் – வினைத்தொகை
- வேற்காளை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- காளை – உவமையாகுபெயர்

---

**திருக்குறள்**

---

**நூல் குறிப்பு:**

- திருக்குறள் என்பது அடையடுத்த கருவியாகுபெயர்
- இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும்பிரிவுகளை கொண்டது.
- அறத்துப்பால் = பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என நான்கு இயல்களும் 38 அதிகாரங்களையும் கொண்டது.
- பொருட்பால் = அரசியல், அங்கவியல், ஒழிபியல் என் 3 இயல்களும், 70 அதிகாரங்களையும் கொண்டது.
- இன்பத்துப்பால் = களவியல், கற்பியல் என் 2 இயல்களும், 25அதிகாரங்களையும் உடையது.
- திருக்குறளின் வேறு பெயர்கள் = முப்பால், பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவம், தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுவப்பயன், பொருளுரை, முதுமொழி.
- திருவள்ளுவரின் வேறு பெயர்கள் = நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபாங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில் புலவர்.

**சொற்பொருள்:**

வையகம் – உலகம்

தினை – மிகச் சிறிய அளவு

சால்பு – நிறைபண்பு

மாசு – குற்றம்

அகழ்வாரை – தோண்டுபவரை

பொறுத்தல் – மன்னிக்க

ஒரால் – நீக்குதல்

மடவார் – அறிவிலிகள்

விருந்து – புதியராய் வந்தவர்

பொன்றும் – அழியும்

அரண் – கோட்டை

ஒட்பம் – அறிவுடைமை

அதிர – நடுங்கும் படி

திட்பம் – வலிமை

ஒரால் – செய்யாமை

கோள் – துணிபு

நன்றி – நன்மை

பனை – ஒரு பேரளவு

கேண்மை – நட்பு

விழுமம் – துன்பம்

தலை – சிறந்த அறமாகும்

இன்மை – வறுமை

வன்மை – வலிமை

பொறை – பொறுத்தல்

நிறை – சால்பு

அற்றம் – அழிவு

ஓரீஇ – நீக்கி

கூம்பல் – குவிதல்

நோய் – துன்பம்

ஊறு – பழுதுபடும் வினை

ஆறு – நெறி

கொட்க – புலப்படும் படி

வீறு – செய்தல் | திண்ணியர் – வலியர்

**இலக்கணக்குறிப்பு:**

| | |
|---|---|
| செய்யாமல் – எதிர்மறை வினையெச்சம் | செய்த – இறந்தகால பெயரெச்சம் |
| வையகமும் வானகமும் – எண்ணும்மை | தூக்கார் – முற்றெச்சம் |
| தூக்கின் – எதிர்கால பெயரெச்சம் | செயின் – வினையெச்சம் |
| தெரிவார் – வினையாலணையும் பெயர் | சால்பு – பண்புப்பெயர் |
| மறவற்க – எதிர்மறை வியங்கோள் வினைமுற்று | எழுபிறப்பும் – முற்றும்மை |
| துடைத்தவர் – வினையாலணையும் பெயர் | உள்ள – வினையெச்சம் |
| கொன்றார் - வினையாலணையும் பெயர் | அகழ்வார் - வினையாலணையும் பெயர் |
| பொறுத்தல் – தொழிற்பெயர் | விருந்து – பண்பாகு பெயர் |
| ஒரால், பொறை – தொழிற்பெயர் | நீங்காமை – எதிர்மறை தொழிற்பெயர் |
| போற்றி – வினையெச்சம் | ஒருத்தார் - வினையாலணையும் பெயர் |
| செய்தாரை - வினையாலணையும் பெயர் | துறந்தார் - வினையாலணையும் பெயர் |
| இன்னா சொல் – ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் | உண்ணாது – எதிர்மறை வினையாலணையும் பெயர் |
| அற்றம் – தொழிற்பெயர் | ஓரீஇ – சொல்லிசை அளபெடை |
| உய்ப்பது - வினையாலணையும் பெயர் | எண்பொருள் – பண்புத்தொகை |
| கூம்பல் – தொழிற்பெயர் | அறிகல்லாதவர் – வினையாலணையும் பெயர் |
| அஞ்சுவது - வினையாலணையும் பெயர் | அஞ்சல் – தொழிற்பெயர் |
| அதிர – வினையெச்சம் | உடையார் – குறிப்பு வினைமுற்று |
| மனத்திட்பம் – ஆறாம் வேற்றுமைத்தொகை | ஒல்காமை – தொழிற்பெயர் |
| ஏற்றா – ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் | சொல்லுதல் – தொழிற்பெயர் |
| யார்க்கும் – முற்றும்மை | எளிய – குறிப்பு வினைமுற்று |
| எய்தி – வினையெச்சம் | மாண்டார் - வினையாலணையும் பெயர் |

---

## சிலப்பதிகாரம்

---

**நூல் குறிப்பு:**

- இக்காப்பியம், “முத்தமிழ்க் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், நாடகக் காப்பியம்” என்று பல்வேறு சிறப்புப் பெயர்களால் பாராட்டப்படுகிறது.
- கண்ணகியின் காற்சிலம்பு காரணமாக வளர்ந்த கதையாதலினால் சிலப்பதிகாரம் எனப் பெயர்பெற்றது.

- இதுவே தமிழின் முதல் காப்பியம்.
- புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களையும், மங்கள வாழ்த்துப் பாடல் முதலாக வரந்தருகாதை ஈறாக முப்பது காதைகளையும் உடையது.
- நூல் கூறும் மூன்று உண்மை = அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்.

**ஆசிரியர் குறிப்பு:**

- இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள்
- பெற்றோர் = இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நற்சோனை
- தமையன் = சேரன் செங்குட்டுவன்
- காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு
- இந்நூலுக்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்கள் இருவர். ஒருவர் அரும்பதங்களுக்கு மட்டும் உரை எழுதிய அரும்பத உரைகாரர். மற்றொருவர் விளக்கமாக உரை எழுதிய அடியார்க்கு நல்லார்(இவர் உரை முழுவதுமாக கிடைக்கவில்லை)
- இக்காலத்தே வாழ்ந்த ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை நூல் முழுமைக்கும் உள்ளது.

**நூல் சிறப்பு:**

- பாரதியார் இந்நூலின் அருமை பெருமைகளை உணர்ந்து, “நெஞ்சையள்ளும் சிலம்பு” எனப் புகழ்ந்துள்ளார்.
- கவிமணி இந்நூலை, “தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தோறும் சிலப்பதிகாரம்” எனப் பாராட்டியுள்ளார்.

**சொற்பொருள்:**

- வெய்யோன் – கதிரவன்
- ஈர்வளை – அறுத்து செய்யப்பட்ட வளையல்
- இலங்கு – ஒளிருகின்ற
- தோளி – கண்ணகி
- முறை – நீதி
- நிறை – கற்பு
- படுகாலை – மாலைக்காலம்
- மாதர் – காதல்
- மல்லல் – வளம்
- கொற்றம் – அரசியல்
- வைவாள் – கூரியவாள்
- பழுது – உடல்

**இலக்கணக்குறிப்பு:**

- ஈர்வளை – வினைத்தொகை
- கையேந்தி – ஏழாம் வேற்றுமைத்தொகை
- காற்சிலம்பு – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- நல்லுரை – பண்புத்தொகை
- தண்குடை – பண்புத்தொகை
- பொற்சிலம்பு – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- மாமதுரை – உரிச்சொற்றொடர்

- வைவாள் – உரிச்சொற்றொடர்
- வளைக்கை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

---

**கம்பராமாயணம்**

---

**நூல் குறிப்பு:**

- கம்பர் தாம் இயற்றிய இந்நூலுக்கு இராமாவதாரம் என்றே பெயரிட்டார். அதுவே கம்பராமாயணம் என்று வழங்கப்படுகிறது.
- இராம காதைக்கு ஆதிகாவியம் என்றும் அக்காதையை வடமொழியில் இயற்றிய வான்மீகிக்கு ஆதிகவி என்றும் பெயர் உண்டு.
- கம்பராமாயணம் வழி நூல் எனப்படுகிறது.
- கம்பரின் இராமாயணத்தைக் கம்ப நாடகம் எனவும் கம்பசித்திரம் எனவும் அழைப்பர்.
- கம்பரின் யாப்பு வண்ணங்கள் நூல் முழுவதும் மிளிர்கிறது. “வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணுற்றாறே” என்று ஒரு கணக்கீடும் உள்ளது.
- தமிழ் இலக்கியத்தில் தொடங்கிய காப்பிய வளர்ச்சி கம்பர் படைப்பில் உச்ச நிலையை அடைந்தது.
- கம்பராமாயணம் 6 காண்டங்களை உடையது. அவை பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரண்யகாண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம்.
- ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டம் ஒட்டக்க்கூத்தர் எழுதினார்.

**சுந்தரகாண்டம்:**

- இக்காண்டாமே “காப்பியத்தின் மணிமகுடமாக” விளங்குகிறது.
- சிறிய திருவடி = அனுமன்
- அனுமனுக்கு “சுந்தரன்” என்னும் பெயரும் உண்டு.
- இராமனின் அடையாளமாக சீதையிடம் அனுமன் கொடுத்தது = கணையாழி
- சீதை அனுமனிடம் கொடுத்தது = சூடாமணி

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| கழல் – திருவடி | முளரி – தாமரை |
| தையல் – திருமகளாகிய சீதாப்பிராட்டி | இறைஞ்சி – வணங்கி |
| திண்டிறல் – பேராற்றல் மிக்க இராமன் | ஓதி – கூந்தல் |
| மற்று – மேலும் | துறத்தி – கைவிடுக |

திரை – அலை

தனயை – மகள்

உம்பி – உன் தம்பி

கனகம் – பொன்

அலங்கல் – மாலை

திருக்கம் – வஞ்சனை

வீங்கினள் – பூரித்தாள்

தோகை – மயில்

மருகி – மருமகள்

தடந்தோள் – அகன்ற தோள்

வேலை – கடல்

சாலை – பர்ணசாலை

கோரல் – கொல்லுதல்

முறிவு – வேறுபாடு

ஆழி – மோதிரம்

மாமணிக்கரசு – சூடாமணி

**இலக்கணக்குறிப்பு:**

மொய்கழல் – வினைத்தொகை

தழீஇ – சொல்லிசை அளபெடை

அலைகடல் – வினைத்தொகை

தடந்தோள் – உரிச்சொற்றொடர்

இற்பிறப்பு – ஏழாம் வேற்றுமைத்தொகை

கண்ணின் நீர்க்கடல் – உருவகம்

ஆருயிர் – பண்புத்தொகை

பேர்அடையாளம் – உம்மைத்தொகை

மாமணி – உரிச்சொற்றொடர்

கழல் – தானியாகு பெயர்

தெண்டிரை – பண்புத்தொகை

துறத்தி – ஏவல் வினைமுற்று

பெருந்தவம் – பண்புத்தொகை

களிநடம் – வினைத்தொகை

கோறல் – தொழிற்பெயர்

பொன்னடி – உவமத்தொகை

மலரடி – உவமத்தொகை

கைத்தலம் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

---

## தேம்பாவணி

---

**நூல் குறிப்பு;**

- வீரமாமுனிவர் இயற்றியது தேம்பாவணி.
- இந்நூலில் மூன்று காண்டங்கள், முப்பத்தாறு படலங்கள், 3615 பாடல்கள் உள்ளன.
- தேம்பா + அணி = தேம்பாவணி. வாடாத மாலை எனப் பொருள்.

- தேன் + பா + அணி = தேம்பாவணி. தேன் போன்ற பாக்களை அணியாக உடைய நூல் எனப் பொருள் கொள்வர்.
- நூலின் தலைவன் = இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தை சூசை மாமுனிவர்.
- இந்நூலை “கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம்” என்பர்.

**வீரமாமுனிவர்:**

- இயற் பெயர் = கொன்ஸ்டான் ஜோசப்பெஸ்கி
- கொன்ஸ்டான் என்னும் இத்தாலி மொழி சொல்லுக்கு அஞ்சாமை எனப் பொருள்.
- இவர் தம் பெயரை “தைரியநாதசாமி” என மாற்றிக்கொண்டார்.
- தமிழ்ச் சான்றோர் இவரை “வீரமாமுனிவர்” என அழைத்தனர்.
- 1710ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வந்த இப்பெரியார் 37 ஆண்டுகள் சமயப் பணியும் தமிழ்ப்பணியும் புரிந்து 1747ஆம் ஆண்டில் அம்பலக்காடு என்னும் இடத்தில இயற்கை எய்தினார்.
- படைப்புகள் = திருக்காவலூர் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, வேதியர் ஒழுக்கம், பரமார்ர்த்த குரு கதை, செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், சதுரகராதி போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார்.
- திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

**வளன் செனித்த படலம்:**

- காப்பியத் தலைவனான வளன் என்னும் சூசை மாமுனிவர் தாவீது மன்னனின் அரச மரபில் தோன்றிய வரலாற்றை கூறுவதே வளன் செனித்த படலம் ஆகும்.
- யோசேப்பு என்றும் சூசை என்றும் ஒலிபெயர்க்கப்பட்ட ஜோசப் என்னும் பெயரை வீரமாமுனிவர் வளன் என்று தமிழ்ப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- வளங்களை வளரச் செய்பவன் என்னும் பொருளுடைய எபிரேய மொழியில் சூசை என்னும் பெயர் வழங்கி வருகிறது.
- அதன் நேரிய மொழி பெயர்பே தமிழில் வளன் ஆகும்.

**கதை சுருக்கம்:**

- யூதேயா நாட்டு மன்னன் சவுல்.
- பிலித்தையர் என்பார் திருமறையை பழித்தும் கடுவுளை இகழ்ந்தும் வந்தனர்.
- அரக்கன் கோலியாத் இச்ரேயால் மக்களை இகழ்ந்து, அவர்களுள் ஒருவனை போருக்கு அழைத்தான்.
- தாவீதன் என்னும் சிறுவன் அவனிடம் போர் புரிந்து அவனை கொன்றான்.

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| மாலி – சூரியன் | ஆலி – மலை நீர் |
| கரிந்து – கருகி | புடை – இடையின் ஒருபக்கம் |
| வியன்வட்டம் – அகன்ற கேடயம் | கீண்டு – கிழித்து |
| கிளர்ப – நிறைய | தொழும்பர் – அடிமைகள் |
| ஒகையால் – களிப்பினால் | வெருவி – அஞ்சி |
| கதத்த – சினமிக்க | கல்நெடுங்குவடு – மலைச்சிகரம் |
| நிருபன் – அரசன் | விளி – சாவு |

| | |
|---|---|
| கைவயம் – தோள்வலிமை | மெய்வயம் – உடல் வலிமை |
| ஐஞ்சிலை – ஐந்து கற்கள் | ஓதை – ஓசை |
| மருகி – சுழன்று | மிடல் – வலிமை |
| செல் – மேகம் | நுதல் – நெற்றி |
| உருமு – இடி | மருங்கு – இடுப்பு |
| சிரம் – தலை | அசனி – இடி |

**இலக்கணக்குறிப்பு:**

| | |
|---|---|
| கதுவிடா – ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் | அகல்முகில் – வினைத்தொகை |
| கருமுகில் – பண்புத்தொகை | கூடினர் – வினையாலணையும் பெயர் |
| கதத்த – குறிப்பு பெயரெச்சம் | கேட்டனர் – வினையாலணையும் பெயர் |
| தொடர்ந்தனன் நகைப்பான் – முற்றெச்சம் | அஞ்சினர் - வினையாலணையும் பெயர் |
| கேட்ட வாசகம் – பெயரெச்சம் | கைவயம் – ஆறாம் வேற்றுமைத் தொகை |
| அறிய ஆண்மை – குறிப்புப் பெயரெச்சம் | இருந்த பாலன் – பெயரெச்சம் |
| கருமுகில் – பண்புத்தொகை | வைவேல் – உரிச்சொற்றொடர் |
| காண்கிலர் – எதிர்மறை வினைமுற்று | நாமவேல் – உரிச்சொற்றொடர் |

## பாண்டியன் பரிசு

**ஆசிரியர் குறிப்பு:**

- பாவேந்தர் பாரதிதாசன் புதுவையில் பிறந்தவர்.
- இயற்பெயர் = சுப்புரத்தினம்
- பெற்றோர் = கனகசபை, இலக்குமியம்மாள்
- தமிழாசிரியராக பணிபுரிந்தவர்.
- இவர் புரட்சிக் கவிஞர் என்றும், தமிழ்நாட்டு இரசூல் கம்சதேவ் என்றும் அழைக்கப்படுபவர்.
- இவரின் பிசிராந்தையார் நாடகம் சாகித்ய அகாடமி பரிசு பெற்றது.
- இவரின் "வாழ்வினில் செம்மையை செய்பவள் நீயே" என்னும் பாடல் தற்பொழுது புதுவை அரசின் தமிழ் தாய் வாழ்த்தாக உள்ளது.

**கதை:** கதிர் நாட்டு மன்னன் கதிரைவேலன்.

- அவன் மனைவி கண்ணுக்கினியாள், இவர்களின் ஒரே மகள் அன்னம்.
- கண்ணுக்கினியாள் அண்ணனும் படைத்தளபதியும் ஆன நரிக்கண்ணன் சூழ்ச்சியால் நிகழ்ந்த வேழ நாட்டு படையெடுப்பில் அரசனும் அரசியும் இறந்தனர்.
- பாண்டிய மன்னன் பரிசாக வழங்கிய உடைவாளும் மணிமுடியும் கொள்ளை அடிக்க விரும்பினான் நரிக்கண்ணன்.
- பேழையை தவறுதலாக வீரப்பனிடம் கொடுத்துவிடுகிறான் நரிக்கண்ணன்.
- பேழையை கொண்டு வந்து தருபவர்களுக்கு அன்னம் மாலையிடுவாள் என் அறிவிக்கப்பட்டது.
- அரசியின் தோழி ஆத்தாக்கிழவி. இவள் அன்னத்தின் செவிலித்தாய்.

- ஆத்தாக்கிழவியின் மகன் வேலன்.
- ஆத்தாக்கிழவியின் கணவன் வீரப்பன்.
- அன்னத்தின் தோழி நீலி

**சொற்பொருள்:**

- மின் – மின்னல்
- குறடு – அரண்மனை முற்றம்
- பதடி – பதர்
- பேழை – பெட்டி

**இலக்கணக்குறிப்பு:**

- என்மகள் – நான்காம் வேற்றுமைத்தொகை
- காத்தார் – வினையாலணையும் பெயர்
- விலகாத – எதிர்மறை பெயரெச்சம்
- ஈன்ற தந்தை – பெயரெச்சம்
- இழந்த பரிசு – பெயரெச்சம்

**சிற்றிலக்கியங்கள்**

**சிற்றிலக்கியம்:**

- பிரபந்தம் என்ற வடசொல்லுக்கு “நன்கு கட்டப்பட்டது” என்பது பொருள்.
- சிற்றிலக்கியங்களின் இலக்கணம் கூறுவது பாட்டியல் நூல்கள்.
- பாட்டியல் நூல்களுள் வச்சணந்திமாலை குறிப்பிட்ட நூலாகும்.
- வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியில் பிரபந்தம் 96 வகை எனக் கூறப்பட்டுள்ளது.

---

**இராசராச சோழன் உலா**

---

**உலா:**

- உலா என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
- உலா என்பதற்கு “பவனி வருதல்” என்பது பொருள்.
- தலைவன் வீதியில் உலா வர அவனைப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு வகைப் பருவ மகளிரும் காதல் கொள்வதாக அமைத்து பாடுவது உலா ஆகும்.
- இது கலிவெண்பாவால் இயற்றப்படும்.
- இதில் பாட்டுடைத் தலைவனின் சிறப்பு, நீராடல், ஒப்பனை செய்தல், பரிவாரங்கள் புடைசூழத் தன் ஊர்தியில் ஏறி வரல் ஆகியவற்றை உலாவின் முன்னிலை என்பர்.
- உலாவரும் தலைவனைக் கண்டு காதல் கொண்ட ஏழு பருவ மகளிர் தனித்தனியாக கூறுவன உலாவின் பின்னிலை எனப்படும்.
- ஏழு பருவப் பெண்களின் வயது = பேதை(5-7), பெதும்பை(8-11), மங்கை(12-13), மடந்தை(14-19), அரிவை(20-25), தெரிவை(26-32), பேரிளம்பெண்(33-40).

**ஒட்டக்கூத்தர்:**

- இராசராசசோழன் உலாவை பாடியவர் ஒட்டக்கூத்தர்.
- இவர், “கவிச்சக்ரவர்த்தி, கவிராட்சசன்” என்றெல்லாம் புகழப்படுவார்.
- இவர், விக்ரமசோழன், இரண்டாம் குலோத்துங்கச் சோழன், இரண்டாம் ராசராசன் ஆகிய மூன்று மன்னர்களின் அவையிலும் செல்வாக்கோடு இருந்தவர்.
- இம்மூவரைப் பற்றி ஒட்டக்க்கூத்தர் பாடியதே, “மூவருலா”

- இவரின் இயற் பெயர் = கூத்தர்
- ஒட்டம்(பந்தயம்) வைத்துப் பாடுவதில் வல்லவர் ஆதலால் இவர் ஒட்டக்க்கூத்தர் எனப்பட்டார்.

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| சூளிகை – நிலாமுற்றம் | சாளரம் – பலகணி |
| தெற்றி – திண்ணை | பாங்கரும் – பக்கத்தில் உள்ள இடங்கள் |
| பிணங்கி – நெருங்கி | மறுகு – தெரு |
| கோடி – வளைந்து | சதகோடி – நூறுகோடி |
| மகோததி – கடல் | உதியர் – சேரர் |
| சரதம் – வாய்மை | பவித்ரம் – தூய்மை |
| மூவெழுகால் – 21 தலைமுறை | அவனி – நாடு |
| பெருமாள் – அரசர் | கூடல் – காவிரிப்பூம்பட்டினம் |

**இலக்கணக்குறிப்பு:**

| | |
|---|---|
| வாயிலும் மாளிகையும் – எண்ணும்மை | எம்மருங்கும் – முற்றும்மை |
| மாடமும் ஆடரங்கும் – எண்ணும்மை | செய்குன்று – வினைத்தொகை |
| ஆடரங்கு – வினைத்தொகை | சுற்றிய பாங்கர் – பெயரெச்சம் |
| மயங்கி, வணங்கி – வினையெச்சம் | செற்ற சிலை – பெயரெச்சம் |
| காணீர் – ஏவல் வினைமுற்று | விட்டவள் – பெயரெச்சம் |
| மதயெறிது - இரண்டாம் வேற்றுமைத்தொகை | முத்து முரசம் – பண்புத்தொகை |
| ஒங்கியுயர் – ஒருபொருட்பன்மொழி | உயரண்டம் – வினைத்தொகை |

---

## திருவேங்கடத்தந்தாதி

---

**அந்தாதி:**

- அந்தாதி 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- அந்தம் = இறுதி, ஆதி = முதல்
- ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையா, சீரோ அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும்.
- இதனை “சொற்றொடர்நிலை” எனவும் கூறுவர்.

**பிள்ளை பெருமாள் ஐயங்கார்:**

- இவர், “அழகிய மணவாளதாசர், திவ்வியக்கவி” எனவும் அழைக்கப்படுவார்.
- இவர் இயற்றிய எட்டு நூல்களின் தொகுதியை “அஷ்டப்பிரபந்தம்” என்று அழைப்பர்.
- “அஷ்டப்பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்” என்னும் பழமொழி இந்நூலின் உயர்வைப் வெளிப்படுத்தும்.
- இவர் 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னரின் அவையில் ஓர் அலுவலராய் அமர்ந்து வாழ்க்கை நடத்தி வந்தார்.

**சொற்பொருள்:**

- கழல் – திருவடி
- பத்தி – ஊர்
- குஞ்சி – தலைமயிர்
- போதன் – பிரமன்
- வாசவன் – இந்திரன்
- அந்தி – மாலை
- வேலை – கடல்
- இருக்கு ஆரணம் – இருக்கு வேதம்
- கஞ்சம் – தாமரை மலர்
- அணங்கு – திருமகள்
- பொழில் – சோலை

**இலக்கணக்குறிப்பு:**

- சிற்றன்னை – பண்புத்தொகை
- தாழ்பிறப்பு – வினைத்தொகை
- மால் கழல் – ஆறாம் வேற்றுமைத்தொகை
- கழல் – தானியாகு பெயர்
- அந்தி காளை – உம்மைத்தொகை
- வேங்கடம் – வினைத்தொகை
- மதிவிளக்கு – உருவகம்
- சேவடி – பண்புத்தொகை
- இருக்கு ஆரணம் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை
- நற்றாய் – பண்புத்தொகை

---

**மதுரைக் கலம்பகம்**

---

**கலம்பகம்:**

- பலவகை உறுப்பும் பலவகைப் பாவும் பாவினங்களும் பலவகைப் பொருளும் கலந்து செய்யப்பெறும் சிற்றிலக்கிய வகையை கலம்பகம் என்பர்.
- கதம்பம் என்பது கலம்பகம் எனத் திரிந்ததாக உ.வே.சா கூறுவார்.
- கலம்பகம் 18 உறுப்புகளை உடையது.
- தமிழின் முதல் கலம்பகம் = நந்திக் கலம்பகம்

**குமரகுருபரர்:**

- இவரின் காலம் பதினேழாம் நூற்றாண்டு.

- பிறந்தது முதல் ஐந்தாண்டு வரை பேசாத குழந்தையாக இருந்த இவர் பின்னர் திருச்செந்தூர் முருகப் பெருமானின் அருளால் பேசினார்.
- படைப்புகள் = மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், கந்தர்கலிவெண்பா, காசிக்கலம்பகம், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் போன்ற பல நூல்களை இயற்றி உள்ளார்.
- இவரது செய்யுட்களின் தனிச்சிறப்பு அவற்றின் "இன்னோசை" ஆகும்.

**சொற்பொருள்:**

- ஏமவெற்பு – மேருமலை
- ஏமம் – பொன்
- மலயாசலம் – பொதிகை மலை

**இலக்கணக்குறிப்பு:**

- கயிலாய வெற்பு – இருபெயரொட்டுப் பண்புத்தொகை
- அசலம் – காரணப்பெயர்
- முச்சங்கம் – பண்புத்தொகை
- வளர்கூடல் – வினைத்தொகை
- மதிப்பிஞ்சு – ஆறாம் வேற்றுமைத்தொகை
- இரைதேர் – இரண்டாம் வேற்றுமைத்தொகை

---

**முக்கூடற்பள்ளு**

---

**பள்ளு:**

- "பள்" என்பது பள்ளமான நன்செய் நிலங்களையும் அங்குச் செய்யப்படும் உழவினையும் குறிக்கும்.
- பள்ளு 96 வகை சிற்றிலக்கிய வகையுள் ஒன்று.
- தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டு வகைப்பிரிவில் ஒன்றான "புலன்" என்னும் இலக்கிய வகை "பள்ளு வகை" இலக்கியத்திற்கு பொருந்தும்.

**முக்கூடற்பள்ளு:**

- திருநெல்வேலிக்குச் சிறிது வடகிழக்கில் தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகளும் கலக்கும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர் முக்கூடல்.
- அங்குள்ள இறைவனாகிய அழகர் மீது பாடப்பட்டது இந்நூல்.
- சைவ வைணவங்களை ஒருங்கிணைக்கும் இலட்சியங் கொண்ட நூல், "முக்கூடற்பள்ளு" ஆகும்.
- இந்நூலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.
- இது சிந்தும் விருத்தமும் பரவிவர பாடப்பெறும்.

**இலக்கணக்குறிப்பு:**

- வெண்தயிர் – பண்புத்தொகை
- காய, மாய – பெயரெச்சம்
- நாழிகை வாரம் – உம்மைத்தொகை
- தாபதர் உள்ளம் – ஆறாம் வேற்றுமைத்தொகை
- செந்நெல் – பண்புத்தொகை

- சுழி வெள்ளம் – வினைத்தொகை

---

**மறுமலர்ச்சிப் பாடல்கள் - மாலைக்கால வருணனை**

---

z

**நூல் குறிப்பு:**

- வடமொழியில், வியாசர் இயற்றிய மகாபாரததக் கதையில் வரும் பாஞ்சாலி, துரியோதனன் சபையில் செய்த சூளுரையை மையமாகக் கொண்டு, பாரதியார் இக்குறுங்காவியத்தைப் படைத்தார்.
- பாஞ்சாலிசபதம் என்னும் இந்நூலில் அழைப்புச் சருக்கம் ,சூதாட்டச் சருக்கம், அடிமைச் சுருக்கம், துகிலுரிதற்சருக்கம், சபதச் சருக்கம் ஆகிய ஐந்து சருக்கங்கள் உள்ளன.

**பாரதியார்:**

- இவர் 1882ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 11ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் பிறந்தார்.
- பெற்றோர் = சின்னசாமி, இலக்குமி அம்மையார்.
- இளமையிலேய கலைமகள் என்னும் பொருள் தரும்,”பாரதி” என்னும் பட்டதை பெற்றார்.
- இவர் இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.
- இவரின் முப்பெரும் படைப்புகள் = கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு.

**சொற்பொருள்:**

- பரிதி – சூரியன்
- வண்ணம் – அழகு
- முகில் – மேகம்
- பொய்கை – நீர்நிலை
- இருட்கடல் – நீலக்கடல்
- களஞ்சியம் – தொகுப்பு

**இலக்கணக்குறிப்பு;**

- படர்முகில் – வினைத்தொகை
- செழும்பொன் – பண்புத்தொகை
- தங்கத்தீவு – உருவகம்
- பொற்கரை – உருவகம்
- சுடரொளி – வினைத்தொகை

---

**புத்தக சாலை**

---

**ஆசிரியர் குறிப்பு:**

- பாரதிதாசன் புதுவையில் 1891ஆம் ஆண்டு பிறந்தார்.
- பெற்றோர் = கனகசபை, இலக்குமி அம்மாள்
- இயற்பெயர் = சுப்புரத்தினம்
- படைப்புகள் = குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, இசையமுது, அழகின் சிரிப்பு, கண்ணகி புரட்சிக் காப்பியம், பிசிராந்தையார் போன்ற பல நூல்களை படைத்துள்ளார்.

**சொற்பொருள்:**

- மனோபாவம் – உளப்பாங்கு
- சகமக்கள் – உடன் வாழும் மக்கள்
- ஒன்று – ஓரினம்
- இலகுவது – விளங்குவது
- சுவடி – நூல்
- சுவடிச்சாலை – நூலகம்
- சர்வகலாசாலை – பல்கலைக்கழகம்

**இலக்கணக்குறிப்பு;**

- அன்புநெறி – இருபெயரொட்டு பண்புத்தொகை
- உயர்எண்ணம் – வினைத்தொகை
- செந்தமிழ் – பண்புத்தொகை
- தருதல், வைத்தல் – தொழிற்பெயர்

---

**காடு**

---

**ஆசிரியர் குறிப்பு;**

- வாணிதாசன் புதுவையை அடுத்த வில்லியனூரில் பிறந்தவர்.
- பெற்றோர் = அரங்க திருக்காமு, துளசியம்மாள்
- இயற்பெயர் = அரங்கசாமி என்ற எத்திராசலு
- இவர் பாவேந்தர் பாரதிதாசனிடம் தொடக்கக்கல்வி பயின்றவர்.
- இவரின் பாடல்கள் சாகித்திய அகாதெமி வெளியிட்ட "தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" என்ற நூலிலும், தென்மொழிகள் புத்தக வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட "புதுதமிழ்க் கவிமலர்கள்" என்ற நூலிலும் மற்றும் பற்பல தொகுப்பு நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.
- இவர், "தமிழ்-பிரெஞ்ச் கையகர முதலி" என்ற நூலை வெளியிட்டார்.
- பிரெஞ்ச் குடியரசு தலைவர் இவருக்கு "செவாலியர்" என்ற விருதினை வழங்கி உள்ளார்.
- இவர், "கவிஞரேறு, பாவலர் மணி, தமிழகத்தின் வோர்ட்ஸ்வொர்த்" என்று அழைக்கப்படுவார்.

**சொற்பொருள்:**

- வெய்யோன் – கதிரவன்
- புரையோடி – உள்ளுக்குள் அரிக்கப்பட்டு
- முதல் – வேர்
- செல் – ஒருவகை கரையான்
- சோங்கி – வாட்டமுற்று

---

**சிக்கனம்**

---

**ஆசிரியர் குறிப்பு;**

- இவமை கவிஞர் எனப்போற்றப்படுபவர் கவிஞர் சுரதா
- இவர் திருவாரூர் மாவட்டம் பழையனூரில் பிறந்தவர்.
- இயற்பெயர் = இராசகோபாலன்
- படைப்புகள் = தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும்.
- இவர் தமிழக இயலிசை நாடகமன்றம் வழங்கிய கலைமாமணி பட்டம் பெற்றவர்.
- இவருடைய "தேன்மழை" நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை பரிசு பெற்றுள்ளது.
- பாவேந்தர் நினைவு பரிசினை பெற்ற முதல் கவிஞர் இவரே.

**சொற்பொருள்;**

- பகட்டு வாழ்க்கை – ஆடம்பரமான வாழ்க்கை
- செட்டு – சிக்கனம்

**இலக்கணக்குறிப்பு:**

- சட்டதிட்டம் – உம்மைத்தொகை
- நீதிநூல் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- நீரூற்று – ஆறாம் வேற்றுமைத்தொகை
- தீராத – எதிர்மறைப் பெயரெச்சம்

---

**மனித நேயம்**

---

**ஆசிரியர் குறிப்பு;**

- கவிஞர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன் 01.06.1942 இல் சென்னையை அடுத்த ஆலந்தூரில் பிறந்தவர்.
- பெற்றோர் = கோபால், மீனாம்பாள்
- இவரின்”இமயம் எங்கள் காலடியில்” என்னும் கவிதைத் தொகுப்பு நூல் தமிழக அரசின் பரிசினை பெற்றுள்ளது.

**சொற்பொருள்:**

- சிந்தை – உள்ளம்
- குன்றி – குறைந்து
- சாந்தி – தெருக்கள் கூடுமிடம்
- சிறுமை – இழிவு

**இலக்கணக்குறிப்பு:**

- சிந்தித்தேன் – தன்மை ஒருமை வினைமுற்று
- கன்றுகுரல் – ஆறாம் வேற்றுமைத் தொகை
- தலைகுனிந்து – இரண்டாம் வேற்றுமைத் தொகை

---

**வேலைகளல்ல வேல்விகளே!**

---

**ஆசிரியர் குறிப்பு:**

- கவிஞர் தாராபாரதி 26.02.1947இல் திருவண்ணாமலை மாவட்டம் குவளை என்னும் ஊரில் பிறந்தார்.
- பெற்றோர் = துரைசாமி, புஷ்பம் அம்மாள்
- இவர் 34 ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றி, நல்லாசிரியருக்கான டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது பெற்றுள்ளார்.
- படைப்புகள் = புதிய விடியல்கள், விரல்நுனி வெளிச்சங்கள், பூமியைத் திறக்கும் பொன்சாவி, இன்னொரு சிகரம்.

**சொற்பொருள்:**

- மூடத்தனம் – அறியாமை

- மூலதனம் – முதலீடு

**இலக்கணக்குறிப்பு;**

- வெறுங்கை – பண்புத்தொகை
- விரல்கள் பத்தும் – முற்றும்மை
- பாறையும் – உயர்வு சிறப்பும்மை
- மலர்ச்சோலை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை
- கங்கையும் சிந்துவும் – எண்ணும்மை
- தெற்கு வடக்காய் – முரண்தொடை
- மாவிலி – உரிச்சொற்றொடர்

---

## தீக்குச்சிகள்

---

**ஆசிரியர் குறிப்பு:**

- கவிஞர் அப்துல் ரகுமான் 1937இல் மதுரையில் பிறந்தவர்.
- இவர், “மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர்; புதுக்கவிதையில் மலர் பார்த்தவர்” எனப் பாராட்டப்படுபவர்.
- படைப்புகள் = பால்வீதி, நேயர் விருப்பம், சொந்தச் சிறைகள், கரைகளே நதியாவதில்லை, விலங்குகள் இல்லாத கவிதை.
- தமிழக அரசின் “பாரதிதாசன் விருது”, தமிழ்ப்பல்கலைக்கழகம் வழங்கிய, “தமிழ் அன்னை விருது” போன்ற பல பரிசினை பெற்றுள்ளார்.

**இலக்கணக்குறிப்பு:**

- புல்நுனி – ஆறாம் வேற்றுமைத்தொகை
- கண்ணீர் வெள்ளம், பசிக்கயிறு – உருவகம்
- மெல்லிய காம்பு – உருவகம்

---

## வழிப்பாட்டுப் பாடல்கள் - சிவபெருமான்

---

**சுந்தரர்:**

- சுந்தரர் தேவாரம் பன்னிருதிருமுறை வைப்பில் ஏழாந் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.
- சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் பிறந்தவர்.
- பெற்றோர் = சடையனார், இசை ஞானியார்.
- இயற்பெயர் = நம்பிஆரூரர்
- இவர் திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட நரசிங்க முனையரையர் என்ற சிற்றரசர் மகன்மை கொண்டு வளர்க்கப்பட்டார்.
- சிவபெருமான் இவரைத் தம் தோழராகத் கொண்டமையால் “தம்பிரான் தோழர்” என அழைக்கப்பட்டார்.
- இவர் எழுதிய திருதொண்டதொகை என்னும் நூலையே முதனூலாக கொண்டு சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர் புராணம் எழுந்தது.

**சொற்பொருள்:**

- காமகோபன் – காமனைக் காய்ந்தவன்
- ஆவணம் – அடிமையோலை

**இலக்கணக்குறிப்பு:**

- கண்ணுதல் – இலக்கணப் போலி
- பழ ஆவணம் – பண்புத்தொகை
- சொற்பதம் – ஒருபொருட் பன்மொழி

---

**திருமால்**

---

**குலசேகர ஆழ்வார்:**

- ஆழ்வார் என்னும் சொல்லுக்கு ஆழ்ந்தறியும் அறிவைக் கருவியாக உடையவர் என்றும் எம்பெருமானுடைய மங்கலக் குணங்களில் ஆழங்காற்பட்டவர் என்றும் பொருள் கூறுவர்.
- குலசேகர ஆழ்வார் சேரநாட்டுத் திருவஞ்சிக் களத்தில் தோன்றியவர்.
- இவர் எழுதிய பாடல்கள் பெருமாள் திருமொழி எனப்படும்.
- அவை மொத்தம் 105 பாடல்கள் ஆகும்.
- ஆழ்வார்களின் அருளிச் செயலுக்குப் பெரிய வாச்சான் பிள்ளை என்பார் உரை எழுதியுள்ளார்.
- திருவாய்மொழிக்கு வடக்குத் திருவீதிப் பிள்ளை என்பார் எழுதிய ஈடு என்னும் பேருரை ஆழமும் அகலமும் உடையதாகும்.

**சொற்பொருள்:**

- ஆனாத – குறைவு படாத
- அரம்பையர்கள் – தேவமாதர்கள்

---

**புத்தர் பிரான்**

---

**ஆசிரியர் குறிப்பு:**

- மணிமேகலை நூலின் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார்.
- இவரைத் "தண்டமிழ் ஆசான்" எனப் புகழ்வர்.
- இவரின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
- மணிமேகலை புத்த சமய காப்பியம்.
- இந்நூலுக்கு "மணிமேகலைத் துறவு" என்னும் வேறு பெயரும் உண்டு.
- இந்நூல் இந்திர விழவூரெடுத்த காதை முதலாகப் பவதிரம் அறுகெனப்பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகளை உடையது.

**சொற்பொருள்:**

- தீர்த்தன் – தூயன்
- புராணன் – மிகப்பழையன்
- ஏமம் – பாதுகாப்பு
- ஆரம் – சக்கரக்கால்
- கடிந்தேன் – துறந்தேன்

**இலக்கணக்குறிப்பு:**

- தீநெறி – பண்புத்தொகை
- கடும்பகை – பண்புத்தொகை
- உணர்ந்த முதல்வன் – பெயரெச்சம்

---

**அருகன்**

---

**நூல் குறிப்பு:**

- அருகதேவனை பற்றி கூறியுள்ள இந்நூல் நீலகேசியாகும்.
- சீவக சிந்தாமணிக்கு  நிகராக கவிதைச் சுவைமிக்க இந்நூலை எழுதியவர் விவரம் தெரியவில்லை.
- இந்நூல் "நீலகேசித் தெருட்டு" என்றும் அழைக்கப்படும்.

**சொற்பொருள்:**

- சாமரை – சாமரம் ஆகிய வெண்கவரி
- புடைபுடை – இருமருங்கினும்
- இயக்கர் – கந்தருவர்
- இரட்ட – அசைக்க
- சிங்காசனம் – அரியணை
- ஆசனம் – இருக்கை
- ஒளிமண்டிலம் – ஆலோகம்
- நிழற்ற – ஒளிர
- சந்திராதித்தம் – முத்துக்குடை
- சகலபாசனம் – பொற்குடை
- நித்தவிநோதம் – மணிக்குடை

---

**இயேசு பெருமான்**

---

**ஆசிரியர் குறிப்பு:**

- இரட்சணியம் என்பதற்கு ஆன்ம ஈடேற்றம் என்பது பொருளாம்.
- ஆன்ம ஈடேற்றம் விரும்புவார் செல்லும் சிந்தனை யாத்திரை என்பதுவே இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள்.
- ஜான் பனியன் என்பார் எழுதிய பில்க்ரிம்ஸ் பிராகிரஸ் என்ற நூலினையே இரட்சணிய யாத்திரிகம் என படைத்துள்ளார்.
- எச்.ஏ.கிருடினப்பிள்ளை திருநெல்வேலி மாவட்டம் கரையிருப்பு என்னும் ஊரினர்.
- பெற்றோர் = சங்கர நாராயணபிள்ளை, தெய்வநாயகி அம்மை
- படைப்புகள் = இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம், போற்றித் திருவகவல்.
- இவரை "கிறித்துவ கம்பர்" என்பர்.

**சொற்பொருள்:**

- கண்ணி – மரியன்னை
- காசினி – உலகம்
- வான்கதி – துறக்கம்
- மருவ – அடைய

**இலக்கணக்குறிப்பு:**

- கண்ணிபாலன் – நான்காம் வேற்றுமைத்தொகை

**நபிகள் நாயகம்**

**உமறுப்புலவர்:**

- உமறுப்புலவர் தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரம் என்னும் ஊரினர்.
- தந்தை = செய்கு முகமது அலியார் என்னும் சேகு முதலியார்
- கடிகை முத்துப் புலவரின் மாணவர் இவர்.
- இவரின் காலம் பதினேழாம் நூற்றாண்டு.
- சீறாப்புராணம் வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கு இணங்க எழுதினார்.
- நூல் நூற்றும் முன்னரே சீதக்காதி இறந்ததால் அபுல் காசிம் என்பார் உதவியுடன் எழுதி முடிக்கப்பட்டது.
- பானு அஹமது மரைக்காயர் என்பவரே நூலை முழுவதும் எழுதி முடித்தார். அது “சின்னச் சீறா” எனப்பட்டது.
- உமறுப்புலவர் முதுமொழிமாலை, சீதக்காதி நொண்டி நாடகம் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

**சொற்பொருள்:**

- பொறி – ஒளிப்பிழம்பு
- வடிவார் – வடிவினையுடையார்
- நவியார் – நபிகள் நாயகம்

**இலக்கணக்குறிப்பு:**

- மெய்ப்பொருள் – இருபெயரொட்டு பண்புத்தொகை
- சுவர்க்கபதி - இருபெயரொட்டு பண்புத்தொகை